# உதயன்

சுடர் 27
கதிர் 183

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (27/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

www.onlineuthayan.com


## பிரிவினைவாதிகள் இன்னும் உயிர்ப்புடனே உள்ளனர்

### இதனால் வடக்கு - கிழக்கில் படையினர் பிரசன்னம் தேவை என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு,மே 27

நாட்டில் நாம் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல் முழுமையாக நீங்கவில்லை. ஈழப் பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சி நிரல் இன்னும் உயிர்ப்புடன் உள்ளது. தமது தேவைகளுக்குப் பொருத்தமெனில் ஆயுத மோதலை ஏற்படுத்துவதற்கும், மேலதிகமாகச் செயற்படுவதற்கும் தயங்காத பல சக்திகள் உள்ளன.இதனால் நாட்டின் பாதுகாப்பு நலன்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு நோக்கங்களை கருத்தில் கொண்டு இராணுவம் வடக்கு - கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதன் தேவை அங்கு உணரப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்கிலும் படையினரின் பிரசன்னமானது நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள நிலையை ஒத்திருக்க வேண்டும் என பிரிட்டன் தூதுவர் கூறியமைக்குப் பதிலளித்த போதே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாடு எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இராணுவம் நன்கு புரிந்துகொண்டுள்ளது. தேவைகளை கவனமாக மதிப்பீடு செய்தபின் ஆயுதப் படையினர் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இன்று வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாமல் 04

# வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்தி இன்று தீர்மானம்

### மட்டக்களப்பில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில்

மட்டக்களப்பு,மே 27

வடக்கு - கிழக்கு பிராந்தியங்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஊடான தீர்வு காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் தீர்மானம் இன்று மட்டக்களப்பில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில் நிறைவேற்றப்படவுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மூலம் வடக்கு - கிழக்கு இணைப்பு வலியுறுத்தப் படவுள்ளதாக தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.

தமிழரசுக் கட்சியின் 14 ஆவது பேராளர் மாநாடு இன்று காலை 9 மணிக்கு மட்டக்களப்பு, ஊறணி மெதடிஸ்த மிஷன் மண்டபத்தில் ஆரம்பமாக உள்ளது. தமிழரசுக் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. இதில் தமிழரசுக் கட்சியின் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள். எனப் பலர் கலந்துகொள்கின்றனர்.

இன்றைய மாநாட்டில் தமி 04

## முரசுமோட்டையில் குடும்பஸ்தர் விபத்தில் சாவு

கிளிநொச்சி, மே 27

முரசுமோட்டையில் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கனரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் அந்த இடத்திலேயே சாவடைந்தார்.

நேற்று நண்பகல் பரந்தன் - முல்லைத்தீவு ஏ-35 வீதியிலுள்ள முரசுமோட்டை தேவாலயத்துக்கு முன்னால் இந்த விபத்து இடம்பெற்றது.

கிளிநொச்சிக்குச் சென்று சைக்கிளில் திரும்பி வந்து கொண்டிருந்த பேர்னாட் கீதபொன்கலன் (வயது-58) என்பவரே மரணமானவர் ஆவார். 4பிள்ளைகளின் தந்தையான இவர் முரசுமோட்டையைச் சேர்ந்தவர்.

இவரது சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16-6)

## நாட்டின் சில இடங்களில் நேற்றிரவு நில அதிர்வு

யாழ்ப்பாணம்,மே27

நாட்டின் சில இடங்களில் நேற்று இரவு நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

கொழும்பு, நுவரெலியா, ஹட்டன், புதியபெலல்ல ஆகிய பகுதிகளில் இந்த அதிர்வு உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிர்வு இலங்கையில் மாத்திரமே ஏற்பட்டுள்ளதாகவும் வேறு நாடுகளில் ஏற்பட்ட அதிர்வின் தாக்கத்தினால் ஏற்படவில்லை எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (16)

## விரைந்து செயற்பட கோருகிறது அமெரிக்கா

வொஷிங்டன்,மே27

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை விரைந்து செயற்படுத்துமாறு இலங்கை அரசை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனிதஉரிமைகள் மற்றும் தொழில்துறை உதவிச் செயலாளர் மைக்கல் எச்.பொஸ்நர் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில் இலங்கையின் வட பகுதியில் இராணுவப் 04

## இலங்கையின் மனித உரிமை நிலை மீளாய்வுக்கு பொறுப்பாக 3 நாடுகள்

### ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் நியமனம்

ஜெனிவா,மே 27

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த மீளாய்வுக்குப் பொறுப்பாக இந்தியா, பெனின், ஸ்பெயின் ஆகிய நாடுகள் நியமிக்கப் படவுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 192 நாடுகளினதும் மனிதஉரிமைகள் நிலை குறித்துச் சுழற்சி முறையில் மீளாய்வு செய்யப் பட்டு வருகிறது. 04

## நவநீதம்பிள்ளையை அனுமதிக்க வேண்டும்

### பீரிஸ் குழுவிடம் அமெரிக்கா அழுத்தம்

வொஷிங்டன்,மே 27

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

அண்மையில் வொசிங்டனுக்குச் சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கைக் குழுவினருடனான சந்திப்பின் போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் ஐ.நாவுடன் நெருக்கமாக இணங்கிச் செயற்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது. 04

## கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டான் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

### நேற்றுக்காலை நல்லூரில் இறக்கிச் சென்றனர்



யாழ்ப்பாணம், மே 27

யாழ். பஸ்நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி தரம்- 9 மாணவன் நேற்றுச் சனிக்கிழமை காலை வேளை நல்லூர்ப் பகுதியில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி, நெல்லியடியைச் சேர்ந்த பிரபாகரன் அக்ஷய் என்ற 14 வயது மாணவனே கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவராவார். மாணவனின் தந்தையான எஸ். பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கலாசாரா உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறார்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சம்பவம் தொடர்பாக கடத்தப்பட்டு விடுவிக்கப் பட்ட மாணவன் சகிதம் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு நேற்று மாலை சென்றபோது 04

## தமராவிடம் இருந்து பதிலில்லை

கொழும்பு,மே 27

வெளிவிவகார அமைச்சு வழங்க முன்வந்த கியூபாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவியை தமரா குணநாயகம் இன்னும் ஏற்றுக் கொள்வோ அல்லது நிராகரிக்கவோ இல்லை எனத் தெரியவருகிறது.

தமரா குணநாயகத்தின் புதிய சுயவிவரக்கோவையை கோரிய வெளிவிவகார அமைச்சு இதற்கான பதிலை எதிர்பார்த்து காத்திருக்கிறது.

அவருக்கு இரு வாய்ப்புகள் உள்ளன. அமைச்சினால் வழங்கப் 04

## மனைவியையே கணவன் அடித்துக் கொன்றார்

### கணவன் கைதாகி விசாரணையில்

கிளிநொச்சி, மே 27

உளநலம் பாதித்த கணவன் மனைவியை அடித்துப் படுகொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் சம்பவம் நேற்று மதியம் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

நேற்று மதியம் பிள்ளைகள் வீட்டில் இல்லாத சமயம் குறித்த நபர் தனது மனைவியைக் கொட்டன் தடியால் தாக்கியுள்ளார் என்றும் மனைவியின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிவந்த சமயம் குறித்த பெண் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நிலை 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தெரிவுக்குழுவை இயக்குவதற்கு முன் தீர்வுத் திட்டத்தைப் பகிரங்கப்படுத்துக

## அரசிடம் வலியுறுத்துகிறது ஜே.வி.பி.

ஆறுமாத காலத்துக்குள் தீர்வை நோக்கிப் பயணிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

கொழும்பு, மே 27

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் பட்சத்தில் அதன் செயற்பாடுகளை ஆறுமாத காலத்துக்குள் நிறைவுக்குக் கொண்டுவரலாம் என அரசு தெரிவித்திருக்கின்ற நிலையில், அந்த ஆறுமாத காலத்துக்குள் அரசு செய்யவேண்டிய செயற்பாடுகளை மிகவும் தெளிவான முறையில் ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு சிறந்த வழிமுறை நாடாளுமன்றத் தெரிவுக்குழு என அரசு தெரிவித்தாலும், தமது தீர்வு என்னவென்பதை அது முதலில் அம்பலப்படுத்தவேண்டும் என்றும் ஜே.வி.பி. மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற போர்வையில் அரசு விரிக்கும் வலையில் ஜே.வி.பி. சிக்காது

என 'உதய'னிடம் அடித்துக் கூறினார் அதன் செயலாளர் ரில்வின் சில்வா.

புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிர்க்கட்சிகள் தமது உறுப்பினர்களின் பெயர்களைப் பரிந்துரைக்கும் பட்சத்தில் ஆறுமாத காலத்துக்குள் தீர்வை நோக்கிப் பயணிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

தெரிவுக்குழுவுக்கு நாங்கள்வரமாட்டோம்எனஜே.வி.பி உறுதியாக - ஆணித்தரமாக இடித்துரைத்து வந்தாலும், அரசு மீண்டும் மீண்டும் ஜே.வி.பிக்கு அழைப்பு விடுத்து வருகின்றது.

இந்நிலையில், தெரிவுக் குழு விவகாரத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா? அரசு ஜே.வி.பியை தெரிவுக்குழுவுக்கு அழைக்கின்றதே. எனவே, உங்கள் கட்சியின் பதில் எவ்வாறு அமையப்போகின்றது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின்சில்வாவிடம் 'உதயன்' வினவியது.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம்வகிக்கப்போவதில்லை என்ற எமது கட்சியின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை. நாம் உறுதியாகவே இருந்து வருகின்றோம்.

அரசு அறிவித்திருக்கும் அந்த ஆறுமாத காலத்துக்குள் அவர்களால் முக்கிய பல விடயங்களைச் செய்துமுடிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு செய்யாமல் எப்படி அடுத்த கட்டம் நோக்கிப் பயணிப்பது?

அரசின் தீர்வுத்திட்டம் என்னவென்பதைப் பகிரங்கப்படுத்துமாறு நாம் மீண்டும் மீண்டும் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார் அவர்.

## ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக களஞ்சியத்தில் தீ

கொழும்பு,மே 27

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூட இரசாயனக்களஞ்சியத்தில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சுமார் 15 நிமிடநேரம் அந்த நிலையம் தீப்பிடித்து எரிந்தது. கொழும்பு தீயணைப்பு படையினரும் கோட்டை தீயணைப்பு படையினரும் இணைந்து தீயை அணைத்துள்ளனர். இந்தத் தீயினால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என கொழும்பு தீயணைப்புப் படை அதிகாரியான சேரசிங்க தெரிவித்தார்.

இரசாயனக்கூடத்திற்குள் கடும் மழை காரணமாகக் கழிவு கால்வாய் நீர் புகுந்த நிலையில் சோடியம் கொள்கலனொன்று வெடித்ததால் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

# 768 இலக்க தனியார் பஸ்ஸை கடுமையாகச் சோதித்த பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 27

768 இலக்க தனியார் பஸ் ஒன்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வைத்துப் பொலிஸாரினால் கடுமையான சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் அவ்வாறான சோதனைகள் எதனையும் மேற்கொள்ளவில்லையென சுன்னாகம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பிற்பகல் 2.45 மணியளவில் 768 இலக்க தனியார் பஸ் புறப்பட்டுள்ளது. இதில் பயணம் செய்த நபர் ஒருவர் பஸ்ஸில் இருந்த பெண்களுடன் சேஷ்டை புரிந்தவாறு பயணித்துள்ளார்.

குறித்த நபரைப் பயணிகள் எச்சரித்ததால் அவர் இணுவில் பகுதியில் பஸ்ஸைவிட்டு இறங்கியுள்ளார். இறங்கும் போது அவர் அரைகுறைத் தமிழில் பேசியவாறு இறங்கியதுடன் நடத்துனருடனும் முரண்பட்டார். அத்துடன் குறித்த நபர் பஸ்ஸின் இலக்கத்தையும் பார்த்து எழுதியுள்ளார்.

அதன் பின்னர் பஸ் சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு 3.15 மணியளவில் வந்தபோது, சிவில் உடை மற்றும் பொலிஸ் சீருடையில் வந்தவர்கள் பஸ்ஸின் 'டிக்கியை' திறந்து காட்டுமாறு நடத்துநரை கேட்டுள்ளனர்.

நடத்துநர் பஸ்ஸின் 'டிக்கியை' திறந்து காட்டினார். பின்னர் சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு பொலிஸ் ஜீப்பில் வருகை தந்தவர்கள் பஸ்ஸைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வருமாறு பணித்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய வாயிலுக்கு முன்பாக தனியார் பஸ் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்த அனைவரும் இறக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் உடையிலும், சிவில் உடையிலும் நின்ற பொலிஸாரால் பஸ் முழுவதும் கடுமையாகச் சோதனை செய்யப்பட்டதுடன் பயணிகளும் சோதிக்கப்பட்டதுடன் அவர்கள் கொண்டு சென்ற உடைமைகளும் சோதனை செய்யப்பட்டன.

நீண்ட நேரமாகத் தடுத்து வைக்கப்பட்டுச் சோதனை செய்து முடிந்த பின்னரே பஸ் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தப் பஸ்ஸில் போதைப் பொருள் கடத்துவதாக தகவல் வந்ததாலேயே சோதனைகள் மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துடன் நேற்றுமுன்தினம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அப்படியொரு சம்பவமும் இடம்பெறவில்லை. உங்களுக்கு யார் தகவல் வழங்கியது என்று அவர்கள் கேள்வியெழுப்பினர்.

இதன் பின்னர் மீண்டும் நேற்றுத் தொடர்பு கொண்டு கேட்டபோது, பொறுப்பதிகாரி இல்லை. அத்துடன் பதில் சொல்லக்கூடிய எவரும் இல்லை என்று அங்கிருந்தவர்கள் பதிலளித்தனர். (த-5)

## முஸ்லிம் காங்கிரஸின் அலுவலகம் தீக்கிரை



மட்டக்களப்பு,மே27

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று மாலை திறக்கப்படவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாகக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி ஏத்துக்கால் வீதியில் அமைக்கப்பட்டிருந்த இந்த அலுவலகம் நேற்று சனிக்கிழமை மாலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான றவூப் ஹக்கீமினால் திறந்து வைக்கப்பட இருந்த நிலையிலே இனந் தெரியாத நபர்களினால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக மீண்டும் சம்பந்தன்

யாழ்ப்பாணம், மே 27

இலங்கை தமிழரசுக் கட்சியின்தலைவராக மீண்டும் இரா. சம்பந்தன் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு நேற்றுக் காலை 9.45 மணிக்கு மட்டக்களப்பு அமெரிக்கமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கட்சியின் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் இரா. சம்பந்தன் மீண்டும் தலைவராகவும், சிரேஷ்ட துணைத் தலைவர்களாக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பொன். செல்வராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுச் செயலாளராக மாவை. சேனாதிராஜாவும், துணைப் பொதுச் செயலாளராக பி.துரைராஜசிங்கமும், உப தலைவர்களாக பி.என். சூசைதாசனும், கே.துரைரட்ணசிங்கமும், இ.சோமசுந்தரமும், டேவிற் நாகநாதனும், ஆர்.எம்.இமாமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இணைப் பொருளாளராக எஸ்.ரி.தியாகராஜாவும், பெ.கனகசபாபதியும் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை 14 துறைகளுக்குமான உப செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் உள்ளூராட்சி - சி.வி.கே. சிவஞானம், தொழிற்சங்கம்- பா.அரியநேத்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்), கொள்கை பரப்பு- சி.சிறிதரன் (நாடாளுமன்ற உறுப்பினர்), மீள் குடியேற்றம் - ஈ.சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்), சட்டம் மற்றும் வெளி விவகாரம்- எம்.ஏ.சுமந்திரன், தகவல் ஊடகம், தொழில்நுட்பம் - என்.வித்தியாதரன், மாதர் அணி - திருமதி அன்னம்மா சவுந்தரராஜன் (கிழக்கு மாகாணம்)- திருமதி நாச்சியார் செல்வநாயகம் (வடமாகாணம்), சமூக மேம்பாடு- க.பரஞ்சோதி, விவசாயம்- க.பரமேஸ்வரன், கடல்வளம்- ம.அன்ரனி ஜெயநாதன், நிர்வாகம்- எப்.எக்ஸ்.குலநாயகம், இளைஞர் அணி -க.சிவகரன் இவர்களுடன் 11 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (த-16)

## சுனாமியால் தப்பிய கைதி 7 வருடங்களின் பின் கைது

கொழும்பு,மே 27

மாத்தறை சிறைச்சாலையில் இருந்து 2004ஆம் ஆண்டு சுனாமி அழிவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் தப்பி ஓடிய கைதி ஒருவர் ஏழு வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைதி வெலிக்கடை பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டுள்ளார். தப்பி ஓடிய நிலையில் கைது செய்யப்பட்டவர் 26 வயதான இளைஞன் என தெரிவிக்கப்படுகிறது. இவர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைபடுத்தப்பட்டார். (த)




இலங்கை தமிழரசுக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதற்கு முன்னோடியாக நேற்றுக் காலை 9.45 மணியளவில், பொதுச் சபைக் கூட்டம் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் [illegible] ஆரம்பமானது. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பழைய செயற்குழுவுக்கான கூட்டம் மட்டக்களப்பு [illegible] உள்ள அமெரிக்க மிஷன் மண்டபத்தில், நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நேற்றுப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது. நேற்றைய கூட்டத்தில், தமிழரசுக்கட்சியின் அனைத்து கிளைகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் கிளைகளின் தலைவர்கள் செயலாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதயன் வழங்கும்

## பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியையே கணவன் அடித்துக் கொன்றார்

யில் பெண்ணை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற சமயம் அவர் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த யோகலிங்கம் பிறேமினி (வயது-38) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயாரே கொலையுண்டவர் ஆவார்.

இவரது தந்தையார் வைத்தியராகக் கடமையாற்றி வருபவர் எனவும் மன நோயாளி எனக் கூறப்படும் கொலைச் சந்தேகநபரான இந்தப் பெண்ணின் கணவர் கிளிநொச்சியில் மருந்தகம் ஒன்றை நடாத்தி வந்தவர் எனவும் வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரினால் இடம்பெயர்ந்து மன நோயாளியாகியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நீதிவான் பெ.சிவகுமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளுக்கு உத்தரவிட்டார். கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-16-6)

## விரைந்து செயற்பட கோருகிறது அமெரிக்கா

பிரசன்னத்தை நீக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டுமென்பதிலும் கூட அமெரிக்கா அக்கறை காட்டுகிறது.

அண்மையில் அமெரிக்காவுக்கு பயணம் செய்த இலங்கையின் வெளியுறவு அமைச்சருடன் தாம் கலந்துரையாடிய விடயங்களையும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்தவும் இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான பிரிவொன்று உள்ளடங்கிய 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையை இந்த வாரம் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் பொஸ்நரின் அலுவலகம் வெளியிட்டிருந்தது.

இலங்கையின் 2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்று அவை குறித்து இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை என்பவை குறித்து அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் அனுசரணையுடன் அண்மையில் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தின் வாக்கெடுப்பின் பின்னரும் அமெரிக்கா இலங்கையில் மனித உரிமை விவகாரங்களில் தொடர்ந்தும் அக்கறை காட்டி வருகிறது எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையின் வட பகுதியில் இராணுவப் பிரசன்னத்தை நீக்க வெண்டுமென்பதிலும் இலங்கைத் தமிழ் தரப்புகளுக்கு இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுகள் குறித்தும் அமெரிக்கா அக்கறை செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மைய தனது வெற்றித்தினக் கொண்டாட்ட உரையில் அரசு ஒரு போதும் வட பகுதியிலிருந்து இராணுவத்தை விலக்கிக்கொள்ள மாட்டாதெனவும் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றிக்கொள்ள மாட்டாதெனவும் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டான் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

தந்தையின் வாக்குமூலத்தைப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முடிந்த கையோடு பஸ் மூலம் யாழ். நகர் பஸ் நிலையத்துக்கு வந்து இறங்கிய மாணவன் அங்கிருந்து நெல்லியடி செல்வதற்காக பஸ்ஸுக்காக காத்திருந்துள்ளார்.

அந்தவேளை, சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் தன்னுடன் அச்சுவேலிக்கு வருமாறு மாணவனை வற்புறுத்தியுள்ளார்.

பஸ் நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'சபாரி' ரக மோட்டார் சைக்கிள் வரை மாணவனை அழைத்துச் சென்று அதில் ஏற்றிக் கொண்டு அந்த இளைஞன் புறப்பட்டார்.

யாழ். ஸ்ரான்லி வீதியூடாக நாவற்குழி வரை சென்று அங்கிருந்து தனங்கிளப்பு ஊடாகச் சங்குப்பிட்டி பூநகரி ஊடாகப் பரந்தன் வரை சென்றுள்ளார். அங்கிருந்து கிளிநொச்சி திருநகர் பகுதியிலுள்ள அடர்ந்த மரங்கள் நிறைந்த பகுதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்திய இளைஞர் மாணவனை அம்மன் கோயில் ஒன்றின் மூலஸ்தானத்தில் படுத்துறங்குமாறு மிரட்டியுள்ளார். பின்னர் அதிகாலை 3.30 மணியளவில் மாணவனை அங்கிருந்து அழைத்துக் கொண்டு மீண்டும் அதே பாதை வழியாக யாழ்ப்பாணம் வந்துள்ளார். கடத்தப்பட்ட மாணவன் நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பின் வீதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இறக்கிவிடப்பட்டுள்ளான். மாணவன் தனது பணப் பையில் வைத்திருந்த சுமார் 3ஆயிரத்து 400 ரூபா பணமும் திருடப்பட்டிருந்தது.

கடத்திய இளைஞர் மாணவனை இறக்கிவிடும்போது 100 ரூபாவை வழங்கியதாகப் பொலிஸாரிடம் மாணவனின் தந்தை வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்துச் சென்ற போது அந்த இளைஞர் மாணவனின் குடும்ப விவரம் மற்றும் வருமான விவரம் என்பனவற்றை விசாரித்துள்ளதாக மாணவனின் தந்தை கூறினார்.

என்னை மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருக்கச் செய்துவிட்டு மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திச் சென்றதாக மாணவன் கூறினான். தனக்கு அந்த இளைஞர் எந்தவித துன்புறுத்தலும் செய்யவில்லை எனவும் மாணவன் மேலும் கூறினான்.

'எனது மகன் ஏன் கடத்தப்பட்டான்' என்ற விடயம் தனக்குத் தெரியவில்லை என மாணவனின் தந்தை கூறினார்.

தூதரக உத்தியோகத்தரின் மகன் என்ற காரணத்தால் அந்த விடயம் தொடர்பாக தாம் அதிக அக்கறை எடுத்துச் செயற்பட்டதாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரி வெ.மகாலிங்கம் தெரிவித்தார். (த-3-4)

### தமராவிடம் இருந்து பதிலில்லை

பட்ட பதவியை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது. அது அவரைப் பொறுத்த விடயம். ஆனால் அமைச்சு ஏற்கனவே மேற்கொண்ட தீர்மானத்தின் படி செயற்படும். அதில் மாற்றமில்லை' என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தண்டனை நிலையத்துக்கு' தான் இடமாற்றப்படுவதற்கு அதிருப்தி தெரிவித்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்குக் கடந்த முதலாம் திகதி தமரா குணநாயகம் கடிதமொன்றை எழுதியிருந்தார். ஜெனிவாவில் ஐ.நா.வுக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியாக தான் ஏன் தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும் என்பதை அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுவராகப் பதவி வகித்த ரவிநாத ஆரியசிங்க, ஜெனிவாவில் ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதியாக ஜூலை முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார். (த)

## நவநீதம்பிள்ளையை அனுமதிக்க வேண்டும்

இதற்கு இலங்கைக் குழுவினர், நவநீதம்பிள்ளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு ஏற்கனவே பச்சைக் கொடி காண்பிக்கப்பட்டு விட்டதாகப் பதிலளித்துள்ளனர்.

ஆனால் அவர் தனது பயணத்துக்கு முன்பாக உண்மை கண்டறியும் அதிகாரிகள் குழுவொன்றை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுள்ளதாகவும் இலங்கைக் குழுவினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் கூறியுள்ளனர்.

முன்னதாக, ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடன் இணங்கிச் செயற்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(த)

## இலங்கையின் மனித உரிமை நிலை மீளாய்வுக்கு பொறுப்பாக 3 நாடுகள்

இந்த மீளாய்வுக்கு ஒவ்வொரு நாட்டுக்கும், தலா மூன்று நாடுகள் பொறுப்பாக நியமிக்கப்படுவது வழக்கம்.

இலங்கை தொடர்பான மீளாய்வு வரும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இதற்குப் பொறுப்பாக இந்தியா, பெனின், ஸ்பெயின் ஆகிய நாடுகளை ஐ.நா.மனித உரிமைகள் சபை நியமிக்கவுள்ளது.

இந்த மூன்று நாடுகளுமே, கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் வரும் நவம்பர் முதலாம் திகதி நடக்கவுள்ள மீளாய்வு இலங்கைக்கு மிகவும் கடினமானதாகவே இருக்கும் என்றும், உறுதியான கடப்பாட்டை அனைத்துலக சமூகத்துக்கு

கொழும்பு வெளிப்படுத்த வேண்டியிருக்கும் என்றும் இலங்கையின் உரிமை அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் கூறியுள்ளனர். (த)

# வடக்கு – கிழக்கு இணைப்பை வலியுறுத்தி இன்று தீர்மானம்

ழர் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அவர்களது உரிமைகளை வலியுறுத்தும் 9 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

அந்தத் தீர்மானங்கள் வருமாறு:-

✱ வடக்கு - கிழக்கு பிராந்தியங்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஊடாக தீர்வு காணப்படவேண்டும். முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் அங்கீகரிப்பதாக அந்தத் தீர்வு அமைய வேண்டும்.

✱ தமிழ் மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் துரித்தப்படுத்தப்படுவதுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகள் உட்பட பாதிப்புற்றோர் அனைவருக்கும் உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்களிக்க வேண்டும்.

✱ இராணுவ ஆக்கிரமிப்பு நிலையைத் தவிர்த்து சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீட்டை முற்றாக இல்லாமற் செய்ய வேண்டும். அனைத்துப் பகுதிகளிலும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும்.

✱ காணாமற்போனோர் தொடர்பில் உரிய பதில் அளிக்கப்படவேண்டும். கைதிகள் விடுதலை விரைவுபடுத்தப்படுவதுடன் இந்த விடயத்தில் அரசு 70 ஆம், 80 ஆண்டுகளில் நடந்து கொண்டது போல செயற்படவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் அளிக்கப்படுவதுடன் இவற்றுக்கு பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

✱ அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு வடக்கு - கிழக்கு மக்களை அதிகம் பாதிப்படையச் செய்துள்ளது. அதற்கான நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். வேலை வாய்ப்பு தேசிய மட்டத்தில் தமிழருக்கு 5 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. வீகிதாசாரத்துக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

✱ புலம்பெயர்ந்த மக்கள் இங்கு நடைபெறும் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களுக்கு நிதியுதவி, நிபுணத்துவ உதவி என்பவற்றை வழங்க வேண்டும். இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இங்கு நடைபெறும் அரசியல் போராட்டங்களுக்கு தமது ஆதரவை புலம்பெயர்ந்த மக்களும் வழங்க வேண்டும்.

✱ தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் இதுவரை ஆதரவு வழங்கி வந்த சர்வதேசத்துக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் எமக்காக குரல் கொடுத்து நாம் நீதியான கௌரவமான தீர்வை எட்ட உதவி புரிய வேண்டும்.

✱ உரிமைகளை வென்றெடுப்பதற்கு நடத்தப்படும் போராட்டத்துக்கு எமது மக்கள் முழுமையான ஆதரவை வழங்கி ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் முற்போக்கு சக்திகளும், முஸ்லிம் சமூகம் உள்ளிட்டோரும் போராட்டத்தை மேலும் வலுப்படுத்த உதவவேண்டும்.

✱ மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடையக் கால வரையறை ஒன்றை வழங்கி அதன் பின்னர் வன்முறையற்ற சாத்வீகப் போராட்டத்துக்கான பொது அறிவிப்பை விடுக்க வேண்டும். (த)

## பிரிவினைவாதிகள் இன்னும் உயிர்ப்புடனே உள்ளனர்

தெற்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்தி, மேற்கு, வடமேற்கு மாகாணங்களிலும் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

நாடு முழுவதும் சிவில் நிர்வாகம் சிறப்பாக நிலைநாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கில் சிவில் அதிகாரிகள் கோரினால் தவிர படையினர் எந்தப் பாத்திரத்தையும் வகிப்பதில்லை.

நாம் சுதந்திரம் பெற்ற காலத்தில் பிரிட்டன் ஆயுத படைகளிடமிருந்து இராணுவப் பாரம்பரியங்களையும் தொழிற்சார் அடிப்படைகளையும் பெற்றுக்கொண்டோம். எமது இராணுவக் கோட்பாடானது, பிரிட்டனின் ஏனைய முன்னாள் காலனித்துவ நாடுகளிலுள்ளதைப் போன்று பிரிட்டன் இராணுவக் கோட்பாட்டின் அடிப்படையிலானவையாகும்.

இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரசன்னமானது சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப உள்ளது.

பல சக்திவாய்ந்த நாடுகள் தமது பிரதான நிலப்பரப்பிலிருந்து வெகு தொலைவில் ஆயுதப் படையினரை ஈடுபடுத்தியுள்ளன. சில நாடுகள் தமது பிரதான நிலப்பரப்பிலிருந்து 8000 மைல்கள் தொலைவிலும் படையினரை நிறுத்தியுள்ளன.

இலங்கை ஆயுதப்படையினர் ஐ.நா. அமைதிகாக்கும் படை நடவடிக்கைகளுக்காக தவிர, எமது தேசிய எல்லைகளுக்குள்ளே நிறுத்தப்பட்டுள்ளனர்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமெரிக்க - பாகிஸ்தான் நெருக்கடி தெற்காசியாவுக்கு மற்றொரு சோதனை

உலக வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்காவுக்கும் ஆசிய வட்டகையைச் சேர்ந்த பாகிஸ்தானுக்கும் இடையில் நிலவி வந்த ஓரளவிலான நட்பு நிலை தற்போது முறிந்துபோவதற்கான சாத்தியம் தென்படுகிறது. இதனால் தெற்காசியப் பிராந்தியத்தில் இப்பாரதூரமான அரசியல் சூழலொன்று உருவாகும் ஏதுநிலை கவலைக்குரிய ஒன்றாகும்.

சோவியத் யூனியனின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் மார்க்ஸிய - லெனினிஸ அரசைப் பாதுகாப்பதற்காக 1979முதல் 1988 வரை ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் நிலை கொண்டிருந்தமை தெரிந்தவொன்றே. அவற்றுக்கு எதிரான முஜாஹிதீன் கெரில்லாக்களின் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்கியதன் மூலம் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாக பாகிஸ்தான் விளங்கி வந்தது. ஆயினும் இன்று அமெரிக்காவுடனான அந்த உறவை முறித்துக்கொள்ளும் நிலைக்குப் பாகிஸ்தான் வந்துள்ளது.

பாகிஸ்தான் அரசு, அல் குவைதா இயக்கத்துக்கு எதிரான நாடு என்று தன்னை வெளியே காட்டி வந்தது. ஆயினும் மறைமுகமாக அந்த இயக்கத்துக்கு பாகிஸ்தான் வழங்கி வரும் ஆதரவே அமெரிக்க பாகிஸ்தான் உறவு பாதிக்கப்படப் பிரதான காரணம்.

பாகிஸ்தானின் உறவை விட தனது பிரதான எதிரியான அல் குவைதா இயக்கத்தை முற்றாக அழிப்பதையே அமெரிக்கா முக்கியமெனக் கருதுகிறது. 2001 செப்ரெம்பர் 11இல் அமெரிக்காவின் வர்த்தக மையமான இரட்டைக் கோபுரம் மீது அல்- குவைதா நடத்திய தாக்குதலில் 4000 பொதுமக்களுக்கு மேல் கொல்லப்பட்டனர்.

90 ஆயிரம் அமெரிக்கப்படைகள் உட்பட்ட நேட்டோவின் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் படைகளுக்கு எதிராகக் கடந்த பத்து வருடங்களாக தலிபான் போராளிகளும், அல் - குவைதா இயக்கத்தினரும் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் தமது மறைவிடமாக ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பாகிஸ்தானின் மலைப்பிரதேசத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இது ஒபாமா நிர்வாகத்துக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது. தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் ஆப்கான் எல்லைகளை அண்டிய பாக். பிரதேசங்களில் அமெரிக்காவின் ஆளில்லா வேவு விமானங்கள் அடிக்கடி நடத்தி வரும் தாக்குதல்கள் மற்றும் இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் ஊடான நேட்டோவின் விநியோகப் பாதைகளை பாகிஸ்தான் மூடியமை நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுவதற்கு இந்த விநியோகப்பாதைகள் முக்கியமானவையாகும். பாகிஸ்தானின் முக்கிய துறைமுகமான கராச்சியில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு இரு விநியோகப் பாதைகளை கடந்த நவம்பர் வரை நேட்டோ படைகள் பயன்படுத்தி வந்தன. ஒரு விநியோகப் பாதை கைபர் ஊடாக வட ஆப்கானிஸ்தானுக்கும், மற்றைய பாதை பலோசிஸ்தான் மாகாணம் ஊடாக தென் ஆப்கானிஸ்தானுக்கும் செல்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் ஆப்கான் - பாக். எல்லையில் நேட்டோ விமானங்கள் நடத்திய வான் வழித்தாக்குதலின் குறி தவறியதால் எல்லையில் உள்ள பாகிஸ்தான் சோதனைச் சாவடியில் அவ்வேளை கடமையில் இருந்த 24 பாகிஸ்தான் படையினர் கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பாகிஸ்தானின் சர்தாரி அரசு மூடிய நேட்டோவின் விநியோகப் பாதைகளை மீண்டும் திறந்துவிட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இதுவரை வெற்றி அளிக்கவில்லை. இது தெற்காசியாவில் ஒபாமா நிர்வாகத்துக்கு பெரும் சவாலாகக் கருதப்படுகிறது.

பாகிஸ்தான் இப்பிரச்சினையில் பிடிவாதமாக இருக்குமானால் ரஷ்யா, கோகுசெஸ், உஸ்பெக்கிஸ்தான் மார்க்கமாகப் பெரும் செலவிலேயே ஆப்கானிஸ்தானுக்கான புதிய விநியோகப் பாதையை அமெரிக்காவினால் ஏற்படுத்த முடியும். பெரும் செலவினத்தை உண்டாக்கும் இதற்கு ரஷ்யா சம்மதிக்க முன்வராது. பாகிஸ்தானைப் பணியவைத்து விநியோகப் பாதைகளை மீண்டும் திறப்பதுதான் தற்போது அமெரிக்காவிடம் உள்ள ஒரேமாற்றுவழி. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒபாமா உட்பட ஐம்பது நாடுகளின் தலைவர்கள் சிக்காக்கோவில் நடத்திய நேட்டோ உச்சிமாநாட்டில் இந்த விநியோகப் பாதைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் இவ்விடயம் குறித்துப் பேச்சு நடத்த ஒபாமா மறுத்துவிட்டார்.

பாகிஸ்தானுக்கான தன்து உதவிகளை அமெரிக்கா அரைவாசியாகக் குறைத்துள்ளதுடன் விநியோகப் பாதை திறக்கப்படாவிட்டால் நிதி உதவி மேலும் குறைக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது. பின்லேடனின் மறைவிடம் குறித்து அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏக்கு இரகசிய தகவல் வழங்கிய குற்றச்சாட்டுக்காக டாக்டர் ஷாகிர் அப்ரிடி என்பவருக்கு 33 வருடச் சிறைத் தண்டனை விதித்தமை மூலம் ஒபாமா நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுத்துள்ளது எனலாம்.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானைத் தண்டிக்கப் போய் தனது நட்பு நாடான பாகிஸ்தானைப் பகைத்துக் கொண்டிருப்பது அதன் ராஜதந்திரத்துக்குப் பெரும் பின்னடைவாகும் என்று அரசியல் விற்பன்னர்கள் கருதுகின்றனர். 2014 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகளை விலக்கிக் கொள்ளும்போது நேட்டோவினால் பயிற்சி அளிக்கப்பட்ட ஆப்கான் படைகள் அல் - குவைதாவினதும் தலிபான்களினதும் தாக்குதலை எதிர்கொள்ளமுடியாத நிலைமை ஏற்படுமானால் அமெரிக்காவுக்கு அது பெரும் பின்னடைவை உண்டாக்கும் என்பதும் அவர்களது கணிப்பீடு.

1979ஆம் ஆண்டு ரஷ்யாவின் லியோனிட் பிரஸ்னேவ் அனுப்பிய படைகள், 2011ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அனுப்பிய படைகள் என்று வெளிநாட்டுப் படைகளால் ஆப்கானிஸ்தான் சீரழிந்துபோகும் நிலைமை பெரும் துரதிர்ஷ்டவசமானது. அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான தற்போதைய நெருக்கடி தெற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்கான வாய்ப்பை மேலும் குறைப்பதாகவே முடியும்.

# வடக்கு உள்ளூராட்சி அதிகாரிகளால் யாழ். மாவட்ட செயற்பாடு குழம்புகிறது

## பிரதேச சபைத் தலைவர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகளைப் பாதிக்கும் வகையில் வடமாகாண உள்ளூராட்சி மன்ற உயர் அதிகாரிகளின் செயல்பாடுகள் அமைந்துள்ளன என்று பிரதேச சபைகளின் தலைவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபைகளை மக்களின் பிரதிநிதிகள் பொறுப்பேற்று ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ள நிலையிலும் கூட சபை நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் உயர் அதிகாரிகளின் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டால் அதனைப் புறந்தள்ளுகின்றனர். இதனால் சபையின் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன.

குறிப்பாக பிரதேச சபைகள் எடுத்து அனுப்பும் தீர்மானங்களைப் புறந்தள்ளி சில தனிப்பட்டவர்களின் செயல்பாடுகளை முன்னெடுப்பது சம்பந்தமான கடிதங்களை பிரதேச சபைகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

இத்தகைய செயல்பாடுகளால் சபையின் நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. இது சம்பந்தமாக உள்ளூராட்சி மன்ற அமைச்சு மற்றும் அகில இலங்கைப் பிரதேச சபைகளின் தலைவர்கள் சம்மேளனம் ஆகியவற்றிடம் முறையிடவுள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள். (ம-86)

# வருமானம் ஈட்டும் திட்டங்களுக்கு அனுமதி கிடைப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், மே 27

வலிகாமம் பகுதிக்கு உட்பட்ட பிரதேச சபைகளால் நெல்சிப் திட்டத்தின் கீழ் வருமானம் ஈட்டும் திட்டங்களை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில் தாமதம் நிலவுகின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்பாடுகளுக்கான அனுமதியை வடமாகாண உள்ளூராட்சி மன்றம் வழங்காது இழுத்தடித்து வருவதாக வலிகாமம் பகுதி பிரதேச சபைகளின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

வருமானம் ஈட்டும் முயற்சிகளுக்கான திட்டங்களை பிரதேச சபைகள் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியுள்ள போதிலும் அதற்கான அனுமதியை உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அனுப்பாது உள்ளார்.

இந்த நிலையில் ஏனைய செயல்பாடுகளுக்கான அனுமதியை மட்டும் வழங்கி வருவதால் சபைகளின் வருமானம் ஈட்டும் செயல்பாடுகள் பெரும் பாதிப்பை அடைகின்றன.


குறிப்பாக வலி. தெற்கு, தென்மேற்கு பிரதேச சபைகளால் அனுப்பப்பட்ட வருமான செயல் திட்டங்களுக்கான அனுமதிகள் வழங்கப்படாத நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-86)

## வல்வெட்டித்துறையில் இரத்த தான முகாம்

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் இன்று நடமாடும் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. இரத்ததான கொடையாளிகள் முன் வந்து இரத்ததானம் செய்யுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. வழமையாக இரத்ததானம் செய்பவர்கள் மற்றும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புவோர் அனைவரும் முன் வந்து இரத்ததானம் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியம் இந்த இரத்த தான முகாமை ஒழுங்கு செய்துள்ளது. (ம-4)

# நாவற்குழிப் பாலத்தில் உடைவு



நாவற்குழி. பாலத்தில் இருந்த தகடு பிரிந்த நிலையில் இருப்பதால் இந்த வீதியில் செல்வோர் பெரும் அவலங்களை தினமும் சந்தித்து வருகின்றனர்.

இந்த வீதியால் பயணம் செய்வோர் இதனால் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போரால் இந்தப்பாலம் முற்றாக சேதமடைந்த நிலையில் 2002 ஆம் ஆண்டில் இப்பாலம் மீள இரும்புத் தகடுகளால் புதிதாக அமைக்கப்பட்டது. இந்த நிலையில் 2009 ஆம் ஆண்டின் பின் இந்தப் பாலம் ஊடாகத் தென் பகுதியின் கனரக வாகனங்கள் பல தினமும் பெரும் சுமையுடன் பயணம் செய்து வருகின்றன.

இந்த நிலையில் இந்தப்பாலத்தின் இரும்புத் தகடு ஒன்று வெடிப்பு ஏற்பட்டு பிரிந்த நிலையில் உள்ளது. இதனால் இவ்வீதியால் பயணம் செய்வது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் கூறப்படுகின்றது.

கடந்த ஐந்து நாள்களுக்கு மேலாக இங்கு இந்த நிலை தோன்றியுள்ள போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இதுவரை இந்த விடயத்தில் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று விசனம்தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உடனடிக் கவனம் எடுத்து இந்தப் பாலத்தின் வெடிப்பை சீர்செய்வதுடன் மக்களின் போக்குவரத்தில் அக்கறை கொள்ள வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

## புன்னாலைக்கட்டுவன், குப்பிளானில் கஞ்சா வியாபாரம் மும்முரம்

வலி.வடக்கு, மே 27

புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் கஞ்சா விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வியாபாரிகள் போன்று வருபவர்களால் இத்தகை கஞ்சா வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இங்குள்ள இளைய தலைமுறையினர் அல்லாத வேறு ஊர்களில் இருந்து வருபவர்களும் கூட இந்தப் பகுதிக்கு வந்து கஞ்சாவை வாங்கிச் செல்வதாகவும் மக்கள் கூறுகின்றார்கள்.

ஆள்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுவதால் நண்பகல், மாலை வேளைகளில் இந்த வியாபார நடவடிக்கை இடம்பெற்று வருகிறது என்றும்-

இது சம்பந்தமாக கிராம மட்ட அரச அலுவலர்களின் கவனத்துக்கு பொது மக்கள் கொண்டு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-86)

# திருஞானசம்பந்தர் குருபூசையை எழுச்சிபூர்வமாகக் கொண்டாட முடிவு

வலி வடக்கு, மே 27

இந்து மகாசபையின் நடவடிக்கைச் செயலணி சைவத் தமிழர்களுடைய பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தாய்மதத்தின் பெருமையை நிலைநிறுத்தும் வகையில், இந்த முறை மாவட்ட ரீதியாக திருஞானசம்பந்தர் குருபூசையை எழுச்சிபூர்வமாகக் கொண்டாட முன்வந்து என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர், எமது சமயத்தின் முதற் குரவரான திருஞானசம்பந்த நாயனார் பெரும் இடர்களை எல்லாம் வெற்றி கொண்டு, சமண மதத்தினுடைய பிடியிலிருந்து சைவர்களை எவ்வாறு மீண்டும் தாய்மதத்துக்கு திருப்பிக் கொண்டுவந்தாரோ, அதேபோன்று இன்றைய காலகட்டத்திலும் அறியாமையின் காரணமாக வேற்று மதங்களுக்கு சென்றுள்ள எமது சிவத்தமிழ் உறவுகளை மீண்டும் தாய் மதத்துக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை, திருஞானசம்பந்தப் பெருமானுடைய குருபூசைத் தினத்தன்று ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான செயற்பாடுகளை கிராமிய மட்டத்திலிருந்து மாவட்ட ரீதியாக பாடசாலைகள், இந்து இளைஞர் அமைப்புகள், சைவ நற்பணி மன்றங்கள், ஆலயங்கள் ஊடாக பல்வேறு விதமாக முன்னெடுக்குமாறு சைவப் பெருமக்களை இந்து மகா சபை கேட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆக்கிரமிப்பில் மயானங்கள் தகனத்துக்கு அலைந்து திரியும் நிலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் மயானங்கள் இராணுவ ஆக்கிரமிப்பில் இருப்பதால் இறந்தவர்களைப் புதைக்கவோ அல்லது எரிக்கவோ வெகுதூரம் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் மயானம் தற்போது இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளது. இதற்கு மாற்றீடாக வேறு இடம் ஒதுக்கப்படாததால் இறந்தவர்களின் உடல்களை அங்கிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பேராற்று மயானத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தூரத்தைக் கருத்திற் கொண்டு இறந்தவரின் உறவினர்களைத் தவிர ஏனையோர் மயானத்துக்குச் செல்வதில் அக்கறை காட்டுவதில்லை.

எதிர்காலத்தில் இறந்த சடலங்களை கொண்டுசெல்லக்கூட ஆள்கள் இல்லாத நிலையேற்படும். மயானங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீளப் பெறப்பட வேண்டும், இல்லையேல் உடனடியாக வேறு ஓர் இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

மயானங்கள் புனரமைக்கப்படல் வேண்டும். மயானங்களுக்கான எல்லைகள் வரையறுக்கப்பட்டு வசதிகள் செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதனை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை. தற்போது ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, முத்துஐயன் கட்டின் ஒருபகுதி பண்டாரவன்னி, பேராறு போன்ற கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கும் பேராறு மயானமே பயன்படுகின்றது. ஆனால் மயானத்துக்குரிய காணி சிறிது சிறிதாக பிடிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் வசதிகளற்ற நிலையும் காணப்படுகின்றது.

பேராறு மயானம் மிகவும் முக்கியமானதாக உள்ளதால் முன்பிருந்த எல்லைகளின் படி காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. எந்த நாட்டிலும் மயானங்களை அழிப்பதும் அழியவிடுவதும், சுவீகரிப்பதும் நடைபெறுவது இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மயானம் தொடர்பான விடயத்தில் அதிகாரிகள் உடன் கவனம் எடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-500)

## வவுனியா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், மே 27

வவுனியா நகரின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதன் ஒரு பகுதியாக அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிக்கும் வவுனியா நகரசபையினருக்கும் இடையே இடம்பெற்றது.

இதில் வவுனியா நகரசபை உறுப்பினர்கள் இந்தியா சென்று அங்குள்ள நகராட்சிகளின் நடைமுறைகளைப் பார்வையிடுவதெனவும் அது தொடர்பாக ஆராய்ந்து நகர அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள விடுதி ஒன்றில்கடந்த புதன்கிழமை மதியம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அங்கு யாழ்.அலுவலக இந்தியத்துணைத்தூதரக அதிகாரி வி.மகாலிங்கம், வவுனியா நகரசபைத் தலைவர் ஐ.கனகையா, உபதலைவர் எம்.எம்.ரதன் மற்றும் உறுப்பினர்களான பொ.செல்லத்துரை சு.குமாரசாமி, எஸ்.ராஜேஸ்வரன், எம்.முனாபர், க.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது, வவுனியா நகரில் ஏ-9 வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக மேம்பாலம் ஒன்று அமைக்கவும், நகரசபைக்கு உட்பட்ட பூங்கா ஒன்றின் அபிவிருத்தி மற்றும் நகரச் சுற்றுச் சூழல் பணிக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் உதவுமாறு நகரசபையினர் வேண்டுகோள் விடுத்தனர். (க-4)

## மன்னாரில் ஆக்கிரமிப்பு நீடிக்கிறது கடற்படை வெளியேற மறுப்பதால் 25 வீட்டுத் திட்ட மக்கள் விசனம்

மன்னார், மே 27

மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் உள்ள 25வீட்டுத்திட்டத்தில் குடியிருந்த பொலிஸார் வெளியேறியுள்ள போதும் இங்குள்ள கடற்படையினர் வெளியேற மறுத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம் பெற்ற போரின் போது இராணுவத்தினரும், பொலிஸாரும் இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகளை ஆக்கிரமித்தனர். இதனால் குறித்த கிராம மக்கள் பள்ளிமுனையில் உள்ள உறவினர்களுடைய வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் அங்கு 2000 ஆம் ஆண்டு கடற்படையினர் நிலை கொண்டனர். இதனால் அப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக உருவாகியது. காணாமல் போன, கடத்தப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்டவர்களைக் கடற்படையினர் இந்த இடத்திற்குக் கொண்டு சென்றே விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது 22 வருடங்கள் கழிந்த நிலையில் அப்பகுதியில் இருந்த பொலிஸார் மக்களின் நலன் கருதி அந்த இடத்தை விட்டு வெளியேறியுள்ளனர். ஆனால் கடற்படையினர் குறித்த வீடுகளை விட்டுவெளியேறாது தொடர்ந்தும் அங்கேயே தங்கியுள்ளனர். மேலும் குறித்த வீட்டுத் திட்டத்தில் தற்போது ஏழு வீடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. என்றும் ஏனைய வீடுகள் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க-12)

## திருக்கேதீச்சரத்துக்கு பாதயாத்திரை

திருக்கேதீச்சர வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இரண்டாவது தடவையாக வவுனியாவிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு பாதயாத்திரை ஒன்று இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், இந்து சமய அமைப்புகள் என்பன இந்தப் பாதயாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதி வவுனியாவில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறும் தேர்த்திருவிழா அன்று திருக்கேதீச்சரத்தைச் சென்றடையும்.

வவுனியாவில் இருந்து மன்னார் வீதி வழியாக இடம்பெறும் இந்தப் பாதயாத்திரையில் செல்லுவோர் வீதிகளுக்கு அண்மையில் காணப்படும் இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள், தியான நிகழ்வுகள் மற்றும் கூட்டுப் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுவர்.

இந்த வீதிக்கருகில் காணப்படும் இந்து ஆலயங்களின் நிர்வாகிகள் மற்றும் இந்துக்கள் பாதயாத்திரை மேற்கொண்டு வரும் பக்தர்களின் நன்மை கருதி தண்ணீர்வசதி மற்றும் அவர்களுக்குத் தேவையான உணவு வசதிகளை மேற்கொண்டு அவர்களுக்கு உதவி புரியுமாறு பாதயாத்திரை ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (க-400)

## பாலியல் துஷ்பிரயோகம்

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் 17 வயதுச் சிறுமி ஒருவரை திருமணம் புரிவதாகக் கூறி ஏற்கனவே திருமணமான நபரொருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் பகுதியைச் சேர்ந்த தந்தையை இழந்த பதினேழு வயதுடைய சிறுமி ஒருவர் அவரது தாயார் மற்றும் சகோதரர்களுடன் வாழ்ந்து வருகின்றார். இந்த நிலையில் உதயநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த ஏற்கனவே திருமணம் செய்த நபரொருவர் குறித்த பெண்ணைத் திருமணம் செய்வதாக உறுதிமொழி கூறி கடந்த ஒன்பது மாதங்களாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார். தற்போது இந்தப் பெண் ஒன்பது மாத கர்ப்பிணியாக இருப்பதாக கிளிநொச்சிப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வன்னியில் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-6)

## உண்டியல் திருட்டில் ஈடுபட்டவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை

கிளிநொச்சி மே 27

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியல் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் உண்டியல்திருட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால கடூழிய சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் கடந்த இரண்டாம் திகதியன்று உண்டியலை உடைத்துத் திருடியதாக கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இவருக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த குற்றவாளி பத்து வருடங்களுக்கு நன்னடத்தை உள்ளவராகவும், குற்றச்செயல்கள் எதிலும் ஈடுபடாமலும் இருக்க வேண்டும் எனவும் அவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுமிடத்து பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும், எச்சரிக்கை செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ. சிவகுமார் அவரை விடுவித்தார்.

(க-6)



துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் பொதுநோக்கு மண்டபத்தில் ரெதடிஸ்த திருச்சபையின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் இடம்பெற்ற போது. (18)

## சுழல் காற்றினால் பாடசாலைக்குச் சேதம்

கிளிநொச்சி, மே 27

நேற்று வீசிய திடீர் சுழல் காற்றினால் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியின் மேற்கூரைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

பலமாக வீசிய சுழல் காற்று பாடசாலையின் கூரைகளுக்குப் போட்டிருந்த தகரங்களைத் தூக்கி வீசியது. பறந்து சென்ற தகரங்கள் பாடசாலையிலிருந்து சிறிது தூரத்திலும் வீதிகளிலும் விழுந்து கிடந்தன.

ஓட்டுக் கூரைகளும் சேதமடைந்தன. இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது வகுப்பறைகளில் இருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இதேவேளை மேற்படி சம்பவத்தை அறிந்ததும் பொலிஸார், இராணுவத்தினர் அரச அதிபர் செயலகத்தைச் சேர்ந்தவர்கள் வலயப் பணிமனையினர் எனப் பலரும் வந்து சேதங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

பாடசாலை தொடர்ந்தும் சேதமடைந்த கட்டடத்துற்குள் இயங்கி வருகின்றது. விரைவில் புனரமைத்துத் தருவதாக அதிகாரிகள் கூறிச் சென்றனர். (க-405)

## அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் சிறையும்

கிளிநொச்சி,மே 27

கிளிநொச்சி வேரவில் பகுதியில் அரச சாராயத்தைத் அனுமதியின்றி தொடர்ந்து விற்பனை செய்து வந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இதன்போது, சாதாரண சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையாகக் கிளிநொச்சி பொலிஸார் கடந்த இரண்டாம் திகதி குறித்த நபரை கைது செய்திருந்தனர். பின்னர் குறித்த நபரைக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினார்.

கைது செய்யப்பட்டவர் அதே குற்றச் செயலை மீண்டும் புரிந்ததால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இரண்டுமாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

(க-6)

## சாராயம் விற்றவர் செலுத்தினார் தண்டம்

கிளிநொச்சி, வட்டக்கச்சிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸார் கடந்த 23 ஆம் திகதி சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட ஒருவரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினார். இந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. க-6)

## தடை விதிக்கப்படாத தென்பகுதி வியாபாரிகள்

மன்னாரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நடைபாதை வியாபாரிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது குறித்த நடைபாதை வியாபாரத்தைத் தென்பகுதி வியாபாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் நடைபாதை வியாபாரிகள் பலர் தள்ளு வண்டில்கள் மூலம் பழம், சிற்றுண்டிவகைகள் உள்ளிட்ட பல்வேறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் ஓர் இடத்திலேயே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் இவர்களுக்குத் தொடர்ந்தும் வியாபாரம் செய்ய அனுமதி மறுத்ததோடு இவர்களுடைய கடைகளும் அகற்றப்பட்டன. தற்போது தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின வியாபாரிகள் அதே வியாபாரத்தைத் தள்ளு வண்டில்கள் மூலம் சகல இடங்களுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் புனரமைப்புக்கு மூன்றாம் கட்டமாக ரூ. 400 மில்.

## நெல்சிப் அபிவிருத்தி திட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.பிரணநாதன் தகவல்

யாழ்ப்பாணம்,மே 27

நெல்சிப் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் வீதி புனரமைப்பு மற்றும் கட்டட வேலைக்கென 3 ஆம் கட்டமாக 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளரும், நெல்சிப் அபிவிருத்தி திட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.பிரணநாதன் தெரிவித்தார்.

நெல்சிப் அபிவிருத்தி தொடர்பான மே மாதத்துக்கான கூட்டம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதன் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

3 ஆம் கட்ட வேலைத் திட்டத்துக்காக நெல்சிப் அபிவிருத்தி மூலம் 400 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 30 வேலைத் திட்டங்களில் வீதிகள் புனரமைப்பு புதிய கட்டடங்கள் உள்ளடங்கலாக அமையவுள்ளது.

வேலைத் திட்டங்களுக்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வீதிகள் கட்டடங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் தரப்படுத்தப்படவில்லை. தரப்படுத்தப்பட்ட பின்னரே வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நெல்சிப் திட்டத்தின் 2 ஆம் கட்டத்துக்காக 300 மில்லியன் ரூபா வீதி புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்டது.

28 வீதிகளில் முதற் கட்டமாக 21 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. ஏனைய வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

நெல்சிப் வேலைத் திட்டங்கள் மக்களுடன் தொடர்புடையது என்பதால் மக்களின் பங்களிப்புகள் மிகவும் அவசியமாக அமைகிறது.

வேலைத் திட்ட அத்தியட்சகர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், சமூக கண்காணிப்புக் குழு, ஒப்பந்தகாரர்கள் ஆகியோரிடமிருந்தும் ஒத்துழைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் போதே குறித்த காலத்துக்குள் வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.- என்றார்.

இந்தக் கூட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், செயலாளர்கள், ஒப்பந்தக் காரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ம-13)

---

# இந்திய அரசின் 'ஆயுஷ்' புலமைப்பரிசில் இலங்கையின் 10 மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 27

இந்திய அரசு இலங்கை மாணவர்கள் 10 பேருக்கு 2012-2013 ஆம் கல்வியாண்டுக்கான புலமைப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளதாக இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்கான மாணவர் தெரிவு இந்திய அதிகாரிகளினால் இலங்கை உயர் கல்வி அமைச்சின் உதவியுடன் நடத்தப்படும்.

மாணவர்கள் திறமை, கல்வித்தகைமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். இதன்படி ஆயுள்வேத, யுனானி, சித்த மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் கலாநிதி கற்கைநெறிகளை இந்தியாவில் கற்பதற்கான 'ஆயுஷ்' புலமைப்பரிசிலை இலங்கையைச் சேர்ந்த 10 மாணவர்கள் பெறமுடியும்.

புலமைப்பரிசில் திட்டம், பயிற்சி நெறிக் கட்டணம், மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவு, விடுதிக் கொடுப்பனவு என்பவற்றுடன் புத்தகங்கள் உள்ளிட்ட எழுது பொருள்களுக்கான ஆண்டு மானியத்தையும் உள்ளடக்கியதோடு பொது மருத்துவ வசதிகளையும் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை இலங்கை உயர்கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் 'இலங்கை உயர்கல்வி அமைச்சு, இல.18, வார்ட் பிளேஸ், கொழும்பு-7' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(10-16)

---

# விதிமுறைகளை மீறியதால் 24 ஆயிரம் ரூபா பறிபோனது

வடமராட்சி, மே 27

வாகன ஒழுங்கு விதிகளை மீறிய வல்வெட்டித் துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 8 வாகன உரிமையாளர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 24 ஆயிரம் ரூபா பருத்தித்துறை நீதி மன்றத்தில் அபராதமாக விதிக்கப்பட்டது.

**குற்றம் சாட்டப்பட்ட வாகன சாரதிகள் 8 பேர் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து 8 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது**

வல்வெட்டித் துறைப் பொலிஸார் பல்வேறு இடங்களில் போக்குவரத்துக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறிய 8 பேர் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

தனித் தனியாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகள் பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஒவ்வொன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றம் சாட்டப்பட்ட வாகன சாரதிகள் 8 பேர் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 8 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ம-8)

---

# உதயபுரம் கடற்கரை வீதி புனரமைக்க நிதி

யாழ்ப்பாணம், மே 27

உதயபுரம் கடற்கரைவீதி புனரமைப்புப் பணிகள் விரைவில் இடம்பெறவுள்ளன.

இருபது லட்சம் ரூபா செலவில் ஆயிரத்து 600 மீற்றர் நீளமான இந்த வீதியைப் புனரமைக்க நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

மணியந் தோட்டம் பகுதியில் உள்ள மக்களின் போக்குவரத்துக்கு இன்றியமையாத இந்த வீதியை உடன் திருத்தியமைக்க அண்மையில் இடம்பெற்ற நல்லூர் பிரதேச சபையின் குறைகேள் நடமாடும் சேவையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்துக் குறிப்பிட்ட வீதியைப் புனரமைக்க நல்லூர் பிரதேச சபை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

---

# வேலணை பொது நூலகத்துக்கு புதிய நூல்கள் கொள்வனவு

## வாசகர் வட்டக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே 27

வேலணைப் பிரதேச சபையின் பொது நூலகத்துக்கு புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்று நூலக வாசகர் வட்டக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு வருடமும் சிறந்த வாசகர்களை தெரிவு செய்து கௌரவித்தல்**

வேலணை பிரதேச சபையின் பொது நூலகத்தின் வாசகர் வட்டக் கூட்டம் அண்மையில் உப அலுவலக பொறுப்பதிகாரி ப.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

* நூலகத்தின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் வாசகர் வட்ட உறுப்பினர்கள் செயற்படுதல்.
* ஒவ்வொரு வருடமும் சிறந்த வாசகர்களை தெரிவு செய்து கௌரவித்தல்.
* டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் நூலகத்தினருடன் இணைந்து செயற்படல்.
* நூலக முப்பரிமான கண்காட்சிக்கு தேவையான சான்றாதாரங்களை வழங்கி உதவுதல்.

இந்தக் கூட்டத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பு.பாலசுப்பிரமணியம், நூலகர் செல்வி ச.வித்யா, நூலக உதவியாளர் திருமதி ம.ஜெயந்தா மற்றும் வாசக வட்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.(ம-7)

---

# கைகலப்பில் கண் பாதித்த இளைஞனுக்கு நஷ்டஈடு

## ஒரு லட்சம் ரூபா வழங்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 27

இளைஞர் ஒருவரின் ஒரு கண் முற்று முழுதாகப் பாதிக்கும் வகையில் கைகலப்பில் ஈடுபட்ட குற்றவாளிகள் பாதிக்கப்பட்ட இளைஞருக்கு ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அத்துடன் 7 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமாக நீதிமன்றுக்குச் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் 5 வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தது.

குற்றவாளிகள் 5 பேரும் நட்ட ஈடு செலுத்தத் தவறின் ஒருவருட சிறைத் தண்டனையும், தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஒரு வார சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்ற உத்தரவிட்டது.

இந்த வழக்கு ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

நாரந்தனையைச் சேர்ந்த இரு தரப்பினரும் கடந்த வருடம் இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டனர். ஒரு தரப்பைச் சேர்ந்த அந்த இளைஞர் ஒரு கண் தாக்கப்பட்டுப் பின்னர் கண்பார்வையிழந்தார்.

இந்தக் கைகலப்புத் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

விசாரணையில் இருந்து வந்த இந்த வழக்கு நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்களில் ஒருவர் வெளிநாடு சென்று விட்டார். விசாரணையின் போது மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்த ஏனைய நான்கு சந்தேக நபர்களும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். வெளிநாட்டில் இருக்கும் சந்தேக நபர் நீதிமன்றின் கட்டளைக்குத் தான் பணிவதாகவும் மன்றின் தீர்ப்பைத் தான் ஏற்றுக் கொள்வதாகவும் கடிதம் மூலம் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார்.

விசாரணையின் பின்னர் இவ்வாறு நட்ட ஈடும் தண்டப்பணமும் செலுத்த நீதிமன்று உத்தரவிட்டது. தற்போது வெளிநாட்டிலிருக்கும் அந்த நபருக்கு நீதிமன்றம் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது. அவர் இலங்கைக்கு வந்து நட்ட ஈடு தண்டப்பணம் செலுத்திய பின்னர் பிடியாணை நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

---

# 'சமாதானத்துக்கு குலைவு' வழக்கு வாபஸ்

யாழ்ப்பாணம், மே 27

வெளிநாட்டிலிருந்து வந்த பெண் ஒருவர் அத்து மீறி வீட்டுக்குள் நுழைந்தார் என்று தாக்கல் செய்யப்பட்ட சமாதானத்துக்கு குலைவு வழக்கு யாழ். நீதிமன்றில் எதிரி இணக்கத்துக்கு வந்ததையடுத்து வாபஸ் பெறப்பட்டது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான்மாகணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

கொட்டடியில் வசித்து வந்த பிரஸ்தாப பெண் தனது வீட்டை 2 வருட ஒப்பந்தத்தில் பிறிதொரு குடும்பத்தவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்துள்ளார். இந்த நிலையில் அவர் வெளிநாடு சென்றுவிட்டார்.

கடந்த 1[illegible] ஆம் திகதி [illegible]க்கு வந்திருந்த அந்தப் பெண் தனது வீட்டில் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த நபர்களிடம் உடனே வீட்டைவிட்டு வெளியேறுமாறு கூறியுள்ளார்.

அந்த வீட்டுக்கரது மனைவி மற்றும் ஒரு பிள்ளை சுகயீனமுற்றிருந்த நிலையில் அங்கிருந்து செல்லவோ, வேறு வீடோ அந்த நேரத்தில் அவர்களுக்கு இருக்கவில்லை.

இந்த நிலைவயில் அங்கு அறை ஒன்றை தருமாறு குறித்த பெண் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்தப் பெண்ணுக்கு அங்கு ஒரு அறை வழங்கப்பட்டது.

சில நாள்களின் பின்னர் தான் குளியலறையில் நின்றிருந்த போது அந்த வீட்டுக்காரர் எட்டிப் பார்த்தார் என்று யாழ். பொலிஸில் குறித்த பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் அந்த வீட்டுக்காரரை அழைத்து எச்சரிக்கை செய்திருந்தனர்.

இதனால் நடந்த சம்பவம் தொடர்பாக அந்த வீட்டுக்காரர் சட்டத்தரணி ஜொனி மதுர நாயகம் ஊடாக யாழ். நீதிமன்றில் சமாதானக் குலைவு வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணையின் போது அந்த வீடு பிரஸ்தாப பெண்ணினுடையது என்றாலும் தாம் வேறு வீடு ஒன்றை ஒழுங்கு செய்து இடமாறுவதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் இந்தக் கோரிக்கையை பிரஸ்தாப பெண் ஏற்றுக் கொள்வதாகவும், வழங்கை வாபஸ் பெறுமாறு மனுதாரரிடம் கோரினார்.

இதனையடுத்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் இடம்மாறுமாறு கூறி நீதிமன்றம் உத்தரவிட்டது. வழக்கு வாபஸ் பெறப்பட்டது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவன் ரஜிராம் பிரச்சினை மேலும் மேலும் இறுகுகிறது

## தொழில் திணைக்களமும் சட்ட நடவடிக்கைக்கு தயாராகிறது

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்தில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு காத்தான்குடியில் கொத்தடிமையாக வேலைவாங்கப்பட்ட விவகாரம் மேலும் இறுக்கமடைகிறது. சிறுவன் ரஜிராமை வேலைக்கு அமர்த்தியவர்களுக்கு எதிராக மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சிறுவன் ரஜிராம் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு ஏற்கனவே மல்லாகம் நீதிமன்றில் விசாரணையில் உள்ளது. அந்த வழக்கின் சந்தேக நபர்களே சிறுவனை வேலைக்கு அமர்த்தினார்கள் என்று தெரிவிக்கப்படும் நிலையில் அவர்களுக்கு எதிராக சட்டவிரோதமாக சிறுவனை வேலைக்கு அமர்த்திய வழக்கும் தாக்கல் செய்யப்படும் என்று யாழ். தொழில் திணைக்கள அதிகாரி கே.கணேஸ்வரன் தெரிவித்தார்.

'தொழில் சட்டதிட்டங்களின் படி 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. பெற்றோர்களே கூட தமது பிள்ளைகளான சிறுவர்களை வேலைக்கு அமர்த்த முடியாது. இந்த நிலையில் 13 வயதான ரஜிராம் காத்தான் குடியிலும், யாழ். நகரில் உள்ள புடைவைக் கடை ஒன்றிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளமை தெரியவருகிறது. எத்தனைபேர் சிறுவனை வேலைக்கு அமர்த்தியிருந்தாலும் சரி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்'' என்றார் கனகேஸ்வரன்.

சிறுவனின் பெற்றோர் நன் நடத்தை திணைக்களம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் சிறுவனை வேலைக்கு அமர்த்தியமைக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது. எனவும் அவர் தெரிவித்தார்.

ரஜிராம் பாடசாலை சென்றபோது காணாமல் போனமை தொடர்பாக சிறுவனின் பெற்றோர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அதனடிப்படையில் பொலிஸார் சந்தேக நபர்களுக்கு எதிராக கடத்தல் வழக்கு ஒன்றை மல்லாகம் நீதிமன்றில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளனர்.

பரமநாதன் ரஜிராம் காத்தான்குடியில் முஸ்லிம் ஆக மாற்றப்பட்டு கொத்தடிமையாக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த சமயத்தில் தாயாரால் இனங்காணப்பட்டு மீட்கப்பட்டிருந்தான்.

அது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கு நாளை திங்கட்கிழமை மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. சிறுவனைக் கடத்திய சந்தேக நபர்களில் பிரதான நபர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. அவரைக் கைது செய்து மன்றில் முற்படுத்த நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-4)



'நமக்காக நாம்' நிதியத்தின் ஏற்பாட்டில் படையினருக்கு வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 43 வீடுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் கையளித்தார். இந்த நிகழ்வில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி, வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரட்ன திவுல்கனே, முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகள் உட்படபலர் கலந்துகொண்டனர்.

# பொதுமக்கள்-சிப்பாய் இடையே முறுகல்

### பருத்தித்துறையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 27

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருப் பகுதியில் சிப்பாய் ஒருவருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கல்லெறியில் முடிந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் குவிந்த இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரைப் பிடித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருப் பகுதியில் இராணுவச் சிப்பாய் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது இளைஞர் ஒருவர் குறுக்காகச் சென்றதை அடுத்து இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தச் சமயம் சிப்பாய் மீது கல் எறியப்பட்டுள்ளது. அங்கிருந்து அகன்ற சிப்பாய் பின்னர் பெருமளவு இராணுவத்தினருடன் வந்து ஒருவரைப் பிடித்துச் சென்றதாக மக்கள் தெரிவித்தனர்.

(உ-15-402)

# மன்னார் தனியார் பஸ் சங்கத்தில் பொலிஸார் புகுந்து திடீர் தேடுதல்

மன்னார், மே 27

மன்னார் தனியார் பேருந்து தரிப்பிடத்தினுள் அமைந்துள்ள தனியார் பேருந்து சங்க அலுவலகத்தினுள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் உட்புகுந்த மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸார் எவ்வித அனுமதியும் இன்றி அலுவலகத்தில் உள்ள சகல ஆவணங்களையும் சல்லடை போட்டுக் கிண்டிக் கிளறி விட்டுச் சென்றுள்ளனர் என்று மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஸ் விசனம் தெரிவித்தார்.

பிற்பகல் 2 மணியளவில் ஓட்டோ ஒன்றில் எமது சங்கத்துக்கு சீருடையுடன் வந்த 4 பொலிஸார் சங்கத்தில் தலைவர், செயலாளர் இல்லாத நிலையில் அங்குள்ள பணியாளர்களிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் அலுவலகத்தினுள் சென்று சகல ஆவணங்களையும் கீழே கொட்டி சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

ஆனால் எவையும் மீட்கப்படவில்லை. எதற்காக இந்த நடவடிக்கை இடம் பெற்றது என்ற விடயம் தெரியவில்லை - என்றார் அவர்.

(உ-12)

# சைவ வித்தகர் இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 27

சைவ வித்தகர் பட்டப் படிப்பின் முத லாவது அணி யின் இறுதிப் பரீட்சை நாளை திங்கட் கிழமை இடம்பெற வுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றம் இந்தக் கற்கை நெறியை நடத்தி வருகிறது. முதலாவது அணி யில் 8 பேர் இந்தப் பரீட்சையில் தோற்று கின்றனர். (ம-3)

# பகிஷ்கரிப்பை கைவிடுவதாக மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

மாணவர்களது எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு பகிஷ்கரிப்பை இடைநிறுத்தி நாளை திங்கட்கிழமை தொடக்கம் கல்விச் செயற்பாடுகளுக்கு திரும்புவதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமது மாணவர் ஒன்றியச் செயலாளர் பரமலிங்கம் தர்சானந் கடந்த 18ஆம் திகதி தாக்கப்பட்டமை தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக்கழக சிரேஷ்ட நிர்வாகிகளோடு மாணவப் பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. [illegible] யில் தர்சானந் தாக்கப்பட்டமை மற்றும் கடந்த வருடம் தவபாலசிங்கம் தாக்கப்பட்டமை தொடர்பாக மாணவர் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர். அது தொடர்பான எந்தக் கேள்விக்கும் பாதுகாப்புத் தரப்பினர் திருப்தியளிக்கும் விதத்தில் பதிலை வழங்கவில்லை.

தர்சானந் மீது இடம் பெற்ற தாக்குதல் மீண்டும் இடம்பெறாதிருக்க சர்வதேச சமூகமே பொறுப்பு எடுக்க வேண்டியிருக்கும் என்பது எமது நிலைப்பாடு. எனினும் எமது மாணவர்களது எதிர்கால கல்வி நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு தமது பகிஷ்கரிப்பை கைவிட்டு நாளை திங்கட்கிழமை தொடக்கம் கல்வி நடவடிக்கைகளுக்கு திரும்புவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவானது எமக்கு எதிராக இழைக்கப்படும் கொடூரங்கள் தொடர்பில் நாம் மௌனித்து விட்டமையாகக் கருதக் கூடாது. எமது ஒன்றியம் எமது மாணவர்கள் சார்பிலும் தமிழ் சமூகம் சார்பிலும் தொடர்ந்தும் குரல் கொடுக்கும்- என்றுள்ளது. (10-4)

# நிவாரணம் விநியோகம்

தென்மராட்சி, மே 27

தென்மராட்சி கிழக்கு எழுது மட்டு வாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொருள் கள் கொடிகாமத்தில் உள்ள கிளைக் கடையில் விநி யோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொருள்களை எதிர்வரும் 31 ஆம்திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-9)

# அமைச்சர் ரிஷாத்தின் முகத்திரை கிழிப்போம்

### மன்னார் சமூக ஆர்வலர் ஒன்றியம் அறிக்கை

மன்னார், மே 27

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப்புவை அவதூறாக நாடாளுமன்றத்தில் கதைத்து இன்று மன்னார் மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பேரினவாதத்தை தூண்ட முயலும் அரசியல்வாதியான ரிஷாத் பதியுதீனின் முகத்திரையைக் கிழிக்க அனைத்துக் கத்தோலிக்க மக்களும் ஒன்றுசேர வேண்டுமென மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் ஆயருக்கெதிராக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உரையைக் கண்டித்து எதிர்ப்புக் கவனயீர்ப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் மதத்தலைவர்கள் 5 பேர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து அருட்தந்தையர்களை நீதிமன்றம் வரை இழுத்துச் சென்றனர். நீதிமன்றம் மன்னார் செபஸ்தியார் பேராலய வளாகத்தில் குறித்த நிகழ்வை நடத்த அனுமதி வழங்கியுள்ளதோடு குறித்த நிகழ்வுக்கு பாதுகாப்புக்கு மன்னார் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் மன்னார் மாவட்ட இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் அமைப்பு என்ற பெயரில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்.

அதில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்புக்கு மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோருக்கு எதிராகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை 27.05.2012 நடைபெறவுள்ள கண்டன நிகழ்வை சீர்குலைக்கும் வகையிலே அமைச்சர் திட்டம் தீட்டி குறித்த துண்டுப்பிரசுரத்தை வெளியிட வைத்துள்ளார்.

நாம் முஸ்லிம் மக்களுக்கெதிராக எந்தவிதமான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை. ஈடுபடவும் மாட்டோம். ஆனால் மன்னார் ஆயரை இழிவு படுத்தி தமிழ் அரச அதிகாரிகளையும் தமிழ் மக்களையும் தமது அமைச்சர் பதவி மூலம் அடிமையாக்க முயலும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் முகத்திரையைக் கிழிக்க அனைவரும் அணிதிரள வேண்டும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் செபஸ்தியார் பேராலய முன்றலில் அனைத்துக் கத்தோலிக்க மக்களும் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சரின் அலுவலகமும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. மன்னார் மாவட்ட சமூக ஆர்வலர் ஒன்றிய அறிக்கை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் குறித்து தான் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோரவேண்டும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை விடுகின்றனர். என்னில் எந்தப் பிழையும் இல்லை. இதனை ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளேன்.

எமது தரப்பு நியாயங்களைச் சொல்ல கத்தோலிக்க திருச்சபை அமைந்துள்ள வத்திக்கானுக்கும் செல்வேன். மனித உரிமை குறித்து ஜெனிவாவுக்குச் சென்று சொல்வேன் -என்று அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ-12)

# யோசப் ஆண்டகைக்கு எதிராக மன்னாரில் துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், மே 27

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் நேற்று சனிக்கிழமை மன்னார் நகர்ப் பகுதியில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

'1990 இல் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் குடியேற்றத்தை தடுக்கும் ஆயர்' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களே விநியோகிக்கப்பட்டுள்ளன.

பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் குடியேற்றத்துக்கான அமைப்பின் மன்னார் கிளை என்று அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் விமர்சிப்பதாக அந்தத் துண்டுப் பிரசும் காணப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றத்தில் மன்னார் மறை மாவட்ட ஆயருக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டதைக் கண்டித்து ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் மன்னார் செபஸ்தியார் தேவாலயத்தில் இன்று கண்டனத்தை வெளியிடவுள்ளனர். (10-03)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செலான் வங்கி தனது வலையமைப்பை அக்குரஸ்ஸ நகருக்கு விஸ்தரிக்கிறது

மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள அக்குரஸ்ஸ ஒரு முக்கியமான நகரமாகும். இந்த நகரிலுள்ள பெரும்பாலான மக்களின் பிரதான ஜீவாதாரம் விவசாயமாகும். கொழும்பிலிருந்து 155 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள இந்த நகரம் சுறுசுறுப்பு மிக்க வர்த்தக மையமாகவும் போக்குவரத்தின் பிரதான கேந்திர நிலையமாகவும் விளங்குகிறது.

காலி, வெலிகம, மாத்தளை, கம்புறுபிட்டிய, தெனியாய போன்ற பிரதான நகரங்களை ஒன்றிணைக்கும் சந்தியில் அக்குரஸ்ஸ அமைந்துள்ளது. இந்த நகரைச் சுற்றி கறுவா, தேயிலை மற்றும் நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அபிவிருத்தியை நோக்கி தற்சமயம் வீறுநடைபோடும் அக்குரஸ்ஸ நகர் வாழ் மக்களுடன் கை கோர்த்து அபிவிருத்திப் பாதையில் முன்னேறும் நோக்கில் செலான் வங்கி தனது புதிய கிளையை இந்த நகரில் திறந்துள்ளது. இலக்கம் 119, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ என்ற முகவரியில் அமைந்துள்ள இந்தக் கிளையை செலான் வங்கியின் தலைவர் மொஹான் பீரிஸ் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அக்குரஸ்ஸ நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வாழும் மக்களின் நலன் கருதி இந்தக் கிளையில் பல்வேறு நவீன வசதிகளும் இலகு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# சன்சில்க் – எக்ஸ்பேர்ட்ஸ் கூந்தல் பராமரிப்பு பயிற்சி





சன்சில்க் மூலம் 2012 ஆம் ஆண்டுக்கான கூந்தல் பராமரிப்பு பயிற்சிப்பட்டறை' சன்சில்க் - எக்ஸ்பேர்ட்ஸ்' எனும் தலைப்பில் இவ்வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுனிலீவர் நிறுவனத்தின் முன்னணி பிரத்தியேக பராமரிப்பு தயாரிப்பான சன்சில்க் மூலம் இலங்கையின் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் வகையிலும் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் எம்பிலிபிட்டிய பகுதியிலிருந்து இந்தப் பயிற்சிப்பட்டறை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியான 10 ஆவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த பயிற்சிப்பட்டறையானது, எம்பிலிபிட்டியவை தொடர்ந்து காலி, அனுராதபுரம், பண்டாரவளை மற்றும் கொழும்பில் முன்னெடுக்க ஏற்பாடாகியுள்ளது.

கொழும்பில் இடம் பெறும் பயிற்சிப்பட்டறை மாபெரும் இறுதி கோலாகல நிகழ்வாக அமையவுள்ளது.

இவ்வருட சன்சில்க் எக்ஸ்பேர்ட்ஸ் பயிற்சிப்பட்டறை மூலம், பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களுக்கு தமது துறைகளில் கைதேர்ந்த வல்லுநர்களாக திகழச் செய்யும் வகையில் அவசியமான ஊக்குவிப்புகள் வழங்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

யுனிலீவர் நிறுவனத்தின் கூந்தல் பராமரிப்பு பிரிவின் தலைவர் வத்சலா அலுத்கெதர கருத்துத் தெரிவிக்கையில், 'சன்சில்க் 2012 என்பது, பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களுக்கு தமக்கு பரீட்சயமான துறையில், தம்மை திறமையான முறையில் தயார்படுத்திக் கொள்வதற்கு அவசியமான உந்துசக்தியை வழங்கும் திட்டமாகும்.

சன்சில்க் நாமத்துடன் இணைந்து, இந்நாமத்தின் குணவியல்புகளுக்கு அமைவாக இந்தப் பயிற்சிப் பட்டறை முன்னெடுக்கப் படவுள்ளது' என்றார்.

இந்த தொழில்சார் ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பயிற்சிப்பட்டறையில் கூந்தல் பராமரிப்பு, சரும பராமரிப்பு, எடுப்பான தோற்றம் போன்ற பிரிவுகளில் இலங்கையிலுள்ள முன்னணி அழகுக்கலை நிபுணர்களின் பங்குபற்றலுடன் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. (த)

# சென்ரல் பினான்ஸ் கம்பனியின் இரண்டாம் ஆண்டு நிறைவு



யாழ்ப்பாணம்,மே27

சென்ரல் இன் வெஸ்ட்மன்ட் பினான்ஸ் அன்ட் பினான்ஸ் (CIFL) நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் யாழ். பிராந்தியக் கிளை முகாமையாளர் இராஜ மகேந்திரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 24 மாணவர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப்பை, கொப்பிகள், எழுது கருவிகள், பாடநூல்கள் உட்படப் பல கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பிரதேச மக்களை இலக்காக வைத்து திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் சென்ரல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் பினான்ஸ் நிறுவனம் கடந்த வருடம் யாழ்.போதனா வைத்தியசாலையில் 30 இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக நிரந்தர சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து வைத்தது. (த-14)

# கொக்கா–கோலா கிரிக்கெட் பாத்வே மூன்றாவது பருவகாலம் ஆரம்பம்

கொக்கா-கோலா பெவரெஜஸ் ஸ்ரீலங்கா லிமிட்டெட் நிறுவனம் கொக்கா-கோலா கிரிக்கெட் பாத்வே முன்னெடுப்பின் 3வது பருவகாலத்தை கடந்த 25ஆம் திகதி கொழும்பு புளூம்பீல்ட் மைதானத்தில் ஆரம்பித்துவைத்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.

கொகா-கோலா கிரிக்கெட் பாத்வே முன்னெடுப்பின் கீழ் அரவிந்த டி சில்வா கிரிக்கட் அறநிதியம் மற்றும் இலங்கை கிரிக்கட் சபை ஆகியவற்றுடன் இணைந்து இந்த தொடர் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையின் கிராம மற்றும் பிராந்தியப் பகுதிகளிலுள்ள இளம்தலைமுறையினர் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டில் திறமைகளைக் கொண்டுள்ளவர்களை இனங்கண்டு அவர்களை இலங்கை தேசிய கிரிக்கட் அணியில் விளையாடுவதற்கு ஏற்றவகையில் ஊக்குவித்து வளர்த்தெடுப்பதே இம்முகாம் களின் நோக்கமாக உள்ளது.

மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களுள் ஒருவராக கிரிக்கெட் உலகில் வலம்வந்த அரவிந்த டி சில்வா, Coca&Cola Far East Ltd நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட முகாமையாளரான அபிஷேக் ஜுக்ரன், கொகா-கோலா பெவரெஜஸ் ஸ்ரீலங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட முகாமையாளரான சௌமிந்ர பட்டாச்சார்யா மற்றும் இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகள் முன்னிலையில் இம்முகாம்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன என்று 19 வயதிற்குட்பட்ட இலங்கை தேசிய கிரிக்கட் அணியின் தலைமைப் பயிற்றுவிப் பாளரான நவீட் நவாஸ் குறிப்பிட்டார். (த)

## ஒரிபிளேமின் அறிமுகக் கூட்டம்

இலவச அழகுக் கலைப் பயிற்சி மற்றும் பகுதி நேர சுய தொழில் வாய்ப்பு தொடர்பான அறிமுகக் கூட்டம் நாளை மறுதினம் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி யூனியன் ஒழுங்கையில் அமைந்துள்ள ஒரிபிளேமின் நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

# வடக்கில் LOLC இன் புதிய கிளைகள்



32 வருட வளமான வரலாற்றில் கால் பதிக்கும் LOLC யின் மூலோபாய நோக்கு மற்றும் விரைவுத்திறன் ஆகியவற்றினால் அதன் நிறுவனங்களுக்கு, தேசிய நிலப்பரப்பில் செயல்திறன் வளர்ச்சி வாய்ப்புக்களை உருவாக்க முடிந்துள்ளது. நிதிச் சேவைகள் துறையில் முதன்மை வணிக நலன்களுடன் - இலங்கையின் முன்னணி ப்ளூசிப் கம்பனிகளுள் ஒன்றான LOLC குழுமம் கடந்த சில ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வலுவான ஐந்தொகை மற்றும் இலாப வளர்ச்சி ஆகியவற்றினை வெளிப்படுத்தியுள்ளது.

நிதிச்சேவைகளில் இருந்து வரும் 60% இற்கும் மேற்பட்ட வருவாய்களை மாத்திரம் கொண்டு, LOLC குழுமம் நாடு முழுவதும் பெருகும் வளர்ச்சி அலைகளில் வெற்றிகரமாக சவாரி செய்யத் தயார் நிலையில் உள்ளது. அதன் மூலோபாய வணிக உணர்வினால், பிராந்திய பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் விசேட கவனம் செலுத்தி நாட்டின் நுண் மற்றும் சிறிய, நடுத்தர முயற்சியாண்மைத் துறைகளை மேம்படுத்தும் நோக்கில் நிறுவனம் முன்னோக்கி நகர்வதற்கு முடிந்துள்ளது.

இந்த அடிப்படையில், LOLC குழுமம் அதன் கவனத்தை போருக்கு பிந்திய வடக்கு கிழக்கின் இயற்கை தோற்றத்தை அபிவிருத்தி செய்வதில் அதன் தீவிர கவனத்தை செலுத்துகின்றது. LOLC குழும முகாமைத்துவ இயக்குநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஜெயவர்த்தன உரையாற்றுகையில், போருக்குப் பிந்திய தற்போதைய சூழலில், தேசிய மட்டத்தில் முதன்மையான முயற்சிகளுள் ஒன்றாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மேம் பாடு காணப்பட்டது. உள்நாட்டு வங்கி, வங்கியல்லா நிதித் தொழிற்பாடுகள், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல், சுற்றுலா, கால்நடை மற்றும் விவசாய தொழிற்பாடு, மீன்பிடி, உட்கட்டமைப்பு மேம்பாடு, போன்ற கடந்த ஆண்டுகளில் யுத்த தாக்குதல்களினால் சேதமடைந்தவற்றினை முன்னேற்றுவதற்காக, போற்றத்தக்க முயற்சிகள் பல இப்பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது வடக்கு, கிழக்கு ஆகியன வளர்ச்சியை உள்ளடக்கிய துரித கதியில் அபிவிருத்தியடைந்து வரும் உறுதியான நிலையில் உள்ளன என்று கூறினார்.

தேசிய அபிவிருத்தி செயன்முறையில் தனியார் துறையினரின் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை விளக்கிய ஜெயவர்த்தன அவர்கள் இலங்கை மத்திய வங்கியானது தூர நோக்கு மற்றும் சார்பான கொள்கை வழிகாட்டல் ஆகியவற்றினை வழங்கியதன் மூலம் தேசிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் தனியார் துறையின் பங்களிப்பினை ஊக்கப்படுத்தி, பிராந்தியங்களில் அவர்களது உயிர்ம வணிக வளர்ச்சியினை அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்தது எனும் கருத்தினை முன் வைத்தார்.

தேசிய மட்ட அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் LOLC குழுமத்தின் அடிப்படை வணிகங்கள் ஆகியவற்றுக்கிடையில் இணைப்புக்களை உருவாக்கி ஜெயவர்தன பின்வருமாறு வெளிப்படுத்தினார், இவ் விரைவான தேசிய அபிவிருத்திப் பின்னணியில், எமது குழுமத்துடனும், எமது நிறுவனங்களான லங்கா ஒறிக்ஸ் நிதிக் கம்பனி (Lanka ORIX Finance PLC), LOLC மைக்றோ க்ரடிட் லிமிடட் (LOLC Micro Credit Ltd), LOLC ஃபெக்டர்ஸ் லிமிடட் (LOLC Factors Ltd), கொமர்சியல் அன்ட் ஃபினான்ஸ் லிமிடட் (Commercial and Finance Ltd.), கொமர்சியல் ஃபெக்டர்ஸ் லிமிடட் (Commercial Factors Ltd.), அல்- ஃபலாஹ் இஸ்லாமிய நிதிச் சேவைகள் அலகு (Al&Falaah Islamic Financial Services Unit), மற்றும் LOLC காப்புறுதி கம்பனி லிமிடட் (LOLC Insurance Company Ltd.) ஆகிய நிறுவனங்களுக்கிடையிலும் குழுவாக சேர்ந்து செயற்படும் LOLC யில் இருக்கும் நாம், பிராந்திய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களோடு பங்காண்மையில் இணைவதற்காக தீவிர கவனத்தை செலுத்தியுள்ளோம். கிராமிய சந்தைகளுக்கு சேவையாற்றுவதற்காக நாம் எமது தடத்தை மிக வேகமாக விரிவுபடுத்தியுள்ளோம். 2012 ஆம் ஆண்டு மார்ச் 31 இல் இருந்தவாறாக தற்போது மொத்தமாக 185 இடங்களில் எமது தடம் பதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, வடக்கு மற்றும் கிழக்கில் 39 பிரதான கிளைகளையும், தபால் சேவைகள் நிலையம், இஸ்லாமிய நிதிச் சேவைகள் அலகு, மற்றும் வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது எமது மொத்த அடைவுகளில் 20% இற்கும் மேற்பட்டதாகும். மேலும் லங்கா ஒறிக்ஸ் நிதி நிறுவனக் கிளைகள் மூன்று கடந்த வாரம் நெல்லையடி, சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

எமது விரிவுபடுத்தப்படும் கிளைவலையமைப்பின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு நன்கு பொருத்தமான இப்புதிதாக உருவாகிய பொருளாதார புத்தாக்க நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகளை நாம் வழங்கியிருக்கின்றோம். உதாரணமாக, ஈடாக வழங்குவதற்கு சொத்துக்களோ வாகனங்களோ இல்லாத முயற்சியாளர்களுக்கு, ஒரு சாத்தியமான தெரிவினை வழங்குவதற்காக தங்க நகைகளுக்கு தொழிற்பாட்டு மூலதனக் கடன்களை வழங்க எதிர்பார்த்து இவ்வாண்டின் முற்பகுதியில், Gold Cheque Financing எனப்படும் புதிய தொரு தொழிற்பாட்டு மூலதனத் தயாரிப்பொன்றை நாம் அறிமுகப்படுத்தினோம். அதே போன்று, வறுமை ஒழிப்பிற்காகவும் கிராமப்புற சமூகங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்து வதற்காகவும் லங்கா ஒறிக்ஸ் நிதிக் கம்பனியானது விவசாய அபிவிருத்திக்காக சர்வதேச நிதி வழங்கும் IFAD எனப்படும் அமைப்புடன் பங்காண்மையில் இணைந்துள்ளது.

இன்னும், கிழக்கு மாகாண எமது முஸ்லிம் சமூக வாடிக்கையாளர்களை கவனத்தில் கொண்டு கவர்ச்சிகரமான பல நன்மைகளை உள்ளடக்கி குறிப்பாக இஸ்லாமிய குடும்ப சிறுவர்களுக்காகவென்றே Al&Falaah Junior எனப்படும் இஸ்லாமிய ஷரீஆ அடிப்படையிலான சிறுவர்களுக்கான சேமிப்பு கணக்கினை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு உண்டு

GREAT DANE நாய்க்குட்டிகள்
விற்பனைக்கு உண்டு.
வான் விற்பனைக்கு உண்டு.
டொல்பின் (நல்ல நிலையில் உள்ள
SupreG.L. 252 - 4 உடன்
விற்பனைக்கு உண்டு
தொ.பே: 077 9493 947
(18664) (45,8,9)

## ICT Class

Group Classes &
Personal Classes

For
O/L,A/L Students

*Mobile - 0750493800*

## CAR விற்பனைக்கு

**FB15 - NISSAN (Super Saloon) Car விற்பனைக்குண்டு.
Np - Ho - xxxx இலக்கமுடைய 2001 Model Car**
(C/376)(6-9-8) **தொ.பே : 077 3788795**

## காணி விற்பனைக்கு

பாடசாலை வீதி, கெருடாவில், சாவகச்சேரியில் நல்ல சூழலில் அமைந்த 5 பரப்புக் காணியும் அதனோடு இணைந்த 5 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. சோலை அம்மன் கோயிலுக்கும் சாவகச்சேரி சந்தைக்கும் அண்மையில் அமைந்துள்ளது.

**தொ.பே: 075 0408153, 077 6660690**
(18579)(6-7-8)

## பணி நிலை வெற்றிடம்

**பதவிநிலை: தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
தகைமை
NCT in (Civil Engineering) and Nct in (Quantity Surveying )
*கட்டட நிர்மாணத்துறையில் பணியாற்றிய
5 வருடசேவை அனுபவம்*

**பதவி நிலை: வேலைமேற்பார்வையாளர்**
தகைமை
NCT (Civil Engineering) following
*அல்லது அதற்கு சமமான தகைமை
க.பொ.த (உ/த) பயின்ற இத்துறையில்
ஆர்வமுள்ளோர்*

**பதவிநிலை: சாரதி (டிப்பர், லொறி, ரக்டர்)**
தகைமை
*சாரதி அனுமதிப்பத்திரம் 5 வருட சேவை
அனுபவம்*

**பால் : ஆண்**

**பணியாற்ற வேண்டிய மாவட்டங்கள்:**
*யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,
வவுனியா, மன்னார்.*

மேற்படி பதவிநிலைகளுக்கான விண்ணப்பப் படிவத்தினை கீழ்குறிப்பிடும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ **02.06.2012** ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

Sewa Economic Development Company (PVT) LTD
இல. 52, பலாலிவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 8754 தொலைநகல் இல. 021 222 8754
மின்னஞ்சல்முகவரி: Jaffinasedco@gmail.com
*(18576) (45.7.9)*
SEDCO

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை துரைராசா



நாவலடி, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை துரைராசா 24.05.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் துரைராஜாவின் **S.T.R** அன்பு மனைவியும், கனகராசா (**T.K.R** கொழும்பு), காந்தரூபி (ஆசிரியை, நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), சற்குணராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவகுலராசா ஆகியோரின் பாசமிகு தாயும், ஹெலன், சௌந்தரி ஆகியோரின் அன்பு மாமியும், பிரசன்னா (பிரான்ஸ்), பிரின்சியா, ஜென்சியா, தர்ஷிகா, துஷானர், கிப்ஸன், லக்ஷனா ஆகியோரின் அன்புப் போத்தியும், நதிரா, மகென்சா, லைசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 93/1, அலஸ் வீதியில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நீர்கொழும்பு இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*(T.K.R-0778143132)*
**(031-2232955/0777047493)**

*தகவல்: பிள்ளைகள்*
(C/89)

## தேவை

✸ கட்டட வேலைக்குகந்த ஆற்று மணல் விற்பனைக் குண்டு.
✸ மாங்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஆற்று மணல் கொண்டு வருவதற்கு 3 கியூப் டிப்பர் ட்ரக்ஸ் (3 Cube Tipper Trucks ) வார, மாத, வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவை.

**விவரங்களுடன் தொடர்புகொள்க:
0714 926543 / 0712807129**
(C\82) (6,9,10)

## பழுது பார்த்தல்

**STILL & VIDEO**



★ அசல் உதிரிப்பாகங்கள்
★ 06 மாதகால உத்தரவாதம்
★ வெளிநாட்டில் பயிற்சிபெற்ற தமிழ்பேசும் தொழில்நுட்பவியலாளர்கள் உங்களின் சேவைக்கு

**1958 லிருந்து**
(C/69)

**Photo TECHNICA**
இல.288, காலிவீதி, கொழும்பு-03 தொ.பே :2577877

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- **1985**, பரணி BA , மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1988**, ரேவதி, CIMA மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1983**, திருவாதிரை, Doctor மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1980**, ஆயிலியம், Accountant , மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1983**, பரணி, Doctor, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1988**, கார்த்திகை, Bank Officer , மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1979**, விசாகம், Bank Officer CIMA Full Qualified, Quwait மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1982**, சித்திரை, Canada PR மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1977**, திருவோணம், Accountant, UK PR மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1975**, அத்தம், BA, MA, மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1981**, பூசம், BSc Engineer, UK PR மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1979**, ஆயிலியம், Doctor, மணமகனுக்கு மணமகள் தேவை.

**இல.18, மல்லிகா லேன், கொழும்பு 06.**
*www.realmatrimony.com
E.Mail:support@realmatrimony.com
Contact : 011- 4344229*

## Study in INDIA

**VISVODAYA Engineering College**

Courses Offered :

ECE - Electronics & Communication Engineering.
CSE - Computer Science Eng.
IT - Information Technology.
EEE - Electrical & Electronics Eng.
ME - Mechanical Engineering.
CIVIL - Civil Engineering.

Required qualification: A/L Maths including physics or Chemistry and other one subject

**NO DONATION**

**FEES PAYMENT DIRECTLY TO THE COLLEGE AFTER THE SELECTION**

- Four years studies.
- Three times food and accommodation.
- Air-condition Hostel and transport from Hostel to College.
- (Separate hostels for boys and girls)

Forward your CV at : apexsara.ku@gmail.com
apex.kumar@yahoo.com

**Contact No: 2582974**
**Hotline: 0773095955**
[C/84]

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

ஈச்சமோட்டையில் ஒரு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக் குண்டு.
தொ.பே :
077 331 6541
(18577)(45...)

## மணமகள் தேவை

யாழ். உயர் கௌரவ குடும்பம் 1976 ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரம் இடப இராசியில் பிறந்த மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை தேடுகின்றனர்.
தொ.பே: 077 230 6396, 077 7986 562
arulnambik @ yohoo. Com
(18574) (45,8,9)

## பதிவு செய்யப்படாத வாகனம் விற்பனைக்கு

பதிவுசெய்யப்படாத Toyota Primo NZT - 2011/12 O மிலேஜ் பிரகாசமான வெள்ளைநிற பீஜிஜ் இண்டியரியர், F/O, DVD, R/ Camera, Welcome Light போன்ற பல செயற்பாடுகளுடன் கூடிய வாகனம் சொந்த பாவனைக்கு இறக்குமதி செய்யப்பட்டது. விலை 65/= கொழும்பில் ஏனைய கார் ரகவாகனத்துடன் பரிமாற்றிக் கொள்ளவும் முடியும்.
(C/83)(8-9-8) தொடர்புகளுக்கு : 077 2093228

## SUNWAY GROUP OF COMPANIES

### ஓய்வு காலப் பிரயாணம்

சுற்றுலாக்கள் மற்றும் பிரயாணங்கள், சுற்றுலா விடுதிகளுக்கான ஏற்பாடுகள், விடுதிகளிலும் ஆடம்பர அறைகளிலும் தங்கும் வசதிகள். விமான ரிக்கற் (Tickets), பொதிகளுக்கான வசதிகள்

### வாடகைக்கு பெற

கார்கள், வான்கள் மற்றும் 4WD வாகனங்கள்

### ஆலோசனை மையம்

கல்வி, விவசாயம், வேளாண்மை வர்த்தகம் மற்றும் உள்ளூர் வெளிநாட்டு முதலீட்டுக்கான தொழில்சார் சேவைகள்.

### தொழில் திட்ட அறிக்கை

திட்ட முன்மொழிவுகள், இலகுவாக்கல் (Feasibility) அறிக்கைகள், ஆராய்ச்சிதிட்டங்கள், என்பவற்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள்.

### விவசாயத்துக்கான நிலங்கள்

பொருத்தமான நிலங்களை குத்தகைக்கு/வாங்குவதற்கு, பணத்தை பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்படும்.

### நீர்த்தடாகத்துடன் பசுமை இல்லங்கள்

பூக்கள், காய்கறிகள் வளர்ப்பு, விதை உற்பத்திகள், 2000 Sq.Ft பசுமை இல்லங்களின் அறிமுகம் மேலும் 500 Sq.Ft பசுமை இல்லங்களின் கட்டுமானமும் மேலும் பல வசதிகள்.

### சிறிய நீர்ப்பாசனம்

0.5 AC யில் இருந்து விசாலமான பயிர்ச்செய்கைக்கான தெளிக்கும் மற்றும் விசிறும் முறைகளின் அறிமுகமும் இணைப்பும்.

### விவசாய இயந்திரங்கள்

விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் அறிமுகம்

**விவசாயத்திற்கான துறைசார் தொழில்நுட்ப அறிவுரை**

(C\80) (6,7,10)

SUNWAY GROUP OF COMPANIES
No. 4 1/1, Bambalapitiya Drive, Colombo 04.
Phone: +94 (0)112584990 +94(0)112594491
E-mail:- wikrama@agripark.lk

**Hotlines: 0777319090, 0776347429, 0718522733**

## மரண அறிவித்தல்

### நாகேஸ் அன்னமுத்து



காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும் வேப்பங்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட நாகேஸ் அன்னமுத்து (25.05.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்சின் அன்பு மனைவியும், நீலாவதி (பிரான்ஸ்), சண்முகலிங்கம் (காரைநகர்), ருக்குமணிதேவி (வவுனியா), இராசலக்சுமி (கனடா), பாலசுப்பிரமணியம் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், கனகரத்தினம், கருணாகலாவல்லி ஆகியோரின் அருமை மாமியும், செல்வரத்தினம் (சுவிஸ்), தனலக்சுமி (பிரான்ஸ்), யோகரத்தினம் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), குகதாஸ் (காரைநகர்), யமுனாவதி (பண்டாரவளை), சாந்தினி (லண்டன்), இராசமலர் (யாழ்ப்பாணம்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), நாகேஸ்வரி (வவுனியா), **Dr.**ஸ்ரீதேவி (**BDS**, கெப்பித்திகொல்லாவ), சிவகுமார் (பிரான்ஸ), கணேஸ்குமார் (வவுனியா), உசாநந்தினி (கனடா), கோமதி (வவுனியா), காலஞ்சென்ற வாசுகி (கிளிநொச்சி) மற்றும் கிருசிகன் (கிளிநொச்சி), வினோஜன் (கிளிநொச்சி), கஸ்தூரி (கிளி நொச்சி) ஆகியோரின் போர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (28.05.2012) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தச்சினாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.365/25,
வேப்பங்குளம்,
வவுனியா.*

*தகவல்:
திருமதி நவரத்தினம்
ருக்குமணிதேவி*
(16863) (6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மே 27
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சால் நடத்தப்படவுள்ள பயிற்சிப் பட்டறையில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், கணக்காளர் , உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக அலுவலர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரத லிங்கம் தெரிவித்துள்ளார். (ம-9)


# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## ஆறுமுகம் கனகம்மா
திதி:- சஷ்டி (27.05.2012)

மண்ணில்:- 30★01★1931
விண்ணில்:- 25★05★2004

பத்து மாதம் சுமந்து எம்மைப் பாசத்துடன் வளர்த்தெடுத்து
பாரினிலே சீருடன் நாம் வாழ நல்வழிகள் காட்டி விட்டு
இப் புவிதனில் விட்டேகி இரு நான்கு ஆண்டுகள் ஆனது அம்மா
எத்தனை யுகம் போனாலும் எம் உயிருள்ளவரையும்
எம் மனதில் நினைவாக நீ இருப்பாய் அம்மா
நிலையான உன் நினைவும் பாசமும்
நீக்கமற நிலைத்திருக்கும் அம்மா
இந் நாளில் உங்களது ஆத்மா சாந்திபெற
இறைவனை நாம் வேண்டுகின்றோம் அம்மா

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

"ஜெயபதி", தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. (சி/377)(2-9-6)



## English Individual Classes

★ பாடசாலை, O/L, A/L மாணவர்களுக்கான English Text Book & Grammar
★ மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
Spoken English with Grammar
★ தனி/குழு வகுப்புக்கள் உங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு: 0756584630
(அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் ஆகிய பிரதேசங்களில் மாத்திரம்) (18550)(6,9,10)



## LINCOLN UNIVERSITY COLLEGE



WE ENSURE YOUR SUCCESS

Courses
www.lincoln.edu.my

- Doctor in Medicine
- Doctor of Business Administration
- PH.D in Information Technology
- Master in Business Administration
- BSc in Nursing collaboration with University of Huddersfield, UK
- BSc in Business Administration (HRM, Marketing, International Business)
- BSc in Creative Computing
- BSc in Contemporary health Care
- BSc in Computing and Information Systems
- Diploma in Electrical & Electronic Engineering
- Diploma in Nursing
- Diploma in Pharmacy
- Diploma in Multimedia
- Diploma in Computer Science
- Diploma in Hotel & Catering
- Diploma in Medical Assistance
- Diploma in Accounting
- Diploma in Physiotherapy
- Cambridge A-Levels

No IELTS
TO BE A REGISTERED NURSE IN MALAYSIA
No Sponsor
$ 6700
Nursing New Course Fee
$ 4500
Part time Job Opportunity
Including Accommodation , Uniform , Transportation
Diploma Courses Fee
$ 2948

CREDIT TRANSFER
New Zealand, Canada , UK, USA , Switzerland , Australia

LINCOLN UNIVERSITY COLLEGE - MALAYSIA
SRI LANKA OFFICE
# 201-1/1A,Galle Road, Dehiwala.
Hot line : 0712-545000 , 0775-545000
E-mail : silmy@lincoln.edu.my (சி/77)



# நீங்கள் தான்

37 ஆண்டுகளாக நீடித்த ஒரு வரலாறு கொண்ட ஒரு நிறுவனம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட மற்றும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல் இடப்பட்ட ஓர் நிதி நிறுவனமாகும். எமது துணை நிறுவனமான வரையறுக் கப்பட்ட என்ட்ரஸ்ட் நிறுவனம் ஒரு பல வேறு எல்லை உற்பத்தி நிலையான வைப்பு. சேமிப்புகளுக்கு குத்தகைக்கு விடுதல், அடகுச்சேவை நிதிவிடுதி போன்றவைகள் எமது நிறுவனத்தில் உள்ளது எமது வளர்ச்சியில் நாம் திறமையான ஆர்வமுள்ள தனிநபர்களை எமது நிர்வாகத்துக்குள் கொண்டு வர முயற்சிக்கிறோம்.

### கிளை மேலதிகாரி (Branch Manager)

கிளை மேலதிகாரியாக பணியாற்ற ஓர் அற்புதமான, மற்றும் சிறந்த வாய்ப்பு ஒன்று நம்மிடம் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி கிளையின் ஒட்டுமொத்த செயல்திறனை பொறுப்பேற்க வேண்டும்.
விண்ணப்பதாரிகள் குறைந்தது 4 வருடங்கள் இத்துறையில் பதிவுசெய்யப்பட்ட நிதி நிறுவனமொன்றில் அல்லது ஒரு வங்கியில் ஆதாரபூர்வமான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
விண்ணப்பதாரிகள் கடன் மதிப்பீடு வைப்பு அணி திரட்டல் அடகு போன்றவற்றில் அறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் தமிழ், சிங்கள மொழி மூலமாக கருத்துப் பரிமாறக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்பதாரிகள் 30 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் Charted Institute of Methoding. (CIM / UK) SL Institute of Marketing (SLIM) அல்லது சம்பந்தப்பட்ட வேறு கழகங்களில் தகைமைகள் கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
விண்ணப்பதாரிகள் நீண்ட மணித்தியாலங்கள் வேலை செய்யக்கூடியவர்களாவும் தமது குழுவினை சரியான பாதையில் வழிநடத்துபவர்களாகவும் ஊக்குவிப்பவர்களாகவும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடையக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

### நிலையான வைப்பு விற்பனை அதிகாரி (Executive - Fixed Deposit)

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கான வேலைவாய்ப்புக்கள் எமது காரியாலயங்களில் உள்ளன. விண்ணப்பதாரிகள் நிலையானவைப்பு சேமிப்புகணக்கு மற்றும் சிறுவர் சேமிப்பு கணக்கு திட்டங்களை சுறுசுறுப்பாக சந்தைப்படுத்த முடியுமானதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் இத்துறையில் 5 வருடங்கள் அனுபவம் கொண்டவர்களாகவும் வயது 23-35 க்கு உட்பட்வர்களாகவும் இருத்தல் வேண்டும். பாடசாலையிலிருந்து வெளியேறியவர்களுக்கு பயிற்சி சந்தைப்படுத்தல் முகாமையாளர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பதாரிகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் சிங்களம் பேசக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் குழுக்களாக நீண்ட மணித்தியாலம் வேலை செய்யக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

### குத்தகை விற்பனை அதிகாரி (Executive - Leasing)

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கான வேலைவாய்ப்புக்கள் எமது காரியாலயங்களில் உள்ளன. விண்ணப்பதாரிகள் குத்தகை விடுதல் பற்றி அறிந்து இருக்க வேண்டும் சுறுசுறுப்பாக சந்தைப்படுத்த முடியுமானவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் இத்துறையில் 3 அல்லது 5 வருடங்கள் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும். வயது 23-35 க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். பாடசாலையிலிருந்து வெளியேறி வர்த்தகம் பற்றி அறிந்தவராக இருந்தால் பயிற்சி சந்தைப்படுத்தல் முகாமையாளர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பதாரிகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் சிங்களம் பேசக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் குழுக்களாக நீண்ட மணித்தியாலம் வேலை செய்யக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

### செயற்பாட்டு நிர்வாகி (Executive Operation)

விண்ணப்பதாரி செயல்மிக்க சுறுசுறுப்பான அணி ஆட்க்காரராக இருக்கவேண்டும். விண்ணப்பதாரிகள் இத்துறையில் 2 அல்லது 3 வருடங்கள் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும். மற்றும் 25 வயதுக்கு கீழ்ப்பட்டவராக இருக்கவேண்டும். விண்ணப்பதாரி தொழில்நுட்ப அறிவை செயல்படுத்துவதோடு க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### மீட்பு விசாரணை மற்றும் சேகரிப்பு நிர்வாகி (Executive - Recovery)

சிறந்த விண்ணப்பதாரி இத்துறையில் 2 அல்லது 3 வருடங்கள் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் மீட்பு பற்றி குறித்த ஒரு நல்ல வெளிப்பாடு வேண்டும். விண்ணப்பதாரி ஆங்கிலம் மற்றும் தமிழ் சிங்களம் பேசக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி 40 வயதிற்கு கீழ்ப்பட்டவராக இருத்தல் வேண்டும் மேலும் குழுக்களாகவும் நீண்ட மணித்தியாலம் வேலை செய்யக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

### அடகு சேவை நிர்வாகி (Executive - Pawning)

விண்ணப்பதாரி இத்துறையில் 3 வருடங்கள் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் அடகுச் சேவை தொடர்பான செயற்பாடுகள் மற்றும் செயல்முறைகள் பரவலாக தெரிந்து இருக்க வேண்டும். விண்ணப்பதாரி போலி மற்றும் பயனற்ற தங்க நகைகளை அடையாளம் காண முடிந்தவராக இருக்க வேண்டும். மேலும் விண்ணப்பதாரிக்கு "டென்சி மீட்டர்" பயன்படுத்தும் அனுபவம் வேண்டும் விண்ணப்பதாரி 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

### காசாளர் (Cashier)

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கான வேலைவாய்ப்புக்கள் எமது காரியாலங்களில் உள்ளன. சிறந்த விண்ணப்பதாரி காசோலை மற்றும் பணம் உட்பட அன்றாட பண சேகரிப்பு கட்டுப்பாட்டை பற்றி பொறுப்பு ஏற்க வேண்டும். விண்ணப்பதாரி இத்துறையில் 1 வருட கால அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும். வயது 22-30 உட்பட்டதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி நேர்மையாகவும் ஒருமைப்பாடோடும் இருத்தல் வேண்டும்.

நீங்கள் மேல் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு உறுதியாக இருந்தால் உங்கள் சுயவிவரக் கோவையை உறவினர் அல்லாத வேறு இருவரின் சிபார்கடன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி
281, ஆர் ஏ டி மெல் மாவத்தை
கொழும்பு. 3
மின் அஞ்சல்: hrd@entrust.lk

MULTI
Group Executive Director/CEO
MULTI FINANCE PLC
281, R.A.De Mel Mw, Colombo 3
web : www.entrust.lk / www.multifinance.lk

(18540)



## தேவை

பேபி கெயர் நிறுவனத்திற்கு பெண் விற்பனையாளர் தேவை.
தொடர்பு : 077 1038040
(18553)(6-7-8)

## வீடு தேவை

நிறுவனம் ஒன்றுக்கு யாழ். நகரப்பகுதி, நல்லூர், கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் பஸ் போக்குவரத்து வசதியுடைய வீதிகளுக்கண்மையில் வீடு தேவை.
தொடர்புகளுக்கு : 077 3627055
(18561)(6-8-14)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி A-9 வீதியில் 15 அடி அகலப் பாதையுடன் 133 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. 3 பேஸ் (3 Phase) மின்னிணைப்பு வசதி உண்டு.
தொடர்பு: 0777197145
(18555)(6,9,10)

## தேவை

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் தையற்கலை, அழகுக்கலை பயிற்சி பெற்றவர்களும், பயிற்சிபெற்று வேலை செய்யவும் ஆள்கள் தேவை.
தொடர்பு: விளம்பரம் இல. 4362,
மே/பா, உதயன்.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(18558)(4,6,8)

## திருமண சேவை

சுலபமாக சுய தெரிவு முறையில் மணமக்களைத் தெரிவு செய்ய செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் முற்பகல் 11.00 - 1.00 மணிக்குள் வேல் அமுதனிடம் விவரங்களை விசாரித்தறிகுக.
தொடர்பு: 011 4873929, 0112 360488
8-3-3 Metro Apartment, 55 th Lane,
Wellawatta, Colombo -06 (சி/67)(2)

## வாடகைக்கு

மானிப்பாய் கட்டுடையில், இயற்கையான அமைதியான சூழலில் நவீன வசதிகள் அனைத்தும் கொண்ட NGO நிறுவனங்கள், வங்கிகளின் Staff House ஆக பாவிக்கக்கூடிய புத்தம் புதிய வீடு வாடகைக்கு உண்டு. குத்தகை அடிப்படையிலும் நீண்ட காலத்திற்கு கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 077 3627055
(18560)(6-8-14)

## வீடு வாடகைக்கு

கடற்கரை வீதி (BEACH ROAD) யாழ்ப்பாணத்தில் மாடி வீடு (கீழ்தளம், மேல்தளம்) வாடகைக்குண்டு. கீழ் தளத்தில் 3 அறைகளும், மேல் தளத்தில் 2 அறைகளுடன் பெரிய (HALL) ஹோலும் சகல வசதிகளுடன் உண்டு. அத்துடன் வாகனத்தரிப்பிட வசதியுமுண்டு. காரியாலயங்களுக்கோ அல்லது அலுவலக உத்தியோகத்தர் தங்குவதற்கோ மிகவும் உகந்தது. வாடகை நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி:-
021 222 7893, 077 0259877 (18551)(2-7-6)

## தேவை

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் கம்பனிக்கு கூலியாள்கள் தேவைப் படுகின்றனர். விரும்புவோர் உடனடியாக நேரில் சமுகமளிக்கவும்
வி.வி. கருணாரத்ன & கம்பனி
12A, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு இல : 071 1712003
(18537)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்ரர் விற்பனைக்கு

Mitsubishi NP LD xxxx இலக்க கன்ரர் வாகனம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்பு: 0772719131 / 0773570635 / 0773184115

(18572)(7.9.10)

## திறப்பு விழா அழைப்பு

எதிர்வரும் 30.05.2012 அன்று
...லை 7 மணிக்கு
எமது Colombo Telecom கிளை
(129, ஒல்கொட் மாவத்த, கொழும்பு- 11)
நிறுவனம் உங்கள் தேவைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.
(மொத்தவிற்பனை, சில்லறைவிற்பனை)
First Time in Sri Lanka
மொபைல் போன் மற்றும் எஸசரீஸ் மினி சுப்பர் மார்கட்
077 383 4848

(சி/71) (45.6.9)

## Study in GEORGIA

Transfer option available to Shenegen Countries Universities and Colleges

- Bachelor Degree in Nursing (BSN) - 4 years
- Bachelor of Business Administration (BBA) - 4 years
- Master of Business Administration (MBA) - 2 years
- Hospitality Management Certificate Program (HM) - 6 months
- Medicine (MD) - 6 years

(சி/78)

Required Qualification - G.C.E. (O/L)

NO Need IELTS
Interview
Need Bank balance

**Admission available**

Fees: After completion of VISA

Further details contact

**Sai Int'l Consultant Services**
109/25, Gorakagaha Road, Borella, Colombo 08.
Tel : 0112 683005, 0725 687003
Email : info@saiconsultant.lk Web : www.saiconsultant.lk

## வாடகைக்குண்டு

ஆஸ்பத்திரி வீதி, O. P .D க்கு முன்பாக (86' ×13') சகல வசதிகளுடன் கூடிய புதிய மாடிக் கட்டடம் உடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: 075 243 0287 (18569)(45.6.9)

## Study in Lithuania

**Visa Valid to travel Europe countries**

Dear Student's

Lithuania College, one of the oldest academic institutions in Lithuania, Offers the following accredited programs of Study.

1. Administration of institutions & Enterprises
2. Applied Informatics
3. Business Management
4. Economics
5. Recreation & Tourism Management
6. Trade management
7. Constructions Business Management
8. Law — intake May / June 2012
9. Accounting

- Deadline for immigration - June 30th 2012
- Visa is Guaranteed
- Required qualifications - G.C.E. O/L Or G.C.E. A/L
- English 50% or IELTS
- Part time jobs after six months
- Pickup & Accommodation Services provided by our client in Lithuania

For Further details & Consultation contact:

**Sai Int'l Consultant Services**
109/25, Gorakagaha Road, Borella, Colombo 08.
Tel : 0112 683005, 0725 687003
e-mail : info@saiconsultant.lk
www.saiconsultant.lk

(சி/79)


## 10 வீதிகளுக்கு 'காப்பெற்'

சாவகச்சேரி, மே 27

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட 10 வீதிகள் 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. கெயர் நிறுவனத்தினர் இந்த வீதிகளை 'காப்பெற்' வீதிகளாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். முதலாம் மைல் வீதி, அம்மன் வீதி, பழம் ஒழுங்கை, மீனாட்சி அம்மன் கோயில் வீதி, தட்டாதெரு காளிகோயில் வீதி, தேவாலய வீதி, விநாசித்தம்பி வீதி, வைத்திலிங்கம் வீதி, பொன்னம்பலம் வீதி ஆகியவை 'காப்பெற்' வீதியாக மாற்றப்படுகின்றன. (ம-9)


## புதிய வியாபாரத்துக்கு எங்களின் பங்களிப்பு

ஆடை உற்பத்தி செய்து நாடெங்கிலும் விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு

**பிரதேச விற்பனை முகவர்கள்**

**வட மாகாணத்தில் தேவைப்படுகின்றனர்**

**உங்களிடம்**

- களஞ்சிய வசதி
- வாகன வசதி
- ரூபா 10.00000/= நிரந்தர வைப்பு அல்லது வங்கி பிணை
- விநியோகத்தின் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் முகங்கொடுக்க கூடிய திறமை

**எங்களிடம்**

- அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகளின் சேவை
- உங்களின் நிறுவனம் வரையிலான இலவச விநியோகம்
- பிரதேச விற்பனை முகாமையாளர்களின் நேரடி கண்காணிப்பு வியாபாரம் குறித்ததான கண்காணிப்பு செய்தல் மற்றும் மேலும் பல சேவைகள்


D.G. பெஷன் காமன்ட் (தனியார்) நிறுவனம்
அசோகாராம வீதி,
கோங்தெனிய,
திக்வெல்ல.

(சி/335)

Tel: 041-2255954/9, 041-5622102 Fax : 041-2255955
Mo: 077-2683344
E-mail : info@newdgfashions.com Web : www.newdgfashions.com

# TELESONIC Air Power

TL- 1611



**Wall Fan**

Soft Touch Tilting Angle Adjustable
3 speed Choices
Oscillation Controlled By Double-line Pull Switch


TL- 2040

**Industrial Fan**

Large Air Volume at Low Noise
Strong Motor for Long Service Life
3 Speeds and Adjustable Oscillation Angle
Available Sizes 20", 26", 30"
12 Months Warranty on Motor








**Summer King**

Double Ball Bearings Motor
Well Balanced Blades For Quiet Operation
16 - Pole Powerful Motor
Embossed SLS Logo On Motor Cover
Hum-Free Electronic Regulator
24 Months Warranty on Motor
Available Sizes 36" 56"

TL- 1224

**Box Fan**

12" Blades
Complete Plastic Body For Easy Maintenance
Low Energy Consumption
12 Months Warranty On Motor






**Exhaust Fan**

Available Sizes 8", 10", 12"
12 Months Warranty On Motor

TL- 1632

**Floor Fan**

Available Sizes 12", 16", 18", 20"
Built-in Over Load Protecting Device For Safe Operation
Aluminium Blade For Powerful Wind
Ideal For Home, Office, Hotel, Store & So On
12 Months Warranty On Motor




TL- 1216FF

**Stand Fan**

3 Speed Oscillating Option
Low Energy Consumption 60 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available

TL- 1674




**Cabin Fan**

16" Rust Free Blades
3 Speed Oscillating option
Low Energy Consumption 50 w
12 Months Warranty
Spares Freely Available

TL- 16130F

**Table Fan**

3 Speed Oscillating Option
Low Energy Consumption 50 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available



TL- 1603

விலை 3275/= இலிருந்து

A Lifetime Of Refreshing Air

Jaffna :- Selva Electricals - 0777 113 884 / Sundharson Manipai - 0779 820 929 / Midea Electro Mart - 0777 238 542 / Minnila Electricals - 0778 392 107

Trincomalee / Batticaloa :- Burhans - 0776 703 175 / Eastern Electronics - 0772 291 356 / Mega Electricals - 0779 598 383 / Mubarak Traders - 0777 489 843

ஏக விநியோகஸ்தர்

**TELESONIC INTERNATIONAL**

இல 18, டேசிஸ் ... (முகப்பாக), கொழும்பு-04.
Tel: 2 50 81 60 - 2 Fax: 2 50 17 26 E-mail: info@telesonicintl.com

(சி/70)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HUTCH வெற்றிடம்

பிரபல தொலைத் தொடர்பாடல் கம்பனியாகிய எமது நிறுவனத்துக்குப் பின்வரும் வெற்றிடம் காணப்படுகிறது.

01. விற்பனைப் பிரதிநிதி (FREELANCE) க.பொ.த.சாதாரண தரம் அனுபவம் விசேட தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2012.05.30 ஆம் திகதி காலை 9 மணிக்குச் சுயவிவரக்கோவை மற்றும் அனைத்துச் சான்றிதழ்களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
முகவரி:- HUTCH SHOP, (18531) (2-6-7)
127, K.K.S. ROAD, M.P.C.S. BUILDING, JAFFNA. T.P. 021 222 0588

## கட்டடத் தொகுதிகள் வாடகைக்கு/ குத்தகைக்கு



யாழ்ப்பாணம், மனோகராத் தியேட்டர் சந்திக்கு அருகில் இல.86, நாவலர் வீதியில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டடத் தொகுதிகள் (10200 சதுர அடிகள் விஸ்தீரணமுள்ளது) வாடகைக்கு/ குத்தகைக்கு விடப்படவுள்ளது. வங்கிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் காரியாலய பாவனைக்கு, கம்பனிகளின் காட்சியறைகளுக்கு உகந்தது. தனித்தனியாகக் கடைகள் வழங்கப்படமாட்டா. வாடகை, முற்பணம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0775413070

(18529) (2-6-7)



ஜெய் குருதேவ்!
ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின்
**வாழும் கலைப் பயிற்சி-01**
(சுதர்சனகிரியா, யோகாசனம், தியானம், பிராணாயாமா, மூச்சுப்பயிற்சி)

"மகிழ்ச்சி என்பது ஒருபோதும் நாளை அல்ல அது எப்போதும் இப்பொழுதே" - ஸ்ரீ ஸ்ரீ

மனஇறுக்கத்திலிருந்து விடுதலைபெற, கடந்த கால வேதனைகளிலிருந்து விடுபட, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை வளர, நினைவாற்றல், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, கல்வியில், பணியில் முழுக்கவனம் செலுத்த, வாழ்க்கையை பலமாக வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை:
இடம் : கிளிநொச்சி /புனித தெரேசா பெண்கள் கல்லூரி, கரடிப்போக்கு
காலம் : 27/05/2012 நேரம் : பி.ப 4.30 மணி
பயிற்சிநாள் - 28/05/2012 - 02.06.2012 வரை
தொடர்புகளுக்கு: 0774277375 / 0777740593
(18543) (6,9,10)

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 27 |
| ★ | ★ |
| 04 | 05 |
| ★ | ★ |
| 1930 | 1987 |

அமரர் **அருளம்பலம் முத்துராசா**
(முன்னாள் உபதபால் அதிபர் தொண்டைமானாறு)

மனை மக்கள் சூழ பண்புடன்
வாழ்ந்திட்ட தன் மானத்தின் தந்தையே
வேண்டுவர் கேட்ட போது உதவி பல
புரிந்த உத்தமரே உங்களின் பாதம் பட்டு எம் மனை
இருபத்தைந்தாண்டுகள் கடந்ததே கண் பட்ட காலம் ஏதோ
எம்மை தவிக்க விட்டே நீர் சென்றீர்

முத்துராசா, கெருடாவில் தொண்டைமானாறு குடும்பத்தினர்
(18482) (6-9-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
21★08★1930



உதிர்வு
27★04★2012

**திருமதி பசுபதி கற்பகம்**

கடந்த (27.04.2012) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பசுபதி கற்பகம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட சோழன் சி.க.கூ. சங்கத்தினருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

467/6 ஆம் யூனிட், இராமநாதபுரம்.
ப.சந்திரன் (மகன்) திருவையாறு.
(16847) (45.7.9)



**ஆண்மை குறைவால்**
குழந்தைகள் இல்லையே என்ற கவலையா? விரியம் அதிகரிக்க. குழந்தை பாக்கியம் பெற (C/63)
ஆலோசனைக்கு அழையுங்கள் **0750 252 141**

## வீடு வாடகைக்கு

127/1, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:- 0777283729
(18514) (2-6-7)

## விற்பனைக்கு

Hero Honda Motor Cycle CBZ - XTREME Black Colour நல்ல நிலையில் விற்பனைக்குள்ளது. தொடர்பு:- 0777110381
(C/387) (2-6-7)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சி, நோய்த்தடுப்பூசி வழங்கப்பட்ட இரண்டு மாத நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு : 077 7506601**
(18554)(6-9-8)

## வீடு, காணி விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு, முத்துமாரி அம்மன் கோயிலடி, சாவகச்சேரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 12 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0774654982
(18527)(2-6-7)

## வீடு வாடகைக்கு

மீசாலை வடக்கு, சியாமளா மில் ஒழுங்கையில் மின்சார வசதியுடனான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 5812856, 077 2719323
(C/365)(2-7-6)

## வாடகைக்கு/குத்தகைக்கு

யாழ்.மானிப்பாய் வீதியில், மானிப்பாயில் புதிய சகல இயந்திரங்கள் பொருத்தப்பட்ட ரயர்க்கடை வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
021 7200290, 0750432800
(C/367)(2-7-6)

## வாடகைக்கு / குத்தகைக்கு


தாவடி மானிப்பாய் வீதியில், தாவடிச்சந்தியில் இருந்து 200m தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட (அலுவலக அறை, கழிவறை, நீர்வசதி) 30 x 15 அடி களஞ்சிய வசதி மற்றும் பார ஊர்திகள் நிறுத்தக்கூடிய இடவசதி கொண்ட இடம் வாடகைக்கு/குத்தகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
021 7200290, 075 0432800
(C/368)(6-7-8)

## மணமகள் தேவை

வயது 55, தாரம் இழந்த, யாழ். இந்து கௌர குடும்பத்தைச் சேர்ந்த (பெண் பிள்ளை ஒன்று உடைய) சாதாரண தொழில் புரிபவருக்குத் தகுந்த துணை தேவை. ஆண்களால் பாதிக்கப்பட்டோர், விதவைகள், அநாதைகள் விரும்பப்படும். சாதி, சமயம், சீதனம் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
தொடர்புகளுக்கு: 0719208225 (16841)(2-7-6)

## உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள், அனைத்தையும் உடனடியாகத் திருத்தி உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக் கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல உபகரணங்களுக்குமான உத்தரவாத சேவை உடனடியாக எங்களால் வழங்கப்படும்.



5K, 2 K Diesel Generator

மின்சார பிரேக்கர்கள் 40,000/=



**Green House Trading Company,**
No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
[illegible] 668.
(வடமாகாண பிரதேச காரியாலயத்துக்கு அருகில்)
(C/195)

### திவிநெகும திட்டத்தில் தென்னம்பிள்ளைகள்

தென்மராட்சி, மே27
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'திவிநெகும' வேலைத் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டமாக தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் தென்னம்பிள்ளைகள் வழங்கப்படவுள்ளன. ஒரு குடும்பத்துக்கு தலா இரண்டு தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இரண்டு கட்டங்களாக 6 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் தென்னம்பிள்ளைகள் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## விற்பனைக்கு

3 Phase 300 L கொள்வனவு கொண்ட Air compressor விற்பனைக்கு உண்டு.
(சேவிஸ் ஸ்ரேசன், ரயர்க்கடைகளுக்கு உகந்தது)
தொடர்பு : 021 7200290, 075 0432800
(C/366)(6-9-8)

## ஆள் தேவை

நெல்லண்டை தும்பளையில் உள்ள சிறுகைத் தொழில் நிறுவனத்தினால் பொதி செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 7114405
(16996)(6-9-8)

## CHEMISTRY

By: M.A. Niroshan B.Sc (Hons)

**SHAMROCK ACADEMY**

★ அசேதன இரசாயனம் புதிய பிரிவு ஆரம்பம்
திங்கள், வெள்ளி 6.15am - 7.15am
★ 2014 A/L பொது இரசாயனம்
★ ஆசிரியரின் சேவைகள் நிகழும் இடங்கள்

★BRILLIANT INSTITUTE - மானிப்பாய்
★BRAIN POWER INSTITUTE - குருநகர்
★D.M INSTITUTE - பாண்டியன்தாழ்வு
(18541)(6-7-8)

## வாகனம் வாடகைக்குத் தேவை

சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் களவேலைக்காக 4WD வாகனங்கள், குறிப்பாக பிக் அப் (Pick-up) ஜீப் (Jeep), பிறாடோ (Prado) நாளாந்த அடிப்படையில் தேவைப்படுகின்றது. தயவு செய்து வாகன பதிவு இல., வாகனத்தின் வகை, உரிமையாளர் பெயர், விலாசம், தொலைபேசி இல., எரிபொருள், சாரதி சம்பளம் அடங்கலாக நாளாந்த வாடகை, ஏனைய நிறுவனங்களுக்கு சேவை செய்திருந்தால் அது சம்பந்தமான விவரங்கள் ஆகிய விவரங்களுடன் 10 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

செ.ஞானராஜா, "சிறீரங்கம்", சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
மின்னஞ்சல்: esgee1947@yahoo.com
(18536) (6,9,10)

12 வருட காலமாக மக்களின் அபிமானத்தை வென்ற நிறுவனம்

## Rajabima




**பிராந்திய விற்பனை முகவர்கள் தேவை**

இலங்கையின் முதந்தர தயாரிப்பான நூடுல்ஸ், பப்படம், சோயா, அரிசிமா, டிபிபிட்ஸ், தேயிலை, மேசை உப்பு, Toffee, Jelly போன்ற இன்னும் பல அநேக தயாரிப்புக்களை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமான ரஜரட்ட லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்துக்கு வவுனியா, கிளிநொச்சி, யாழ்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு பிராந்திய விற்பனை முகவர்கள் உடன் தேவை.

வங்கி உத்தரவாதப்பத்திரம், களஞ்சிய வசதி, வாகன போக்குவரத்து வசதி உள்ளவர்கள் விற்பனை முகாமையாளருடன் உடன் தொடர்பு கொள்ளவும்

**விற்பனை பிரதிநிதிகள் தேவை**

பின்வரும் தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
* 2 வருட சேவை. அதனை உறுதிப்படுத்தக் கூடிய சான்றிதழ்கள்
* க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு
0771-077 332
0662-242 575
rajaratainfo@slt.lk
www.rajaratalanka.com

Rajarata Lanka (Pvt) Ltd,
No. 99, Hijira Garden,
Warakamura,
Matale.
(18364)

## 3 ஆம் ஆண்டு விழி நீரில்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 30 |
| ★ | ★ |
| 01 | 05 |
| ★ | ★ |
| 1977 | 2009 |

திருமதி **குகனேஸ்வரன் சுதர்சினி**
(பிரதேச செயலகம் மருதங்கேணி)

ஆனதம்மா ஆண்டுகள் மூன்று
ஆறவில்லை நம் உள்ளம் ஓயவில்லை நம் விழிகள்
தேடுகிறான் உன் தனு உன்னை
அவனுக்காக ஓர் தரிசனம் கொடுத்திடம்மா
மறு பிறப்பொன்று எடுத்திடம்மா
மறுபடியும் வந்திடம்மா எம்மிடம்
ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

குடும்பத்தினர்
(18511)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் யாழ்.திருநெல்வேலி, பரமேஸ்வரச் சந்திக்கு அண்மித்த பகுதியில் 2 பரப்பு 3 குழி காணி உடன் விற்பனைக்குண்டு. விலை - 1 பரப்பு = 40 இலட்சம்
தொடர்பு:- 0773 658485 (சி/86)

## ஆசிரியை தேவை

தரம் 11 இல் கல்விகற்கும் மாணவிக்கு I.C.T கற்பிக்கும் ஆசிரியை தேவை. திருநெல்வேலியை அண்டிய பகுதியில்.
தொடர்பு: 021 321 6536 (18571)(45.6.9)

## விற்பனைக்கு

வெள்ளவத்தைப் பகுதியில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Cafe & Game Zone உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு:-0773951525 (சி/85)

## காணி விற்பனைக்கு

வேம்பிராய் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள 8 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 927 1528
(18570) (45.6.9)

## பாமசிஸ்ற் தேவை

பிரதான வீதி, நெல்லியடி திருநடனமுருகன் மெடிக்கல்ஸுக்கு, பாமசிஸ்ற், ஓர் உதவியாளர் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ளவர்கள் நேரடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:
021 321 2945 / 0776685124 (C3768/7.9.10)


## விற்பனைக்கு

தேங்காய்ச் சிரட்டைகள் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 9014 803

## மணமகள் தேவை

1982, அவிட்டம், லக்கினத்தில் செவ்வாய், Food & Nutrient Bsc, MSc London மணமகனுக்கு CIMA/ Graduate மணமகள் தேவை.
தொடர்பு:
021 222 0809 / 021 321 9841

## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்




flex அருள்




செல்வம் கொழிக்கச் செய்யுங்கள்
*லக்ஷ்மியை அழைக்க எண்*
Sri Lanka Colombo **0777 614 186**
மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்! Rs. 15,000/=
Z தமிழ் CAPTAIN TV MEGA TV JAYA TV
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்ரீ தனலஷ்மி யந்திரம் கையிருப்பில் சொற்பமே உள்ளது. 31.05.2012 முன் விரையுங்கள்!
(C/72) FLEX Graphic

## Herbal Health Care Centre

யாழ்ப்பாணத்து சித்தமருத்துவமுறைகள், இந்தியா கேரளா ஆயுர்வேத, சித்தமருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

தலைமுடியுதிர்தல், முகப்பருக்கள் ஏற்படல், பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் ஞாபகமறதி, கிரகித்தலில் ஏற்படும் பாதிப்புகள், சோரியாசிஸ், வெண்குஷ்டம் (Leucoderma), மூட்டுக்களில் ஏற்படும் வீக்கம், நடக்கமுடியாத நிலைமை, முள்ளந்தண்டுப்பாதிப்பு, பாரிசவாதநோயாளிகள், நாட்பட்ட ஒற்றைத் தலைவலி, வயிற்றுப்புண், ஈரல்நோய்கள், புற்றுநோயாளிகளுக்கு நோய் எதிர்ப்புசக்தியைக் கூட்டல், நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் கால், கை விறைப்புத்தன்மை, இருதய அடைப்பு (அஞ்சியோபிளாஸ்டி அல்லது பைபாஸ் சிகிச்சை செய்ய முடியாதநிலையில் 100-150 நாள்கள் சிகிச்சையில் குணம் கிடைக்கிறது). புறஸ்ரேற் பாதிப்புகள், போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579

Herbal Health Care Centre
65, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)
(18549) (45.7.9)

## விநியோகஸ்தர் தேவை

General Manager - Ceylon Choice
Aitken Spence Plantations
Elpitiya Plantations PLC
Level 09, Aitken Spence Tower I,
305, Vauxhall Street, Colombo 02

**எயிட்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்திற்குச்** சொந்தமான மலை நாட்டின் பசுமைமிக்க தேயிலைத் தோட்டங்களில் பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்திலிருந்து தேயிலை தயாரிக்கும்

**"சிலான் சொய்ஸ்"**

நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், வவுனியா பகுதிகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.
விண்ணப்பங்கள் 7 நாள்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

"முகாமையாளர்",
சிலான் சொய்ஸ் நிறுவனம்,
எயிட்கன் ஸ்பென்ஸ் மனேஜ்மென்ட் லிமிட்,
எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் பி.எல்.சி.,
லெவல் 9, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 1,
305, வொக்சோல் வீதி,
கொழும்பு 2.
மேலதிக விபரங்களுக்கு ரஜீவ் - 077 3142 480
(சி/91) (45.6.9)



## தங்கப் பவுனுக்கு அதிகூடிய பணம் தரும் வங்கி



24 கரட்
ரூ. 48,500/-

22 கரட்
ரூ. 44,500/-

ரூ. 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சகல அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்* சுடுநீர் போத்தல் ஒன்று இலவசம்



NDB பின்னிய அடகுச் சேவை

இச்சலுகையை பின்வரும் NDB கிளைகளில் பெறமுடியும்

| | | | |
|---|---|---|---|
| அம்பலான்கொட | ஜா-எல | குளியாப்பிட்டிய | புத்தளம் |
| அம்பலான்தோட்ட | யாழ்ப்பாணம் | மாலபே | இரத்தினபுரி |
| அம்பாறை | கல்முனை | மாத்தளை | திருகோணமலை |
| பதுளை | களுத்துறை | மாத்தறை | வவுனியா |
| பண்டாரவளை | கந்தான | மதுகம | வத்தளை |
| மட்டக்களப்பு | கண்டி | நீர்கொழும்பு, | வென்னப்புவ |
| சிலாபம் | கேகாலை | நிட்டம்புவ | வாரியபொல |
| காலி | கொள்ளுப்பிட்டி | பிலிமதலாவ | அளுத்கம |
| ஹொரண | கொட்டாஞ்சேனை | பிலியந்தலை | எம்பிலிப்பிட்டிய |

அழையுங்கள் 011 2 44 88 88

இச்சலுகை 2012 மே 02 முதல் ஜுலை 02 வரை மட்டுமே

• நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
• இருப்பு உள்ளவரை மட்டுமே.

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

வாழ்க்கையை நிதமும் மாற்றும் NDB வங்கி

(C/68) PHOENIX O&M


## மரண அறிவித்தல்

# சின்னர் இளையதம்பி

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னர் இளையதம்பி (24-05-2012) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாறிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயிலுவின் அன்புச் சகோதரனும், லோகநாதன் (இலங்கை), நற்குணநாதன் (லண்டன்), சுவாமிநாதன்(சுவிஸ்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகம்மா, இந்திராதேவி, மைனா ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னத்துரை, சின்னராசா, காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், கயேந்தி, உமாகரன் (சுவிஸ்சர்லாந்து), பார்த்தீபன்(பெல்ஜியம்), நிஷாலினி, சானுஜா, ஜெகநாதன், சர்மிலாதேவி, லகிதன், சுனந்தா (சுவிஸ்சர்லாந்து), சுவர்னா (சுவிஸ்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு பேரனும், சங்கீத், பிரவீன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு குடமியன் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தகவல்:*
வரணி,
இயற்றாலை. (சி/84) (2-6-7) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 68

## ஆரோக்கியமான பற்களுக்கு

உங்கள் அழகான புன்னகைக்கு பற்சுகாதாரம் பேணல் மிகவும் முக்கியமானதாகும். பற்கள் உணவை மெல்லுதற்கு, அழகாகப் பேசுவதற்கும் வெண்மையான புன்னகைக்கும் மிகவும் இன்றியமையாததாகும்.

பற்சுகாதாரம் பேணப்படாவிடில் ஏற்படும் பிரச்சினைகள்
*பற்சூத்தை *முரசு வியாதி *உமிழ்நீர் சுரப்பி சுழற்சி *வாயழற்சி
*நாவழற்சி *பல்வேர் கீழ்க்கட்டு *ரொன்சிலயிற்றிஸ்

இவை ஏற்படக் காரணங்கள்
*தன் சுகாதாரம் பேணப்படாமை *உணவுப் பழக்க வழக்கம்
*சரியான முறையிலும், தேவைப்படும் நேரத்திலும் பல் துலக்காமை
*பல் துலக்குவதற்குப் பாவிக்கும் பற்பசை அல்லது வாயலசியை சரியானதாக தெரிவு செய்யாமை *போசனைக் குறைபாடு *நோய் நிலைமைகள்
*சுகாதாரம் பற்றிய போதிய அறிவின்மை

பற்களில் ஏற்படும் நோய்நிலைகளை எவ்வாறு கண்டுகொள்ளலாம்?
*பற்களின் மேற்பரப்பில் மாற்றம் காணப்படும்
*உணவுத் துணிக்கைகள் தங்குவதனால் துவாரங்கள் ஏற்படும்
*பல்வலி ஏற்படும் *முரசுகளில் இருந்து இரத்தம் வருதல்
*முரசு கடும் சிவப்பு நிறமாதல் *முரசின் விளிம்புப் பகுதி வீக்கம் அடைதல்
*வாயில் துர்நாற்றம் உண்டாதல்

பற்சுகாதாரம் பேணுவதன் நோக்கங்கள்
*வாய்த் தொற்றுக்களைத் தடுக்க
*வாயை சுத்தமாகவும் புத்துணர்ச்சியுடையதாகவும் பேணுவதற்கு
*பற்சூத்தை, பற்காலிகள் முரசு வியாதிகள் போன்றன ஏற்படாது தடுக்க
*வாயில் புண்கள் ஏற்படுவதைத் தடுக்க
*உமிழ் நீர்ச்சுரப்பைத் தூண்டி பசியைக் கூட்டுதல்
*உமிழ் நீர்ச்சுரப்பிகளில் சுழற்சி ஏற்படாது தடுக்க. அத்துடன் அயற்பாகங்களில் ஏற்படும் சுழற்சியையும் தடுக்க

அடிக்கடி வாய்ச் சுகாதாரம் பேணப்பட வேண்டியவர்கள்
*தன்னறிவற்ற நோயாளிகள் *கூடிய உடல் வெப்பநிலை கொண்ட நோயாளி
*மந்த போசனை, நீரிழப்பு உடைய நோயாளி *வாயால் உணவு உள்ளெடுக்க முடியாதவர்கள் *வாயில் நோய் காணப்படுவோர்
*சத்திர சிகிச்சை செய்யப்பட்ட நோயாளி *ஆதரவற்ற அல்லது உதவியற்ற நோயாளி

சாதாரணமாக எமது வாய்ச்சுகாதாரத்தை எவ்வாறு பேணுவது?
*இனிப்புப் பண்டங்களை குறைவாக உண்ணுதல் அல்லது அவற்றைப் பிரதான உணவு வேளைகளில் உண்ணுதல் *சரியான முறையில் காலையும், இரவும் சாப்பாட்டின் பின்னர் ஒழுங்காக பல்துலக்குதல் *புளோரைட் (Fluoride) அடங்கிய பற்பசையை உபயோகித்தல் *குறித்த காலப்பகுதிக்கு ஒரு தடவை பல் வைத்தியரிடம் சென்று பல் பரிசோதிக்கப்படல்.

எவ்வாறு பல் துலக்குவது?
*சரியான பற்பசையைத் தெரிந்தெடுத்தல்
*மென்மையான பற்தூரிகையை சரியான அளவில் பெற்றுக் கொள்ளல்
*பற்தூரிகையை நனைத்து சிறிதளவு பற்பசையை அதில் போடுதல்
*பின்னர் இடப்பக்க மேல் வாய்ப்பல்லின் பக்கத்தினைத் துலக்குதல்
*பற்தூரிகையை 45பாகை கோணத்தில் வைத்து வட்டமான திசையில் துலக்குதல், இவ்வாறு கீழ் வாய்ப் பற்களின் பக்கத்தினைக் குறைந்தது 20 செக்கன்களுக்குத் துலக்குதல்
*பின்னர் மேல் முன் வாய்ப்பற்களைத் துலக்குதல்
*பின்னர் கீழ் முன் வாய்ப்பற்களைத் துலக்குதல்
*பின்னர் வாயின் உட்பக்கம், நாக்கு என்பவற்றை 30 செக்கனிற்கு துலக்குதல்
*பின்னர் வாயை நீர் அல்லது ஏதாவது வாயலசி பாவித்து கழுவுதல் வேண்டும்.

*பற்சுகாதாரம் அல்லது வாய்ச்சுகாதாரம் சிறுவர்களில் மிகவும் முக்கியமான தொன்றாகும். பற்சுகாதாரம் பேணப்படாதவிடத்து அல்லது குறைவாகக் காணப்படுதல் பிள்ளைகளின் பொதுச் சுகாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் மற்றைய நோய் நிலைகள் ஏற்படவும் காரணமாகின்றது. பல், முரசு வியாதிகள் மனதில் உடலியல் தோற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாது தீவிரமான சுகாதாரப் பிரச்சினைகள் அதாவது நித்திரையின்மை, கேட்டலில் பாதிப்புக்கள் என்பன ஏற்படவும் வழி வகுக்கின்றது. எனவே ஒழுங்கான நல்ல பழக்கவழக்கங்களை சிறுவயது அல்லது பிள்ளைப் பராயம் முதல் கற்றுக் கொடுப்பதன் மூலம் இவை ஏற்படாது தடுக்கலாம். அதாவது ஒழுங்காகப் பல்துலக்குதல், எவ்வாறு பல் துலக்குவது என்பவை பற்றி குழந்தைகளுக்கு பெற்றோர்கள் கற்றுக் கொடுப்பதன் மூலம் சிறந்ததொரு சுகாதாரத்தைப் பேணமுடியும்.*

குழந்தைகளின் பற்சுகாதாரத்தைப் பேணுவதற்கான வழிமுறைகள்
*பல்வைத்தியரினால் பிள்ளையின் பல் குறிப்பிட்ட கால இடைவெளியில் பரிசோதிக்கப்படல், இதன்மூலம் பல் முரசு,வியாதிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.
*சரியான பல் துலக்கும் முறையை வாய் அலசி (Mouth Wash) பாவிக்கும் முறைகளைக் கற்பித்தல்.
*பிள்ளைகள் பிறந்த சில நாள்களிலேயே பிள்ளையின் வாய், முரசு பகுதியை மென்மையானதும் ஈரப்பதனானதுமான துணியினால் துடைத்து சுத்தமாக வைத்திருக்கும் படி பெற்றோருக்கு அறிவுறுத்தல். இது அவர்களின் அழகான பேச்சிற்கும் மெல்லும் செயற்பாட்டிற்கும் மிகவும் முக்கியமாகும்.
*பிள்ளைகளிற்கு விருப்பமான நிறத்தில், சரியான அளவுடைய மென்மையான பற்தூரிகையைத் தெரிவு செய்து கொடுக்க வேண்டும்.
*ஒரே மாதிரியான பற்பசையை பாவிக்க அனுமதிக்க வேண்டும் (புளோரைட் அடங்கியது)
*ஒரு நாளைக்கு இரண்டு தடவை பல்துலக்க கற்பிக்க வேண்டும்
*மரக்கறி வகைகள், பழங்களைக் கூடுதலாக உண்ணக் கொடுத்தல் அல்லது ஊக்குவித்தல் இது அவர்களின் பற்களின் உறுதித் தன்மையை அதிகரிக்க உதவுகின்றது.
*அத்துடன் போசாக்கான உணவுகளைக் கொடுத்தல். இவற்றின் மூலம் மழலைகளின் எதிர்காலத்தை வெளிச்சமாக்குங்கள். இவற்றைக் கடைப்பிடித்தாலே போதும். உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை அழகான புன்னகையுடன் எப்போதும் என்பதை மறந்து விடாதீர்கள்...!!!

**ரி.டெய்சி,**
தாதியர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேடு ஆவணம் மட்டுமல்ல....

இடம்: குழந்தைகள் நல கிளினிக்
தாய்:- ''ஊர் கிளினிக்கில இருந்து எங்களை அனுப்பினவை.. பிள்ளைக்கு நிறை போதாதாம். வேறு ஏதாவது பிரச்சினையும் இருக்குமோ எண்டு பாக்கச் சொன்னவை...''
வைத்தியர்:- ''பிள்ளையின்ரை வளர்ச்சிப் பதிவேட்டை, 'அம்மா காட்'டைத் தாங்கோ அம்மா....''
தாய்:- ''அதை நான் கொண்டு வரேல்லை. ஊரில மிஸ்ஸி பதியிறதுக்குத் தானே அது தேவையெண்டுட்டு.... இஞ்ச பிள்ளையைத்தான் காட்டச் சொல்லிச் சொன்னவை.''

குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும் காலாகாலத்திற்கேற்ப மிகக்குறிப்பிடக்கூடிய அளவில் வேறுபடுகின்றன. உடல் அங்கங்களின் வளர்ச்சி, செயற்பாட்டின் விருத்தி, சமூகத்துடனான தொடர்புகள் என்பன பிறந்த குழந்தைக்கும் இளஞ் சிறார்களுக்கும் இடையே மிகப்பாரிய அளவில் வித்தியாசப்படுகின்றன.

ஆயினும், சாதாரணமான சுகதேகியான குழந்தைகள் ஒரே வயதில் ஏறத்தாழ குறிப்பிட்ட ஒரே விதமான வளர்ச்சியையும் விருத்தியையும் கொண்டிருக்கின்றன. இத்தகைய குழந்தைகளில் பல்லாயிரக்கணக்கானோரின் நடத்தைகளை அறிந்து எமது பிரதேசக் குழந்தைகளுக்கு ஏற்றவாறு வரையுகளும் வளர்ச்சிப்படிகளின் வயதெல்லைகளும் குறிக்கப்பட்ட சிறுநூலே இந்த ஆரோக்கிய வளர்ச்சிப்பதிவேடு ஆகும். இந்த நூலின் பிரதான நோக்கம் பிள்ளை சாதாரணமான, எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சி நிலைமையிலிருந்து விலகி நடப்பதை அறிவதும் பிள்ளை அடிப்படைச் சுகாதார வசதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதும் ஆகும்.

குழந்தை பிறந்து தாயாரின் வீடு செல்லும் முதல் நாளிலேயே இந்தச் 'சொத்து' சுகாதாரப் பிரிவினரால் பெற்றோரிடம் கையளிக்கப்படுகிறது. கிரமமாக கிளினிக் செல்வதும், புத்தகத்தை நிரப்புவதும் பற்றி அறிவுறுத்தப்படுகிறது. பெரும்பாலானோர் இந்த அறிவுறுத்தலை ஏற்றுக்கொண்டு செயற்படுத்து கின்றனர். கிளினிக் சென்று பதிந்து ''உத்தியோகபூர்வமான'' கடமைகளை முடித்து புத்தகத்தைப் பத்திரப்படுத்துகின்றோம். அடுத்த கிளினிக்கிற்கான தவணை வரும்வரை.

இடையிடையே பிள்ளை நோய்வாய்ப்படலாம். வைத்தியரிடம் செல்ல நேரிடலாம். பிள்ளைக்குத் தேவையான உடைகள், தண்ணீர்ப் போத்தல் போன்ற இன்னோரன்ன பொருள்களுடன் சிறு கூடை தயாராகும். ஆனால் இந்த ஆரோக்கியப் பதிவேடு மட்டும் அதனுள் இருப்பதில்லை.

ஊர் கிளினிக்கில் இருந்து பெரியாஸ்பத்திரி கிளினிக்குக்கு குழந்தை சிபாரிசுக் கடிதத்துடன் அனுப்பப்படலாம். குழந்தையைப் பார்க்க வேண்டிய வைத்தியரின் முன் செல்லும் போதும் அந்தப் புத்தகத்தின் 'தேவை' பற்றி ஞாபகமிருப்பதில்லை.

அந்தச் சிறு புத்தகத்தில் அப்படி என்ன தான் முக்கியத்துவம் இருக்கிறது? ஊர் கிளினிக் மிஸ்ஸிக்காகத்தானா அந்தப் புத்தகம்? கிரமம் தவறாமல் புள்ளிகளையும் இலக்கங்களையும் பதிந்து வைப்பதால் பிள்ளைக்கு என்ன லாபம்..?

குழந்தையின் சுகநலச் சொத்து அந்தப் புத்தகம். அடிப்படைச் சுகாதார சேவைகளின் பயன்களைப் பெறவும், பெற்றோரால் விளங்கப்படக் கூடிய விதத்தில் குழந்தையின் வளர்ச்சித் தரவுகளைக் காண்பிப்பதுமான இச்சிறுநூலின் பெறுமதி அளப்பரியது.

குழந்தையின் பிறப்பு நிறை, தலைச் சுற்றளவு, நீளம், பிறப்பின் போதான அசாதாரணமான நிலைகளைக் குறிப்பிடுவதில் இருந்து ஆரம்பமாகிறது. குழந்தையின் நிறை, உயரம் என்பன யாவரும் விளங்கும் விதத்தில் தரப்பட்டுள்ளன. நிறை, உயரம் என்பவற்றை அளந்து பதிவதுடன் பெற்றோரின் கடமை முடிந்து விடவில்லை. அபாய அறிகுறிகளான மஞ்சள், சிவப்பு வர்ணங்களில் ஓரிரு மாதங்களுக்குக் குறிக்கப்படும் குழந்தை, சிறப்பு வைத்திய கவனத்துக்குக் கொண்டு வரப்படுதல் அவசியம். தொடர்ச்சியாக மஞ்சள், சிவப்பு வர்ணத்தில் குறிக்கப்படும் குழந்தை கட்டாயமாக வைத்திய ஆலோசனையைப் பெறுவதையும் தேவை யேற்படின் மேலதிக பரிசோதனைகளுக்கு உட்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். குறிப்பிடத்தக்களவு தருணங்களில் உள்ளீடாக நிலவும் ஒரு நோய் நிலைமை நிறை, உயரத்தில் குறைவாக வெளிப்படுத்தப்படலாம்.

நீண்ட காலமாக ஆபத்தான வர்ணங்களில் குறிக்கப்படும் குழந்தைகள் சில சந்தர்ப்பங்களில் மிகக் காலந்தாழ்த்தியே வைத்திய கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. ''இந்த நிலைமை பிரச்சினை எண்டு எங்களுக்குத் தெரியாது..'' ''பிள்ளை ஓடி விளையாடி நோனா இருந்தது. அதுதான் கவனிக்காமல் விட்டிட்டம்..'' பிள்ளை குறைமாதத்தில் பிறந்தது. அப்ப சின்னனாத் தானே இருக்குமெண்டிட்டு.. ''இப்ப பிள்ளைக்கு ஆறு வயது ஆகிட்டுது. இனி அம்மா காட் தேவையில்லையெண்டு விட்டிட்டு வந்திட்டம்'' எனப் பலவகையான காரணங்கள் நியாயப்படுத்துவனவாகச் சொல்லப்படுகின்றன.

குழந்தை ஆபத்தான வர்ணப்பகுதியில் இருப்பது ஒன்றே பெற்றோரை அவசரமாகச் செயற்பட வைக்கப் போதுமானது. இந்தச் சிறுநூலே உங்களுக்கான 'சிபாரிசுக் கடிதமாகச் செயற்படக் கூடியது. நீண்ட காலசீரிய உடல்நலக் குறைவு, குழந்தையின் உயரம், மூளை வளர்ச்சி, விவேகம் என்பனவற்றிலும் பல எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. தலைச்சுற்றளவு, உயரம், வயதிற்கேற்ற தொழிற்பாட்டு விருத்தியின்மை என்பனவும் மாற்றம் தொடங்கிய சிறு காலத்துக் குள்ளே கவனிக்கப்பட வேண்டியன.

இந்த சிறு நூல் 1 - 19 வயது வரையான பிள்ளைகளுக்கு பயன்படுத்தப்படக் கூடியது. தடுப்பு மருந்தேற்றம், முன்பள்ளி, பாடசாலை மாணவருக்கான விவரங்கள், ஆசிரியரின் பங்களிப்பு என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஐந்து வயதுவரை எதிர்பார்க்கப்படுகின்ற ஆற்றல் விருத்தி நிலையும் அதைத் தூண்டும் செயற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றைவிட்டு திறமையான பெற்றோருக்கான வழிகாட்டல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆக சுகாதாரப் பிரிவினர், ஆசிரியர்கள், வைத்தியர்கள் எல்லோரினதும் அவவீடுகளில் உங்கள் குழந்தையின் சுகநலம் எந்த மட்டத்தில் இருக்கிறது என்பதை உணர்த்தும் அளவுகருவியாக இந்த நூல் இருக்கின்றது. இனிமேல் தயாராவோம்....!

★குழந்தை எந்த வேளையிலாவது அபாய வர்ணங்களில் குறிக்கப்பட்டால் விரைவாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள... குழந்தையை வைத்தியரிடம் காண்பிக்கும் எந்தத் தருணத்திலும் இந்தச் சிறு நூலை எடுத்துச் செல்ல.. தயாராவோம்! மறந்து விடாதீர்கள்!

★குழந்தையை வைத்தியரிடம் காட்டும் போது உங்கள் முறைப்பாடுகளுடன், உங்கள் குழந்தையைப் பற்றி 'இரண்டாவது மொழியில் வைத்தியருடன் பேசவல்லது இந்தச் சிறுநூல்!

மருத்துவர்
**குமுதினி கலையழகன்**
குழந்தைநல வைத்தியர்,
விரிவுரையாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

வைகாசி 15 திங்கட்கிழமை 28.05.2012
திதி: சப்தமி
நட்சத்திரம்: மகம் பி.இ 08.50 வரை
சுபநேரம்: 11.5 2-01.22 வரை
ராகு காலம்: 07.22-08.52 வரை

**மேடம்:**
பல்வேறான சிந்தனைகள் மனதில் நிலவும். திட்டமிட்டுச் செயற்படுங்கள். பணம் பல வழிகளிலும் வரும். எடுத்த வேலைகளில் எதிர்பாராத வெற்றி கிட்டும். உங்களின் முன்னேற்றங்களுக்கு, நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். குழந்தைகளின் கல்விக்காக, மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும்.

**இடபம்:**
எதிலும் இரட்டைச் சிந்தனையோடு செயற்படுவீர்கள். நண்பர் ஒருவரின் உதவிக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கும். தொழிலில் வருமானத்தைப் பெருக்க முற்படுவீர்கள். உடல்நிலையில், சிறு சிறு அசௌகரியங்கள் ஏற்பட்ட போதும், இன்றைய பணிகளை மேற்கொள்வதில் சிரமம் இருக்காது. தெய்வ வழிபாடு, மனநிம்மதியான சூழ்நிலை, சந்தோஷத்தை அதிகரிக்கும்.

**மிதுனம்:**
சற்று சோம்பல் நிலவியபோதும் சமாளித்து, பணிகளைச் செய்து முடிப்பீர்கள். கல்வி, வேலைவாய்ப்பு வகையில் எதிர்பார்க்கும் தகவல்கள் கிடைக்கும். சில விடயங்களைப் பொறுமையோடும், பொறுப்போடும் செய்து முடிக்க வேண்டியிருக்கும். உறவினர்கள் உதவ முன்வருவர். தந்தை வழியில் மருத்துவச் செலவு உண்டு.

**கடகம்:**
வருமானத்துக்கு வாய்ப்புக் கிடைத்தபோதும், அதைத் தக்க வைத்துக்கொள்ள சற்று போராட்டமான சூழ்நிலை நிலவும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தொடர்புகளை, பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களில் செலவுகள் சற்றுக் கூடுதலாக இருக்கும்.

**சிங்கம்:**
சில காரணங்களுக்காக அவசர அவசரமாகப் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். உறவினர் ஒருவரின் சந்திப்பு, அவர்கள் மூலம் சில காரியங்களை மேற்கொள்வீர்கள். சில செலவுகளுக்காகச் சேமிப்பில் இருந்து பணம் எடுக்க வேண்டியிருக்கும். தொழில் நண்பர்களுடன், கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

**கன்னி:**
சிறு சிறு தடங்கல்களுக்குப் பின் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். சில வருமானங்கள் உறுதியானாலும், கைக்கு வருவதற்குள் மனதில் அதிகப்படியான போராட்டங்கள் நிலவும், உடன்பிறப்பின் விவகாரங்களுக்காகப் பயணம் மேற்கொள்வீர்கள். மாலையில் மன அமைதிக்காகத் தெய்வ வழிபாடுகளைச் செய்வீர்கள்.

**துலாம்:**
வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். சில விடயங்களில், அஜாக்கிரதையாகச் செயற்படுவதன் மூலம், அவதிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக, செலவுகள் செய்ய வேண்டாம். உங்களின் வேலை ஒன்றை, மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
எடுத்த காரியங்களைத் தங்கு தடையின்றி செய்து முடிக்கும் நாள். ஆரோக்கியக் குறைவுகளால் அவதிப்படலாம். எதிர்பாராத திடீர்ச் செலவுகளால், பணப்பற்றாக்குறைக்கு ஆளாகலாம். சிறிய தவறு ஒன்று, பெரிய பிரச்சினையாகிவிடுமோ என்று, கலக்கம் அடைவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்பதால் மகிழ்வுண்டு.

**தனுசு:**
புதிய வரவுகளால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களின் மனஸ்தாபங்களுக்கு ஆளாகாமல் இருக்க, அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். காலை முதல் மாலை வரை, அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள்.

**மகரம்:**
சில நபர்களின் சந்திப்பால் நம்பிக்கைகூடும். திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் அமையும். தொழில் வகையில், சிற்சில மாற்றங்கள் ஏற்படுத்துவீர்கள். பணியில் சிறப்புக் கூடும். நீண்ட நாள்களாகக் கிடைக்காத கடன் பணம் கைக்குக் கிடைக்கும். நீதிமன்ற விவகாரங்கள் தங்களுக்குச் சாதகமாகும். தெய்வ வழிபாடுகள், மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**கும்பம்:**
உற்சாகம் கூடும். மனதில் நிலவும் குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். தங்களை விமர்சனம் செய்தவர்களே, பாராட்டும்படியான செயல்களை மேற்கொள்வீர்கள். பூர்வீகச் சொத்து தொடர்பான பிரச்சினைகளில், நல்ல முடிவை எட்டலாம். வியாபாரத்தில், வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**மீனம்:**
இனிய சந்திப்புகளால் மனமகிழ்ச்சி கொள்வீர்கள். எதிர்பார்த்த பண வரவுகள் வரும். குழந்தைகளுக்காகச் செலவுகள் இருக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் மாறும். அலுவலகப் பணிகளில், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று, இன்று மாலை நேரத்தில் நிறைவேறும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 9 | | | 2 | | 4 | 1 |
| | | | 1 | | | 6 | | 7 |
| | 2 | 1 | 6 | 7 | | | | |
| 6 | 8 | 7 | | 3 | | | | |
| | 1 | | 4 | | 6 | | 7 | |
| | | | | 8 | | 1 | 6 | 9 |
| | | | | 6 | 9 | 4 | 8 | |
| 2 | | 6 | | | 5 | | | |
| 4 | 7 | | | | | 5 | 9 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 7 | 9 | 1 | 3 | 8 | 6 | 2 |
| 9 | 1 | 8 | 6 | 7 | 2 | 3 | 5 | 4 |
| 3 | 2 | 6 | 8 | 4 | 5 | 7 | 1 | 9 |
| 1 | 5 | 4 | 2 | 9 | 8 | 6 | 3 | 7 |
| 2 | 7 | 3 | 4 | 5 | 6 | 9 | 8 | 1 |
| 6 | 8 | 9 | 7 | 3 | 1 | 2 | 4 | 5 |
| 7 | 3 | 2 | 1 | 8 | 4 | 5 | 9 | 6 |
| 8 | 6 | 1 | 5 | 2 | 9 | 4 | 7 | 3 |
| 4 | 9 | 5 | 3 | 6 | 7 | 1 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இங்கு ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மே 27

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இளைஞருக்கு கால் முறிந்தது.

இந்தச் சம்பவம் புதன்கிழமை சாவச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி தபால் அலுவலக வீதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் நிஷோசாந் (வயது21) என்பவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ம-9)

***

வலி வடக்கு, மே 26

வீதிக்குக் குறுக்கே போடப்பட்டிருந்த வேகத் தடையில் மோட்டார் சைக்கிளுடன் தூக்கி வீசப்பட்ட ஒருவர் படுகாயங்களுடன் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிற்பகல் 5.20 மணியளவில் இந்த விபத்து சுன்னாகம் பொது நூலகத்துக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் காங்கேசன்துறை வீதி வழியாக வந்தவர் ஏ.ஜி.ஏ. ஒழுங்கையின் முகப்பில் போடப்பட்டுள்ள வேகத் தடையில் மோட்டார் சைக்கிளைத் திருப்பிய வேளையில் மோட்டார் சைக்கிள் சம நிலையை இழந்து நூலக மதிலுடன் மோதுண்டு சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டார்.

இதனால் பலத்த காயங்களுக்கு ஆளாகிய குறித்த நபர் சுன்னாகம் பொலிஸாரால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## அடையாளங்காண உதவுங்கள்





யாழ்ப்பாணம், மே 27

சுன்னாகம் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்ட மனநோயாளர்கள் இருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மனநோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களது விவரங்கள் இதுவரை அறியப்படாத காரணத்தால் இவர்களின் உறவினர்களோ, அல்லது பாதுகாவலர்களோ தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## சுயதொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 27

நல்லூர் பிரதேச சபை பெண்களுக்கான சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடியதாக சபையின் நிதியில் முக அலங்காரப் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

கொக்குவில் உப அலுவலகத்தில் நடைபெற்று வரும் இந்தப் பயிற்சியில் தற்சமயம் இருபத்தி ஐந்து பெண்கள்கலந்துகொண்டு பயிற்சி பெறுகின்றனர். தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் என்று சபைத் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# பலத்த காற்றால் பயணிகள் சிரமம்

கொழும்புத்துறை, மே 27

தற்போது வீசிவரும் பலத்த காற்றால் வீதிகளில் மண், தூசிகள் அள்ளி வீசப்படுகின்றன. இதனால் போக்குவரத்தில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

திடீரெனப் பலத்த சுழல் காற்று வீசி வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள், பாதசாரிகளின் கண்களில் மண்ணை அள்ளிக் கொட்டுகிறது. இதனால் வாகனம் ஓடுவதில் சிரமம் ஏற்படுவதுடன் விபத்துக்கள் அதிகரிக்கும் நிலைமையும் காணப்படுகிறது.

இதேவேளை பல பிரதான வீதிகளிலும் திருத்த வேலைக்காகக் குவித்து வைக்கப்பட்டுள்ள மணல் காற்றுடன் எழுந்து அந்தப் பகுதிகள் புழுதி மண்டலமாக காட்சி தருகின்றன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்கின்றனர். (ம-135)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, மே 27

ஏழாலை துர்க்காதேவி ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆலயத்துக்கு அடியார் ஒருவரால் வழங்கப்பட்ட சிங்க வாகனத்தில் இரவுத் திருவிழா வேளையில் அம்பாள் வீதி உலா வருகிறார். எதிர்வரும் 31 ஆம் திகதி 108 சங்காபிஷேகம் நடைபெற்றுத் திருவிழா நிறைவடையும்.(ம-9)

* * *

தென்மராட்சி, மே 27

தென்மராட்சி தெற்கு மறவன் புலோ மத்தி நித்தர்புலம் பெரியதம் பிரான் ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வ ரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.07 மணிக்கு இடம் பெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகி 31 ஆம் திகதி அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் இடம் பெறும்.கிரியைகள் சிவப் பிரம்மஸ்ரீ சண் ரவீந்திர சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும். (ந-9)

***

உடுப்பிட்டி பெரியதம்பிரான் பத்திர காளி அம்பாள் ஆலய அலங் காரத்திருவிழா நேற்று சனிக்கிழமை அரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை அபிசேகமும் இடம்பெறும். இறுதி நாளான எதிர்வரும் 4 ஆம் திகதி 108 சங்காபிசேகம் நடை பெறும். தினமும் இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, அம்பாள் வீதியுலா இடம் பெறும். (ந-253)

***

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள திருவிழாக்கள் வரிசை [illegible] 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ந)

## சாரணர் சங்கத்தினருக்கு நிதி உதவி

வலி.வடக்கு, மே27

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான் யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தினருக்கு பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சாரணர்கள் தமது பாசறை நிகழ்வுகளின்போது சமைப்பதற்கான பாத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

27 ஆயிரத்து 500 ரூபா நிதி முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-86)

## ரூ.80 லட்சம் செலவில் ஆலயம் நிர்மாணம்

வடமராட்சி, மே 27

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நாகர் கோயில் மேற்கில் உள்ள கவுத்தம்துறைப் பிள்ளையார் கோயில் 80 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

கடந்தகாலப் போரில் சேதமடைந்த இந்தக் கோயிலைப் புதிதாக நிர்மாணிக்க இந்தப் பகுதி மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அதற்கென சில மாதங்களுக்கு முன்னர் கோயில் மூலஸ்தான கர்ப்பக்கிரகம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

இந்தக் கோயிலை புதிதாக நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு பிரதேசத்தில் 2 பரப்பில் அமைந்த வீடும் 1½ பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 568 0298 (18617) (14.34)



## வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள பான்சி கடைக்கு முன் அனுபவமுடைய நகருக்கு அண்மையில் வசிக்கும் பெண் வேலையாள் தேவை. பயிலுநரும் தொடர்பு கொள்ளலாம். (திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 9793300

(18609)(6-8)


## வினாடி வினாப் போட்டி

தென்மராட்சி, மே 27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான உடற்கல்வி வினாடி வினாப் போட்டி நடத்தப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ள வினாடி வினாப் போட்டியில் பங்குபற்ற பாடசாலைகளிலிருந்து தலா நான்கு மாணவர்கள் வீதம் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

(ம-9)

## சேதமுற்ற வீதி

யாழ்ப்பாணம், மே 27

கே.கே.எஸ். வீதியில் யாழ்.பிரதம தபாலகத்துக்கு முன்பாக உள்ள சுற்றுவட்டப் பகுதி பெரும் சேதமுற்றுக் காணப்படுகிறது.

இந்தப் பகுதி சேதமடைந்துள்ளதால் குறித்த வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் விபத்துக்கள் ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

இந்த விடயம் குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-17)


## தேவை

Media Rep ஒருவருக்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் நல்ல வசதிகளுடன் கூடிய Room ஒன்று தேவை.

தொடர்பு: 075 0442 099 (18603) (45.6.7)



## German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
அடுத்த வகுப்புகள் 29.05.2012இல் ஆரம்பம்.
A1 Certificate ற்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
10, Palaly Road, Jaffna.
T.P. 0771604823 (18611) (14.34)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
05 ★ 09 ★ 1960

நிறைவு
30 ★ 04 ★ 2012

கடந்த (30.04.2012) திங்கட்கிழமையன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி. சத்தியதேவி தர்மராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.05.2012) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 30.05.2012 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நிகழவுள்ளன. இந்நிகழ்வுகளில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"திலக வாசா"
கந்தசுவாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

த.தர்மராஜா (கணவர்),
பிள்ளைகள், உறவினர்கள்.

(18610)(14-34)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **வேலுப்பிள்ளை துரைராசன்**

(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்)



தோற்றம்
08
04
1946

மறைவு
27
04
2012

கடந்த (27.04.2012) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை துரைராசன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.05.2012)முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் சடங்கில் பங்கு கொண்டோர்க்கும் அவரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சங்கம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(C/385)

குடும்பத்தினர்.


## VACANCY

**SALES PROMOTORS / ORGANISERS FOR NUTRITIONAL SUPPLEMENT**

AREA OF WORK - NORTHERN PROVINCE
MOTOR BIKE LICENCE / ABILITY TO DRIVE
APPLY WITH FULL DETAILED C.V.

**VISVAKARMA (PVT) LTD**

ASIAN CHEMICAL & FOOD (PVT) LTD.
28, MAARI AMMAN LANE,
THIRUNELVELY SOUTH, JAFFNA.
Tel : 021 222 6781 / EMail : mahadevasivam@slt.lk.
Chemfood@slt.lk. Fax - 011 - 2441915 (18618) (14.34)



## விற்பனைப் பிரதிநிதி தேவை

TVS Automotives (Pvt) LTD,
UNITED MOTORS Lanka PLC
கம்பனியின் MAK LUBRICANS
ஒயிலை யாழ்ப்பாணத்தில்
விநியோகிப்பதற்கு விற்பனைப்
பிரதிநிதி தேவை.
ஆங்கிலம், சிங்களம் ஓரளவு
பேசத் தெரிந்தவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 7311 683
011 4734549
(18582) (45.6.7)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண் மகிழ
25
7
1938

கண் நெகிழ
7
6
2011

அமரர்

### அருணாசலம் கந்தையா

(புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோயில் தர்மகர்த்தா - புங்குடுதீவு - 07)

திதி - ஸப்தமி 27.05.2012

இமைகள் மூடி திறப்பதற்குள்
வருடங்கள் ஒன்றாகின - அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்...

5/1, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (18619)(14-34)

குடும்பத்தினர்.


## விற்பனைக்குண்டு

நிறுவன பாவனையிலிருந்த LI xxxx
தொடர் இலக்கமுடைய இரண்டு (2)
TA TA ரிப்பர் வாகனங்கள் உடனடி
விற்பனைக்குண்டு. வார நாள்களில்
காலை 9 மணி முதல் மாலை 4
மணிவரை நேரில் வந்து
பார்வையிடலாம்.
தொடர்பு: KMAS ENGINEERING
C/o. Logesh Sheet Factory
No. 06, Vanniyasingam veethy,
Inuvil South, Inuvil.
T.P. 077 8[illegible] 077 60 12986
(18602) (45.6.7)


## மரண அறிவித்தல்



### பொன்னையா சோதிலிங்கம்

இல. 462, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சோதிலிங்கம் 24.05.2012 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், கமலாதேவி, துரைசிங்கம், சரோஜினிதேவி, இரத்தினசிங்கம், கைலநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசரத்தினம், கமலாதேவி, வல்லிபுரம், ஜமுனா ஆகியோரின் மாமனும், சுபாஜினி, சுரேசன், ராஜினி, பிரதாபன், துஷ்யந்தன், துஷ்யந்தி, ரஜீவன், வேணுஜா, தேனுகா, ருத்தியா, ரிசானா ஆகியோரின் பேரனும் கெசான், மகிஸ்கர், ஹரீஸ், சனுஜ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (28.05.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

462, கே.கே.எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

(18615)(14-34)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினருக்கு இல்லாத உரிமைகள் பெரும்பான்மையினருக்கும் தேவையில்லை

## பொன்சேகா புதிதாக அதிரடி



யாழ்ப்பாணம், மே 27

அரசைப் போன்று எதிர் கட்சிகள் செயற்படுமாயின் நான் தனிக் கட்சி ஆரம்பித்தே செயற்படுவேன். மோசடியுள்ள இந்த அரசைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும். சிறுபான்மையின மக்களுக்கு இல்லாத உரிமைகள் - சலுகைகள் பெரும்பான்மையினத்தவர்களுக்கும் இருக்க முடியாது. மேலும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரைச் சர்வதேச மனித உரிமை விதிமுறைகளுக்கு அமைவாகவே முன்னெடுத்தேன்.

இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளர். ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த நேர் காணலில் பொன்சேகா மேலும் தெரிவித்தமை வருமாறு:

நான் அரசியலுக்கு வருவதானால் புதிய கட்சியொன்றைத் தொடங்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் அவ்வாறே செயற்பட்டேன். இந்த அரசு மோசடிநிறைந்தது. எனவே மோசடியற்ற அரசியல் பலத்துடன் இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். மோசடியற்ற அரசியல் பலத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சியினர் அனைவரும் விரும்புவார்களாயின், அவர்களுடன் இணைந்து அரசியல் நடத்த நான் தயார்.

தலைமைத்துவத்தை யார் பெற வேண்டும்? பிரதமர் பதவியை யார் வகிக்க வேண்டும்? யார் ஜனாதிபதியாக வேண்டும் என்ற கேள்விகள் இதன்போது தேவைப்படமாட்டாது. இவ்வாறான பிரச்சினைகளில் தொங்கிக் கொண்டு உள்ளகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்காது செயற்பட எதிர்க்கட்சிகள் இணங்குமாயின், அவர்களுடன் இணைந்து அரசியல் பயணம் செல்ல நான் தயார்.

அதற்கு அவர்கள் தயாரில்லை என்றால் நான் தனியாகச் செல்வேன். அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் வேறுபாடொன்று காணப்படவில்லையாயின் நான் எதிர்க் கட்சியுடன் இணைவதில் அர்த்தம் இல்லை. அப்படியானால், நான் இந்த அரசுடனேயே இருந்திருப்பேன்.

எனக்கு இந்த அரசில் சலுகைகள் கிடைத்தன. உதவிகள் இருந்தன. எதுவும் கிடைக்கவில்லை என்று கூற முடியாது. அதனால், எதிர்க் கட்சியினர் என்னுடைய அரசியல் கொள்கையுடன் பயணிக்க விருப்பம் தெரிவிப்பார்களாயின் நான் அவர்களுடன் பயணிப்பேன். கட்சித் தலைவர் யார் என்பது தொடர்பில் எனக்குப் பிரச்சினை இல்லை.

தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட நாட்டிலுள்ள சிறுபான்மையின மக்களுக்கு இந்த நாட்டில் சமனான உரிமைகளுடனும் சமனான சக்தியுடனும் வாழும் உரிமை உள்ளது. சிறுபான்மையினருக்கு இல்லாத சலுகைகள் - உரிமைகள் பெரும்பான்மையினருக்கு இருக்கவே முடியாது. முதலில் இந்த நாட்டில் ஐக்கியம் ஏற்பட வேண்டும். அதிலும் உண்மையானதொரு ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கிடையில் சிறந்தவொரு புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். அரசியல்வாதிகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஏற்படுவதில் பயனில்லை.

மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். உண்மையாக அதனை முன்னெடுப்பதாயின் அதற்கு நீண்ட காலம் செல்லும். போரை முடிவுக்கு கொண்டுவர 30 வருடங்கள் சென்றது போல நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் சில காலம் செல்லும். பொறுமையாக அதைச் செய்ய வேண்டும். அவ்வாறானதொரு நிலைமைக்கு வந்த பின்னரே கொடுக்கப்பட வேண்டிய அரசியல் தீர்வைக் கொடுக்க வேண்டும். மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படாவிட்டால் கொடுக்கப்படும் தீர்வில் பயனில்லை.

இதனை நாட்டிலுள்ள அனைவரும் புரிந்துகொண்டு பேச்சு நடத்தி மிகவும் பொறுப்புணர்வுடன் எதிர்காலம் தொடர்பில் கவனத்திற் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அவசரத்துக்காக சில முடிவுகளை எடுத்து, நாடாளுமன்றத்தில் கத்திக் கூச்சலிட்டு அரசியலமைப்பை மாற்றுவதன் மூலம் உண்மையான பிரதிபலன் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே அரசியல் தீர்வு குறித்தும் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்தும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

மேலும், போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நான் எப்பொழுதும் ஒரே கொள்கையிலேயே உள்ளேன். மனித உரிமை மீறல்கள் இடம்பெறாத வகையிலேயே நான் போரை முன்னெடுத்தேன். தரையில் நடந்த போரை திட்டமிட்டவன் நான். முன்னெடுத்தவன் நான். நான் அதை முறையாக சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக மனித உரிமை மீறல்கள் இடம்பெறாத வகையில் முக்கியமாக அங்கிருந்த இரண்டரை இலட்சம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே முன்னெடுத்தேன் - என்றார். (உ-10-5)

# தெஹிவளையில் மசூதி மீது காடையர்கள் தாக்குதல்

கொழும்பு,மே 27

தெஹிவளை மிருகக் காட்சி சாலை கல்விஹார பிளேஸில் அமைந்திருக்கும் தாருர் ரஹ்மான் குர்ஆன் மசூதியின் செயற்பாடுகளை எதிர்த்து நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் மசூதியை அங்கிருந்து அகற்றுமாறு கோஷமிட்டதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர். அந்த இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் மசூதிப் பகுதியில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐம்பது தொடக்கம் நூறு பேர் வரை கலந்துகொண்டனர். மேலும் இதில் கலந்து கொண்ட பொதுமக்கள் இந்தப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றும், வேறு இடங்களில் இருந்து அழைத்து வரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் பி.ப. 2:30 மணியளவில் ஓட்டோக்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் மசூதி மீது கற்களை வீசிவிட்டுச் சென்றிருந்ததுடன் பின்னர் பிற்பகல் 4 மணியளவில் கல்விஹாரவில் இருந்து பிக்குமார் மற்றும் பொதுமக்களைக் கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று புறப்பட்டு மசூதியைத் தாண்டி மிருகக்காட்சி வீதி சந்திக்கு வந்து சேர்ந்தது.

குறித்த இடம் மாடுகளை அறுக்கும் மடுவமாக பாவிக்கப்படுவதாகவும் அதை மூட வேண்டும் என்பதும் முக்கியமான கோசமாக ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது.

ஜாமியுஸ் ஷபாப் நிறுவனத்தின் காணியில் அமைந்திருக்கும் மேற்படி பள்ளிவாசல் மற்றும் குர்ஆன் மத்ரசா முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், பதினைந்து வருடங்களாக இந்த இடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பதற்றத்தை அடுத்து இந்த விடயத்தை ஆராயவென தெஹிவளை பொலிஸாரால் நேற்று தெஹிவளை, கல்கிஸை மாநகர சபை கட்டடத்தில் பிற்பகல் 03.00 மணிக்குப் பள்ளிவாசல் நிர்வாகிகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களையும் கலந்துகொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது. (த)

# வழங்கப்பட்ட சுதந்திரத்தை வீணடிக்கிறார் பொன்சேகா

## இப்படிச் சொல்கிறார் கெஹலிய

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொடுத்த மன்னிப்பில் விடுதலையாகி வெளியே வந்த சரத் பொன்சேகா தனக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் எனத் தெரிவித்தார். ''வடபகுதியின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையிடுவதாக உதயன் பத்திரிகைக்கு கூறியிருக்கும் கருத்தானது, இலங்கையில் வெளிநாடுகளின் தலையீடுகளை அவர் வலியுறுத்துவதையே காட்டுகிறது'' என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல கூறினார்.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற விபத்தில் காயம் அடைந்து பின்னர் அங்கு 4 மாத காலம் சிகிச்சை பெற்று நாடு திரும்பியுள்ள அமைச்சர், கொழும்பில் உள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அப்போது, சரத் பொன்சேகா பற்றி ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, ''ஜனாதிபதி அளித்த பொது மன்னிப்பின் மூலம் சுதந்திரமாக வெளியில் நடமாடிக் கொண்டிருக்கும் சரத் பொன்சேகா தன்னுடைய உண்மை நிலைப்பாட்டை மறந்துவிட்டு- ஜனாதிபதி அளித்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய முயற்சி செய்கிறார்.'' என்றார்.

உள்ளூர் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்துவதற்கு சரத் பொன்சேகா வெளிநாட்டில் உள்ளவர்களை தலையிடுமாறு அழைத்தது தவறான செயல் என்றும் இப்போது அவர் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் கைப்பாவையாக மாறிவிட்டாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு எதிராக எடுக்கப்பட்ட முடிவு ஒரு தோல்வி அல்ல என்றும்- ராஜதந்திர மட்டத்தில் இவ்வாறு தோல்விகள்- வெற்றிகள் மாறி மாறி வரும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-5)


## பழனி வெங்கடேசனின் திருமுறை ஓதல்



இந்தியாவின் புகழ்பூத்தவரும், பொதிகை டி.வி. புகழ் மற்றும் பழனி ஆஸ்தான ஓதுவாராகவும் உள்ள பழனி வெங்கடேசன் அவர்கள் காரைநகர், பாலாவோடை முத்துமாரியம்மன் ஆலய 2ஆம் திருவிழாவான இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கும் மாலை 7 மணிக்கும் விசேட பண்ணிசை ஓதல் நிகழ்வு இடம்பெறும் என்பதனை அம்பிகை அடியவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உபயகாரர்கள்.

(18614)(14.34)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP XB xxxx கறுப்பு நிற 150 Pulsar விற்பனைக்குண்டு.

T.P : 077 6660232 (கிருஸ்ணா)

(18608)(8-8)

## வாகனம் வாடகைக்கு

NP PP xxxx ... Body Isuzu வாகனம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777 361215, 0779189464

(18605) (14.34)


# மரண அறிவித்தல்கள்

## ரவீஸ்வரன் சுதாசினி



நீர்வேலி வடக்கைப் பிறப்பிமாகவும், கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரவீஸ்வரன் சுதாசினி நேற்று (26.05.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கலாநிதி புவனேந்திரன் (ஆசிரியர், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் சாரண ஆணையாளர்)- கண்மலர் (முன்னாள் ஆசிரியர் அத்தியார் இந்துக் கல்லூரி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் தங்கம்மாவின் மருமகளும், ரவீஸ்வரனின் அன்பு மனைவியும், றம்மியசிறியின் அன்புத் தாயும், மலர்மகள் (உள்ளூராட்சித் திணைக்களம்), காண்டீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோஜனா, சுதேஸ்வரி, துரேஷ்வரி, விக்கினேஸ்வரன், தயாபரன் (உதவி அதிபர், பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும், லக்ஷியாவின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கைதடி தெற்கு ஊரியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கைதடி தெற்கு, கைதடி.
வே.ரவீஸ்வரன் (கணவன்).

## அந்தோனிப்பிள்ளை சிங்கராயர்



மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சிங்கராயர் நேற்று (26.05.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை- திரேசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், தேவசகாயம்பிள்ளை-மதிலேனம் தம்பதியரின் மருமகனும், மேரி யோசப்பின் (பூரணம்) அன்புக் கணவரும், லோறன்ஸ் அன்ரனிஸ் (திரவியம்), பற்றிக் குணசிங்கம் (குணம், மன்னார்), இராஜபூபதி (ராஜேஷ்), இரத்தினசிங்கம் (சிங்கம், ஆனைக்கோட்டை), பரிமளாறஞ்சினி (றஞ்சி), றஞ்சிதமலர் (புனிதம்) ஆகியோரின் தந்தையும், பிலோமினம்மா (குணமணி), காலஞ்சென்ற பிலிப் விஜயா மற்றும் கெங்கைகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும், அன்ரன் குணரத்தினம், அலோஜினி, காலஞ்சென்றவர்களான அன்ரனிற்றா, கலிஸ்ரா மற்றும் சுமிதா (NAITA STUDENT), மதுஷன் (பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), மிதுன் (சென். பீற்றேஸ்), சபிதா (கியூ மெடிக்கா), பரிமளா-நிறோஜினி, சுஜித்தா, உதயசீலன், சுரேக்கா, சுவர்ணா அஞ்சலாதேவி, தேவராஜ் ராஜா, சிவகுமார் ஆகியோரின் அருமைப் பேரனும், யதுஷன், யதுசிகா, யதுசிகன், காட்சிகன், மிதுனன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனைகள் இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்துக்காக நவாலி கொத்துக்கட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
சிங்கம் (மகன்).

(18620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநகர் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் வ. ஞானசோதி பயனாளி ஒருவருக்கு நுளம்பு வலை வழங்குகிறார். (ம-51)



நல்லூர் பிரதேச சபையால் தென்னம்பிள்ளை மற்றும் பயன்தரு மரங்கள் கோண்டாவில் மேற்கு மக்கள் முன்னேற்றக்கழகத்தின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கும் செயல்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் மக்கள் முன்னேற்ற கழகத்தலைவர் சதா நிமலனிடம் மரக்கன்றுகள் கையளிக்கின்றார். பயனாளிகளும் பிரதேச சபை உறுப்பினர்களும் மற்றும் கழக உறுப்பினர்களும் அருகில் உள்ளனர்.




இலங்கை வங்கி காரைநகர் கிளையினால் சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்கும் திட்டத்தில் வாடிக்கையாளர் ஜே. ஆனைமுகனுக்கு வங்கி முகாமையாளர் இ.சிவகுமாரன் உழவு இயந்திரம் ஒன்றைக் கையளித்தார். இதன் போது வங்கி ஊழியர்களும் கலந்து கொண்டனர். (ம-250)



யாழ். மாவட்டத்தின் புதிய அரச அதிபராக பதவியேற்றுக் கொண்ட சுந்தரம் அருமைநாயகம் மாவட்ட செயலகத்துக்கு அழைத்து வரப்படுகிறார். (ம-5)



வடமராட்சி கிழக்கு உடுத்துறை உலர் மீன் பதனிடும் குழுவுக்கு பாசிக் நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள பதனிடும் நிலையத்துக்கான அடிக்கல்லை பாசிக் நிறுவன திட்ட இணைப்பாளர் செல்வி மிற்சுகோ நட்டு வைத்தார். நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் மற்றும் திட்டப் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ம-8)



கடந்தாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்அதிக புள்ளிகளைப் பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சுன்னாகம் மக்கள் வங்கியால் கௌரவிக்கப்பட்டனர். (ம 86)



உடுப்பிட்டி கலைமகள் சர்வதேச பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் இளைப்பாறிய மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் செ. சோமசுந்தரம், முன்பள்ளி ஆசிரியை திருமதி பாமினி [illegible] (ம-8)



[illegible] தமிழ்தின வடமோடி நாட்டுக் கூத்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலிருந்து பங்கு கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும். (ம-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவருக்கான உதைபந்தாட்ட பயிற்சி முதல் முறையாக யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்டத்தில் சிறுவர்களுக்கிடையே உதைபந்தாட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக சிறுவர்களுக்கான ஆரம்ப கட்டப் பயிற்சி முகாம் ஒன்று முதல் முறையாக யாழ்.மாவட்த்தில் இடம்பெறவுள்ளது.

இதற்க்காக சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனப் பயிற்றுவிப்பாளர் எஸ். சுப்பிரமணியம் சிங்கப்பூரில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தருகிறார்.

பயிற்சி முகாம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் யூன் மாதம் 2 ஆம் திகதிவரை சென்.ஜோன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜெ.ஞானப்பொன்ராஜா தலைமையில் அதிபரின் அலுவலகத்தில் இடம் பெற்றது.இதன்போது யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளையும் உடன் இருந்தார்.

இந்தப் பயிற்சி முகாம் தொடர்பாக சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானபொன்ராஜா கூறகையில் இந்தப் பயிற்சி முகாமானது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ். உதைபந்தாட்ட லீக் இந்தப் பயிற்சி முகாமினை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தப் பயிற்சியின் போது தரம் 2 முதல் தரம் 7 ஆம் வகுப்பு வரையான மாணவர்கள் பங்கு கொள்ளவுள்ளனர். அத்துடன் பாடசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட பயிற்றுவிப்பாளருக்கும் பயிற்சிகள் வளங்கப்படவுள்ளன. இதற்காக நாங்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலய அலுவலகங்களில் இருந்து 40 பாடசாலைகளை இனங்கண்டு இந்தப் பாடசாலைகளில் இருந்து விளையாட்டுப் பயிற்றுனர்களும் இதில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளோம். இதில் ஆண்,பெண் மாணவர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

மூன்று நாள்கள் இடம் பெறும் பயிற்சி முகாமில் சிறுவர்களுக்கான பயிற்சிகள் மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரையும் பயிற்றுனருக்கான பயிற்சி காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது என்றார்.

**யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலய அலுவலகங்களில் இருந்து 40 பாடசாலைகளை இனங்கண்டு இந்தப் பாடசாலைகளில் இருந்து விளையாட்டுப் பயிற்றுனர்களுக்கும் இதில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளோம்.**

அவர் மேலும் கூறுகையில், இந்தப் பயிற்சி முகாமில் பங்கு கொள்ள விரும்பும் ஏனைய பயிற்றுவிப்பாளர்கள், உதைபந்தாட்ட வீரர்கள் பழை பூங்கா வீதி பக்கம் அமைந்துள்ள நுழைவாயில் ஊடாக சென்று தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து பார்வையிடலாம் என்று அவர் தெரிவித்தார். (த-23)



யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்திய யாழ்ப்பாண வெற்றிக்கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றிப் போட்டியில் பொலிஸ் கூடைப்பந்தாட்ட அணி இராணுவ கூடைப்பந்தாட்ட அணிக்குமிடையிலான ஆட்டத்தின் போது... (23)

## முதல் சுற்றில் யாழ். மாவட்ட அணி வெற்றி

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முதல் சுற்றில் வெற்றி பெற்றது.

கேகாலை இராஜசிங்கன் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான போட்டியில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் இரத்தினபுரி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் யாழ். மாவட் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி 2:0 என்ற நேர்சுற்றுக்களில் இரத்தினபுரிய தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வீழ்த்தியது.(86)

## வென்றது ஏஞ்சல்

வலி.வடக்கு,மே 27

யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் காட்சி ஆட்டமாக நடத்திய 13 வயதுப் பிரிவு மாணவர்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாயில் இயங்கும் ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை வெற்றி பெற்றது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய இறுதிப் போட்டியின்போது சிறுவர்களின் கூடைபந்தாட்ட காட்சி ஆட்டம் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும், ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

போட்டியின் போது ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அணி முதல் பாதியாட்டத்தில் 6:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இரண்டாம் பாதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தனது எதிர்ப்பைக் காட்டிய போதிலும் ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அணி தனது ஆற்றலை வெளிப்படுத்தி மீண்டும் 8:4 என்ற புள்ளிகள் என்ற நிலையில் ஆட்ட முடிவடைந்தது.

ஆட்டம் நிறைவில் ஏஞ்சல் சர்வதேச ஆங்கிலப் பாடசாலை அணி 14:4 புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் அணியை வெற்றிபெற்றது. (த-86)

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 27

குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் டாக்டர் பொ.மகாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் (வெள்ளை) விளையாட்டுக்கழக அணியை யாழ். பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. பிரதம விருந்தினராக உடுவில் வலி. தெற்கு பிரதேச செயலர் நந்தகோபாலன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி நிஷாந்த, புன்னாலைக்கட்டுவன் இராணுவப் பொறுப்பதிகாரி லுசிதன் சிசிர குமார, யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ந.நவரத்தினராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக குப்பிளான் வடக்கு ஜே /211 கிராம சேவகர் செ.ஞானசபேசன், குப்பிளான் தெற்கு ஜே/210 கிராம சேவகர் சோ.பரமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-23)

**குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.**

## சென். நீக்கிலஸ் அணி வெற்றி

பண்டத்தரிப்பு, மே 27

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படுகின்ற உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பமாகியது. உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தச் சுற்றுத் தொடரின் முதல் போட்டியில் ஆனைக் கோட்டை யூனியன் அணியும் நாவந்துறை சென்.நீக்கிலஸ் அணியும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியின் முதல் பாதி முற்றுமுழுதாக சென் நீக்கிலஸ் அணியினர் வசமே இருந்தது. சென் நீக்கிலஸ் அணி வீரர்களான அஜித் மற்றும் அமிலன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அதிரடியாக அடிக்க முதல் பாதி முடிவில் சென் நீக்கிலஸ் அணி 2 : 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாம் பாதிக்கான ஆட்டம் ஆரம்பமானபோது ஆனைக் கோட்டை யூனியன் அணி வீரர் கோடிஸ் பதிலடியாக ஒரு கோலினை அடிக்க ஆட்டம் சூடு பிடிக்க தொடங்கியது. பின்னர் இரு அணி வீரர்களும் கோல்களை பெற எடுத்த முயற்சிகள் கை கூடாமல் போகவே நாவாந்துறை சென் நீக்கிலஸ் அணி 2:1 என்ற கணக்கில் ஆனைக் கோட்டை யூனியனை வீழ்த்தியது.

சுற்றுத் தொடரின் இரண்டாவது போட்டியில் உரும்பிராய் சென் மைக்கல்ஸ் அணியை எதிர்த்து விளையாட நாவாந்துறை சென் மேரிஸ் அணி களமிறங்கியது. இரு அணி வீரர்களும் கோல்களைப் பெறவேண்டும் என்று துடிப்புடன் விளையாடிய போதும் முழு நேர ஆட்டத்திலும் இரு அணிகளாலும் எவ்வித கோல்களையும் அடிக்க முடிவில்லை. எனவே ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி நிறைவு பெற்றது. (130)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 27

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனாள்ட் கணேஸ்குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் சென்றலைஸ் (சொக்ஸ்) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (த-23)

* * *

கைதடி,மே 24

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி,யாழ்ப்பாணம் மக்கள் வங்கி,யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துப் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-288)

* * *

வலி. வடக்கு, மே 27

யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் யாழ்ப்பாணம் பிறீமியர் லீக்கின் 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்கள் இன்றைய தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள முன்னணி விளையாட்டுக் கழகங்கள் எட்டு அழைக்கப்பட்ட கழகங்களாக்க் கலந்து கொள்கின்ற போதிலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிரிக்கெட் அணி இந்தத் தொடரில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

**காலை 9 மணி**

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்

**பிற்பகல் 1.30 மணி**

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழகம். (த-86)

## மூன்றாமிடம்



வேலணை கிழக்கு மகா வித்தியாலய மாணவி ரவிச்சந்திரன் கனுஷியா நீளம் பாய்தல் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 11 வயதுகுட்பட்ட பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார் ரவீச்சந்திரன் கனுஷியா. இவர் வேலணை கிழக்கு மகாவித்தியாலய மாணவியாவார். (7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீண்டது மேற்கிந்தியத்தீவுகள்




இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. முதல்நாள் ஆட்டத்தின் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பலமான நிலையில் காணப்பட்டது

ட்ரென்ட் பிரிட்ஜ்ஜில் இடம்பெற்று வரும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அந்த அணி சார்பாக வழமையைப் போன்று முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் இந்த இன்னிங்ஸிலும் ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தனர். முதலாவது இலக்கு 6 ஓட்டங்களுக்கும் இரண்டாவது இலக்கு 26 ஓட்டங்களுக்கும் மூன்றாவது இலக்கு 42 ஓட்டங்களுக்கும் 4 ஆவது இலக்கு 63 ஓட்டங்களுக்கும் வீழ்ந்தது.

ஐந்தாவது இலக்குக்காக இணை சேர்ந்த சந்தர்போல், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் நிதானமாக ஆடி 62 ஓட்டங்களைக் பகிர்ந்தனர்.

எனினும் அணி 125 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சந்தர்போல் ஆட்டமிழந்ததும் களமிறங்கிய இலக்குக் காப்பாளர் டினேஷ் ராம்டின் ஓட்டங்களைப் பெறத் தவற, அந்த அணி 6 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

எனினும் அதன் பின்னர் இணைசேர்ந்த மார்லன் சாமுவேல்ஸ், டரன் சமி இருவரும் மிகச்சிறப்பாக ஆடி மேற்கிந்தியத் தீவுகள் அணியைக் காப்பாற்றினர். டரன் சமி அதிரடியாக ஆட, மார்லன் சாமுவேல்ஸ் பொறுப்பாகவும், நிதானமாகவும் ஆடினார்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தைப் பெற்ற மார்லன் சாமுவேல்ஸ் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களையும், அணித்தலைவர் டரன் சமி 121 பந்துகளில் 88 ஓட்டங்களையும் சந்தர்போல் 46 ஓட்டங்களையும், கெரன் பவல் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்ருவேர்ட் புரோட் இருவரும் தலா இரண்டு இலக்குகளையும் ரிம் பிரெஸ்னன், கிரேம் ஸ்வான் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஆரம்பத்தில் சிறப்பாகப் பந்துவீசியிருந்த இங்கிலாந்து அணி 7 ஆவது இலக்குக்காக மார்லன் சாமுவல்ஸ், டரன் சமி இருவரும் சிறப்பாக ஆடியபோது போதுமான வாய்ப்புக்களை ஏற்படுத்தத் தவறியிருந்தது.

3 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று தொடரை 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஹர்பஜனுக்கு மொடல் அழகி மீது காதல்?



கீதா பஸ்ரா

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரும், மும்பை இந்தியன்ஸ் அணியின் அணித்தலைவருமான ஹர்பஜன் சிங், மொடல் அழகி கீதா பஸ்ராவுடன் நெருங்கிப் பழகி வந்ததாக சில நாள்களாக தகவல்கள் வெளியாயின.

இதனால் இருவரும் காதலிப்பதாக ஊடகங்களில் கிசுகிசுக்களில் வெளி வந்த நிலையில் இருவரும் செப்ரெம்பர் மாதம் திருமணம் செய்து கொள்ளவிருக்கிறார்கள் என்றும் தகவல் கசிந்துள்ளது. இருவரின் குடும்பத்தினரும் திருமணத்திற்கான ஏற்பாடுகளில் இறங்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதில் இருவருக்கும் இங்கிலாந்தில் நிச்சயம் செய்யப்பட்டதாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது. யார்க்ஷயரில் உள்ள கீதா பஸ்ராவின் இல்லத்தில் இந்த திருமண நிச்சயம் நடைபெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது கோலாகலத் திருமணமாக இருக்கும் என்றும் பொலிவுட் நட்சத்திரங்கள், கிரிக்கெட் வீரர்கள், அரசியல் தலைவர்கள் வருகை என்று திருமணம் சிறப்பாக அமையும் எனவும் தற்போதே கீதா பஸ்ரா அதற்கு தயாராகி வருவதாகவும் கூறப்படுகிறது. (5)

## சென்னை – மும்பை ஆட்டத்தில் சூதாட்டம்

ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் இடையேயான தகுதி நீக்கச் சுற்றின் போது, சுமார் 60 கோடி ரூபாய் (இந்திய மதிப்பில்) அளவுக்கு சூதாட்டம் நடைபெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

ஒவ்வொரு பந்தும் வீசப்பட்ட போதும், அது சிக்ஸரா, பவுண்டரியா அல்லது உதிரி ஓட்டங்களா அல்லது இலக்கு வீழ்ச்சியா என்று அதன் மீது பணம் கட்டப்பட்டு, சிங்கப்பூர், சார்ஜா மற்றும் இந்தியாவின் அனைத்து முக்கிய நகரங்களிலிருந்தும் 113 தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளது.

கடைசி இரண்டு இன்னிங்ஸ்களுக்கு முந்தைய இன்னிங்ஸ்கள் முடியும் வரை, சூதாட்டத்தை நடத்தும் புக்கிகள் ஒவ்வொரு மணி நேரத்திற்கும், சுமார் 38 லட்சம் ரூபாய் அளவுக்கு 'பெட்' கட்டியுள்ளனர்.

இந்தச் சூதாட்டம் டெல்லியின் வடமேற்கு பகுதியில் உள்ள ஒரு மிகச்சிறிய அறையில்தான் நடந்தேறியுள்ளது.

அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து வரும் சத்தங்கள் எதுவும் உள்ளே கேட்காதவாறு, இதற்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட அறையில், பிரத்தியேக தொலைபேசி என்பவற்றை நிர்மாணித்து, இரண்டு இளைஞர்கள் இந்த சூதாட்டத்தை அரங்கேற்றியுள்ளனர்.

இந்த இளைஞர்கள் ஒவ்வொரு தொலைபேசி அழைப்புக்கும், சூதாட்டக்காரர் (புக்கி)களிடமிருந்து 4,000 ரூபாய் கட்டணமாக வசூலித்துள்ளனர். இவ்வாறு ஒரு அறையில் சூதாட்டம் நடப்பதாக, டெல்லி பொலிஸார் மோப்பம் பிடித்து அங்கு வருவதற்குள், ஆட்டம் ஏறக்குறைய முடியும் தறுவாய்க்கு வந்துவிட்டிருந்தது.

அந்த அறை அமைப்பை பார்த்து நாங்கள் வியந்து போனோம் என்று தெரிவித்த டெல்லி பொலிஸ் ஆணையாளர் அஷோக் சந்த், அங்கிருந்த 113 கைபேசிகளும், 100 க்கும் அதிகமான 'ஹெயார் போன்களும்' கைப்பற்றப்பட்டதாக தெரிவித்தார்.




அமித் என்ற இளைஞன் மட்டும் பிடிபட்டுள்ளான் இன்னொரு நபர் பொலிஸாரை கண்டு தப்பியோடிவிட்டதாக தெரிவித்தார். அன்று இரவு வேறு ஒரு இடத்திலும் ஷியாம் அரோரா, தீபக் என்ற இரு இளைஞர்களை கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்தும் மடிக்கணினி, 2 தொலைக்காட்சி பெட்டி மற்றும் 118 கைபேசிகளையும் கைப்பற்றியுள்ளனர். (5)

விமர்சித்தவரை விமர்சித்தவருக்கு அபராதம்

## ஆச்சரியமாக இருக்கிறது

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தனது ''டுவிட்டர்'' பக்கத்தில் தெரிவித்த கருத்திற்காக அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தைத் தருவதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரர் அன்ட்ரூ பிளின்டொப் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கெதிராக இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நேர்முக வர்ணனையாளரான நிக் நைட் மீது விமர்சனங்களை முன்வைத்தமைக்காகவே கெவின் பீற்றர்சனுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

நிக் நைட் எவ்வாறு நேர்முக வர்ணனைக்குள் புகுந்தார் என்றவாறு தெரிவித்த கெவின் பீற்றர்சன், அதை கேலிக்குரியது எனவும் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து விரைந்து செயல்பட்ட இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை கெவின் பீற்றர்சனிடம் விசாரணை நடத்தியதுடன், அவருக்கு வெளியிடப்படாத தொகை அபராதத்தையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

எனினும் இந்த நடவடிக்கை ஆச்சரியம் தெரிவித்ததாகத் தெரிவிக்கும் பிளின்டொப், மற்றவர்களை விமர்சிக்கும் பணிக்காக ஊதியம் பெறும் ஒருவரை (நிக் நைட் - நேர்முக வர்ணனை) விமர்சித்தமைக்காக கெவின் பீற்றர்சனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதை அதிசயமானது எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தான் விளையாடும் காலத்தில் தான் ''டுவிட்டர்'' இருந்ததில்லை எனவும், அவ்வாறு இருந்திருந்தால் ஒவ்வொரு நாளும் தனக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## பார்சிலோனா கிண்ணத்தை வென்றது

கோபா டெல்ரே கால்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் 3-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி, அத்லெடிகோ பில்போ அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.

முதல் பாதி ஆட்டத்தில் பார்சிலோனா அணி ஆதிக்கம் செலுத்தி 3 கோல்களை அடித்தது. பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வேறு கோல்கள் அடிக்கவில்லை. இதனையடுத்து பார்சிலோனா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## நீண்டகாலம் விளையாடமாட்டேன்



நீண்ட காலம் கிரிக்கெட் தொடர்களில் நான் விளையாடமாட்டேன். குறிப்பாக 30 வயதுகளின் இறுதிப் பகுதி வரை நான் ஆட்டங்களில் பங்கேற்கமாட்டேன் என்று, ஆஸ்திரேலிய அணியின் தற்போதைய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

தற்போது 31 வயதாகும் மைக்கல் கிளார்க், தான் 38, 39, 40 வயது வரை கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்றப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் அண்மைக்காலத் தலைவர்களில் ஸ்டீவ் வோ 38 வயது வரையும், ரிக்கி பொண்டிங் அணித்தலைமையைக் கைவிட்டு தற்போது 37 வயதிலும் ஆட்டங்களில் பங்குபற்றி வருகிறார். ஆனால் அவர்களைப் போல் அதிகமான ஆண்டுகள் தான் விளையாடப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் ஆட்டங்களில் தற்போது விளையாடி வருவதைத் தான் மகிழ்ச்சிகரமானதாகக் கருதுவதாகத் தெரிவித்துள்ள மைக்கல் கிளார்க், குறுகிய காலத்தில் அதிக மாற்றங்களை ஏற்படுத்திய பின்னர் ஓய்வுபெற விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மணமுடித்துக் கொண்ட மைக்கல் கிளார்க், தனது கிரிக்கெட் வாழ்க்கையும் மண வாழ்க்கையும் மிகவும் இன்பமாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். தற்போது அணித்தலைவராகப் பதவி வகிக்கும் மைக்கல் கிளார்க், தான் அணித்தலைவராக தனது காலம் முடிந்ததும் ஆட்டங்களிலிருந்தும் ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் இதற்கு முன்னைய அணித்தலைவரான ரிக்கி பொண்டிங் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகியதன் பின்னர் தொடர்ந்தும் ஆஸ்திரேலிய அணி சார்பாக 10 மாதகாலமாக ஆட்டங்களில் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆஸ்திரேலிய அணி சாதிக்க வேண்டியவை தொடர்பாக ஏராளமான இலக்குகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள மைக்கல் கிளார்க், தன்னுடைய காலம் முடிந்ததும் விடைபெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக இந்தப் பருவகாலத்தில் தென்னாபிரிக்காவுக்கெதிரான தொடர் மற்றும் அதன் பின்னர் முதல்நிலை அணியான இங்கிலாந்திற்கெதிரான தொடர் ஆகியன முக்கியமானவை எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகலிப்புக்காக மூடப்படுகிறது வீதி

யாழ்ப்பாணம்,மே 27

யாழ்.பருத்தித்துறை வீதியில் அகலிப்பு வேலைகள் நடைபெற இருப்பதால் யாழ்.முத்திரைச்சந்தியிலிருந்து யாழ்.அரசடி சந்தி வரை நாளை திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வீதி மூடப்பட்டிருக்கும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

நல்லூர் கந்தசாமி ஆலயத்துக்கான குறித்த வீதி மூடப்படுவதால் பாவனையாளர்கள் மாற்று வழிப்பாதைகளாக நாவலர் வீதி, வைமன் வீதி, ஆகிய வீதிகளை பாவனைக்கு உட்படுத்தலாம் எனவும் அறியத்தரப்பட்டுள்ளது. (ம-14-7)

# சுகாதாரச் சீர்கேடுகளுடன் திருநெல்வேலிச் சந்தை

### இனங்கண்டனர் சுகாதாரப் பரிசோதகர்கள்

யாழ்ப்பாணம்,மே 27

*திருநெல்வேலி பொதுச்சந்தை பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களால் இனங்காணப்பட்டுள்ளது. நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழு நேரில் சென்று திருநெல்வேலி சந்தையில் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. இதன் போதே சுகாதார சீர்கேடு விடயம் இனங்காணப்பட்டது. இந்தக் குழு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுமார் 3 மணி நேரம் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.*

இந்தக் குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கையின் போது இனங்காணப்பட்ட விடயங்கள் வருமாறு:-

* சந்தையின் உட்பகுதியில் குப்பைகள், கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படுவதில்லை. அவை அங்கு பரவிக்கிடக்கின்றன.

* கழிவு நீர் தேங்கி நிற்கிறது. கழிவு நீர் திறந்து காணப்படும் குழி மூடப்படாமல் திறந்த நிலையில் காணப்படுகிறது.

* சந்தையில் கூரைகளில் மழை நீர் வடிகால் அமைப்பு சீரின்றி உள்ளது. இதன் காரணமாக கூரைகளிலிருந்து வரும் மழை நீர் ஓர் ஒழுங்கமைப்பு இன்றி தரையில் பரவலாக தேங்கும் நிலை காணப்படுகிறது.

* மண் தரையில் வைத்து மரக்கறி விற்பனை இடம்பெற்று வருகிறது. நடைபாதைகளில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. இதன் காரணமாக நுகர்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர்.

* வெற்றிலை எச்சில் பரவலாக எங்கும் துப்பி காணப்படுகிறது.

* சந்தையில் கட்டட வேலைகள் திருப்திகரமாக இல்லை என நுகர்வோர், வியாபாரிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். பழைய கட்டட சுவரில் மாடிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலுள்ள கட்டடங்களின் உறுதித் தன்மையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பல்வேறு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் கட்டட மூலப் பொருள்களுடன் குப்பைகள் கழிவுகள் காணப்படுகின்றன.

பொதுச்சுகாதாரக் குழுவினரால் இவை இனங்காணப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் நல்லூர் பிரதேச சபைக்கும். யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# பஸ்ஸில் பணம், கைப்பேசிகளை இழந்து தவிக்கும் பயணிகள்

### யாழ்ப்பாணத்தில் 'பிக்பொக்கற்' ஆசாமிகள் கைவரிசை

*யாழ்ப்பாணம்,மே 27*

*யாழ்ப்பாண பஸ் நிலையம், தனியார் பஸ் தரிப்பிடங்கள் மற்றும் இ.போ.ச.பஸ்கள், தனியார் பஸ்களில் தற்போது முடிச்சுமாறிகளின் (பிக்பொக்கற் காரர்களின்) அட்டகாசம் அதிகரித்துள்ளது.*

*குறிப்பாக மினி பஸ்களில் பயணிகள் நெரிசலாக பயணிக்கும் போது 'பிக்பொக்கற்' ஆசாமிகள் தங்களின் வேலையைக் கெட்டித்தனமாகச் செய்து முடித்து விடுகின்றனர். இந்த நடவடிக்கையில் பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.*

*பஸ்களில், அவற்றிலும் மினி பஸ்களில் நெருக்கியடித்து பயணம் செய்யும் வேளைகளில் இந்தத் திருட்டுப்பேர் வழிகள் மற்றும் திருடிகள் மிகவும் இலாவகமாக பர்ஸ், கைத்தொலைபேசி போன்றவற்றை கையாடி விடுகின்றனர். கைகளில் வைத்திருக்கும் கைப்பைகள் மற்றும் பயணப் பொதிகளை வெட்டி பெறுமதிமிக்க பொருள்கள் அல்லது பணத்தைவெருமறியாமல் இவர்கள் எடுத்து விடுகின்றனர்.*

*நேற்றைய தினமும் யாழ்-தெல்லிப்பழை மினி பஸ்ஸில் பெண் பயணி ஒருவர் தமது 'பர்ஸை' இழந்துவிட்டார். ''சனநெரிசலுடன் பயணித்த சமயம் யாழ். நாச்சிமார் கோயிலுக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் குறுகிய தூரப் பயணத்தில் தமது 'பர்ஸ்' கையாடப்பட்டு விட்டது'' என்று அந்தப் பெண் கூறினார். கையில் இருந்த பை (பாக்) வெட்டப்பட்டே இந்தத் திருட்டு இடம்பெற்றதாகக் குறிப்பிட்டார் அந்தப் பெண். (ஒ)*

## பணமோசடி வழக்கு சந்தேக நபருக்கு பிணை

லண்டனுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த யாழ். விநாயகர் வீதியைச் சேர்ந்த சந்தேகநபரை 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதிவழங்கியது.

சந்தேகநபர் கடந்த வருடம் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். கந்தர்மடம் பகுதியில் வெளிநாட்டு முகவர் நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்தபோது அதனூடாக சந்தேகநபர் மோசடி செய்துள்ளார்., மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவரே வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. விசாரணையின் பின்னர் சந்தேகநபர் பிணையில் விடப்பட்டார். வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (10-4)


சவுதி அரேபியா விமான நிலையத்தில்

SAUDI ARABIAN AIRLINES



GROUND SERVICES
உடனடி தொழில் வாய்ப்பு

GENERAL WORKERS - 350 Nos.
பொது வேலையாட்கள் - 350 பேர்

சம்பளம் – SR 690/-

TEC. OPERATOR / DRIVERS - 50 Nos.
தொ.இயக்குனர் /சாரதிகள் - 50 பேர்

சம்பளம் – SR 1609/-

1 SR = Rs. 34/-

Terms & Conditions:

- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்
ரூபா : 80,000/- மட்டுமே அறவிடப்படும்

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்

உடன் தொடர்புகளுக்கு: 0779283535

QP Employment (pvt) Ltd.
இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/05/12


# நெடுந்தீவு அம்புலன்ஸ் படகு சேவை செய்ய முடியாத நிலையில்

யாழ்ப்பாணம், மே 27

நெடுந்தீவுக்கான அம்புலன்ஸ் மோட்டார் படகு கடந்த ஒரு மாதமாகப் பழுதடைந்துள்ளதால் அவசர நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கியூமெடிக்கா நிறுவனம் நெடுந்தீவுக்கு வழங்கிய இந்தப் படகு நோயாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி வந்தது.

இந்த நிலையில் தற்போது இது பழுதடைந்துள்ளதால் நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

அம்புலன்ஸ் சேவையில் இல்லாத சமயங்களில் கடற்படையினர் நோயாளர்களைக் கொண்டு செல்ல உதவி வந்தனர். தற்சமயம் பலத்த காற்றும் கடல் கொந்தளிப்பும் நிலவுவதால் கடற்படையினர் நோயாளிகளுக்கு உதவக் கூடியதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## நிகழ்வுகள் இன்று

**புண்ணிய கிராமவிழா**

இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களமும் கோண்டாவில் வேதபாராயண அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்தும் புண்ணியகிராம விழா காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்க ராஜசர்மா அனந்த லட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன், கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் மா.கோ.காண்டீபன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார், கோண்டாவில் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் இ.நடராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ம-14)

# வடமராட்சி கிழக்கில் மீன் பதனிடும் நிலையம்

### உடுத்துறை கிராமத்தில் அடிக்கல்

யாழ்ப்பாணம்,மே 27

ஜெய்க்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் பாசிக் நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு உடுத்துறைக் கிராமத்தில் மீன் பதனிடுதல் நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

பாசிக் நிறுவனத்தால் கடற்றொழில் கிராம மக்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தில் வடமராட்சி கிழக்கு உடுத்துறைக் கிராம உலர்மீன் பதனிடும் குழுவுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடியதாக இந்த நிலையம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் முற்பகுதியில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உரிய பயிற்சிகளும் அவசியமான உபகரணங்களும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உலர் மீன்கள் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவதால் உயர்ந்த தரத்தைக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலான தென்னிலங்கை கருவாட்டு வியாபாரிகளால் கூடியளவு விரும்பிக் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

**உலர்மீன் பதனிடும் நிலையம் அமைக்கப்பட்டதை அடுத்து பெரியளவில் இலாபம் கிடைக்கும்.**

உலர்மீன் பதனிடும் நிலையம் அமைக்கப்பட்டதை அடுத்து பெரியளவில் கடற்றொழிலாளர்கள் இலாபம் ஈட்டக் கூடிய வகையில் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌவர குடும்பம் 1979 இல் பிறந்த கிரகபாவம் 63 உடைய மண மகளுக்கு நற்பண்புள்ள மணமகன் தேவை.

தொடர்பு: 077 3114443

(18612)(6-8)

## O/L Maths

கணித பாடத்தில் 'A' சித்தி பெறத் தக்க வகையில் வீட்டுக்கு வந்து சிறந்த முறையில் கற்பித்துத் தரப்படும்.

(18622) contact- 0775088026

## விற்பனைக்குண்டு

KIPOR ஜெனரேற்றர்
5.K.V (Brand New),
Deep freezer - SISIL (Brand New) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 844 8726 (18604) (45.6.7)

## சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையுடைய சிறுநீரக நோயா ளிக்கு சிறுநீரகம் தேவை

தொடர்பு:
0779852409

(சி. 384)(14-34)


செருத்தனைப்பதி

# அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் திருக்கோயில்



புளியங்கூடல்
ஊர்காவற்றுறை

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான நந்தன வருடம் வைகாசி மாதம் 15ஆம் நாள் (28.05.2012) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் (29.05.2012) வைகாசி 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 1008 கலஷபிஷேகம் இனிதே நடைபெறும். அத்தருணம் அடியார்கள் யாவரும் கலந்து அம்பிகையின் பேரருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

அடிக்கல் நடும் விழாவில் 1008 சங்குஸ்தாபனத்தில் கலந்து கொண்ட அடியார்கள் 1008 கலஷபிஷேகத்திலும் கலந்து கொண்டு அம்பிகையின் பேரருளுக்கு பாத்திரமாகுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**குறிப்பு:- 2012 ஆம் ஆண்டு மகோற்சவம் நந்தன வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் (01.06.2012) அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.**

செருத்தனைப்பதி
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை.

ஆலய அறங்காவலர்கள்
து. சிவஞானச் செல்வம்
சி. செந்தூரன்
சி. மருதூரன்

(18583) (6,9,10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
16.06.1946

உதிர்வு
28.04.2012

## அமரர் புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

**கடந்த 28.04.2012 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் நாளை (28.05.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்தி லும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

**- குடும்பத்தினர்.**

(சி/380) (2-6-9)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 27 |
| ★ | ★ |
| 03 | 05 |
| ★ | ★ |
| 1944 | 2010 |



## அமரர் வைரமுத்து மாணிக்கவாசகர்

அன்பின் வடிவமே பண்பின் இருப்பிடமே
தர்மத்திற்கு தலைசிறந்தவன் நீயே
வாசையா எனும் நாமம் கொண்டு
அனைவர் நெஞ்சிலும் நீங்கா இடம் பிடித்தவனே
ஆண்டுகள் இரண்டு ஆன போதிலும்
ஆறவில்லை எம் மனத்துயரம்
நீர் எம்மை விட்டுப்போன போதும்
உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சோடு

3 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை

**உம் நினைவுகளுடன்:**
மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்

(18606)(6-8)

# மரண அறிவித்தல்

## சிவஞானம் இரத்தினம்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் தற்போது இராசாவின் தோட்டம், யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவ ஞானம் இரத்தினம் (22.05.2012) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி - நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும், நடராசா (அனலைதீவு), வரதராசா (அனலைதீவு), காலஞ்சென்றவர்களான கர்ணா, நாகராசா மற்றும் சிவம் (சுவிஸ்), கோபால் (சுவிஸ்), ராணி (கனடா), சுவாமிநாதன் (கனடா), சோதி (கனடா) ஆகி யோரின் அன்புச் சகோதரியும், ஞானேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (அனலை தீவு) ஆகியோரின் அன்புத் தாயும், சங்கீதா (கனடா), தர்சினி (அனலைதீவு) ஆகியோரின் அன்பு மாமியும், ஆர்த்திகா (கனடா), மயூரன், மதுசா, யாழினா, மனோஷா, செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 135/02, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*135/02, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(18613)(14-34)

*தகவல்:*
சி. ஜெகதீஸ்வரன் (ராசன் - மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதியம் வழங்கப்படவில்லை

பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றிய வீரர்களுக்கான ஊதிய நிலுவைகள் இன்னமும் வழங்கி முடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக ஊதிய நிலுவைகளை விரைவில் வழங்கி முடிக்குமாறு சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு - பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு அழுத்தங்களை வழங்கியுள்ளது. மே 19 ஆம் திகதியிடப்பட்ட கடிதமொன்றை பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களுக்கான அமைப்பின் தலைவர் ரிம் மே, 5 நாள்களுக்குள் அனைத்து வீரர்களுக்குமான நிலுவைகளை செலுத்தி முடிக்குமாறு கோரியிருக்கிறார். அந்த 5 நாள்களும் நிறைவடைந்துள்ளன. இதுவரை வீரர்களுக்கான நிலுவைகள் செலுத்தி முடிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் ஊதிய நிலுவை வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவது குறித்து சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு அதிக கரிசனை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ரிம் மே, தொடர்ந்தும் இந்த நிலை நீடிக்குமானால் பாரதூரமான நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, பங்களாதேஷ் பிறீமியர் லீக், அதில் பங்குபற்றிய அணிகள், அவற்றின் அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த நிலை தவறான பெயரை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள ரிம் மே, உடனடியாக நிலுவைகளைச் செலுத்தி முடிக்குமாறு வேண்டிக் கொண்டுள்ளார். ஆரம்பத்தில் வெளிநாட்டு வீரர்களுக்கான நிலுவைகளைச் செலுத்தி முடிக்க மே 9 ஆம் திகதியும், உள்ளூர் வீரர்களுக்கான நிலுவைகளைச் செலுத்தி முடிக்க மே 31ஆம் திகதியும் இறுதி நாளாகக் காணப்பட்ட போதிலும், அந்த நாட்களில் அவர்களுக்கான ஊதியங்கள் வழங்கி முடிக்கப்படவில்லை. (5)


தென்னிந்திய இசை நிகழ்ச்சியை உங்கள் ஆலயங்களிலோ அல்லது பொது இடங்களிலோ நடாத்த விரும்புகின்றீர்களா?

விஜய் TV சுப்பர் சிங்கர்ஸ் வெற்றியாளர்களான அல்கா அஜித், சத்திய பிரகாஷ், பூஜா, கௌசிக், சந்தோஷ் மற்றும் கர்நாடக திரையிசை பாடகி நித்திய ஸ்ரீ மகா தேவன் ஆகியோர்களின் யாழ் வருகையை முன்னிட்டு உங்கள் பிரதேசங்களில் இசை நிகழ்ச்சியை நடாத்த விரும்பும் நலன் விரும்பிகளுக்கும், மற்றும் ஏனைய பிரபல தென்னிந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளின் தொடர்புகளுக்கு CAC

0771827274

வீடு வாடகைக்கு

யாழ். நாவலர் வீதிக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

0756700969

(18607)(6-3)

Sale! Sale! Sale! LANKA TILES

லங்கா ரைல்ஸ் இன் வாடிக்கையாளர் நலன் கருதி மாபெரும் மலிவு விற்பனை

23.05.2012 தொடக்கம் 30.05.2012 வரை

இடம்: 406, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

(மனோகரா தியேட்டருக்கும் யாழ்.இந்துகல்லூரிக்கும் இடையில்)

Sale Sale! Sale! Sale! Sale! Sale! Sale!

வியப்பான வியாபார விருத்திக்கு வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்

50,000/- மேல் மாத வருமானம்

- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- நவீன தொழில் நுட்பம்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை ரூ 99,000/- இல் இருந்து புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 106 6902, 077 391 8870 (அ-73)

STUDY IN UK

AFTER O/L, A/L what next?

UK Student Visa நடைமுறையில் பெரிதாக எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை 20 hours வேலை வாய்ப்புடன் 4 வருட விசாக்களை பெற எம்மை நாடுங்கள்

May/June Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

Free! Entrance Offer Preparation Eng. Class

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருப்பதால்
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

HOTLINE : 011 7 555511/12/14 021 7538395 / 021 2227230

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna. (Near to Kantharmadam Junction)
56, The Gardens Harrow Middlesex, HA1 4EY. UK.
(அ-382)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

ZOA
RELIEF | HOPE | RECOVERY

ZOA is a field-based not for profit non - governmental organisation operating in Sri Lanka since 1995. We are presently seeking to recruit Senior Project Coordinators to support the program in Mullaitivu.

Senior Project Coordinators (2 Positions)
(Based in Mullaitivu)

Tasks;
- Management of ZOA projects in Mullaitivu district.
- Formulation and implementation of the Programme Plan including ongoing monitoring and budget controls according to the project proposal and donor requirements.
- Supervision and coaching of the administrative, financial and programme staff.
- Liaise with the Government, commercial sector, other humanitarian/development agencies and partner organizations for effective implementation of the project.

Requirements;
- 3 years project management experience in the sectors of construction, livelihood and community development
- Experience in managing multi sector projects and partner management through accountability and participatory values.
- Coach and manage multi sector teams.
- Strong networking and good reporting skills.
- Willingness to be based and work in rural environment.
- Fluency in English, Tamil and conversant in Sinhala is an added advantage.

Female candidates are particularly encouraged to apply.

ZOA offers the successful candidate a competitive package.

Please send a cover letter stating why you are suited for this job along with a complete bio-data and the names and contact numbers of two non related referees on, or before 3 June 2012 to jobs@zoasrilanka.org or to the address given. (Indicate the position on the top left hand corner of the envelope or in the subject line of the e-mail)

Only short listed candidates will be notified

Human Resources Officer
ZOA Sri Lanka
34, Gower Street
Colombo 05.
Tel : (011) 7 529600
E mail: jobs@zoasrilanka.org

Java அடிப்படையிலிருந்து கற்பதற்கு... 100% Practical oriented MIS Open Source College

புதன் - வெள்ளி
நேரம்: மாலை 6.00 - 7.00
OOP / Swing / Applet
Call Us: 0776577359
விரும்பிய எவரும் கற்கலாம்...
For 10 years... By R.Kumaran-B.Sc.
கொக்குவில் பூநாறி மரத்தடி
74, சபாபதி வீதி, KKS வீதியிலிருந்து 200 m
(18333)

IELTS
Knowledge Universe Sri Lanka
http://edu.kugroup.info/ielts
June/30th -Exam in Jaffna
KU's IELTS hotline : 0777302882
புதிய தனிப்பட்ட வகுப்புகள் ஆரம்பம்
Authorized IELTS registration & Training Centre
K.U Educaiton,No 75,Temple Road,Jaffna
(அ-156)

உடனடித் தேவைக்கு வாகனங்கள் தேவையா? அழையுங்கள் 0777484820

குளிரூட்டப்பட்ட, நவீன ரக கார்கள், வான்கள், ஜீப்கள்

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்தும் வாகனத்தை பெற்றுக்கொள்ளும் வசதிகள்

நாங்கள் தருகிறோம் உங்களிற்கு பிடித்த வாகனத்தை நீங்களே ஓட்டியும் செல்லலாம்.

NEW PEAKING
Rent a Car service
No 2/1, Market complex, Kalviyankadu
(18601)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உலகின் மிகச் சந்தோசமான நாடுகள்

உலகில் மிகவும் சந்தோசமான நாடுகள் எவை என்று நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் கோஸ்டா ரிக்கா முதலிடத்தையும் வட ஐரோப்பிய நாடுகள் முன்னணி நிலைகளையும் தக்க வைத்துள்ளன.

ஒவ்வொரு வருடமும் நிகழ்த்தப்படும் இந்தக் கருத்துக் கணிப்பில் ஐரோப்பிய நாடுகள் அதிலும் வட ஐரோப்பிய நாடுகள் முன்னணி வகிப்பது வழமை. இந்த கருத்துக் கணிப்பின் முடிவுகளில் முக்கியமான நாடுகளின் தரவரிசை பின்வருமாறு;

1.கோஸ்டா ரிக்கா, 2.டென்மார்க், 3 ஐஸ்லாந்து, 4.பின்லாந்து, 5.நோர்வே, 6.நெதர்லாந்து, 8. சுவிட்சர்லாந்து, 10 இற்கு வெளியே - அமெரிக்கா,100 இற்கு வெளியே - சீனா.

இந்த கருத்துக் கணிப்பு சுகாதாரம், கல்வி, சுற்றுச் சூழல், தொழில், சமூகம், வேலை வாய்ப்பு, வருமானம், வாழ்க்கைத் தரம் ஆகிய பிரிவுகளைத் திருப்திப் படுத்தும் முன்னணி நாடுகளைக் கொண்டே மிகச் சந்தோசமான நாடுகள் எனும் பிரிவில் தர வரிசைப் படுத்தப்பட்டது.





# வயர்லெஸ் தொழிநுட்பம் மூலம் கட்டுப்படுத்தப்படக் கூடிய இதயம்

ஜப்பானின் தொஹோக்கு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வுக் குழு வயர்லெஸ் தொழிநுட்பம் மூலம் கட்டுப்படுத்தப்படக் கூடிய செயற்கை இதயத்தைக் கண்டு பிடித்துள்ளது.

இந்த வயர்லெஸ் இருதயக் கண்டுபிடிப்பை அடுத்து, ஜப்பான் விஞ்ஞானிகளால் விரைவில் எந்த வித பேட்டரியும் இல்லாமல் உண்மையான இதயம் போல் செயற்படத்தக்க பொறிமுறையுடைய செயற்கை இதயத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய சாத்தியக்கூறும் ஏற்படவுள்ளது என ஜப்பானின் அரச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

வெறும் இ பேட்டரியின் அளவேயுடைய இந்த செயற்கை இதய பம்ப் உருளை வடிவான காந்தம் ஒன்றை இயக்குவதன் மூலம் மனிதனின் இயற்கையான இதயத்துக்கு ஒப்பாக ஒரு நிமிடத்துக்கு 5 லீற்றர்வரை இரத்தத்தை பம்ப் பண்ணக் கூடியது. இந்த உபகரணத்தின் பம்ப் உடம்பின் தோலுக்கு மேலே பொருத்தப் படக்கூடிய இன்னொரு சிறிய உபகரணம் மூலம்



உருவாக்கப்படும் காந்த சக்தியால் இயக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட செயற்கை இதய உபகரணங்கள் மனித உடலில் இணைப்பதற்கு அளவில் மிகப் பெரியதாகவும் தோலுக்கு வெளியே பொருத்தப்பட்டிருக்கும் பற்றரி போன்ற உபகரணத்துடன் மெல்லிய கம்பி அல்லது வயரால் இணைக்கப்பட வேண்டிய தேவையும் இருந்தது.

தற்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் வயர்லெஸ் செயற்கை இதயம் மருத்துவ உலகில் மிக முக்கியமான ஒரு உபகரணமாகும். மிகச்சிறிய அளவுடையதும் சாதாரண கட்டமைப்பை கொண்டிருப்பதும் வினைத் திறன் மிக்கதுமான இந்த பம்ப் சந்தையில் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடியதுமாகும் என இப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியரும் இந்த ஆய்வுக்குழுவின் தலைவருமான கஷேஒஸி இஷியாமா கூறியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 அடி உயரமான முச்சக்கர மிதி வண்டி

பொழுது போக்குக்காக 5 அடி உயரமான முன் சக்கரத்தையுடைய சைக்கிள் ஒன்றைச் சீனாவைச் சேர்ந்த நபரொருவர் உருவாக்கியுள்ளார். சீனாவின் ஹெபெய் மாகாணம் டாங்சன் எனும் ஊரைச் சேர்ந்த சாங்லியான்ஜன் என்பவரே இவ்வாறான வினோத சைக்கிளை உருவாக்கியுள்ளார். இந்த சைக்கிளுக்காக இவர் 1,800 ஸ்ரேலிங் பவுண்ஸ்களை செலவளித்துள்ளார்.

இந்த சைக்கிளில் பெரிய விளக்கு, வாகன ஒலிபெருக்கி, மற்றும் நான்கு சிறிய சக்கரங்கள் உள்ள டக்கப்பட்டுள்ளன.

ரைக்ரர் வண்டியின் 7 அடி உயரமான சக்கரத்தை இதற்கு பயன்படுத்தலாம் என திட்டமிட்டுள்ளார். ஆனால் அது பாரமாகவும் அதே நேரத்தில் செலுத்துவதற்கு கடினமானதாகவும் இருக்குமென எண்ணி சிறிய முன்சக்கரங்களை கொண்ட மண்வாரியொன்றை உருவாக்குவதற்கு எண்ணினார். எப்படியிருப்பினும் சக்கரங்கள் அளவில் வித்தியாசமானவை. அவை சைக்கிளைச் செலுத்துவதற்கு பொருத்தமானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.







## பாகற்காயின் குணநலன்கள்

மரக்கறி வகைகளில் ஒன்றான பாகற்காயை சிலர் தவிர்த்து வருகிறார்கள். அதன் குணநலன்களை அறியாதவர்களே இவர்கள், கசப்பானாலும் உடம்புக்கு மிகவும் நல்லது. பல வியாதிகளுக்கு நிவாரணியாக இருக்கிறது.

பாகற்காய் சாப்பிடுவதன் மூலம் மார்பக புற்று நோய் வருவதைத் தடுக்க முடியும் என ஒரு ஆய்வு கூறுகிறது. உலகம் முழுவதும் மார்பக புற்றுநோய்க்கு பலியாகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்கள் பாகற்காயை



தமது உணவில் சேர்த்துக் கொண்டால் இந்த வியாதி யில் இருந்து விடுபடலாம். பாகற்காய் கைக்கிறது என்று தானே அதனை விலக்கி வைக்கிறார்கள் சிலர். அவர்கள் என்ன செய்ய வேண்டும் எனில் தேங்காய் உடைத்ததும் வரும் இள நீரில் சிறிது நேரம் வெட்டிய பாகற்காய் துண்டு களை ஊற விட வேண்டும். அல்லது உப்பு போட்டு ஊற வைக்க வேண்டும். அப்போது அதில் உள்ள கைப்பு போய்விடும்.

பாகற்காய் பெரும்பாலும் உடலுக்கு நல்லது என்று எல்லோருக்கும் தெரியும். அறுசுவைகளில் நமது உடலுக்கு நல்லதைத் தரும் இந்த கசப்புச் சுவையிலான பாகற்காயை வாரத்தில் ஒரு முறையாவது உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. சிலர் பாகற்காயை கறியாகவோ, பொரித்தோ, சம்பல் போட்டோ சாப்பிடுவார்கள்.

நமது உணவு வகைகளில் உவர்ப்பு, கசப்பு, உறைப்பு, இனிப்பு என்பன சேர்ந்து இருப்பது உடம்புக்கு நல்லது. அதற்காக இனிப்புகளை மட்டும் உண்டால் நீரிழுவு வியாதி தான் வரும். எதுவும் அளவோடு இருக்கட்டும். நீரிழிவு வியாதி உள்ளவர்கள் பாகற்காய் சாப்பட்டால் மிகவும் நல்லது. அவர்கள் மட்டுமல்லாமல் ஜுரம், இருமல், இரைப்பு, மூலம், வயிற்றில் பூச்சித் தொல்லை இருப்பவர்களும் பாகற் காயை உண்ணலாம்.

பாகற்காய் நமது நாவுக்குத்தான் கசப்பே தவிர உடலுக்கு இனிப்பானது.பாகற்காயை விட பாகற்காயின் இலையில் அதிக மருத்துவக் குணங்கள் உள்ளன. அதன் சாறு பல நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.பாகற்காயின் இலைகளை அரைத்து உடல் முழுவதும் பத்துப்போட்டால் சிரங்கு ஒழிந்துவிடும். இதேபோல பாகற்சாறும் உடலுக்கு மிகவும் ஏற்றது. ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு விதத்தில் பாகற்காய் இலையின் சாறைக் குடிக்க நோய் கட்டுப்படும்.

எனவே பாகற்காயின் குண நலன்களை அறிந்து அதன் பயனை பெற்று கொள்ளுங்கள். உணவுடன் சேர்த்து கொள்ளுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை காலத்தில்....



கத்திரி வெயில் மக்களை வாட்டி வதைக்கிறது. அதிலும், குறிப்பிட்ட பகுதிகளில் 100 டிகிரிக்கும் மேல் சுட்டெரிக்கிறது வெயில். இதை சமாளிக்க முடியாமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். சிலர் கோடை வெயிலில் இருந்து தப்பிக்க குளிர் பிரதேசங்கள், மலை பிரதேசங்களை நோக்கி படையெடுக்கின்றனர். கோடை வெயிலின் தாக்கம் உடலை மட்டும் பாதிப்பதில்லை. தோலையும் பெரிய அளவில் பாதிக்கிறது. சூரிய ஒளி வெப்பத்தின் காரணமாக வியர்வை அதிகம் ஏற்பட்டு உடலில் வேர்க்குரு, கொப்பளங்கள் ஏற்படுகின்றன. இதனால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

**உணவுகள்:**

கோடை காலத்தில் பொரித்த உணவுகள், எண்ணெய்ப் பொருள்கள் சாப்பிடுவதை வெகுவாக குறைக்க வேண்டும். குறிப்பாக கொழுப்பு சத்து கூடிய உணவுகளை தவிர்ப்பது நல்லது. ஏனெனில், கோடை காலத்தில் உடல் சோர்வுடன் இருப்பதால் சாப்பிட்ட உணவுகள் செரிமானம் ஆக அதிக நேரம் எடுக்கும். அதனால், உடல்நலக் கோளாறு ஏற்படும். இதை கருத்தில் கொண்டு கோடைக்கு இதமான உணவுகளை தேர்ந்தெடுத்து சாப்பிடுவதே சிறந்தது.

**ரீ கோப்பி**

ரீ- கோப்பி பானங்களை அதிகமாக குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் கோடை காலத்திலும் அதை தொடர்வார்கள். அதிலும், நேரம் தவறாமல் குடித்தால்தான் வேலை ஓடும் என்று அதற்கு காரணமும் சொல்வார்கள். அதிலும் சிலர் சீனி அதிகமாகவும், சிலர் சீனி குறைவாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். இந்த பழக்கத்தை கோடையிலாவது குறைத்துக்கொள்ள வேண்டும். ரீ- கோப்பி குடித்தால் அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரிடும். அதனால், உடலில் உள்ள நீரின் அளவு வெகுவாக குறைந்து விடும். வெயிலின் தாக்கத்தை சமாளிக்க உடலில் நீரின் அளவு குறிப்பிட்ட அளவு இருக்க வேண்டும். இது குறையும் பட்சத்தில் தோல் உலர்ந்து விடும். மேலும், சிகரெட், புகையிலை பயன்படுத்துவதையும் மது அருந்துவதையும் தவிர்க்க வேண்டும்.

**ஆடைகள்:**

ஆடை விஷயங்களுக்கு இதர காலங்களில் முக்கியத்துவம் கொடுக்கிறோமோ இல்லையோ, கோடைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சூரிய வெப்பத்தால் ஏற்படும் வியர்வை உடல் மடிப்பு, கை, கால் இடுக்குகளில் ஆடையுடன் வியர்வை படிந்துவிட்டால் கொப்பளங்களுக்கு வழிவகுக்கும். மேலும், பொலிஸ்ரர் ஆடைகள் அணிந்தால், அவை வெயிலின் தாக்கத்தை அதிகப்படுத்தி உடலை பாதிக்கும். கருப்பு போன்று மங்கிய ஆடைகளுக்கு ஒளி மற்றும் வெப்பத்தை உட்கிரகிக்கும் தன்மை அதிகம். அதனால், இதுபோன்ற ஆடைகள் அணிவதை தவிர்க்க வேண்டும். முக்கியமாக இறுக்கமான ஆடைகள் அணிவதை தவிர்க்க வேண்டும். பருத்தி ஆடைகள், மெல்லிய இழைகளால் ஆன ஆடைகளை அணியலாம். எடை குறைந்த ஆடைகளையும் அணியலாம்.

**பானங்கள்:**

பல்வேறு வகையான குளிர்பானங்களை தவிர்க்க வேண்டும். அதிலும், நீண்ட நேரம் வெயில் சுற்றி, திரிந்து வந்தவர்கள் வெப்பம் தாங்காமல் குளிரூட்டியினுள் இருக்கும் பானத்தை உடனே எடுத்து குடிப்பார்கள். அப்படி குடித்தால், உடனே உடல் வெப்பம், தாகம் தணிந்துவிடும் என்று எண்ணி இவ்வாறு குடிப்பார்கள். இது ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். இதமான தண்ணீர், அல்லது மண்பானையில் வைக்கப்பட்ட தண்ணீர், மோர், தயிர், இளநீர் போன்றவற்றை குடிக்கலாம்.



# வீட்டை அழகுபடுத்துங்கள்

கோடைக் காலம் என்றால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மட்டுமே வீட்டுக்குள் குளிர்ச்சியின்றி, மின்விசிறி கூட ஓட மின்சாரமின்றி தவிப்பது வழக்கம். பணக்காரர்கள் எப்போதும் ஏசி அறையில் இருப்பதாலும், மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் ஜெனரேட்டர் என எதிலாவது ஏசியை இயக்கி வெப்பத்தில் இருந்து தப்பித்து விடுவார்கள். ஆனால், எளிய வழிகளை பின்பற்றினால் ஏழை மற்றும் நடுத்தர மக்களும் வீட்டை வெப்பத்தில் இருந்து ஓரளவு பாதுகாத்துக் கொள்ள முடியும். அதற்கு சில வழிகள் இருக்கின்றன. ஜன்னல், கதவுகளில் துணியை தொங்கவிட்டு அதை மணிக்கு ஒருமுறை ஈரமாக்க வேண்டும். இதனால், வீட்டுக்குள் வரும் அனல் காற்று ஈரத் துணிகள் மூலம் குளிர்ச்சியாக மாறி விடும். தரையிலும் அவ்வப்போது ஈரத் துணியால் துடைக்கலாம். ஜன்னல்களுக்கு தும்புப்பாயை தொங்க விட்டு அதை நனைத்தும் குளிர்ச்சியை பெறலாம். மின் விசிறிகள் அழுக்கேறி இருந்தால் காற்று குறைந்து விடும். எனவே, வாரம் ஒருமுறை மின் விசிறி இறக்கைகளை துடைத்து பராமரித்தால் அதிக காற்று கிடைக்கும்.

கோடைகாலத்தில் போர்வை, ஸ்வெட்டர்களுக்கு அவசியம் இருக்காது. ஏனெனில், வெயில்காலம் முடியும் வரை அவை தேவைபிருக்காது.

**ஜன்னலை திறந்திடுங்கள்**

குளிர்காலத்தில் ஜன்னலை அடைத்து வைத்திருக்க வேண்டிய சூழல் இருந்திருக்கும். கோடையில் வீட்டிற்குள் காற்று நன்றாக வர ஜன்னல்கள், வீட்டு வாயில்களை அடைத்துக் கொண்டிருந்த பொருள்களை அகற்றுங்கள். ஜன்னல் கம்பிகளில் படிந்திருக்கும் தூசுகளை சுத்தமாக துடைத்து விடுங்கள். காற்று அதிகமாக வருவதற்கு வசதியாக இருக்கும்.

கைமேல் பலனாக உதவுவது ஓலை விசிறிகளே. அத்துடன் அவற்றை நீரில் ஒரு மணி நேரம் நனைத்து வைத்து விட்டு பயன்படுத்திப் பாருங்கள். இயற்கை ஏசியாக காற்று வரும்.

டைனிங் ரேபிள், டிரஸ்சிங் ரேபிள் போன்றவைகளை சுத்தமாக துடைத்து வையுங்கள். உலர்வான துணியை விரித்து தூசி எதுவும் விழாமல் பாதுகாக்கலாம். அன்றாடம் உபயோகப் படுத்தும் சாப்பாட்டு மேசை கதிரைகள் போன்றவைகளை தினசரி தூசி தட்டி வைக்கலாம்.


# எச்சரிக்கை அறிவிப்பு

இல.79, மொறட்டுவ வீதி, பிலியந்தலையில் அமைந்துள்ள
**ஹிகாரி சர்வதேச தனியார் (வரை) நிறுவனத்தினராகிய**
நாம் RV 80, RV 125, RV 145 போன்ற வர்த்தகக் குறியீட்டுடன் கூடிய Intellectual உரிமச் சாசன இலக்கம் 36-2003 தரம் 12 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட Power Tillers (Hand Tractors) இயந்திரங்களின் பதிவு செய்யப்பட்ட ஏக உரிமையாளர்களாவோம்.

RV 80 RV 125 RV 145

நாம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் RV 80, RV 125, RV 145 வியாபாரக் குறியீட்டை கொண்ட Hand Tractors (Power Tillers)ம் அதன் உதிரிபாகங்களின் இறக்குமதிகள், விற்பனை மற்றும் விநியோகம் என்பவற்றை செய்வதில் வேறு இறக்குமதியாளர்களையும் விற்பனையாளர்களையும் விட ஹிகாரி சர்வதேச நிறுவனமும் அதனது முகவர் நிறுவனமும் சட்டபூர்வமாக இணைக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் நிறுவனமோ/தனிநபரோ Hand Tractors ம் அதனது உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்தாலோ /விற்பனை செய்தாலோ அது சட்ட விரோதமாகக் கருதப்படும். அப்படியான இறக்குமதி, விநியோகம் மற்றும் விற்பனைக்கெதிராக தொடர்புடைய கம்பனிகளுக்கும், தனி நபர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

Hand Tractors அதன் பாகங்களை கொள்வனவு செய்யும் போது அவ் இயந்திரங்கள் RV 145, RV 125, RV 80 போன்ற வியாபாரக் குறியீடுகள் பதிவு செய்யப்பட்டு ஹிகாரி சர்வதேச கம்பனியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதை ஊர்ஜிதம் செய்யுமாறு எங்கள் வாடிக்கையாளர்களையும், நாட்டு மக்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், Hikaric (ஹிகாரி) RV 145, RV 125, RV 80 Power Tillers அதன் பாகங்களை ஹிகாரி சர்வதேச நிறுவனத்திலும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமும் கொள்வனவு செய்து கொள்ளவும்.

எமது வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்வது ஹகாரி RV 145, RV 125, RV 80 குறியீடுகளைக் கொண்ட Power Tillers அதன் பாகங்களையும் ஹிகாரி சர்வதேச நிறுவனத்திலும் அதன் அங்கீகாரம் பெற்ற முகவர் நிறுவனங்கள் தவிர்ந்த வேறு நிறுவனங்களில் கொள்வனவு செய்யப்படின் நாம் பொறுப்பாளிகள் அல்லர். அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பொருள்களுக்கு எமது சேவை வழங்கப்படமாட்டாது.

(17539)

**HIKARIE INTERNATIONAL (PVT) LTD**
No. 79, Moratuwa Road, Piliyandala, Sri Lanka.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna College Institute of Technology
Established in 1974

# ADMISSION OPEN BIT



Bachelor's of Information Technology
(External Degree School of Computing, University of Colombo)

கொழும்பு பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்பினால்
நடத்தப்படும் Bachelor's of Information Technology (BIT)
கற்கை நெறிக்கு எமது நிறுவனத்தில்
பதிவு செய்து கற்கை நெறியை தொடங்கவும்.

குறைந்த கட்டணத்தில் கற்கை நெறியை தொடருங்கள்



### Computer Programming & Data Processing- 1 Year

*System Analyzing & Design, Data base Management System, Fundamentals of Computer Technology, Data Processing, Java, C++, English, Oracle, Application Packages, Visual Basic VB .net,*

### Certificate Craft Course (தமிழ்மொழி மூலம்) 6மாதம் முழுநேரம்

1. Machineshop Practice (லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி)
2. Motor Cycle and light Engine Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
3. Refrigeration & Air Conditioning Mechanic (குளிரூட்டுதல் பயிற்சி நெறி)
4. Welder(லேத் வெல்டிங் உலோக வேலைகள்)
5. Electrical and Electronic (மின் இலத்திரனியல்)
6. Radio, TV & Electronic Servicing Technology (இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்)
7. Aluminum Fitting & Fabrication(அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்)
8. Domestic Electrician (மின் இணைப்பும் நிர்மாணமும்)

G.C.G.(O/L) வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்..

A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission (TVEC) Under P25/0014

**Facilities**
Individual attention by qualified Lecturer
Easy Installment ,More Practical hours,
Modern Lab, Auditorium
**Hostel**, library & Sports, etc.

**More Information**
Director,
Jaffna College Institute of Technology- Vaddukoddai
**T.P No.021 321 3139 / 021 222 8275**
E-Mail jcit@sltnet.lk www.jcit.lk

(C/369)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை பீட்டர்சன் ரோட்டில் உள்ள தொடர்மாடியில் 2 அறைகளுடன், 1 Hotwater Bathroom, புதிய தேக்கு மரத்திலான Pantry Cupboard உடன் சமையலறை, Hall, Balcony, Fully Tiles House - தனி Car Parking
தரகர்கள் வேண்டாம் - தரகர்களில்லாமலும் விற்பனைக்குண்டு.
தெளிவான உறுதி (Deed) உண்டு

**0777 267027, 0755843605**

(C/70)

## தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பு உடன் வாருங்கள்

எங்கள் ஜாம், சொக்கலட், கேக், ஜோக்கட் டொபி, பால் மாவை உற்பத்தி செய்யும் ஜெலி க்ளவுஸ், டயர் ஆகிய உற்பத்திப் பொருள்கள் லேபல் பிரிவுக்கு 16 முதல் 55 வரையான ஆண்கள், பெண்கள் தேவை. தகைமை 6 ஆம் ஆண்டில் இருந்து A/L வரை. சம்பளம் 38, 000/- முதல். உணவு, தங்குமிடம் இலவசம். சேர்த்துக் கொள்ளப்படும். இடம் அநுராதபுரம். நண்பர்கள் குழுவும் இணைந்து கொள்ளலாம். 50, 000/= இற்கு மேல் துறைமுகம் (தனியார்) பிரிவுக்கு தச்சன், வெல்டர், சாரதி வேலையாளர்கள் தேவை. விமான நிலையம் (தனியார்) பிரிவுக்கு கேற்றரின், சுத்தம் செய்தல், பாதுகாப்புப் பிரிவு எங்கள் மேசன், தச்சன், சட்டறிங், பெயின்ரேஸ், ரைல்ஸ் பாஸ்மார்களும் மற்றும் பாரவாகன றைவர் JCB Fonclift வீல்லோடர் ஒப்பரேட்டர் ஆகியோர் தேவை. சகல பிரதேசத்தவரும் விண்ணப்பிக்கலாம். வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு உணவு தங்குமிடம் இலவசம்.

தொடர்புகளுக்கு: 0778999299
இல.136/6A, மெயின் வீதி, அநுராதபுரம்.

(16861) (2-6-7)

## காணி, வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கு அருகில் 4 பரப்பு காணியுடன் கூடிய வீடு, 6 பரப்பு, 5 ½ பரப்பு வெற்றுக்காணி, பொலிகண்டி கடற்கரை வீதியில் பழைய வீட்டுடன் கூடிய 8 ½ பரப்புக் காணி ஆகியவை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0777420240, 021 2228005, 021 3218109

(18430)(2-7-6)

## காணி விற்பனைக்கு

நல்லூர் சந்திர சேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள 12 (பன்னிரண்டு) பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
021 222 0297, 0772987559

(18292)(2-7-6)

## மணமகள் தேவை

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் (குருகுலம்) கொழும்பை வசிப்பிடமாகவும் NON RC சமயத்தைச் சார்ந்த AUSTRALIA Citizen உடைய 5 அடி நான்கு அங்குலம் உயரமுடைய வயது 32 மணமகனுக்கு படித்த அழகிய மணமகளை (ஆங்கிலம் எழுதவும் பேசவும் தெரிந்திருக்க வேண்டும்) தாயார் தேடுகின்றார். இந்துக்களும் RC மதத்தவர்களும் மாறிவரலாம். சீதனம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்புகளுக்கு:
077 9909764, 011 2390768

(18476)(2-7-8)

## Vehicles for hire (Jaffna peninsula only)




Nissan car, 30 Seater Bus,
Prado Jeep, 12 Seater Van
*Tilko Jaffna City Hotels (Pvt) Limited*
#70/6 K.K.S Road, Jaffna.
Tel 021 2225969,
Mobile 0771064385, Fax 021 2227291

## WWW.tourismjaffna.com



யாழ் நகரில் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கும் **WWW. tourism jaffna.com** என்ற இணையத்தள முகவரியுடன் இணைய ஓர் அரிய சந்தர்ப்பம். சுற்றுலாத்துறையில் செயற்படுபவரும் இணைந்து கொள்ளமுடியும். யாழ்நகரின் அழகைக் கண்டு மகிழ ஒரு புதிய வழி.
"புதுமைகள் கொண்டு புதுயுகம் செய்வோம்"
மேலதிகவிபரங்களுக்கு:
0777807078, 0752898900


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்



(18479) (6,9,10)

தோற்றம்
06★04★1939

மறைவு
28★04★2012

## அமரர்
# சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு

எம்மைவிட்டுப் பிரிந்து இறைபதம் அடைந்த எமது இல்லத்தரசியின் அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் நாளை (28.05.2012) திங்கட் கிழமை அதிகாலை நான்கு மணியளவில் நடைபெற்று ஊறணி தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பமும் இந்த நிகழ்வுக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது இல்லத்தரசியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"மாதர் வளவு"
மல்லி ஓடை ஒழுங்கை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோத ஆமை

இரண்டு தலைகள் மற்றும் ஆறு கால்களுடன் விநோத ஆமை ஒன்று உக்ரேன் நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஐந்து வயதாகும் இந்த ஆமை ஆசிய ஆமை வகையை சேர்ந்ததாகும். தற்பொழுது இந்த ஆமை மக்கள் பார்வைக்காக உக்ரேனில் உள்ள மியூசியம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆமைக்கு இரண்டு தலை, இரண்டு இதயம் இருப்பதால், இவை ஒட் டிப்பிறந்த இரட்டை ஆமைகள் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Gold Winner
விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் தேவை

"கோல்ட் வின்னர்" சன்பளவர் எண்ணெய் பங்கீடு செய்யும் நிறுவனத்திற்கு கீழ் காணும் தகைமைகளுடன் கூடிய விநியோகஸ்தர் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தகைமைகள்
☆ வங்கி உத்தரவாதம் (விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு)
☆ களஞ்சிய வசதி (விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு)
☆ விநியோக வாகனம் (விநியோகஸ்தர்களுக்கு மட்டும்)

நிறுவனத்திலிருந்து கிடைக்கும் நன்மைகள்
☆ அனுபவம்வாய்ந்த விற்பனை பிரதிநிதி (விநியோகஸ்தர்களுக்கு)
☆ வாகனக் குத்தகை (விநியோகஸ்தர்களுக்கு)
☆ விற்பனைக் கழிவு

Global Tech Holdings (Pvt) Ltd,
(Authorized import & Distribution Agent for Kaleesuwari Refinery Private Limited.)

General Manager - Sales & Marketing
Global Tech Holdings (Pvt) Ltd,
No. 533 B,
Lake Road,
Boralesgamuwa,
Sri Lanka

Principal Office,
kaleesuwari,
Refinery (Pvt) Ltd.
Chennai,
India.

Tel. 0112 650 750, 0773 351 357, 0779 078 898
E mail : goldwinner@globaltech.lk




ராம்ராஜ் தயாரிப்புகளான வேஷ்டி, சேர்ட், பனியன், ஜட்டி, டிசேர்ட், திருமண பட்டுவேஷ்டி, பட்டுசேர்ட் ஆகியவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்து, மொத்த வியாபாரம் செய்யும் ஏக உரிமையினை "அங்லோ சேர்ட் சென்டர்" நிறுவனம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். ராம்ராஜ் தயாரிப்பு போன்று போலிகளும் உள்ளதால் மக்கள் மிகக்கவனமான முறையில் இருக்கவும் என அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

AANGLO SHIRT CENTRE
Wholesale Dealers in Textiles and Importers of Ready Made Garments
# 65, Keyzer Street, Colombo-11, Sri Lanka.
Tel: +94 11 2344394 Fax: +94 11 2335135
E-mail: angloasc@gmail.com

நீங்களும் airtel விற்பனை படையணியினரோடு இணைந்துகொள்ளத் தயாரா?

இலங்கையில் துரிதமாக வியாபித்து வரும் தொலைபேசி வலையமைப்பான பார்த்தி எயார்டெல் லங்கா நிறுவனமானது குரல் அழைப்பு வசதி, தரவுச் சேவைகள் மற்றும் 3G சேவைகள் உட்பட பல்வேறு வசதிகள் அடிப்படையில் நாடு முழுவதுக்குமான சேவைகளை வழங்கி வருகின்றது.

நாடெங்கிலுமுள்ள விற்பனை பிரமுகர்களின் கீழ் விற்பனை படையணியில் இணைவதற்கு 18 வயதுக்கு மேற்பட்ட சவால்களை விரும்புவோருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மே 28ம் திகதி முதல் ஜூன் 1ம் திகதி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை உங்கள் அருகிலுள்ள விற்பனை பிரமுகர்களை கீழ் காணும் பட்டியலில் தேர்ந்தெடுத்து நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளுங்கள்.

புறக்கோட்டை: 0112 441 196 - கொள்ளுப்பிட்டி: 0112 385 264 - பொரளை: 0112 385 264 - தெஹிவளை: 0112 518 107/075 900 9065
திருகோணமலை: 026 222 6949/075 999 0888 - நுவரெலியா: 052 222 2676/075 209 5095 - மட்டக்களப்பு: 065 492 6926 - கண்டி: 081 222 6600
பொலநறுவை: 075 575 5750 - அம்பாறை: 075 498 2145/075 974 9759 - யாழ்ப்பாணம்: 021 222 5543 - மாத்தளை: 066 223 0758 - கல்முனை: 067 222 0112
வவுனியா: 024 222 2215 - அனுராதபுரம்: 025 222 0747/075 897 1971 - பாணந்துறை: 075 584 1042 - அம்பலாங்கொடை: 075 097 1111 - கராபிட்டிய: 075 584 1031
மாத்தறை: 075 584 1103 - இரத்தினபுரி: 075 584 1325 - பதுளை: 075 584 1040 - வெள்ளவத்தை: 075 498 8694 - கிரிபத்கொடை: 0112 905 402
கேகாலை: 035 222 1020 - குருநாகல்: 037 223 1343 - புத்தளம்: 032 226 5219 - சிலாபம்: 075 272 6726 - கம்பஹா: 033 223 4904
கடுவளை: 0112 538 988 - அவிசாவளை: 036 223 3732 - நீர்கொழும்பு: 031 222 3444 - மஹரகம: 0112 851 313

airtel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Multilac® PREMIUM PAINTS

MACKSONS PAINTS WORLDWIDE

www.multilac.com




# வாழ்த்துக்கள்!

2011 டிசம்பர் மற்றும் 2012 ஏப்ரல்

## உல்லாசப் பயணக் கப்பல் சவாரி

### வெற்றியாளர்கள்

| வெற்றியாளர்கள் பெயர் | | முகவரி | | முகவர் நிலையம் |
|---|---|---|---|---|
| டபிள்யூ. ஜீ. விபுல் தர்மசிரி | - | பெல்லன்ன ஓயா, இனமலுவ | - | பெரேரா ஹாட்வெயார், தம்புள்ளை |
| ஏ. ஏ. உவன்துல் சதார் | - | அல் மனார் வீதி, மருதமுனை | - | அஸ்லம் ஹாட்வெயார், மருதமுனை |
| ஐ. டீ. கே. பீ. பொன்சேகா | - | குணவர்தன மாவத்தை, கடவத்தை | - | ஏ. எஸ். ஜீ. பெயின்ற்ஸ் (பிரை) லிமிட்டட், களனி |
| ஜே. ஏ. பலுலூன் | - | பதுளுபிட்டிய வீதி, பதுள்ளை | - | மல்டி ஹாட்வெயார், பதுள்ளை |
| ஜே. எம். கே. ஜயவீர மெனிக்கே | - | திகல்தொருவ, குண்னேபன | - | குளோபல் ட்ரேடிங், கண்டி |
| எம். சீ. எம். சல்காது | - | பண்டாரநாயக்க மாவத்தை, பின்வல, பாணந்துறை | - | மல்வண்ன ட்ரேட் சென்டர், பாணந்துறை |
| எஸ். ஆர். அத்துகல | - | தோரவெருவ, மா-எலிய | - | லக்ஷ்மன் ஹாட்வெயார், மா -எலிய |
| வீ. ஜீ. ஆர். கே. சோமவீர | - | பமுனுகமுவ கந்த, வேவுடை | - | ரியல் என்டர்பிறைசஸ், வேவுடை |
| பீ. எச். எம். காசிம் | - | சாவியா வீதி, ஹெனமுல்ல, பாணந்துறை | - | நிவ் சிற்றி கலர் பேங்க், கொகுவளை |
| சீ. செல்லஹேவா | - | மாஹாரானுகேகொடை, கடவத்தை | - | பிரசன்ன ஹாட்வெயார், கடவத்தை |
| எம். ஏ. ஏ. இலியாஸ் | - | 2ன்ட் லேன், கொழும்பு வீதி, இரத்தினபுரி | - | சிற்றி பெயின்ற் சென்டர், இரத்தினபுரி |
| என். ஜீ. ஆர். என். ஜயசேன | - | துணுவில, அக்குரணை | - | திட்டப் பிரிவு |
| மஹிந்த ஹேவாபத்திரனகே | - | 'பிரார்த்தனா' கொடவில வீதி, கம்புருகமுவ, மாத்தறை | - | திட்டப் பிரிவு |
| ஆர். எம். சீ. த சில்வா | - | பொல்கொடை கார்டின், கெசெல்வத்தை, பாணந்துறை | - | திட்டப் பிரிவு |
| பீ. ஏ. டீ. சிந்தக | - | பின்னவலை வடக்கு, வகா | - | முனசிங்ஹ ஹாட்வெயார், வகா |
| எச். ஏ. என். சுதர்ஷனா | - | ரம்பதெனிய, கினிகஹாதென்ன | - | யுனைட்டற் கிளாஸ் ஹவுஸ் , கம்பளை |
| யூ. வீ. பெரேரா | - | பிலியந்தலை வீதி, மாஹாரகமை | - | விஜயந்த்த ஹாட்வெயார் ஸ்டோர்ஸ், மாஹாரகமை |
| எம். எஸ். ஏ. சிஜியான்தீன் | - | சம்போதீ மாவத்தை, பொடிமுல்லை, மாத்தறை | - | சாதிக் அன்ட் சன்ஸ், மாத்தறை |
| டபிள்யூ. ஏ. ஜயமான்ன | - | கணிஹிமுல்லை, தெரலபொல | - | லக்மால் ஹாட்வெயார், மினுவங்கொடை |
| டபிள்யூ. ஜீ. குமார பர்ணாந்து | - | அனாவாசல், கட்பிட்டி | - | நெஷனல் ஹாட்வெயார், கட்பிட்டி |
| டபிள்யூ. எம். டீ. மதுவன்த்தி | - | கொன்பிட்டிய, கொடகவெல | - | சந்திரா ஸ்டோர்ஸ், கொடகவெல |
| டபிள்யூ. எம். என். ரணசிங்ஹ | - | பிட்டபாஹமுன, மெல்சிறிபுர | - | தெல்கா என்டர்பிறைசர்ஸ், மெல்சிறிபுர |
| பீ. டீ. எஸ். வீரசிங்ஹ | - | தானாயம, பொல்காவலை | - | நிபொன் ஹாட்வெயார், பொல்காவலை |
| டீ. ஏ. பீ. சீ. பெரேரா | - | 'ரத்னாவில' வெண்ணவத்தை வீதி, வெல்லம்பிட்டிய | - | நிவ் மிஸ்ஹமீட், கொழும்பு -12 |
| டீ. எல். என். பர்ணாந்து | - | சிறிபால வீதி, கல்கிஸ்ஸை | - | மல்டீ கோர்ட், கல்கிஸ்ஸை |
| சஞ்சிவ பெரேரா | - | முத்தெட்டுவகொடை, பத்தரமுல்லை | - | பெதும் என்டர்பிறைசர்ஸ், பத்தரமுல்லை |
| பீ.ஏ.எஸ். சஞ்சிவனி | - | ஜயவர்தனபுர, அமன்தொலுவ, சீதூவை | - | ரோசா என்டர்பிறைசர்ஸ், சீதூவை |
| இர்பான் பகீர்தீன் | - | சமகி மாவத்தை, எந்தேரமுல்லை, வத்தளை | - | மல்டிலக் கலர் பேங்க், கொழும்பு -03 |
| சுதேஷ் குமார் குழந்தைவேல் | - | வட்டவிதானை வீதி, கல்முனை 02 | - | ஈஸ்ட்ரன் ஹாட்வெயார், கல்முனை |
| ஜே. ஒஸ்மான் தர்வின் பர்ணாந்து | - | போப் ஸ்ரீட், பேசாலை 08 | - | பர்ணாந்து ஹாட்வெயார், பேசாலை |
| ஆர். கேதிஸ்வரன் | - | அம்மால்குளம், துர்கை அம்மால் வீதி, கிளிநொச்சி | - | கரு டிரேடிங் கொம்பனி, கிளிநொச்சி |
| ஏ. ஜே. பர்ணாந்து | - | வெத மாவத்தை, தம்போவில, பிலியந்தலை | - | திட்டப் பிரிவு |
| எஸ். எஸ். அபயசேகர | - | கொட்டாவை வடக்கு, பன்னிப்பிட்டிய | - | எல் அன்ட் எச் ட்ரேற் அன்ட் சர்விஸ், பொரலஸ்கமுவ |
| ஐ. பீ. சீ. சந்திர குமார | - | விக்ரமசிங்ஹபுர, பத்தரமுல்லை | - | கலர் வேவுஸ், கொழும்பு 2 |
| ஏச்.எம். கருணாரட்ன | - | 'உலு நிவச', மாக்கதுவ, மாஹவை | - | மஜீட் கலர் பேங்க், மாஹொ |
| ஆர். டீ. எஸ். சேனவிரட்ன | - | ஏ.வீ.பீ. நிவச, மிஹிந்தலை வீதி. ரம்பேவெவ | - | இந்துநிலா ஹாட்வெயார், ரம்பேவெவ |
| டீ. என். குமார | - | 'பிரசாதீ' சமகிபுர, ஹக்களை, மொணராகலை | - | சிட்டி ஹாட்வெயார், மொணராகலை |
| எஸ். ஹரி விக்காஸ் | - | செட்டியார் தெரு, கொழும்பு -11 | - | ரோயல் ஹாட்வெயார், கொழும்பு -11 |
| அனுபமா கிஹானி | - | நீர்கொழும்பு வீதி, தாகொன்ன | - | வீரசிங்ஹ கன்ஸ்ரக்ஷன் அன்ட் ஹாட்வெயார், ஆடிஅம்பளம் |
| எல். எச். சீ. டீ அல்விஸ் | - | பிதும்பே, பாதுக்க | - | அருஷா என்டர்பிரைசஸ், பாதுக்கை |
| காமினி சுமனரட்ன | - | கஹாகொட, கட்டுகஸ்தொட்டை | - | மல்டிலக் கண்டி டிபோ சொவ்ரும், கட்டுகஸ்தொட்டை |
| எஸ். எம். அசாத் | - | நமதாஹகாவத்தை, கலேவலை | - | ஏ. எச். ஏம். ஹாட்வெயார் (பிரை) லிமிடட், கலேவலை |
| பீ. எல். உதய குமார | - | திவித்துறை போபகொடை, அக்குறஸ்ஸ | - | ஜயசுந்தர ஹாட்வெயார் (பிரை) லிமிடட், அக்குறஸ்ஸ |
| டீ. எல். சுமனசேன | - | நிவ் டவுன், கொத்மலை | - | கொத்மலை ஹாட்வெயார், கொத்மலை |
| டி. எச். தினேஷ் | - | தலுக்கெட்டிய, செவனகலை | - | மஹாகெதர பிம்ரோ டைல்ஸ், எம்பிலிப்பிட்டிய |
| எம். ஐ. எம் நயீம் | - | மதுரங்குளிய | - | நிவ் லங்கா ஹாட்வெயார், மதுரங்குளிய |
| கே. ஏ. டி. பீ. குருப்பு | - | தனகொலவத்த, ஹக்பெல்லாவக, யடியந்தொட | - | நில்பா ஹாட்வெயார், யடியந்தொட |
| பீ. கருணாரட்ன | - | சமரநாயக்க மாவத்தை, பண்டாரகமை | - | சிட்டி பெயின்ற் சென்டர், பண்டாரகமை |
| என். ஆர். டபிள்யூ. ஆர். குமார | - | விஜயபுர, கணேவத்த ரோட், வாரியபொல | - | சிட்டி ஹாட்வெயார், வாரியபொல |
| டபிள்யூ. ஜி. ஹெமலதா | - | மதுலியத்த வீதி, வட்டத்தர வேயங்கொடை | - | திஹாரிய கலர் பேங்க், திஹாரிய |
| எச். ஏ. கே. சந்தன | - | அமுனுகொல, கல்கமுவ | - | நிவ் ஐ.ஆர்.எஸ் ஹாட்வெயார், கல்கமுவ |
| ஜீ.ஏ. மெகொடவிக்ரம | - | 'நிபுனி' தணஹேன, தெங்கவத்த, முலட்டியான, மாத்தறை | - | சமரவிக்ரம சகோதரர்கள், முலட்டியான |
| ஜீ. பீ. சீ. ஏ. சோமலதா | - | சூரியகஸ்ஸல்ல, பதல்கும்புற | - | லங்கா ஹாட்வெயார், பதல்கும்புற |
| டபிள்யூ. எம். பீ. டபிள்யூ. குமாரி ரத்நாயக்க | - | ஹாகொல்ல ரோட், மாத்தளை | - | ரோயல் ஹாட்வெயார், மாத்தளை |
| தவராஜா | - | சாந்தா தோட்டம், அவரங்கல் வடக்கு | - | எஸ், வீ. என். டிரேடர்ஸ் அன்ட் இலக்றிகல்ஸ், அச்சுவேலி |
| பீ. தங்கதுரை | - | போஸ்ட் ஒபிஸ், கிரான், 30394 | - | கோல்டன் செரமிக்ஸ் அன்ட் இலக்றிகல்ஸ், மட்டக்களப்பு |
| பீ. பீ. டீ. பீ. விஜயரட்ன | - | யாழ் வீதி, மதவாச்சி | - | மெற்றோ லங்கா ஹாட்வெயார், மதவாச்சி |
| எம். எல். எ. மத்ரி | - | ஆர். எல். ரோட், ஏறாவூர்- 06. | - | ரமிஸ் ஹாட்வெயார் அன்ட் இலக்றிகல்ஸ், ஏறாவூர் |
| கீர்த்தனா பத்மநாதன் | - | விவேகநந்தா வீதி, காரைத்தீவு-06 (ஈ.பீ) | - | ஹமிதியா ட்ரேடிங் சென்டர், சாய்ந்தமருது |
| டி. புனிதராச | - | உன்னாபிளவு, முல்லைத்தீவு | - | சிவா ஹாட்வெயார், முல்லைத்தீவு |
| டி. மதிசுதன் | - | குலமங்கள், மல்லாகம் | - | அனோஜன் டிரேடர்ஸ், மல்லாகம் |
| கே. சச்சிதாநந்தன் | - | விடான்ஸ் லேன், சுண்டிகுளி, யாழ்ப்பாணம் | - | கந்தவேலன் டிரேடர்ஸ், யாழ்ப்பாணம் |
| என். நிரஞ்சன் | - | தம்பசிட்டி, பலாலி வடக்கு, பருத்தித்துறை | - | சிவராஜ் டிரேடிங்ஸ், பருத்தித்துறை |




Hotline 0772 222555

லீற்றர் ரூபா 740/- முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முட்டி மோதும் அமெரிக்கா 23



எது சரி?
எது பிழை?
08

விடுதலைப் போராட்டங்கள்



04



05

அடிமைகளின் மீட்பர்




07


# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 27 மே 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு



# மேன்மக்கள் கண்ணீர்

புலிகளுக்கு உதவினார்கள், சாப்பாடு கொடுத்தார்கள், தங்குமிடம் வழங்கினார்கள், உளவு பார்த்தார்கள், தாக்குதலுக்குத் திட்டம் தீட்டினார்கள், தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்தினார்கள் என்பன போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் வருடக் கணக்காக எந்தவித விசாரணையும் இன்றி நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை, மகசின் உள்ளிட்ட ஏராளமான சிறைகளில் ஏக்கத்தோடு தமது விடுதலைக்கான நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்


■ ஓரண்யன்


''... கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே...''

எப்போதோ ஔவை சொல்லி விட்டுப் போன வார்த்தைகள் இன்றளவும் யதார்த்தத்தில் அடிக்கடி தலையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

உலகின் நெடிய வரலாறு எண்ணற்ற சாமானியர்களின் குருதியாலும் வியர்வையாலுமே கட்டி யெழுப்பப்பட்டது. ஆனாலும் அந்த வியர்வைகளிலும், குருதியிலும் எல்லைமை பொருந்திய சிலர் தங்களின் பெயர்களைப் பொறித்து வரலாற்றை தங்களுடையதாக மாற்றிவிடுவார்கள். சாதாரணர்களின் எல்லாத் தியாகங்களும் அதிகாரத்தின் வாள் முனையில் காணாமல் போய்விடுவது உலகின் முதல் புள்ளியில் இருந்து இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. புராணங்கள், இதிகாசங்கள் எல்லாமே முடி தரித்த பெரும் குடிமக்களைப் பற்றிப் புகழ்ந்து தள்ளுகின்றனவே தவிர அவர்கள் மணி முடி சூடுவதற்காக சிதைந்து போன ஆயிரம் ஆயிரம் முள் முடி சூடிய மக்களை அந்த இலக்கியங்கள் கண்டுகொள்வதே இல்லை. இல்லாவிட்டால் காணாதது போல கடந்து சென்று விடுகின்றன.

* * *

பொன்சேகா! இலங்கை போரியல் வரலாற்றில் மறக்க முடியாத பெயர். தன்மீதான தற்கொலைத் தாக்குதலுக்குப் பின்னர் எந்தவித ஈவிரக்கமுமற்ற போரை தமிழ் மக்கள்மீது ஏவியவர். வெற்றி ஒன்று மட்டுமே பொன்சேகாவின் வெறியாக இருந்தது. மக்களின் இழப்புகள், ஓலங்கள் எதுவுமே அவர் கண்ணுக்கும் காதுக்கும் எட்டவில்லை. குடிமக்களின் குருதியைக் குடித்துக் கொண்டே குதூகலித்தார்.

போர் தர்மங்களை மறுதலித்தபடியும், குழந்தைகளினதும், பெண்களினதும் கதறலை நசுக்கியபடியும் முன்னேறிய பொன்சேகாவின் படைகள் நிலங்களை விழுங்கின. அந்த ஊழித் தாண்டவத்தில் தமிழர்களின் எல்லா நம்பிக்கைகளும் அழிந்து போயின. எல்லோரினதும் மான நரம்புகளும் அறுக்கப்பட்டு தடுப்புகளிலும் நலன்புரி நிலையங்களிலும் விலங்குகளாக்கப்பட்டார்கள். மதுக்கிண்ணங்களோடு கொழும்பு எக்காளமிட்டது.

போர் வெற்றி தந்த ஆனந்தத்தை தேர்தல் போட்டுடைத்தது. கூடி நின்று போர் செய்து தமிழர் வாழ்வறுத்தவர்களை தேர்தல் எதிர் எதிர் புள்ளிகளில் நிறுத்தியது. அதிகாரத்தின் இரு முனைகளும் முட்டி மோதிக்கொள்ள, பே(ா)ரரசருக்கு முன்னால் தளபதி மண்டியிட வேண்டியிருந்தது.

பொன்சேகாவை இனியும் விட்டுவைத்திருக்க ராஜபக்ஷ தயாராக இல்லை. அவர்களின் சுருக்குக் கயிற்றில் கைதியாகி வெலிக்கடைச் சிறைச்சாலையில் குடியேறினார் பொன்சேகா. ஒரு காலத்தில் பொன்சேகாவின் படைகளாக இருந்தவர்களே அவரை ஒரு நாயைப் போல இழுத்துச் சென்று இரும்புக் கம்பிகளுக்குள் தள்ளினர். அதன் பின்னர் கணவனின் கைதுக்கு நீதி கேட்டு இலங்கைக் கண்ணகியாக கறுப்புச் சேலையுடனும் கண்ணீர் கோடுகளுடனும் புறப்பட்டார் அ... பொன்சேகா. எதிர்க்கட்சிகள், சிங்கள மக்கள் அவரின் கண்ணீரை ஆதரித்தனர். கடைசியில் உலகப் பொம்மையின் சூத்திரக் கயிற்றை வைத்திருக்கும் அமெரிக்காவின் ஏவுதலில் பொன் சேகா சிறைமீண்டுள்ளார். நீதிமன்றம், வைத்தியசாலை என எங்கு சென்றாலும் காட்டுகின்ற இரட்டை விரலோடு வீதிகளில் பொன்சேகா வலம் மீண்டும் ஆரம்பமாயிற்று.

* * *

இலங்கையில் போர் மூண்ட பின்னர் தொடங்கிய கைது செய்தல், காணாமல் போதல், விசாரணை ஏதுமின்றி அடைத்து வைத்தல் என்ற நிகழ்வுகளால் ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறைக்குள் முடங்கிப் போனார்கள். இது போதாது என்று இறுதிப் போரின்போது படைகளிடம் சரணடைந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுப்பு முகாம்களுக்குள் அடைக்கப்பட்டார்கள். இவர்களில் எல்லோரதும் விவரத்தை வெளியிட அரசு விடாப்பிடியாக மறுத்து வந்தது.

... எண்ணிக்கையானோரையே தமது தடுப்பு முகாம்களில் வைத்திருப்பதாக படைத்தரப்பு காட்டிக் கொண்டது. எஞ்சியோர் பற்றி எதுவும் தெரியாது என்றும் அவர்கள் கை விரித்தனர். கண்ணீரோடும் கைகளில் குழந்தைகளோடும் வயிற்றில் பசியோடும் அலைந்து திரிந்த பெண்களால் கடைசி வரையில் தங்களது துணைவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று அறியவே முடியவில்லை.

பிள்ளைகளை நினைத்து அழுது களைத்துப்போன அம்மாமார் பிள்ளைகளின் புகைப்படங்களோடு அடிக்கடி நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியாதவர்களாயினர். ''இதோ இன்றைக்கு வெளியிடுகிறோம். நாளைக்கு வெளியிடுகிறோம்'' என்று தமது பிடியில் உள்ளவர்களின் பட்டியலை பகிரங்கப்படுத்தவுள்ளதாக அரசு பலமுறை 'சூக்காட்டியதை' நம்பி பலமுறை ஏமாந்ததுதான் மிச்சம். எதுவுமே நடக்கவில்லை.

தடுப்பில் உள்ளோர் தவிர, புலிகளுக்கு உதவினார்கள், சாப்பாடு கொடுத்தார்கள், தங்குமிடம் வழங்கினார்கள், உளவு பார்த்தார்கள், தாக்குதலுக்குத் திட்டம் தீட்டினார்கள், தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்தினார்கள் என்பன போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் வருடக்கணக்காக எந்தவித விசாரணையும் இன்றி நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை, மகஸின் உள்ளிட்ட ஏராளமான சிறைகளில் ஏக்கத்தோடு தமது விடுதலைக்கான நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். நாள்கள் மட்டும் நகர்கின்றனவே தவிர விடிவு வந்தபாடாயில்லை. வீட்டுத் தேவைக்காக படைகளுக்குத் தெரியாமல் பற்றிகளை கடத்தி வந்த குற்றத்துக்காக 10 வருடங்களுக்கும் மேலாக சிறையில்


(சூரியகாந்தி 22 ஆம் பக்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலங்காத மர்மம்

தே.பிரேம்

யாழ்ப்பாணத்தைப் பெரும் பரபரப்புக்குள் தள்ளிவிட்ட சிறுவன் ரஜிராம் கடத்தலின் மர்மங்கள் உடனடியாகத் துலங்குவதாக இல்லை. ஆனாலும் யாழ்ப்பாணத்தில் அவ்வப்போது காணாமல் போன சிறுவர்களுக்கும் இப்படி ஏதாவது நடந்திருக்குமோ என்ற அச்சத்தை அவர்களின் பெற்றோரிடம் ஏற்படுத்த இந்தச் சம்பவம் தவறவில்லை.

2011 ஜூன் மாதம் 8ஆம் திகதி பரமநாதன் ரஜிராம் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போதே அவன் காணாமல் போயிருந்தான்.





அழுது அடம்பிடித்து ஒருவாறு நீதிமன்ற அனுமதி பெற்று தன் தாயுடன் வீடு செல்லத் தயாராகும் ரஜிராம் (இடது), வைத்திய சாலையில் வீடு செல்ல அழுது அடம்பிடிக்கிறான் (வலது).

### வானில் கடத்தல்

"சைக்கிளில் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தேன். வானில் வந்தவர்கள் என்னைத் தங்களுடன் வரச் சொன்னார்கள். நான் மாட்டேன் என்றேன். பரவாயில்லை வா என்று கூறி என்னை அழைத்துப் போனார்கள்" என்கிறான் சிறுவன்.

வானில் ஏற்றப்படும் முன் அவன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தான். அந்தச் சைக்கிள் இப்போது எங்கே என்று தெரியவில்லை. அங்கிருக்கும் ஒரு வீட்டில் விட்டுவிட்டு வானில் ஏறிச் சென்றதாக சிறுவன் இப்போது கூறுகிறான். ஆனால், சைக்கிள் பொலிஸாராலும் இதுவரை மீட்கப்படவில்லை. ஆனால், ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில் சைக்கிளை எந்த வீட்டில் விட்டேன் என்று சரியாக அடையாளம் கூறுவதற்கு சிறுவனால் முடியவில்லை என்று அவனது தாயார் வனிதவத்சலா சொல்கிறார்.

ரஜிராம் சண்டிலிப்பாய் வடக்கு அ.த.க. பாடசாலையின் மாணவன். விளையாட்டிலும் ஈடுபாடு உடையவன். 4 வருடங்களின் முன்னர் அவனது அப்பா நோய் காரணமாக இயற்கை எய்தியிருந்தார். அவனுக்கு தரம் 10இல் கற்கும் அண்ணன் ஒருவனும் இருக்கிறான். தாயாரின் சகோதரி ஒருவர் வெளிநாட்டில் இருந்து நிதி உதவிகளை வழங்கி வருகிறார்.

### நகரில் சீருடை மீட்பு

தனது மகன் கடத்திச் செல்லப்பட்டார் என்பதில் அவருக்கு எந்தச் சந்தேகங்களும் இல்லை. "அவன் பள்ளிக்கூடத்துக்குப் போக விரும்பாத பிள்ளையில்லை. ஓடிப் போவதற்கோ யாருடனும் செல்வதற்கோ அவனுக்கு எந்த முகாந்திரமும் இல்லை" என்று கூறும் அவர், "இந்த விடயத்தை நான் சும்மா விடப் போவதில்லை" என்றும் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட போது சிறுவன் அணிந்திருந்த பாடசாலைச் சீருடை மற்றும் புத்தகப் பை என்பன ஐந்து சந்திப் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டன. அந்த வீட்டைச் சிறுவனே பொலிஸாருக்கு அடையாளம் காட்டினான்.

"நாங்கள் அங்கு சென்றிருந்த போது அந்தப் பகுதியில் ஒரு இரும்பு ஏற்றும் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனத்தில் முஸ்லிம் ஒருவர் அடிக்கடி எங்கள் பகுதிக்கு இரும்பு சேகரிக்க என வந்து சென்றிருந்தார். பின்னர் நீதிமன்றத்திலும் அவரை நான் கண்டேன்" என்று நினைவு கூருகிறார் தாயார்.

### சிக்கிய சிறுவன்

ரஜிராம் காணாமல்போன விடயம் தெரிந்திருந்த ஊரவர் ஒருவரே கடைசியில் யாழ். நகரிலுள்ள கடை ஒன்றில் அவனை அடையாளம் கண்டு அவனை நெருங்கிச் சென்று "நீ ரஜிராம் தானே!" என்று கேட்ட போது, இல்லை என்று கூறிவிட்டு கடையின் உள்ளே ஓடிச் சென்று துணி ஒன்றை எடுத்துத் தலையைப் போர்த்தி தன்னை மறைக்கப் பார்த்துள்ளான். அப்போது அவன் கடையில் ஓர் ஊழியனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

அந்த அயலவர் கொடுத்த தகவலை அடுத்து சண்டிலிப்பாய் பொலிஸாருடன் நகருக்கு வந்த தாயார் சிறுவனை மீட்டார். "விடயத்தைச் சொன்னதும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிவில் உடையில் உடனடியாகப் புறப்பட்டு வந்தே மகனைப் பிடித்தார்" என்று விவரிக்கிறார் வத்சலா.

தாயாரைக் கண்டதும் சிறுவன் "நீங்கள் எங்கே அம்மா காத்தான்குடிக்கு வந்தீர்கள்" என்று கேட்டுள்ளான். "பாவம்! அவனுக்கு தான் எங்கே இருக்கிறேன் என்பதே தெரியவில்லை. இரவு நேரத்தில் அவனை யாழ்ப்பாணம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் பிள்ளைக்கு இடம் தெரியவில்லை. நான் இது யாழ்ப்பாணம் தான் என்று சொன்ன பின்னரே அவனுக்கும் தெரிய வந்தது. அதற்குப் பின்னர்தான் 5 சந்திக்கு அழைத்துப்போய் சீருடைகள் இருந்த வீட்டைக் காட்டினான்" என்று கூறுகையில் வத்சலாவின் குரல் தளுதளுக்கிறது.

**சிறுவர்கள் காணாமல் போகும் சம்பவங்களின் பின்னணி மர்மங்கள் துலங்குவதாக இல்லை. ரஜிராமின் பிரச்சினை தீர விசாரிக்கப்பட்டால் மர்மங்களின் சில பகுதிகள் விடுவிக்கப் படக்கூடும். நீதித் துறையும் பொலிஸாரும் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது அவசியம்.**

### காத்தான்குடியில் வாழ்வு

"காத்தான்குடியில் உள்ள ஒரு வீட்டில் என்னைக் கொண்டு போய் விட்டார்கள். நான் வீட்டுக்குப் போகப் போகிறேன் என்றதும் மிரட்டினார்கள். பின்னர் நான் பேசாமல் இருந்துவிட்டேன். கொண்டுபோன அடுத்த நாள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் வெட்டிவிட்டார்கள். டொக்டரிடம் சொல்லலாம் என்றுதான் பார்த்தேன். ஆனால் கதைக்க விடவில்லை" என்று தனது ஒரு வருட வாழ்க்கையை விவரிக்கும் ரஜிராம், தன்னைப் பாடசாலைக்கு அனுப்பவில்லை என்றும் கூறுகிறான்.

"அவனை வைத்திருந்த வீட்டுக்கார அம்மா பாடசாலைக்கு அனுப்பியதாகச் சொல்கிறார். அப்படி நடந்திருந்தால் பிள்ளை பொய் சொல்லாது" என்பது வத்சலாவின் வாதம்.

காத்தான்குடியில் தான் இருந்த வீட்டிற்கு தண்ணீர் அள்ளி வருவது, அவர்களின் பிள்ளைகளை பாடசாலைக்குக் கூட்டிச் சென்று விட்டு அழைத்து வருவது, வீட்டு வேலை செய்வது என்பனவே தனக்குத் தரப்பட்ட பணிகள் என்று கூறுகிறான் ரஜிராம். கிட்டத்தட்ட ஒரு கொத்தடிமையாக அவன் நடத்தப்பட்டுள்ளான். ஆனால் அதற்காகத்தான் அவன் கடத்தப்பட்டானா என்பது இன்னமும் சரியாகத் தெரியவரவில்லை.

### தப்பிக்கும் முயற்சி

ரஜிராமின் கடத்தலுடன் தொடர்புடைய மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். காத்தான்குடியில் அவன் இருந்த வீட்டின் உரிமையாளரான மொஹமட் நஜீமும் அவர்களில் அடக்கம். அவரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைத்துக்கொண்டு ஏனைய இருவரையும் நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது. அவர்கள் இருவரும் யாழ். நகரில் வர்த்தகம் செய்து வருபவர்கள்.

ரஜிராமைக் கடத்திச் சென்றவர் என்று நம்பப்படும் பிரதான சந்தேகநபர் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

பொலிஸார் இந்த பிரச்சினை குறித்து விசாரித்து வரும் அதே நேரத்தில், மற்றொரு தரப்பினர் மூலம் வத்சலாவை அணுகிய காத்தான்குடி தரப்பினர், இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்காமல் விடும்படி கேட்டிருக்கின்றனர்.

"நான் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும். என்னுடைய பிள்ளையைப் பிரிந்து நான்பட்ட வேதனை எனக்குத்தான் தெரியும். தாங்கள் அவனை நன்றாகப் படிப்பிப்பார்கள் என்றும் வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கும்படியும் கேட்டார்கள். நான் மாட்டேன் என்று சொல்லிவிட்டேன்" என்கிறார் வத்சலா. இது தவிர வேறு அச்சுறுத்தல்கள் ஏதும் இந்த விடயத்தில் தனக்கு வரவில்லை என்பதையும் அவர் உதயனிடம் குறிப்பிட்டார்.

### துலங்காத மர்மம்

ரஜிராம் கடத்தப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையில் ஏன் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டான் என்ற மர்மம் இன்னும் துலங்கவில்லை.

பிறப்புச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்காகவே தான் அழைத்து வரப்பட்டதாகச் சிறுவன் கூறுகிறான். ஆனால், பிறப்புச் சான்றிதழ் பெற சிறுவன் நேரில் வர வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்ற யதார்த்தம் உதைக்கிறது.

இந்த நிலையில் ரஜிராமின் மீள் வருகையின் பின்னணி என்ன என்பது ஆழமான கேள்விகளுக்கு உரியது. கடத்திய இடத்திலேயே அவனைக் காட்சிப்படுத்தியவர்களின் நோக்கம் என்ன என்பதும் விசாரிக்கப்பட வேண்டியது.

### அதிகாரிகள் அக்கறை

சிறுவர் நன்னடத்தை அலுவலகமும் இந்த விடயம் தொடர்பில் அதிக கரிசனை எடுத்துச் செயற்பட்டு வருகிறது.

யாழ். குடாநாட்டில் புதிய கலாசாரமாக சிறுவர்கள் காணாமல்போய்க் கொண்டிருக்கையில் இந்த விவகாரத்தை இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

கடந்த 19ஆம் திகதியும் யோகேஸ்வரக் குருக்கள் செந்தூரன் என்ற 15 வயதுச் சிறுவன் கொடிகாமத்தில் காணாமற்போயுள்ளார்.

வெள்ளிக்கிழமை பிற்பகலில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஒருவரின் மகன் யாராலோ கடத்தப்பட்டு பின்னர் காலையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்பும் இப்படிப் பட்ட சில சிறுவர் காணாமல் போன சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றின் பின்னணி மர்மங்கள் துலங்குவதாக இல்லை. ரஜிராமின் பிரச்சினை தீர விசாரிக்கப்பட்டால் மர்மங்களின் சில பகுதிகள் விடுவிக்கப்படக்கூடும். நீதித்துறையும் பொலிஸாரும் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது அவசியம்.

உதவி: நிரோஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு தவிர்ந்த தெரிவு ஏதுமுண்டா?

அன்ரன்

தெரிவுக்குழுவுக்குப் போவதா இல்லையா என்பதில் தீர்க்கமான முடிவை எடுத்து அறிவிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்குகிறது. யதார்த்தத்துக்கும் கள உணர்வுகளுக்கும் இடையிலான வெளியில் கூட்டமைப்பு இப்போது சஞ்சாரித்துக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

**எதிர்ப்பும் ஆதரவும்**

தெரிவுக்குழுவுக்குப் போகக் கூடாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக நம்புகிறார்கள். களத்தில் உள்ள தமது ஆதரவாளர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியே அவர்கள் இந்த முடிவை எடுக்கின்றனர். குறிப்பாக தமிழரசுக் கட்சி, டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளின் ஆதரவாளர்கள் தெரிவுக்குழு காலத்தைக் கடத்தும் அரசின் உத்தி என்பதை ஆணித்தரமாக நம்புகின்றனர். எனவே அவர்களை மீறிய ஒரு முடிவைச் சிந்திப்பது அரசியல் களத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிக்கலானது என்பது புரிந்து கொள்ளக் கூடியதே.

மறுபுறத்தில் தெரிவுக்குழுவுக்குப் போவதைத் தவிர வேறு என்ன தெரிவு உள்ளது என்ற யதார்த்தமான கேள்விக்குப் பதிலளிக்க முடியாத நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் அவரோடிணைந்த மிகச் சிலர் உள்ளனர். உண்மையும் அதுதான்.

**10 மாதங்களில் சாதித்தது என்ன?**

2011 ஜூலை மாதம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான வரைபை நாடாளுமன்றத்தில் முன்வைத்தது அரசு. உறுப்பினர்கள் அனைவரும் நியமிக்கப்பட்டு குழு செயற்படத் தொடங்கிய 6 மாத காலத்தில், இனப்பிரச்சினைக்கு இந்தக் குழு தீர்வு ஒன்றைக் காணும் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது அரசு (அது சுதந்திரக் கட்சி மட்டும்தான் என்று ஜனாதிபதி சொல்கிறார்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடியான பேச்சுக்களை நடத்தி வந்தது.

நாடாளுமன்றில் தெரிவுக்குழுவுக்கான வரைபு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதன் ஊடாகவே தீர்வு என்று ஜனாதிபதி சுருதியை மாற்றத் தொடங்கினார். அதன் பின்னர் நேரடிப் பேச்சுக்களும் தடைப்பட்டன.

தெரிவுக்குழுவுக்கான வரைபு முன்வைக்கப்பட்டு 10 மாதங்கள் முழுமையாகக் கடந்து விட்ட நிலையில் பேச்சு, தீர்வு என்ற விடயங்களில் இம்மியளவும் முன்னேற்றம் இல்லை. ஆக மொத்தத்தில் தெரிவுக் குழுவில் இடம்பெற்றால் என்ன இடம்பெறாவிட்டால் என்ன அரசு தனது காலம் கடத்தும் உத்தியை கைவிடப்போவதில்லை என்பது தெளிவாகிறது.

தெரிவுக் குழுவில் இடம்பெற்றால் அரசின் காலம் கடத்தும் செயற்பாடுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணைபோய் விடும் என்று காரணம் கூறியவர்களால், கடந்த 10 மாதங்களும் வீணே கழிந்துபோனமைக்கான நியாயங்கள் எதனையும் கற்பிக்க முடியாது.

தெரிவுக்குழுவுக்குக் கூட்டமைப்பு வரவில்லை. அதனால்தான் தீர்வு தள்ளிப் போகிறது என்ற காரணத்தை அரசு சொல்வதற்கு உதவியது தவிர வேறு எந்த நன்மையை யாவது தெரிவுக்குழுப் புறக்கணிப்பு மூலம் தமிழர் தரப்பு பெறவில்லை.

இந்த நிலை இன்னும் எத்தனை மாதங்களுக்கு நீடிக்கும் என்ற வரையறை தெரியாத நிலையில் தெரிவுக்குழுவுக்கு வரமாட்டேன் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி நிற்பது இருட்டு அறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடுவதைப் போன்றதுதான்.

**பதில் என்ன?**


மறுபுறத்தில், "தெரிவுக் குழுவுக்குப் போயிருந்தால் 6 மாதங்களில் அரசு தீர்வைக் காணுமா இல்லையா என்பதையாவது தெரிந்திருக்க முடியும், இப்போது அதுவும் இல்லாமல் 10 மாதங்கள் கடந்துவிட்டனவே" என்று எழுப்பப்படப் போகும் கேள்விகளுக்கான பதிலை இப்போதே கூட்டமைப்பு தயார்படுத்த வேண்டும்.


தெரிவுக் குழுவை முழுமையாக நிராகரித்துவிட்டு தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வழி வகை என்ன என்பதையும் உடனேயே கூட்டமைப்பு தெளிவுபடுத்த வேண்டும்.

கூட்டமைப்பின் அடுத்த நிலைத் தலைவர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கூறுவதுபோன்று மக்களைத் திரட்டி அகிம்சை வழியில் போராடுவதுதான் மாற்று வழி என்றால், அதனைச் செய்வதற்கான அரசியல் கட்டமைப்பை, வளவாய்ப்புக்களை கூட்டமைப்புக் கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை.

வவுனியாவில் சில தினங்களுக்கு முன்னர் கூட்டமைப்பு ஒழுங்கு செய்த, தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டத்தில் சில, பல நூற்றுக்கணக்கானவர்களையே அதனால் திரட்ட முடிந்துள்ளது. இந்தக் கூட்டம் நிர்ப்பந்தித்து வந்ததல்ல, தானாகச் சேர்ந்தது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறிகொண்டாலும் மிகப் பெரும் சக்தியாக மக்களை வீதிக்கு இறக்கிப் போராடும் வசதியை, வளத்தை அது கொண்டிருக்கிறது என்று எண்ணுவதற்கில்லை.

அதற்கான கட்டமைப்புக்களை கிராமிய மட்டங்களில் ஏற்படுத்தி முன்னகர்வதற்குக் கூட்டமைப்புக்கு இன்னும் பல வருடங்கள் செல்ல வேண்டியிருக்கும். ஏற்கனவே இவ்வாறு கூறப்பட்ட போதும் கடந்த இரண்டு வருடங்களில் அவை சாத்தியப்பட்டிருக்கவுமில்லை. இன்றைய நிலையில் மக்களைப் போராட்டத்துக்கு அழைத்தால் அணி திரள்வார்களா என்ற சந்தேகம் எல்லாத் தமிழ்க் கட்சிகளுக்கும் இருக்கின்றன.





இத்தகைய பின்னணியில் தெரிவுக் குழுவைத் தவிர்த்து மற்றொரு தெரிவு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டா என்பதே இப்போதுள்ள மிகப் பெரிய கேள்வி.

தெரிவுக் குழுவில் இடம்பெறுவது தீர்வைத் தராவிட்டாலும், அரசு தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றது என்பதை நிரூபிப்பதற்காகவது உதவும் என்ற நிலைதான் நம்முன் உள்ளது.

எனவேதான் தெரிவுக்குழுவிற்குள் செல்வதா விடுவதா என்ற கேள்விக்குறியில் கூட்டமைப்பின் தலைமை நிற்பதாகத் தெரிகிறது.

உண்மையில் தெரிவுக் குழுவுக்குப் போவதும் விடுவதும் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில் கத்தி மேல் நடக்கும் வித்தை தான்.

தெரிவுக்குழுவுக்குப் போய், 6 மாத காலத்துக்குள் தீர்வு ஒன்றைக் காண முடியாமல் போனால் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு தமிழர்களைக் காட்டிக் கொடுத்து விட்டது கூட்டமைப்பு என்ற விமர்சனத்தை அல்லது தெரிவுக் குழுவுக்கு போகாமல் புறக்கணித்ததன் மூலம் கிடைத்த சந்தர்ப்பத்தையும் விட்டுவிட்டது என்ற விமர்சனத்தை எதிர்காலத்தில் அது எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் முடிந்த வரையில் தெரிவுக் குழுவுக்குள் போவதற்கு முன்னதாக அதன் நோக்கம் திட்டங்களை உறுதிப்படுத்துவதற்கும் கால வரையறையை உறுதிப்படுத்துவதற்கும் இரா. சம்பந்தன் முயற்சிக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்தியங்குவது இந்த விடயத்தில் பயனுள்ளது என்று அதனாலேயே அவர் கருதுகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் அது தமிழர்களின் தீர்வுக்கு உதவுகிறதோ இல்லையோ மஹிந்தவை மேலும் சிக்கலுக்குள் மாட்டி விட்டு சிங்கள மக்களுக்கு முன் அவரை அம்பலப்படுத்த அது உதவும் என்பதால் தெரிவுக்குழு விடயத்தில் கூட்டமைப்புடன் அது ஒத்துழைக்கக்கூடும். நாடாளுமன்றத்தில் ரணில் அண்மையில் இது தொடர்பில் விடுத்த அறிக்கையை அதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இருந்தாலும் தமிழ் மக்களின் நன்மை கருதி தீர்க்கமான, உறுதியான முடிவை கூட்டமைப்பின் தலைமை எடுக்க வேண்டியிருக்கிறது. அதில் தெரிவுக் குழுவைத் தவிர்த்த தெரிவு ஒன்று அதற்கு இப்போதைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

## கேட்டவையும் கேட்கக்கூடியவையும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் பாதுகாப்பான முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்குச் சில நிபந்தனைகள் விதிப்பதுடன் அது தொடர்பிலான உறுதி மொழிகளையும் பெற முயற்சிக்கிறது என்று அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

- தெரிவுக்குழு முன்மொழிவில் கூறப்பட்டுள்ளபடியே 6 மாத காலத்துக்குள் அரசியல் தீர்வு காணப்படும் என்பதை அரசு உறுதிப்படுத்துவது.
- தெரிவுக் குழுவின் செயற்பாடுகள், முன்னேற்றங்கள், அடைவுகள் குறித்து 3 மாத காலத்தில் இடைக்கால அறிக்கை ஒன்றை விடுவது.
- தெரிவுக் குழுவில் பேச்சுக்கள் இடம்பெற்று வரும் சமகாலத்திலேயே அரசு (சுதந்திரக் கட்சி) கூட்டமைப்புப் பேச்சையும் தொடர்வது. அதில் எட்டப்படும் தீர்வைத் தெரிவுக் குழுவின் முன் வைப்பது.

ஆகியவற்றை கூட்டமைப்பு நிபந்தனைகளாக அரசிடம் முன்வைக்கிறது. ரணிலின் ஊடாக இவை முன்வைக்கப்பட்டுள்ளன என்று அலரி மாளிகை வட்டாரங்கள் கூறுகின்றன. எனினும் இவற்றுக்கான அரசின் பதில் திருப்திகரமாக இல்லை என்பதையும் சம்பந்தன் வெளிப்படுத்தியிருந்தார்.

இவை தவிரவும் கூ[illegible] களை அரசிடம் தெரி[illegible] நிப தனைகளாக முன்வைக்க முடியும்.

- தெரிவுக் குழுவில் இடம்பெறுவதற்கு முன்னர் சகல அரசியல் கைதிகளையும் விடுவித்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவது.
- எஞ்சியுள்ள போராளிகளை விடுவிப்பதற்கான கால அட்டவணை ஒன்றை அரசு வெளியிடுவது.
- கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு, இறுதிப் போர் தொடர்பில் தெரிவித்த பரிந்துரைகளையாவது தெரிவுக் குழுவுக்கு முன்பாக நடைமுறைப்படுத்துவது.
- தெரிவுக்குழு தீர்வு வரும் வரை வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதை ஒத்தி வைப்பது.
- இவை எல்லாவற்றுக்குமான உறுதி மொழிகளை, உத்தரவாதத்தை இந்தியாவையும் உள்ளடக்கிய மூன்றாம் தரப்பு ஒன்றின் முன்பாக அரசு வழங்குவது.

தெரிவுக் குழுவுக்குச் செல்வது காலத்தை இழுத்தடிக்க அரசுக்கு உதவும் செயல் என்று எதிர்க்கும் தமது அரசியல் ஆதரவாளர்களின் நம்பிக்கையீனத்தை போக்க இந்த நிபந்தனைகள் கூட்டமைப்புக்கு உதவக்கூடும்.

அதேவேளை சுதந்திரக் கட்சி – கூட்டமைப்பு பேச்சுக்கள் வெளிப்படைத் தன்மை கொண்டவை[illegible] இருப்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதிப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## விடுதலைப் போராட்டங்கள்

# தோற்பதில்லை

■ ஜெரா

துவாரக் எனும் ஆபிரிக்கப் பழங்குடி இனத்தின் விடுதலைப் போராட்டம் வெற்றியடைந்திருக்கின்றது. துவாரக் மக்களின் தாயகமான அசாவாத் தனிநாடாகியிருக்கின்றது. அந்தக் கறுப்புத் தேசத்தின் தேசிய சுதந்திரத்துக்கான போராட்டம் இரு தசாப்த காலத்தில் வென்றிருக்கின்றது. உலகம் முழுவதிலும் ஆயுத ரீதியலான இன விடுதலைப் போராட்டங்கள் தோல்வியைத் தழுவி வருகின்ற நிலையில் ஆபிரிக்காவில் மட்டும் சாத்தியப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு தென் சூடான். இந்த ஆண்டு மாலியிலிருந்து பிரிந்து சென்ற அசாவாத். அடுத்த ஆண்டில் விடுதலை பெறுவதற்கான போராட்டங்களின் பட்டியலும் இப்போதே தயார் நிலையில் இருக்கின்றது.

**யார் துவாரக்?**

ஆபிரிக்காவில் வாழும் வேற்றினங்களான அரேபியர்கள், பெர்பர்கள் போல துவாரக் இன மக்களும் வாழ்கிறார்கள். உலகில் ஐந்து நாடுகளில் அவர்கள் பரவி இருந்த போதிலும் அவர்களுக்கென ஒரு நாடில்லை. ஆனால் அவர்களின் தொன்மை வரலாறுகளில், இந்த மக்கள் சுயமான ஆட்சி அதிகாரத்தை தம்வசம் வைத்திருந்தனர் என்பதற்கு வலுவான சான்றுகள் உள்ளன.

**எப்படி அடைந்தனர் விடுதலை?**

மாலி என்றொரு நாடு மேற்காபிரிக்காவில் இருக்கின்றது. அதிகளவில் சர்வதேச ஊடகங்களின் கண்ணில் படாத தேசமாகத்தான் இது இப்போதும் இருந்து வருகின்றது. அவ்வப்போது தீவிரவாத தாக்குதல்களுக்கு கொடுக்கும் தலைப்புச் செய்திகளில் மாலியின் பெயர் இடம்பெற்றிக்கும். ஆனால் அங்கு 1990 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வந்த இன விடுதலைப் போராட்டம் பற்றி எந்த ஊடகங்களும் அலட்டிக்கொள்ளவில்லை. ''நமக்கு இதில் எந்த லாபமும் இல்லை. பிறகு ஏன் அதில் தலையைப் போடுவான்'' என ஒபாமாவும் விலகிக்கொண்டார். ஆனாலும் யாருமே கவனியாத தருணத்தில் போராட்டம் வென்றிருக்கின்றது. இந்த ஆண்டு ஏப்ரல் 6இல் துவாரக் போராளிகள் தம் நாட்டின் சுதந்திரப் பிரகடனத்தை இணையதளங்களுக்கு வழங்கிய பின்னர்தான் பலர் அசாவாத்தின் வரைபுப் படத்தை உலக வரைபடத்தில் தேடிக் கண்டுபிடித்திருகின்றனர்.

**அசாவாத்-சுருக்கமான அறிமுகம்**

மாலியின் வடக்குப் பாகத்தில் அசாவாத் எனும் மாகாணம் இருக்கின்றது. 17 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஆங்கிலேயர்களின் காலணியாதிக்கம் பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளுக்கு எல்லைக் கோடுகளை வழங்கியது. இனம், தனித்துவம், பண்பாடு, வரலாறு என எதையும் மதிக்காது தம் நிர்வாக நலன்களுக்கு அமைவாக ஆங்கிலேயர்கள் ஆபிரிக்காவில் தேசங்களை வரையறைப்படுத்தினர். இதனால் அதுவரை தனித்துவத்துடனும், தமது பண்பாட்டுடனும் வாழ்ந்த பல ஆபிரிக்கப் பழங்குடியினர் ஒரே நாட்டுக்குரியவர்களாயினர். இப்படியான ஒரு சூழ்நிலையால் மாலி எனும் சகாராப் பாலைவன நாட்டுக்குள் அடக்கப்பட்டனர் துவாரக் பழங்குடி இனக் கைதிகள். ஆனால் அவர்களின் தாயகமாக மாலியின் வடக்கு மாகாணத்துக்குள் உள்ளடங்கியிருந்த அசாவாத் இருந்தது. மாலியின் வரவால் தம் தாயகத்தை துவாரக் மக்கள் இழந்து அடிமையாகினர்.

**தொடங்கப்பட்டது விடுதலைப் போராட்டம்**

1960ஆம் ஆண்டு வரைக்கும் மாலியில் நீடித்த பிரான்சியயின் ஆதிக்கம் துவாரக் மக்களின் விடுதலைக் கோரிக்கைகளை கவனத்தில் எடுக்கவில்லை. அந்த ஆண்டில் இருந்து 1990 வரைக்கும் விடுதலைப் போராட்டம் அசாவாத்தில் சாத்தியமாகும் தருணங்களைத் தொட்டிருந்தன. ஆங்காங்கே விடுதலை குறித்த தேவை பற்றிய பரப்புரைகள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆயினும் மேற்கு சார்புடைய மாலியின் அரசு இவர்கள் மீது எப்போதும் தன் கண்ணை வைத்தே இருந்தது. மாலியின் பெரும்பான்மை தேசிய அரசு துவாரக் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தன் இராணுவ பலங்கொண்டு அடக்கியது.

**கடாபி இவர்களுக்கு மட்டும் மீட்பர்**

ஆனால் குறித்த காலத்தை அண்மித்த பகுதியில் லிபியாவில் அரபுத் தேசியத்தை முன்வைத்து தன் அதிகாரத்தைக் கட்டமைத்துக் கொண்டிருந்த கடாபி துவாரக் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு கரிசனை காட்டினார். போராடத் துணிந்த இளைஞர்களை லிபியாவிற்கு அழைத்து பயிற்சி கொடுத்தார். ஆயுதங்களும் கொடுத்தார். ஈழத்தவர்களுக்கு இந்தியா இருந்த ஸ்தானத்தில் அப்போது கடாபி துவாரக் மக்களுக்கு இருந்தார்.

**அசாவாத் மக்கள் விடுதலை இயக்கம் ஆயுதம் ஏந்தியது**

''அசாவாத் மக்கள் விடுதலை இயக்கம்'' என்ற போராட்ட அமைப்பு அந்தத் தேசத்துக்கான ஆயுதப் போராட்டத்தை 1990ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுத்து வந்தது. கிட்டத்தட்ட அது கடாபியின் துணை இராணுவக் குழு போலவே செயற்பட்டது. இடையிடையே லிபியாவில் ஏற்படும் கலவரங்களை அடக்குவதற்கும் இந்த அசாவாத் மக்கள் விடுதலை இயக்கம் தன்னாலான உதவிகளை கடாபிக்குச் செய்து வந்தது.

**இங்கேயும் சமாதான சூழ்ச்சி**

90களின் பின்னர் பலம்மிக்க விடுதலை இயக்கமாக மாறிவந்த அசாவாத் இயக்கத்தின் முன்னால் தாக்குப் பிடிக்க முடியாத மாலி அரசு அவர்களுடன் சமாதான உடன்படிக்கைகளில் ஈடுபட்டது. பேச்சுக்களில் காலங் கடத்தியது. அசாவாத்துக்குள் இருக்கும் செங்கோ எனப்படும் துவாரக் மக்களுக்கு எதிரான இனக்குழுமத்துக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டியது. இதன் விளைவுகளால் அந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இடை நடுவே கைவிடப்பட்டன. மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமாகச் செயற்பட்டது கடாபி தலைமையிலான பேச்சுக்குழு. இந்தப் பேச்சுக்களின் தோல்விகளோடு கடாபி முற்று முழுதாக அசாவாத் மக்களின் பக்கம் மாறினார்.

**கடாபிக்கு உதவிய புரட்சிப்படை**

அசாவாத்தின் விடுதலைக்கான முயற்சியில் அவர் தீவிரமாக இறங்கியிருக்கையில், தன் ஆட்சியின் ஸ்திரமின்மையை எதிர்கொண்டார். உலகம் முழுவதும் அவரைக் கைவிட்ட நிலையில் அசாவாத் மக்கள் விடுதலை இயக்கம் தன் நன்றிக் கடனைச் செலுத்த முன்வந்தது. மாலியின் படைகளோடு போரிட்டு, அசாவாத்தின் சில நகரங்களை மட்டும் தன் வசம் வைத்துக்கொண்டிருந்த அந்தப் புரட்சிப் படை எல்லாவற்றையும் கைவிட்டு லிபியாவிற்கு புறப்பட்டது. அங்கும் அவர்களுக்கு போர்க்களம்தான்.

கடாபியின் படைகளோடு சேர்ந்துகொண்டு லிபியக் கிளர்ச்சியாளர்கள் மீது விடுதலை வெறியோடு கடிய தாக்குதலை மேற்கொண்டனர். ஆயினும் நேட்டோவின் நவீன படைத்திறன் வலுவிற்கு முன்னால் அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஆனால் இதுவரை கண்டிராத, கடாபி அவர்களின் கண்ணில் காட்டியிராத பல நவீன ஆயுதங்களை தொட்டுப்பார்க்கும் சந்தர்ப்பங்களை போராளிகள் அனுபவித்தனர். இதெல்லாம் தமக்குச் சொந்தமானால் அசாவாத் விடுதலை அடையும் நாள் விரைவாகும் என தங்களுக்குள் திட்டமிட்டுக் கொண்டனர். அவ்வாறான சந்தர்ப்பதற்திற்காக இயங்கத் தொடங்கினர் கடாபி மிக மோசமான சாவைச் சந்தித்தார்.

**ஆயுத வடிவில் வந்த அதிஷ்ட தேவதை**

இதுதான் சந்தர்ப்பம். கையில் கிடைத்த ஆயுதங்களோடும் கடாபியின் ஆயுதக்கிடங்குகளில் இருந்து கையகப்படுத்திய ஆயுதங்களோடும் அசாவாத் விடுதலை இயக்கம் தன்நாடு நோக்கிப் பறந்தது.

இடையில் என்னொரு அதிஷ்டமும் அவர்களுக்கு அடித்தது. பிரான்ஸ், கிளர்ச்சிப் படைகளுக்கு உதவும் வகையில் பல நவீன ஆயுத பொட்டகங்களை சகாராப் பாலைவனப் பகுதிகளில் பரசூட் மூலம் இரகசியமாக இறக்கியிருந்தது. வழியில் இதையும் அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

ஆயுதங்களோடு அசாவாத்தின் எல்லைக் காவலரண்களுக்கு திரும்பிய போதுதான் தமக்கு கடவுள் இன்னொரு அதிஷ்டத்தையும் வழங்கியிருக்கிறார் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்தது. மாலியின் ஜனாதிபதிக்கு எதிரான இராணுவப் புரட்சி ஒன்றுக்கு அந்த நாட்டு இராணுவம் தயாராகிக்கொண்டிருந்ததால், மாலியின் இராணுவம் நிலை கொண்டிருந்த காவலரண்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

ஒரு மாதம் தம்மிடம் இருந்த ஆயு தங்களைக் கொண்டு மூர்க்கத்தனதமாகச் சண்டைபிடித்த னர். அடுத்தடுத்து அசாவாத்தின் முக்கிய நகரங்கள் போராளிகளின் கைகளில் விழுந்தன. ஒரு மாதத்தில் அசாவாத்தின் அனைத்து நகரங்களில் இருந்தும் மாலிப் படைகள் துரத்தப்பட்டன. பெற்ற விடுதலையை பிரகடனப் படுத்த அசாவாத் விடுதலை இயக்கம் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. ஏப்ரல் 6இல் அசாவாத்தின் விடுத லைப் பிரகடனத்தை துவாரக் மக்கள் கொண்டாடினர். அதன் பிறகு ஒவ்வொரு மேற்கு நாடும் தடைகளையும், தடை நீக்கங்களையும் தற்போது மேற்கொண்டு வருகின் றன. ஆயினும் தமது இருபது வருட விடுதலைப் போராட்டக் வேள்விக்கு கிடைத்த இந்த அறுவடையை தொடர்ந்தும் தக்கவைக்க அனைத்து நாடுகளும் தம் பக்கம் நிற்கும் என அந்த மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




**மாலி சிறு குறிப்பு**

1980இல் மாலி பிரான்சின் முற்றுகைக்குள்ளாகி அதன் குடியேற்ற நாடாகியது. இது பிரெஞ்சு சூடான் அல்லது சூடானியக் குடியரசு என அழைக்கப்பட்டது. 1959இன் தொடக்கத்தில், மாலி, செனெகல் ஆகியன மாலிக் கூட்டமைப்பு என்ற பெயரில் இணைந்தன. இந்தக் கூட்டமைப்பு ஜூன் 20, 1960இல் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது. சில மாதங்களில் இந்தக் கூட்டமைப்பில் இருந்து செனெகல் விலகியது. மாலிக் குடியரசு, மொடிபோ கெயிட்டா தலைமையில் செப்ரெம்பர் 22, 1960இல் பிரான்சிடம் இருந்து பிரிந்தது.

1968இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மொடீபோ கெயிட்டா சிறைப்பிடிக்கப்பட்டார். அதன் பின்னர் மவுசாட்ர்ரோரே என்பவர் 1991 வரை ஆட்சியில் இருந்தார். அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து 1991இல் மீண்டும் இராணுவப் புரட்சி இடம் பெற்றது. 1992இல் அல்பா ஓளமார் கொனாரே என்பவர் மாலியின் முதலாவது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தார். 1997இல் மீண்டும் இவர் ஜனாதிபதி ஆனார். 2002இல் இடம்பெற்ற தேர்தலில் அமடூ டுமானி டவுரே ஜனாதிபதியாகி 2012இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது பதவி இறக்கப்பட்டார். இப்போது அங்கு இராணுவம் இடைக்கால அரசை நிறுவியுள்ளது.

நன்றி - விக்கிபீடியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தை பிறந்து 6 மாதங்கள் கடந்துவிட்ட போதும் தனது உடல் எடையைக் குறைத்து 'சிலிம்'மாக மாறவில்லை என்று முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் மீது பாய்ந்து விழுந்திருக்கிறது லண்டனில் வெளியாகும் 'டெய்லி மெயில்' பத்திரிகை. கர்ப்பத்துக்குப் பின்னரும் அவர் இப்படிக் காட்சி அளிப்பது அவரது ரசிகர்களின் மனதை நோகடிக்கும் செயல் என்றும் அந்தப் பத்திரிகை கண்டித்துள்ளது. மெலியிறது குறித்து அக்கறையே இல்லாம இருக்கிறியேம்மா என்றும் உருகி வழிகிறது 'மெயில்'. இணையத் தளத்தில் உலாவரும் ஒரு காணொலித் துண்டில், 'அதிர்ச்சியூட்டும் வகையில் பெருத்து வரும் ஐஸ்வர்யா' என்று தலைப்பிடப்பட்டுள்ளதுடன் பின்னணி இசையாக யானையின் பிளிறல் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதற்கெல்லாம் பயப்படாமல் குண்டு உடம்புடனேயே கான்னிஸ் திரைப்பட விழாவின் செங்கம்பள வரவேற்பில் கலந்து கொண்டார். போதாதற்கு "தாய்மையைப் போல் மகிழ்ச்சியானது வேறேதுமில்லை. அதற்குமுன் உடம்பு ஒரு பொருட்டே இல்லை" என்று சரவெடியாக பத்திரிகையாளர்களைப் போட்டுத் தாக்கியிருக் கிறார் அம்மணி.




பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு கடுமையான தடைகளைக் கொண்டுள்ள சவூதி அரேபியாவில் எல்லாத் தடைகளையும் கடந்து முதலாவது பெண் திரைப்பட இயக்குநராகப் பரிமளித்துள்ளார் ஹாபியா அல் மன்சூர். ஆனால் அவரால் தனது படத்தை உள்ளூரில் உள்ள திரையரங்கில் பார்க்க முடியாது. ஏனெனில் தீவிர இஸ்லாமிய நாடான சவூதியில் திரைப்படங்களுக்கு தடை இருக்கிறது.




அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சின்ன வயசில் இப்படித்தான் இருந்தார். 1970களில் உயர்தரப் பாடசாலை மாணவனாக இருந்தபோது ஜூயா புகைப்பாராம் என்பதையும் புதிய புத்தகம் ஒன்று புட்டு வைத்துள்ளது.

உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் அமெரிக்கர்களுக்கு அலுப்புக் கொடுக்காமல் விடுவதில்லை என்பதில் அல்குவைதாவினர் தீவிரமாகச் செயற்படுகிறார்கள். அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் சூத்திரதாரி எனப்படும் காலித் ஷேக் முகமட்டின் மிக அண்மைய படம் இது. 2003ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட ஷேக் இப்போது குவாண்டநாமோ சிறையில் இருக்கிறார். அங்கிருந்து அவரது படம் எப்படி வெளியே போனது என்று மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள் அமெரிக்க அதிகாரிகள்.





பூனை எலியைப் பிடிக்கும். இந்தப் பூனைகளோ ஒருவரின் வாழ்க்கையையே பிடித்து விட்டன. இஸ்ரேலில் உள்ள இந்தப் பூனைகளின் உரிமையாளரான பெண்ணின் கணவன் நீதி கேட்டு நீதிமன்றப் படியேறினார். ஆனால், மனைவியோ எனக்கு கணவனை விட பூனைகள்தான் பெரிது என்று நீதிமன்றத்தில் நேரடியாகவே சொல்லிவிட்டார். பிறகென்ன! விவாகரத்து ஆகிவிட்டது. கணவரிடம் கேட்டால், ஒன்று இரண்டு என்றால் பரவாயில்லை 550 பூனைகளை வளர்த்தால் யாரால் தான் பொறுத்துக் கொள்ள முடியும் என்று பொருமுகிறார்.

வரலாற்றை மீளவும் படைப்பதற்கான முயற்சியை வெற்றி பெறுகிறதோ இல்லையோ அதற்காகப் பலரும் முயன்று கொண்டே இருக்கிறார்கள். 1945 ஓகஸ்ட் 14ஆம் திகதி ஜப்பான் மீதான அமெரிக்காவின் வெற்றி அறிவிக்கப்பட்டதும், நியூயோர்க்கில் கூடிய கடற்படைச் சிப்பாய்களில் ஒருவர் வீதியில் போன தாதி ஒருவரை வளைத்து இழுத்து மூர்க்கமாக முத்தமிட்டார். அந்தப் படம் உலகப் புகழ் பெற்றதாக இன்றும் விளங்குகிறது. 57 வருடங்களின் பின்னர் மீண்டும் அதேபோன்ற ஒன்றுக்கு முயன்றிருக்கிறார் அமெரிக்காவின் பிலபல பாடகி கேத் பெர்ரி. நியூயோர்க், புரூக்கிளினில் நடைபெற்ற விசேட நிகழ்வு ஒன்றில் கடற்படைச் சிப்பாய் ஒருவனை அழைத்து, "உனக்கு அந்தப் படம்" ஞாபகம் இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, "என்னைக் கீழே விழுத்தி விடாதே" என்ற நிபந்தனையுடன் கொஞ்சினார் கேத்.








உலகின் முதலாவது வெற்றிகரமான கர்ப்பப்பை மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தைகள் இல்லையே என்று ஏங்கும் பெண்களுக்கு வரப்பிரசாதமாக இது அமையும் என்று மருத்துவ உலகு கருதுகிறது. பேர்யா சேர்ட் என்ற இந்தப் பெண்ணுக்கு 7 மணி நேர அறுவைச் சிகிச்சையின் பின்னர் புதிய, ஆரோக்கியமான கர்ப்பப் பை பொருத்தப்பட்டுள்ளது. பிறக்கும்போதே இவருக்குக் கர்ப்பப் பை இல்லாமல் இருந்தது. கார் விபத்தில் இறந்துபோன பெண் ஒருவரின் கர்ப்பப் பையே இவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர் ஆரோக்கியமான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். பிள்ளைகளைப் பெறுவதற்குச் சிரமப்படும் இளம் பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். பிரிட்டனில் மட்டும் கர்ப்பப் பை இல்லாமல் பிறந்தவர்கள், புற்றுநோயால் அது அகற்றப்பட்டவர்கள் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று 15,000 இளம் பெண்கள் தமது தாய்மைக் கனவுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்கிறது ஒரு கணிப்பு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

■ உ. சிலாமணி

# கொச்சைப்படுத்தும் அரசு கொதித்துப் போயுள்ள தமிழ்க் கைதிகள்



சரத் பொன்சேகா விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தம்மையும் விடுவிக்குமாறு தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை எனக் கூறியதுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கைதிகள் சிறைச்சாலை உணவைத் தவிர்த்து வெளியிருந்து உணவைப் பெற்று உண்கிறார்கள் என்று நாடாளுமன்றத்தில் கூறி போராட்டத்தைக் கொச்சைப் படுத்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முயன்றுள்ளார்.

அவரது இந்தக் கருத்தால் தமிழ் அரசியல் கைதிகள் கொதித்துப் போயுள்ளனர். ''தாங்கள் உண்மையாகவும் நேர்மையாகவுமே பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், சிறைச்சாலை அதிகாரிகள் தமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர்; அவர்களுக்கு உண்மை தெரியும் என்று கூறிய கைதிகள், தம்மைப் பற்றிய அரசின் கீழ்த்தரமான கருத்துக்கள் தமக்கு வேதனையையும் விசனத்தையும் கோபத்தையும் ஏற்படுத்துகின்றன என்றும் கைதிகள் என்னிடம் கூறினர்'' என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

கைதிகள் விடயத்திலும் அரசு தனது இனவாதப் போக்கைக் கைவிடவில்லை என்பதையே பொன்சேகா மற்றும் தமிழ்க் கைதிகள் விவகாரங்களில் அரசு நடந்து கொள்ளும் விதம் காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

எப்படி இருந்தபோதும் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் விரைவில் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. மீண்டும் ஒருமுறை ஒரு மாத கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக அரசு சொல்லி வரும் விசேட நீதிமன்றம் என்ற கதையே இம்முறையும் சொல்லப்பட்டுள்ளது.

''எங்களுக்கு அவர்களது உறுதி மொழியில் நம்பிக்கையில்லை. பல தடவைகள் அவகாசம் வழங்கியும் எதுவித முன்னேற்றமும் இல்லை. இருந்தும் இறுதியாக ஒரு தடவை மீண்டும் அவகாசம் வழங்குகின்றோம்'' என்று போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அரசியல் கைதிகள் தெரிவிக்கின்றனர்.

மிக நீண்ட காலமாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் அடிக்கடி இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதும், பின்னர் உறுதி மொழிகளை நம்பி அதனைக் கைவிடுவதும் வாடிக்கையாக இடம்பெற்று வருகின்றது.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவர். இராணுவத்துக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்ததில் மோசடி, வெள்ளைக் கொடி வழக்கில் பொய்யான தகவல்கள் வழங்கியமை, 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தின் போது, இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற இராணுவத்தினருக்குப் புகலிடம் வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. அவற்றில் சிலவற்றுக்கு அவருக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சர்வதேச நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக சரத் பொன்சேகா விடுவிக்கப்பட்டார்.

குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வரும் வேளையிலேயே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு பொன்சேகா விடுவிக்கப்பட்டுள்ளார். குற்றவாளியான பொன்சேகாவே விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், எதுவித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாத நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறையில் வாடுவதற்கான நியாயம் ஏதுமில்லை.

தங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றில் விசாரணை நடத்துமாறு தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுக்கும் நேரத்தில், நீதிமன்றில் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர் பொது மன்னிப்பில் வெளியே வருகின்றார். இங்கே சிங்களம், தமிழ் என்ற தராசில் சிங்களமே வென்றிருக்கின்றது. என்னதான் எதிரியாக இருப்பினும் அவர் சிங்களவராக இருந்ததால் மன்னிப்பு கிடைக்கின்றது. எதுவித குற்றமும் செய்யாதவரானாலும் தமிழனாக இருப்பதால் தொடர்ந்தும் சிறையில் வாட வேண்டியிருக்கின்றது.

சிங்களமும், தமிழும் இரண்டு சமாந்தரப் பாதைகள்தான். தமிழர்கள் என்னதான் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தினாலும், என்னதான் இணக்க அரசியல் நடத்தினாலும் இறுதியில் முடிவுகள் எல்லாமே சிங்களவர்களுக்குச் சார்பாகவே எடுக்கப்படும் என்பதை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துள்ளது. சட்டவாக்கத் துறை எப்போதும் பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் இருப்பதால் அவர்களது கையே பலமாக இருக்கின்றது.

அமெரிக்காவும் தனக்குச் சார்பான மேற்குலகு சார்பு கொள்கையை கொண்டுள்ளவராக பொன்சேகா இருப்பதால் அவரை விடுவிக்க அழுத்தம் கொடுத்தது. ஆனால் அதே அழுத்தத்தை அது தமிழ்க் கைதிகள் விடுவிப்பு விடயத்தில் கொடுக்கவில்லை. எனவே தமிழ் அரசியல் தலைமைகளே இந்த விடயத்தில் தொடர்ச்சியான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி கைதிகள் விடுவிப்பை விரைவுபடுத்த வேண்டும்.

# கைவிடப்படும் விதிமுறைகளால் விபரீதம்

■ சோபனா

யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்து வரும் வீதிவிபத்துக்களால் அநாவசியமான உயிரிழப்புகளை நாளாந்தம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். விபத்துக்களால் ஏற்படும் இழப்புகள் இந்த அநாவசியமான உயிரிழப்புக்கள் தொடர்பாக நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணத்தில் உள்ளோம்.

அபிவிருத்திகள் ஒரு புறம் இடம்பெற்றுக் கொண்டிருக்க இன்னொரு புறம் அநாவசியமான உயிரிழப்புகளை நாம் சந்திப்பது கவலைக்கு உரியதொன்று.

பிரதேச ரீதியாக ஏற்பட்ட அபிவிருத்தி, பொது மக்களின் தேவை, மனித உழைப்பின் வேகம் போன்ற காரணங்கள் தனிமனிதர்கள் மத்தியில் வாகனப் பாவனையை அதிகரிக்க வைத்துள்ளன.

பொது மக்களின் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க போக்குவரத்து வசதிகளும் நவீன மயப்பட்டதுடன் தனிமனித சுதந்திரத்திற்கு ஏற்றால் போல் வளர்ச்சியடைந்தும் கொண்டிருக்கின்றன.

இத்தகைய மாற்றங்களால் போக்குவரத்தின் போது வாகன நெரிசல், வீதி விபத்து, பழுதுபடும் வாகனத்தின் திருத்தச் செலவு போன்றவற்றை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஒவ்வொரு வாகன உரிமையாளருக்கும் ஏற்படுகிறது.

எமது போக்குவரத்தை இலகுபடுத்த கண்டுபிடித்துக் கொடுக்கப்பட்ட வாகனங்களை நாம் சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். சைக்கிளில் ஏறி இருந்து கொண்டு விமானம் ஓட்ட நினைப்பதும், மோட்டார் சைக்கிளில் ஏறி இருந்து கொண்டு ஆகாயத்தில் பறக்க நினைப்பதும் ஆபத்துக்கு வழி வகுப்பவைதான்.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகளால் பெருந்தெருக்கள் யாவும் காப்பெற் வீதிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. இது போக்குவரத்துக்கு சாதகமானதாக இருந்தாலும், வாகனச் சாரதிகள் அதனை உரிய முறையில் பயன்படுத்தத் தவறுவதால் இவ்வாறான வீதி விபத்துகள் அதிகரிக்கின்றன.

கடந்த காலங்களில் இவ்வாறு வீதி விபத்துகள் இடம்பெறாமல் இல்லை. ஆனால் தற்போது இவை அளவுக்கு அதிகமாக இடம்பெறுகின்றன என்பது வேதனைக்கு உரியதொரு விடயம்.

இடம்பெறும் வீதி விபத்துக்களில் அதிகமாக இளவயதினரே அநாவசியமாக உயிரிழக்கின்றனர். ஆனால் இந்த விபத்துகள் ஏன் ஏற்படுகின்றன? இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் வாகனச் சாரதிகளே.

ஏ-9 வீதியில் நாளாந்தம் அதிகரித்து வரும் வாகன நெரிசல், பொதுமக்களின் அதிகரித்த வாகனப் பாவனை, மற்றும் போக்குவரத்துத் தேவைகள் என்பவற்றால் நாளாந்தம் வீதிகளில் பெருமளவில் வாகனங்கள் பயணிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலங்களில் மாட்டு வண்டி, சைக்கிள் எனப் பயணங்களை மேற்கொண்ட மக்கள், தனி மனித உழைப்பின் அபிவிருத்தியால் மோட்டார் சைக்கிள், ஹயஸ், பஸ் என போக்குவரத்துக்கான சாதனங்களை விரிவுபடுத்தியுள்ளனர்.

போக்குவரத்தின் போது வாகனத்தைச் செலுத்துவோரில் அதிகமானோர் இளவயதினராக இருப்பதால், வாகனத்தைச் செலுத்தும் போது வேகக் கட்டுப்பாடின்றி அதிவேகமாக விதி முறைகளை அலட்சியம் செய்து வாகனத்தைச் செலுத்த முனைகின்றனர். இளவயதினரின் இந்தத் துடியாட்டமான செயற்பாடே வீதி விபத்துகள் அதிகளவில் ஏற்பட முக்கிய காரணமாக அமைகிறது.

வாகனத்தைச் செலுத்தும் போது வாகனத்தின் தரத்திற்கு ஏற்ற விதத்திலும், வீதியின் தன்மைக்கு ஏற்ற விதத்திலும் வேகக் கட்டுப்பாட்டுடன் வாகனங்களை செலுத்த வேண்டும். பதற்றம், அலட்சியத்துடன் அதிவேகமாக வாகனத்தை வேண்டிய வேளையில் செலுத்துவதால் கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வாகன அனுமதிப்பத்திரம் பெற்று வாகனம் செலுத்தும் ஒருவர் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக நிறையவே அறிந்திருக்க முடியும். ஆனால் அதனைப் பலர் உரியமுறையில் கடைப்பிடிப்பது இல்லை.

இந்த நிலையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வீதி விபத்துகள் தொடர்பாக சாரதிகள் கவனம் செலுத்த வேண்டும்.

அபிவிருத்திகள் ஒரு புறம் இடம்பெற்றுக் கொண்டிருக்க இன்னொரு புறம் அநாவசியமான உயிரிழப்புகளை நாம் சந்திப்பது கவலைக்கு உரியதொன்று.

எனவே வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப சாரதிகளும் பாதசாரிகளும் செயற்பட்டு அநாவசியமான உயிரிழப்புகளையும் உடைமை இழப்புகளையும் தவிர்க்க முயல்வோம். ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதானமும் பொறுமையும் அவசியம்

சங்கர்

சிறுபான்மை இனமக்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ள சம்பவங்கள் இரண்டு கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளன.

காரைநகரில் மனவளம் குன்றிய சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற சம்பவம் அதில் ஒன்று. கடத்திச் செல்லப்பட்டு முஸ்லிமாக மாற்றப்பட்ட சண்டிலிப்பாயைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் தொடர்பான சம்பவம் இரண்டாவது.

இந்த இரண்டு சம்பவங்களிலும் முஸ்லிம்கள் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்பது இந்து மற்றும் கிறிஸ்தவ தமிழர்களிடம் கொதிப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இரும்பு சேகரிக்கச் சென்ற இரண்டு முஸ்லிம்களே காரைநகரில் சிறுமியை வன்புணர முயன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதேபோல் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிறுவனை ஒரு வருடத்துக்கு முன்னர் முஸ்லிம் நபர்கள் கடத்திச் சென்று காத்தான் குடியில் உள்ள வீடு ஒன்றில் கொத்தடிமையாக வைத்திருந்தமையும் பிரச்சினையாக மாறியுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்களாலும் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் செய்வதறியாது தடுமாறி நிற்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராமல் இருக்க வேண்டும். ஒரு சில தனிமனிதர்களின் தவறுகள் தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவைப் பாதிக்க இடமளிக்கக் கூடாது. எனவே உணர்வுபூர்வமான இந்தப் பிரச்சினைகளை நுட்பமாகக் கையாள வேண்டியது காலத்தின் தேவையாகும். அத்துடன் இவற்றில் நீதியும் சரிவர நிலைநாட்டப்பட வேண்டும்.

தமிழ், முஸ்லிம் இனங்களின் தலைமைகள் பொறுப்புணர்வுடனும் நிதானமாகவும் நடந்து கொண்டு இரண்டு இனங்களுக்கும் இடையிலான நல்லுறவுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது.

அராஜகமாக ஆட்சி நடத்தும் மஹிந்த தலைமையிலான அரசை வீட்டுக்கு அனுப்புவோம் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் எதிர்க் கட்சிகளின் கூட்டு வலுப்பெற்றுவரும் நிலையில் சிறுபான்மை இனமக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் கைங்கரியங்கள் திட்டமிட்டே மேற்கொள்ளப்படவும் கூடும் என்ற கருத்தையும் மறுப்பதற்கில்லை. இந்த இரண்டு சம்பவங்களையும் கூடத் தமிழ் முஸ்லிம் இனங்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவும் நோக்க முடியும். அத்தகைய பொறிகளுக்குள் இரு தரப்புகளுமே வீழ்ந்து விடாமல் இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத் தேர்தல் நடைபெறவுள்ள சமயத்தில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொண்ட சக்திகள் திட்டமிட்டே தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இன முரண்பாடுகளை வளர்த்துச் செல்ல இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்கான ஆரம்பப் புள்ளியாகவே யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களைக் கொள்ள முடியும்.

எனவே மஹிந்தவின் நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ் முஸ்லிம் மக்கள் வீழ்ந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வது இந்த இரண்டு இன மக்களதும் தலைமைகளுக்கும் உள்ள பெரும் பொறுப்பு.




# அடிமைகளின் மீட்பர் ஆபிரஹாம் லிங்கன்

பா.உண்மை

ஆபிரஹாமின் தந்தை தோமஸ், கென்டகியிலிருந்து வேறு எங்காவது போய்விட வேண்டும் என்று நினைத்தார். அந்தச் சின்னஞ்சிறிய ஊரில் தனக்கோ தன் பிள்ளைகளுக்கோ நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதை அவரால் நம்ப முடியவில்லை. இடம்பெயர அவர் முடிவெடுத்ததற்கு அதுதான் காரணம்.

அன்றைய சூழ்நிலையில் அமெரிக்காவில் புதிதாக முளைத்த மாகாணங்கள் எல்லாம் முன்னேற்றப் பாதையில் நடை போட்டுக் கொண்டிருக்க, கென்டகி மட்டும் சாபம் வாங்கிய ஊரைப்போல் கல்வி, பொருளாதாரம் எல்லாவற்றிலும் பின் தங்கியிருந்தது.

போதாக்குறைக்கு வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்குமான அடிதடிகள், மோதல்கள் வேறு. இவை எல்லாமும் சேர்ந்த போது தோமஸ் லிங்கனுக்கு வேறு எங்காவது போய் உழைத்து தன் குடும்பத்தை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணம் தானாகவே வந்தது.

சரி! ஊரைவிட்டுப் போக முடிவு செய்தாகிவிட்டது. ஆனால், போகிற இடத்தில் பிழைக்க பணத்துக்கு என்ன செய்வது? தோமஸ் தன் வீட்டையும் சிறிய இடத்தையும் விற்க முடிவு செய்தார். அது ஒன்றும் பெரிய சொத்துக் கிடையாது. ஆனாலும் யாரும் வாங்க முன்வரவில்லை. மிகச் சொற்ப விலைக்குத் தான் விற்க வேண்டியதாயிற்று. 20 டொலர்களும் பத்து பீப்பாய்கள் விஸ்கிக்கும்தான் வீட்டை விற்க முடிந்தது தோமஸால்.

வீட்டின் மொத்த மதிப்பு, கிட்டத்தட்ட முந்நூறு டொலர்கள் என்று தோமஸ் லிங்கனுக்கு ஒரு மதிப்பு இருந்தது. ஆனாலும் என்ன செய்ய? அவ்வளவு பணம் கொடுக்க யாரும் அப்போது முன்வரவில்லை.

ஒரு படகைத் தயார் செய்துகொண்ட தோமஸ், ரோலிங் ∴போர்க் என்கிற இடத்தில் அதை நிறுத்தியிருந்தார். வீட்டுக்குத் தேவையான பொருள்களையும் விஸ்கிப் பீப்பாய்களையும் படகில் ஏற்றினார். பிறகு தன்னந்தனியாக ஒஹியோ ஆற்றில் படகைச் செலுத்திக்கொண்டு, இண்டியானா மாகாணத்தை நோக்கிப் போனார்.

வழியில் படகு விபத்துக்குள்ளானது. கொண்டு போனப் பொருள்கள் எல்லாம் மூழ்கத் தொடங்கின. எப்படியோ சில ஆள்களை உதவிக்கு வைத்துக் கொண்டு, பொருள்களை வெளியில் எடுக்கப் போராடினார் தோமஸ். ஆனாலும் எல்லாவற்றையும் மீட்க முடியவில்லை. அந்த விபத்தில் கொண்டு போன விஸ்கியில் மூன்றில் இரண்டு பகுதியும், முக்கியமான சில வீட்டு உபயோகப் பொருள்களும், விவசாயத்துக்குப் பயன்படும் கருவிகளும் ஆற்றோடு அள்ளுண்டு போயின.

அதற்குப்பிறகு, ஒருவழியாக மிச்சம் இருந்த பொருள்களை தோம்ஸ்சன் ∴பெர்ரி என்ற இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்ந்தார். அங்கிருந்து பதினெட்டு மைகள் தூரத்தில், இண்டியானா மகாணத்தில் இருந்த ஸ்பென்ஸர் கவுன்ட்டி என்ற இடத்துக்கு அவற்றை வண்டியில் ஏற்றிக்கொண்டு போனார். சில பொருள்களை உடையாமல் கொண்டு போவது மிகச் சிரமாக இருந்தது.

இங்கு ஓர் ஆளைப் பிடித்து பொருள்களைப் பத்திரமாக வைத்திருக்கச் சொல்லி ஒப்படைத்து விட்ட தோமஸ், தாம்ஸன்ஸ் ∴பொர்ரிக்கு வந்தார். அங்கிருந்து தோமஸ், கால் நடையாகவே கென்டகிக்கு வந்து சேரந்தார். ஏனெனில் அவரது கைகளில் சில்லறைகள் கூடக் கிடையாது அப்போது.

★

1816 -ஆம் ஆண்டு . இலையுதிர் காலம். ஆபிரஹாமின் குடும்பம் கென்டகியிலிருந்து இடம் பெயர்ந்தது. பழைய வீட்டிலிருந்து எழுபது அல்லது எண்பது மையில்கள் தூரத்தில் இருந்தது புதிய இடம். ஆனால், பாதை மிக மோசமாக இருந்தது. சில இடங்களில் அவர்களே மரம் செடி கொடிகளை வெட்டிப் பாதையை ஏற்படுத்திக் கொண்டு பயணம் செய்ய வேண்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டம்-அறிக்கை: எது சரி எது பிழை



■ விகோம்

மாணவர் சக்தி மாபெரும் சக்தி. இது எந்தவொரு நாட்டுக்கும் பொருந்தக்கூடிய வாசகம். ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியாக இவர்கள் இருப்பதால் அவர்களுக்கான மதிப்பும் மரியாதையும் எந்தச் சந்தர்ப்பத்திலேயும் கொடுக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

இந்த அரிய வாய்ப்பை அல்லது ஜனநாயக உரிமையைத் தவறாகப் பயன்படுத்துதல், கருவியாகப் பயன்படுத்துதல் என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தமிழ்த் தேசிய இனத்தின் சின்னமாக விளங்கி வருகின்றது. இதற்காக காலத்துக்குக் காலம் அது பல்வேறு வகையில் விலை கொடுத்துள்ளது. வரலாற்றுப் பதிவுகளை, சாதனைகளைக் கொண்டுள்ள இந்தப் பல்கலைக்கழகம் விடுதலைப் போராட்டத்திற்கு முன்னதான அரசியல் காலத்திலும் விடுதலைப் போராட்டக் காலத்திலும் வடக்கு, கிழக்கு தமிழர் பிரச்சினை தொடர்பில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்தது. போருக்குப் பின்னர் நிர்வாக நிலையில் ஏற்பட்ட தளம்பல் தமிழ் மக்கள் பிரச்சினையில் முழுமையான பங்களிப்பைப் பாதித்துள்ளது எனலாம்.

ஆனால், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிர்வாகத்தினரும் மாணவர்களும் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் தங்களால் ஆன செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்காக அவர்கள் பல்வேறு வகையில் நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர்.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் வீதியில் வைத்து தாக்கப்பட்ட போது 'எங்களுக்கு பல்கலைக் கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்புத் தர வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகம் இதற்கு சரியாகப் பதில் தர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

மாணவர்கள் இப்படி ஒரு கோரிக்கையை முன்வைத்தது சரியானதே. அதற்கான முழுமையான காரணம் அவர்களிடத்தில் உள்ளது.

> ❝ பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பை பல்கலைக்கழக நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது சரியானதே. அதற்கான முழுமையான காரணம் அவர்களிடத்தில் உள்ளது.

ஆனால், ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட விதம், மாணவர்கள் நடந்துகொண்ட விதம் பதிலுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் கூறிய பதில் இவை மூன்றுமே அந்தந்தத் தரப்பினரது உரிமைகளை துஷ்பிரயோகம் செய்வதாக உள்ளது.

சக மாணவன் நடு வீதியில் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவனுக்கும் தமக்கும் பாதுகாப்புக் கோரி மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரின் உருவப் படத்தை எரியூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கண்ணாடியையும் கல்லால் எறிந்து உடைத்திருந்தனர்.

ஆவேசம், ஆக்ரோஷம், ஆத்திரம் இவை எந்தளவுக்கு தாம் அடைய நினைக்கும் முயற்சியில் வெற்றியைத் தரும் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய அதேவேளையில் நாம் எதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றோம் என்பதை முற்கூட்டியே தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு மாணவர்களிடத்தே உருவாக வேண்டும்.

உண்மையில் சக மாணவன், பல்கலை மாணவன் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை பல்கலைக் கழகச் சமூகமே தட்டிக் கேட்க வேண்டிய சூழ் நிலையில் அவர்கள் தங்களுக்குள்ளேயே முரண் பட்டுக்கொண்டனர் என்பதே உண்மை. இதற்குப் பல்கலைக் கழக நிர்வாகம் மாணவர்கள் மீது கொண்டுள்ள வித்தியாசமான பார்வை காரணமாகியது. இது கடந்த வருடத்தில் நடைபெற்ற சம்பவங்களிலும் தெளிவாகியிருந்தது.

எங்களுக்கு வளாகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்புத் தாருங்கள் என மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினர் கண்டன அறிக்கை வெளியிடும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. இதில் தவறு இரண்டு பக்கமும் இருப்பதால் யாரும் பொறுப்புக்கூற முடியாதவர்களாக உள்ளனர்.

ஒரே நாளில் மாணவன் தாக்கப்பட்டதற்கும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்கும் கண்டன அறிக்கையை யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்டிருந்தது. இங்கு கண்டன அறிக்கைகள் இரண்டும் எது சார்ந்து விடுக்கப்பட்டது என்பது கேள்வியாக வுள்ளது. மாணவர்களைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக மாணவன் தாக்கப்பட்டதையும் கண்டித்திருக்கலாம் என்று ஒருவர் பல்கலைக்கழக நிர்வாகத்தை குற்றஞ்சாட்டினார். இன்னொருவர் ''படிச்சதுகளுக்கு எதை எப்படிச் செய்கிறது என்று தெரியாதோ. யாரோ ஒருவன் அடிச்சிட்டுப் போக அந்த அம்மாவுடன் ஏன் சண்டைக்குப் போவான்'' என்றார்.

இந்த முரணான கருத்து வெளிப்பாட்டிற்கு காரணமாகி இருக்கிறது பல்கலைக்கழக சமூகம். இங்கு மாணவர்கள் தமக்கான உரிமைகளை உரிய சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக்கெள்ள வேண்டும். அப்போதுதான் பல்கலைக்கழக நிர்வாகத்தின் குற்றச்சாட்டில் இருந்து விடுபடுவதோடு தமது உண்மை நிலைப்பாட்டையும் வெளிப்படுத்திக் கொள்ளலாம். ஏட்டிக்குப் போட்டி அறிக்கை விடுவதாலோ கண்டிப்பதாலோ ஆரோக்கியமான முடிவுகள் எதுவும் கிடைத்து விடா.

பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் மாணவர்களின் உரிமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முன்னிற்க வேண்டும். பதிலாக சுயமான சிந்தனையுடன் செயற்படுவது இன்னும் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் உருவாக்கும்.

■ நித்தியா

# கலாசார சீரழிவுக்கு திரைப்படங்களும் காரணமா?

நமது சமூகத்தில் இளைஞர்கள் போக்கு மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் அவர்களிடம் உண்மையான அறிவும் தேடலும் அற்றுப்போகின்றமையே . தமது இளமைப் பருவத்தை வீணான பொழுது போக்கு களிலும் அர்த்தமற்ற செயற்பாடுகளிலுமாக வீணே செலவிடுகின்றனர்.

நவீன ஊடகங்களின் ஊடாகவே இளைஞர்கள் மோசமான சீரழிவுகளைச் சந்தித்து வருகின்றனர். நவீன ஊடகங்கள் என்னும் போது எல்லோரும் முதலில் கூறுவது சினிமா சம்பந்தப்பட்ட திரைப்படத் தொலைக்காட்சிகளைத்தான். அதாவது சினிமாவில் மூழ்கித் திளைக்கும் இன்றைய இளைஞர்கள் இசையையும் ஆபாசக் காட்சிகளையும் தமது அன்றாடப் பொழுது போக்காகக் கொள்கின்றனர். இதனாலே சீரழிவுகள் பல்கிப் பெருகுகின்றன என்பது பலரது பொதுவான கருத்து

ஆனால் இன்றைய தலைமுறையின் கலாசாரச் சீரழிவுக்கு திரைப்படங்களும் ஒரு காரணமே தவிர முழுக் காரணமும் அதுவே என்று கூறிவிட முடியாது. ஏனெனில் சமுதாயத்தை சீரழிப்பதற்காக திரைப்படங்கள் தயாரிக்கப்படுவது நோக்கமல்ல. சினிமா என்பது சமகால சமூக நடப்புக்களின் பிரதிவிம்பம். அது சமூக நடப்புக்களை யதார்த்தமாகவோ அல்லது சற்று மிகைப்படுத்தியோ காட்டி வருகிறது. உலகில் இப்படியும் நடக்கும் என்று கிராமப் புறங்களில் இருப்பவர்கள் கூட அறிந்து கொள்ளக் கூடிய ஓர் ஊடகமாக திரைப்படங்கள் விளங்குகின்றன. சில இடங்களில் மூட நம்பிக்கைகள் கூடத் தகர்த்தெறியக் கூடிய வாறான சம்பவங்களையும் காட்சிப்படுத்தி சமூகத்தை கட்டுப்படுத்து கின்றது.

அந்த வகையில் வெளிவருகின்ற சில திரைப்படங்களை விட பெரும்பாலானவை சமூகத்துக்குத் தேவையான ஏதோ ஓர் கருப்பொருளை மையமாகக் கொண்டே வெளி வந்து கொண்டிருக்கின்றன. பொதுவாகச் சொல்வதானால் பக்குவப்பட்ட மனங்க ளுக்கு சினிமா ஒரு பொழுதுபோக்கு, பக்குவப்படாத மனங்களுக்கு அது தவறான வழிகாட்டி என்றே சொல்ல முடியும்.

கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்ட படங்கள் அதிகமாக வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன. கலாசார நடைமுறைகளை பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறார்களோ இல்லையோ திரைப்படங்கள் கற்றுக்கொடுக்கின்றன. இத்தகைய சீர்திருத்தங்கள் பக்குவப்பட்ட மனங்களில் பதியக்கூடியவை.

அதைவிடுத்து முறையற்ற வாழ்க்கையை விரும்புவர்களது மனங்களில் பதியக் கூடியவை. சிகரெட்டை அழகாகப் பிடிப்பதும், மது அருந்துதல், பெண்களைக் கேலி, செய்தல், கொலை, கொள்ளை, காட்சிகளை இத்தகைய சம்பவங்களை திரைப்படங்களில் குறைப்பதற்கு திரையுலகத்தினர் முன்னுரிமை கொடுத்தால் இளைய தலைமுறைக்குத் திரைப்படங்கள் முற்றுமுழுதாகவே முன்மாதிரியாக அமைந்து விடும்.

> ❝ கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்ட படங்கள் அதிகமாக வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன. கலாசார நடைமுறைகளை பெற்றோர்களும் ஆசிரி யர்களும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறார்களோ இல்லையோ திரைப்படங்கள் கற்றுக்கொடுக்கின்றன. இத்தகைய சீர்திருத்தங்கள் பக்குவப்பட்ட மனங்களில் பதியக்கூடியவை.

உலகமே நன்மை, தீமை என்ற இருள் சூழ்ந்த மாயைகளால்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் எது தேவை எது தேவையற்றது எனப் பகுத்தறிவு என்னும் வெளிச்சம் கொண்டு இனங்கண்டு கொள்வது அவரவர் கைகளிலேயே உள்ளது. எனவே சிறந்த திரைப்படங்களை இனங்கண்டு வரவேற்பது நமது பொறுப்பு. திரைப்படங்களையும் இளைஞர்களின் சீரழிவையும் சம்பந்தப்படுத்துவது தவறு என்றே எண்ணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதப் போரும் பீஷ்மர் துரோணர் முடிவும்



மட்டுவில் நல்லதம்பி

**இலக்கியக் காட்சி 134**

தீயவர்களை அழித்து நல்லவர்களுக்கு வாழ்வு கொடுப்பதுதான் கிருஷ்ண அவதார நோக்கமாகிறது. அதற்காகவே பாரதப் போர் தொடங்கியது. கொடியவர்கள், வாய்ப்பைப் பயன்படுத்திக் கூடுதலாகச் சுக போகத்தை அனுபவிப்பதும், நல்லவர்கள் கூடுதலாகத் துன்பகரமான வாழ்வைக் கொண்டிருப்பதையும் உலகில் காணலாம். பாரதத்தில், பாண்டவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தது மிகச் சொற்ப காலமே என்பதைப் பார்க்கிறோம்.

பாரதப் போர் துரியோதனனாகியோருக்கும் பாண்டவருக்கும் இடையில் நடைபெற்றது. ஆயினும் துரியோதனன் பக்கத்தில் கர்ணனும், பீஷ்மரும், துரோணாச்சாரியாரும் இருக்கும்வரை போர் முடிவுற்று, நல்லவர்களாகிய பாண்டவர்கள் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லாத நிலை காணப்பட்டது.

இதற்குக் காரணம், தாம் நன்றிக்கடன் கழிப்பதற்காகப் போரிட உடன்பட்டோம் என இம்மூவரும் போரில் இறங்கியமையே!

*''எந்நன்றி கொன்றார்க்கும்*
*உய்வுண்டாம்; உய்வில்லைச்*
*செய்நன்றி கொன்ற மகற்கு''*
*[குறள் 10]*

செய்நன்றிக்காகச் செயற்படுகிறோம் எனச் சொல்லி, தமது உச்சமான சக்தியைத் தீயவருக்காகப் பயன்படுத்தி, தமது உயிருக்கு முடிவை, இறுதியைத் தாமே தேடிக் கொண்டனர் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

*''நுனிக்கொம்பர் ஏறினார்*
*அஃது இறந்து ஊக்கின்*
*உயிர்க்கு இறுதி ஆகி விடும்''*
*[குறள் 476]*

தாம் தீமைக்குத் துணை போகிறோம் என்பதும் தெரிந்திருந்த, இந்த உத்தமர்கள், தமது முடிவை, உயிரின் இறுதியைத் தாமே வெளியிட்டுவிட்டதைக் காண்கிறோம்.

அதாவது, போர்க்களத்திலே, செல்லமுன், கர்ணனுடைய பாதுகாப்பு அரண்களான கவசகுண்டலங்கள் தானமாகத் தரப்பெற்றதும், போர்க்களத்தில் புண்ணியத்தையே கொடையாக்குவதும் கர்ணன் தீமைக்குத் துணைபோனதால் உண்டான குற்றமாகிறது.

அது போலப் பீஷ்மரும் துரோணரும் தம்மை எப்படிக்கொல்ல முடியும் என்பதை அவர்களே கூறியதை இனிமேல் காண்போமாக. போர்க்களத்தில் தத்தம் படையணிகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கும் போது, தருமன், எதிர்த்தரப்பிலிருக்கும் பீஷ்மரைக் கண்டு ஆசி பெறப் போகிறான். தருமனைக் கண்டதும் பீஷ்மர், பேரனே! நீ எமது குலதர்மப்படி நடந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நீ போரில் வெற்றி பெறுவாய்! நான் கௌரவர்களுக்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்; உனது வெற்றிக்கான வாய்ப்பை (இரகசியத்தை) பின்னர் சொல்வேன்'' என்கிறார்.

துரோணரிடம் போன பொழுது, தேரிலிருந்து இறங்கி வந்து துரோணர், தருமனைத் தழுவிக் கொண்டு ஆசி கூறிய பின், ''தருமனே வெற்றி உங்கள் பக்கந்தான்! ஆயினும் நான் ஆயுதம் தாங்கி நிற்கும்வரை என்னை யாரும் வெல்லவோ கொல்லவோ இயலாது; ஆயினும் ஏதாவது துன்பந்தரும் செய்தியை நம்பிக்கையான ஒருவர் வாயிலிருந்து நான் கேட்க நேர்ந்தால் எனது ஆயுதங்களைக் கீழே போட்டுவிடுவேன். அந்த நேரம் என்னை எதிர்ப்பவர் வெற்றி பெறுவர்'' என்றும் கூறி அனுப்புகின்றார்.

பாரதப்போர் பதினெட்டு நாள்கள் நடைபெற்றது. முதல் பத்து நாள்களும் பீஷ்மர் தலைமையில் துரியோதனன் பக்கம் போர் புரிந்தது.

இருபகுதியாருக்கும் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. பாண்டவர் வெற்றி பெறும் போது, பீஷ்மரையும் துரோணரையும் துரியோதனன் இகழ்ந்து பேசுவான்; துரியோதனன் பக்கம் வெற்றி பெறும்போது, அவன் குதித்துக் கும்மாளம் போடுவான். இது வழக்கமாகிறது. எது நடைபெற்றாலும் ஓய்வு நேரத்தில் துரியோதனனுக்கு பாண்டவரோடு சமாதானமாகப் போவதுதான் நல்லது. பாண்டவருக்குத்தான் வெற்றிவரும் என்று பீஷ்மரோ துரோணரோ சொல்வார்கள். அவையெல்லாம் துரியோதனனுக்கு வேம்பாகக் கசக்கும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ''உனக்காக உயிரைக் கொடுப்போம்; ஆனால், பரந்தாமன் உதவி இருப்பதால் பாண்டவரை யாரும் வெல்ல முடியாது'' என்று இவர்கள் சொன்னாலும் துரியோதனன் காதில் அவை ஏறாது.

ஒன்பதாம் நாள் போர் முடிவுற்ற அன்று இரவு, தருமன், பீஷ்மரின் பாசறைக்குள் நுழைகிறான். பீஷ்மர் தன் கதையைக் கூறுகிறார். ''சந்தனு மன்னனுக்கும் கங்கா தேவிக்கும் பிறந்த எட்டாவது மகன் யான்; என்னைப் பிதாவிடம் கொடுத்ததும் அன்னை மறைந்துவிட்டாள். எனக்கு இளவரசுப் பட்டம் சூட்டிய பின், நாலாம் வருடம் தந்தை, ஒரு செம்படவ அழகியைச் சந்திக்க நேர்ந்தது. அவளை மணஞ்செய்ய விரும்பினார். அதற்கு அந்தச் செம்படவன், தனது மகளின் பிள்ளைக்கு அரசுரிமை அளிப்பீராயின் சம்மதம் என்கிறான். தந்தைக்கு அது பிடிக்கவில்லை. இதனை அறிந்த நான், செம்படவனிடம் போய், என் பிதா விரும்பியபடி பெண்ணை விவாகஞ்செய்து கொடுங்கள், இனிமேல் நான் பிரமச்சாரியாக வாழ்வேன்; இது சத்தியம் என்று சொன்னேன். அதனால் மச்சகந்தி என்ற அப்பெண்ணை சத்தியவதி என்ற பெயரில் என் பிதா மணஞ்செய்து கொண்டார்.

*''மகன் தந்தைக்கு ஆற்றும்*
*உதவி இவன் தந்தை*
*என்நோற்றான் கொல் எனும் சொல்''*
*[குறள் 70]*

எனப் பெருமை கொண்ட என் பிதா, என்னை வாழ்த்தி வரந் தந்தார். அதன்படி நான் விரும்பினாலன்றி எனக்கு மரணம் இல்லை; எனக் கூறிய பிதாமகன் (பீஷ்மர்) தன்னைக் கொல்ல உபாயம் கூறுகின்றார். ''சிகண்டி என்ற பெண், அலி வேடத்தில் இங்கே வந்து போர் செய்கிறாள். அவள் எனக்குப் பகையானவள். அவளை முன்னிறுத்திப் போர் செய்தால், அவளைக் கண்டதும் நான் ஆயுதங்களைக் கீழே போட்டுவிடுவேன். அச்சமயம் அர்ச்சுனன் என்னுடன் போரிட்டுக் கொல்லட்டும்'' என்கிறார். எனவே, பத்தாம் நாள் போரில் சிகண்டியை முன்செல்ல விட்டு அர்ச்சுனன் பீஷ்மரை எதிர்க்கிறான். அவர் ஆயுதங்களைக் கீழே போட்டதும் அர்ச்சுனன் அம்புமாரி பொழிகிறான். பீஷ்மர், தனது கடைசி ஆயுதமன சக்தி ஆயுதத்தை எய்கிறார். அர்ச்சுனன் அதனை இடைவழியில் தடுத்து முறித்து விடுகிறான்.

அந்த நேரம் பீஷ்மர், அம்புகளின் வேதனையால் தேரினின்றும் வீழ்கிறார். அவரது உடம்பு நிலத்தில் படாதபடி அம்புகள் அவரைத் தாங்கி நிற்க, தலையில் அம்பு தைக்காத நிலையில், தலை தொங்கிக் கொண்டு நிற்கிறது. அதற்கு ஏற்றவகையில் தலையணை கொடுக்க யாராலும் முடியவில்லை. அப்போது அர்ச்சுனன் ஓடிப்போய் மூன்று அம்புகளை நிலத்தில் ஊன்றி, அவற்றின் முனைகளில் பீஷ்மரின் தலையைத் தூக்கி வைக்கிறான்; அவர் தாகம் என்றதும், நிலத்தில் அம்பால் துளை செய்து நீர் அவர் வாயில் விழும்படி செய்கிறான்.

இச் செயல்களை அர்ச்சுனன் அன்றி வேறு யாரும் செய்யமாட்டார்

(16 ஆம் பக்கம் பார்க்க)

**சிறுகதை**

# நட்பும் காதலும்



திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்

பொழுது சாயும் நேரம் வேலையால் திரும்பிக் கொண்டிருந்தாள் வைஷ்ணவி. அவள் சிந்தனை தனது குடும்பத்தையே சுற்றிச் சுற்றி வந்தது. இள வயதிலேயே மிதிவெடியில் தந்தையைப் பறி கொடுத்துவிட்டு குடும்பச் சுமையைத் தனது தலை மேலே சுமந்தபடி வாழ்ந்து கொண்டிருப்பவள். குடும்பச் சுமை என்பதும் பெரியது. ஒன்றிரண்டு பேரைப் பெத்துப் போட்டுப் போகவில்லை அவரது தந்தை. மொத்தம் ஏழுபேர். அதிலும் வைஷ்ணவியுடன் 4 பெண்கள், கடைக்குட்டிகள் தான் இரு ஆண்கள். அவள் தாய் தேவகியும் தந்தை இறந்த மன வேதனையில் உணர்வற்ற ஜடமாக கூட்டுக்குள்ளே அடைபட்ட கோழி போல் திரியலானாள். ''பாதையைப் பார்த்துப் போங்கம்மா'' என்ற சைக்கிள்காரர் ஒருவரின் குரல் காதில் விழ பாதையைப் பார்த்து நடக்கலானாள் வைஷ்ணவி.

வீட்டிற்கு வந்ததும் தங்களது தேவைகளை ஒப்புவித்துக்கொண்டு சகோதரர்கள் வரிசையில் நிற்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரது படிப்பையும் பாதியில் நிறுத்த விரும்பாதவளான அவள், தனது தேவைகளை ஒறுத்து சகோதரர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தாள். சகோதரிகள் அவளுக்கு ஆதரவாக இருந்தார்கள். ஆண், பெண் இருவரும் உழைத்தே குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாது திக்கு முக்காடுகின்ற இந்தக் கால வேளையில் வைஷ்ணவியால் இப்பெரிய குடும்பச் சுமையை எவ்வாறு தாங்க முடியும்? ஆனாலும் சளைக்காமல் கந்தோர் வேலை முடிந்ததும் வீட்டில்ஊறுகாய் போடுவது, கடலை வறுத்துப் பொரித்து பைக்கற் பண்ணுவது போன்ற சிறு கைத்தொழில்களை மேற்கொள்வாள். தம்பி தங்கைகள் உதவிக்கு வந்தால் ''ஓடுங்க ஓடிப்போய் படிங்க'' என்று தானே தனித்து கஷ்டப்படலானாள்.

இவ்வாறு ஓடி ஓடி உழைக்கும் அவளுக்கு ஒரே ஆறுதல் அவளுடன் கூட வேலை பார்க்கும் சியாம் தான். சியாம் கலகலப்பாகப் பேசுபவன்.

சியாமும் வைஷ்ணவியும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். தோற்றத்தில் வைஷ்ணவி மூத்தவளாகக் காட்சியளிப்பாள். இருவரும் நண்பர்களாகச் சகஜமாகப் பழகினாலும் சாதாரன மனிதர்கள் ஒத்துக் கொள்வார்களா? அதிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் என்ன நட்பு என கொச்சைப்படுத்தி விடுவார்கள். அந்த நிலை இவர்களுக்கும் ஏற்பட்டது. வைஷ்ணவியின் மனதில் நட்பே நிழலாடியது. அதனால் ஒருநாள் சியாமிடம் ''சியாம் எங்கட குடும்ப நிலை உங்களுக்கே நன்றாகத் தெரியும். இந்த நிலையிலை எப்பிடி வீட்டிலை நிம்மதியாய் இருக்கிறது? உங்களோடை கதைக்கிற சில நிமிடங்கள் தான் என்னை சந்தோஷப் படுத்துகின்றன'' வைஷ்ணவி கூற ''இப்பொழுது எதற்கு உதையெல்லாம் கூறுகிறாய் வைஷ்ணவி?'' வினா எழுப்பினான் சியாம். ''ஒன்றுக்குமில்லை'' எனக் கூறியவாறு அவ்இடத்தை விட்டு நகர்ந்துகொண்டாள் வைஷ்ணவி.

வைஷ்ணவியின் அலங்காரமற்ற அழகை மனதிலே ரசித்துக் கொண்டிருப்பவன் சியாம். அப்படிப்பட்ட சியாம் வைஷ்ணவியின் அன்பை நட்பாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் மனம் வேறு விதத்தில் வைஷ்ணவியை அணுகிய வண்ணம் கற்பனையில் மிதந்தது.

நாள்கள் நகர்ந்தனவே தவிர, வைஷ்ணவியின் குடும்ப வாழ்வில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக வாழ்க்கைச் செலவுதான் அதிகரித்தது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும் வேளைகளில் சியாமின் உதவியை நாடி நிற்பாள் வைஷ்ணவி. எதுவித மறுப்புமில்லாமல் பணத்தைக் கொடுத்து உதவுவான் சியாம். வைஷ்ணவியும் மேலதிகமான வருவாயில் அவனது கடனைத் தீர்த்துக் கொள்வாள். ஒரு சந்தர்ப்பத்தில் ''என்ன வைஷ்ணவி எனக்கு கடனாளியாய் இருக்கிறது உமக்கு விருப்பமில்லை போலும் '' இழுத்தான் சியாம். ''வாழ்நாள் பூராவும் எவருக்கும் கடனாளியாய் இருப்பதை என் மனம் விரும்பவில்லை''. வைஷ்ணவி மனதில் பட்டதை கூற, அதனை சியாம் சிலேடையாகப் பொருள் எடுத்துக் கொண்டான்.


நாள்கள் பல கழிந்தன. வைஷ்ணவியின் இரு சகோதரிகளுக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

சியாமும் வைஷ்ணவியும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். தோற்றத்தில் வைஷ்ணவி மூத்தவளாகக் காட்சியளிப்பாள். இருவரும் நண்பர்களாக சகஜமாகப் பழகினாலும் சாதாரண மனிதர்கள் ஒத்துக் கொள்வார்களா? அதிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் என்ன நட்பு எனக் கொச்சைப்படுத்தி விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவாய் மையும் ஒடியற் கூழும்




■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

"எழுபது எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுள் வேத வைத்தியர்கள் பலர் இருந்தாலும் சிலர் மிகப் பிரபல்யம் பெற்றிருந் தார்கள். இதற்கு இவர்களுடைய வைத்தியமும் மருந்துகளும் மட்டுமல்ல இந்த வைத்தியர்களின் மனிதாபிமான செயல்களும் காரணமாகும்.

கள்ளுக் குடிப்பவர்கள் கிழமைக்கு ஒரு நாள் கணவாய் மை காய்ச்சிக் குடித்தால் வயிற்றுக்குள் தேவையற்ற சரக்குகள் இல்லாமல் சுத்தமாக்கிவிடுமாம். ஒடியற் கூழ் உடலுக்கு இன்று விற்றமின் கல்சியம் நார்ச்சத்து என்றெல்லாம் சொல்லப்படும் சகல சக்திகளும் தரும் சர்வசக்தி தரும் உணவு மயிலர் ஐயா நோய் என்று படுக்கையில் படுத்ததை நான் பெரியவனான பின்னரும் கூடக் கேள்விப்பட்டதில்லை.

இன்று எத்தனை பேர் ஒடியல் கூழ்குடித்திருக்கிறார்கள். ஆண்டில் ஒரு தடவையாவது குடித்திருக்கிறார்களா வாழ்க்கையில் ஒரு தடவையாவது குடித்திருப்பார்களா இந்தக் காலப் பெண்களுக்கு ஒடியல் கூழ் காய்ச்சத் தெரியுமா? ஜேர்மனியில் என் மகனின் நண்பன் வீட்டில் நாங்கள் ஒரு நாள் கூழ் 2002 ஆம் ஆண்டில் குடித்திருக்கிறோம்.

எனது மலேரியாக்காய்ச்சலுக்கும் சித்த வைத்தியர்களின் மருந்துக்குடிநீர்கள் தர்மாஸ்பத்திரியில் கொடுத்த இங்கிலிஸ் மருந்துகள் எல்லாவற்றையும் விட மயிலர் ஐயா சொல்லி அம்மா காய்ச்சித் தந்த கூழ் மருந்து தான் கரியான பரிகாரமாக அமைந்தது.

குப்பை மேனி ஒடியற்கூழ்
மலேரியாவுக்கு மருந்தானது

பழைய ஒடியல் அதாவது இந்த வருடம் போட்ட பச்சை ஒடியல் அல்லாமல் இதற்கு முதல் வருடம் போட்ட பழைய பச்சை ஒடியல் மாவில் உறைப்பு அதிகம் இல்லாமல் குப்பை மேனி இதைப் பூனை வணங்கி என்றும் சொல்வதுண்டு இலையும் சேர்த்து வழமைபோல் மீன், இறால், நண்டு, மரவள்ளி, பயிற்றங்காய் சேர்த்துக் கூழ் ஆக்கி மூன்று நாள்களுக்கு ஒரு தடவை மூன்று நேரம் குடிக்க வேண்டும். கொஞ்ச நாள்களுக்கு தலையில் தண்ணீரில் குளிக்கக் கூடாது.

இதன்படி என் அம்மா எனக்குச் செய்து தந்தா. அதன் பின் எனக்கு மலேரியாக் காய்ச்சல் வந்ததேயில்லை. குப்பை மேனி சிறந்த ஒரு மூலிகை. எனது இருபத்திரெண்டு வயதில் நான் வீரகேசரியில் வேலைக்குச் சேர்ந்து மூன்றாம் நாள் கடுமையான காய்ச்சல் பீடித்தது. சுலைமான் ஆஸ்பத்திரியில் போய்க்காட்டினேன் நன்கு சோதித்த பின் நெருப்புக் காய்ச்சல் பீடித்திருக்கிறது. ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை செய்வதே நல்லது என்று டாக்டர் சொன்னார். முதலில் தலைவலி தலைக்குத்து தீர்வதற்கு மருந்து தாருங்கள் வீட்டுக்குப் போய் தெரிவித்து விட்டு வருகிறேன் என்று மாத்திரையும் சிறிய கிளாசில் தந்த மருந்துடன் வெளியேறினேன் அப்போது எனக்கு ஏது விடு? நான் நெருப்புக் காய்ச்சலுக்கு செய்த வைத்தியம் பற்றி பின்னர் சொல்லுகிறேன்.

நுளம்பினால் தான் மலேரியா தொற்றுவதாகச் சொன்னார்கள். இன்று நுளம்புகளால் டெங்குக் காய்ச்சல் பரவுவதாக எச்சரித்து நுளம்பு ஒழிப்பு வேட்டை நாடெங்கும் நடக்கிறது. மலேரியா ஒழிப்பின் பின் இலங்கை மலேரியாவை வெற்றிகண்ட நாடு என்று பெயர் பெற்றிருந்தது. இன்று பயங்கரவாத ஒழிப்பில் வெற்றி கண்டது போல இன்று புதிய புதிய நோய்கள் புதிய புதிய பெயர்களில் உலகெங்கும் தாவி இங்கும் வந்து விடுகின்றன. புதிய புதிய பெயர்களில் புதிய புதிய மருந்துகளும் வருகின்றன. புதிய புதிய மருத்துவமனைகளும் சிகிச்சை முறைகளும் புதிய ஆயுதங்களும் இயந்திரங்களம் வேறு கண்டுபிடிக்கப்படுகின்றன. இங்கு தனியார் மருத்துவமனைகள் இந்தப் புதிய இயந்திரங்களை போட்டி போட்டு இறக்குமதி செய்து சிகிச்சையளித்து சாதனையில் போட்டி போடுகின்றன.

எழுபது எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுள் வேத வைத்தியர்கள் பலர் இருந்தாலும் சிலர் மிகப் பிரபல்யம் பெற்றிருந்தார்கள். இதற்கு இவர்களுடைய வைத்தியமும் மருந்துகளும் மட்டுமல்ல இந்த வைத்தியர்களின் மனிதாபிமான செயல்களும் காரணமாகும். யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியமே மேலோங்கியிருந்தது. இன்றும் இருக்கிறது. சுதுமலைப் பரியாரியார் என்று சொன்னாலே கையெடுத்துக் கும்பிட்டவர்களை நான் பார்த்திருக்கிறேன். சுதுமலைப் பரியாரியின் பெயர் மறந்து விட்டது. அவரின் மரணச் செய்தி கேட்டு யாழ்ப்பாணமே கண்ணீர் வடித்தது.

அவரின் இறுதியாத்திரையின் போது ஆண்களும் பெண்களும் வீதிகளில் விழுந்து புரண்டு அழுதார்கள். இதே போல கொழும்பில் கொம்பனித் தெருவில் இன்று அவர் பெயர் சொல்லும் இரத்தினம் ஆஸ்பத்திரியின் டாக்டர் குமாரன் இரத்தினம் கொழும்பு நகர மேஜராகவும் சில காலம் பதவிவகித்தவர் அவர்களின் இறுதி யாத்திரையின் போதும் சிங்கள, தமிழ், இஸ்லாமிய பெண்கள் நடுவீதிகளில் விழுந்து புரண்டு அழுததையும் உடல் அடங்கிய பேழையை தோள்களில் சுமந்தே கொண்டு மயானம் சென்றதையும் அந்த மருத்துவர்கள் வைத்தியத்தில் வேறுபட்டிருந்தாலும் மனிதாபிமானத்தில் வேறுபட்டிருக்கவில்லை என்பதை உணர்த்துகிறது மீண்டும். *(வளரும்)*

■ *சி.இரத்தினவடிவேல்*

# சுக்கிர சந்தரணம்


## அரிய காட்சி விரைவில்

சூரியனைச் சுற்றி வரும் கிரகங்கள் முறையே புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்பனவாகும்.

மூன்றாவதாகிய பூமியில் நாம் வசிக்கின்றோம். முதலாவதாகிய புதனும் இரண்டாவதாகிய சுக்கிரனும் மூன்றாவதாகிய பூமிக்கும் சூரியனுக்கும் இடையே இருப்பதால் உட்கிரகங்கள் எனவும், பூமிக்கு வெளியேயுள்ள செவ்வாய் முதல் புளூட்டோ வரையுள்ள கிரகங்கள் வெளிக் கிரகங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

உட்கிரகங்களாகிய புதனும், சுக்கிரனும் சூரியனைச் சுற்றி வரும் பாதைகள் பூமி சூரியனைச் சுற்றி வரும் பாதைக்குள் அமைந்திருப்பதால், புதனும், சுக்கிரனும், பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வரும் சந்தர்ப்பங்களில் சூரியன் புதன் அல்லது சுக்கிரன் பூமி ஆகிய மூன்று கிரகங்களும் ஒரே நேர்கோட்டில் அமையும் போதே புதசந்தரணம் அல்லது சுக்கிர சந்தரணம் ஏற்படும். அந்த வேளையில் பூமியில் உள்ளவர்களுக்கு புதன் அல்லது சுக்கிரன் சூரிய விம்பத்தைக் குறுக்கிட்டுச் செல்வதாகத் தோன்றும். புதன் அவ்வாறு செல்வதை புதசந்தரணம் என்றும் சுக்கிரன் அவ்வாறு செல்வதை சுக்கிரசந்தரணம் என்றும் சொல்வர்.

பூமிக்கும் சூரியனுக்குமிடையில் புதன் அல்லது சுக்கிரன்



சூரியனுடன் ஸ்புட (Longitude) ரீதியாக ஒன்றுபடுதல் கீழ்ச்சமநிலை (Inferior Conjunction) என்றும், இந்தக் கிரகங்கள் சூரியனுக்கு மறுபுறத்தில் சூரியனுடன் சமநிலை அடைதல் மேற்சமநிலை (Superior Conjunction) என்றும் அழைக்கப்படுகின்றது. கீழ்ச்சமநிலையில் புதன் அல்லது சுக்கிர சந்தரணம் ஏற்படும் வாய்ப்பு அமைவது போல, மேற்சமநிலையில் சூரியன், புதன் அல்லது சுக்கிரனை மறைக்கும் சந்தர்ப்பங்களுமுண்டு.

புதன் சூரியனைச் சுற்றிவர 88 நாள்கள் செல்லும். சுக்கிரன் சூரியனைச் சுற்றிவர 225 நாள்கள் செல்லும். கீழ்ச்சமநிலையில் சந்தரணம் நிகழும்போது, புதன் அல்லது சுக்கிரன் சூரிய பிம்பத்தை ஊடறுத்துச் செல்வது போன்ற காட்சியைக் காணலாம். புதசந்தரணமானால் சிறிய கரும்புள்ளி ஊர்ந்து செல்வது போலவும் சுக்கிர சந்தரணமானால் பெரிய கரும் புள்ளி ஒன்று ஊர்ந்து செல்வது போலவும் காட்சி அளிக்கும். புதன் வேகம் கூடியதாகையால் குறைந்த நேரத்திலும், சுக்கிரன் குறைந்த வேகத்தில் செல்வதால் கூடிய நேரத்திலும், சூரியபிம்பத்தைத் தாண்டிச் செல்வதை அவதானிக்கலாம்.

சூரிய, சந்திர கிரகணங்கள் போன்றே இச்சந்தரண நிகழ்வுகளும் இடத்துக்கு இடம் வேறுபட்டுத்தோன்றும். சில பகுதிகளில் தோன்றாது. 06.06.2012 இல் நிகழவுள்ள சுக்கிரசந்தரணம் என்னும் வானியல் நிகழ்வை தேசிய விண் பயண அறிவியல் மற்றும் விண்வெளி மேலாண்மை நிறுவனமாகிய நாசா (National Aeronautics and space Administration) நான்கு பிரிவாக வகைப்படுத்தியுள்ளது.

- மாலை வேளையில் சூரிய அஸ்தமனத்துடன் பார்க்கக் கூடிய சுக்கிரசந்தரணம் (Transit of Venus) தோன்றும் நாடுகள்
- இந்த நிகழ்வைக் கண்டு களிக்க முடியாத நாடுகள்
- காலை வேளையில் சூரிய உதயத்துடன் அவதானிக்கக் கூடிய நாடுகள்
- முழுமையாக இந்த நிகழ்வு தோன்றும் நாடுகள்.

இலங்கையில் பொதுநேரப்படி 06.06.2012 அதிகாலை 3.39 மணியளவில் சூரியன் உதயமாவதற்கு முன்னரே சுக்கிர சந்தரணம் ஆரம்பமாகி முற்பகல் 10.20 உடன் முடிவடையும். சூரிய கிரகணத்தை போன்றே இந்தக் காட்சியை வெற்றுக் கண்களால் அவதானிக்கக்கூடாது.

கிரகங்கள் யாவும் பூமியில் இருந்து நோக்கும் போது மேற்கிலிருந்து கிழக்காகவே பயணிக்கின்றன. 06.06.2012 இல் சுக்கிரன் வக்கிரகதியில் (Retrograde Motion) செல்வதால் பூமியிலிருந்து பார்ப்போருக்கு சுக்கிரன் சூரியனை கிழக்கிலிருந்து மேற்காகக் கடந்து செல்வதாகத் தோன்றும்.

மேலும் ஆர்தர் சி.கிளார்க் விண்வெளி அறிவியல் நிறுவனத்தினர் தெளிவான வானத்தில் சூரியனை சுக்கிரன் கடந்து செல்லும் காட்சியைக்காண யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளனர் என்றொரு தகவலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கையில் வழக்கத்திலிருக்கும் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களை எடுத்து நோக்குவோமாயின், வாக்கிய பஞ்சாங்கப்படி இந்தத் தினத்தில் சூரியன் ரோகினி 4ஆம் பாதத்தில் இடபராசியிலும் சுக்கிரன் மிருகசீரிடம் 3 ஆம் பாதத்தில் மிதுன ராசியிலும்-ஏறக்குறைய 10 பாகை இடைவெளியில் சூரியனுக்கு அப்பால் சுக்கிரன் உறைகின்றது.

எனவே சூரியனை சுக்கிரன் கடந்து செல்வது சாத்தியமற்றது. திருக்கணித பஞ்சாங்கப்படி சூரியன் ரோகினி 4 ஆம் பாதத்தில் இடபராசியிலும், சுக்கிரன் ரோகினி 4 ஆம் பாதத்தில் இடபராசியிலும், ஒரே பாகையில் உறைவதால் இந்த நிகழ்வு சாத்தியமாகின்றது. பிரத்தியட்சமாக இந்த வானியல் நிகழ்வை திருக்கணித பஞ்சாங்கம் எடுத்தியம்புவதை சோதிட ஆர்வலர்கள் கவனத்தில் கொள்வார்களாக.

*(யாழ்.வானியற்கழக ஸ்தாபகரும் முன்னைநாள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளருமாகிய அமரர் பிரம்மஸ்ரீ ந.கந்தசாமி ஐயர் (கோண்டாவில்) அவர்களின் வானசாஸ்திரக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது இந்த ஆக்கம்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பிரசித்திபெற்ற இடங்கள்


கீரிமலை


01) உல்லாசப் பயணிகள் வருகை தரும் இடம்?
கிக்கடுவை
02) பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்?
குமண
03) நன்னீர்க்குளம் அமைந்துள்ள இடம்?
கீரிமலை
04)நிலையான ஊற்றுக் காணப்படும் இடம்
நிலாவரை
05) மிருகங்களின் சரணாலயம் அமைந்த இடம்?
வில்பத்து, யால
06) சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள இடம்
கட்டுநாயக்க
07) தலதா மாளிகை அமைந்த இடம்.
கண்டி
08) குகை ஓவியங்கள் வரைந்துள்ள இடங்கள்
சிகிரியா, தம்புள்ள
09) இலங்கையின் தலைநகரம்
ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் (கொழும்பு)




கிக்கடுவை


நிலாவரை

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.


தலதா மாளிகை


## சிரிப்புக்கள் பலவிதம்

* இருக்கும் இடமெல்லாம் சிரிப்பவன்-கோமாளி
* இன்பத்தில் சிரிப்பவன்- ஏமாளி
* கண்பார்த்து சிரிப்பவன்- காரியவாதி
* காணாமல் சிரிப்பவன்- கஞ்சன்
* கற்பனையில் சிரிப்பவன் - கவிஞன்
* கோபத்தில் சிரிப்பவன்- சிந்தனையாளன்
* மோகத்தில் சிரிப்பவன்- வெறியன்
  கொடுக்கும்போது சிரிப்பவன்- சூழ்ச்சியாளன்
* நீதியோடு சிரிப்பவன்- அறிஞன்
* நிலைமறந்து சிரிப்பவன்- காதலன்
* மகிழ்ச்சியில் சிரிப்பவன்- மன்னன்
* அருளுக்குச் சிரிப்பவன்- ஆண்டி
* குழைந்து சிரிப்பவன்- தந்திரவாதி



கலையரசி-கணேசலிங்கம்,
தரம் 11.

## நல்ல தீர்ப்பு




சிக்கலான வழக்கை நீதிமன்றத்துக்கு உப்பு வணிகன் ஒருவன் கொண்டு வந்தான். நீதிபதியைப் பார்த்து "ஐயா நெடுங்காலமாக எங்கள் ஊரில் மழை இல்லை. உப்பு வணிகம் நன்றாக நடந்தது. ஆனால் ஊரிலுள்ள இறையன்பர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மழை பொழிய வேண்டிப் பிரார்த்தனை செய்தார்கள். ஆனால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இருந்நதாலும் பிராத்தனை முடிந்த அன்று மாலையே மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. நான் சேர்த்து வைத்த உப்பு மூடைகள் நனைந்து வீணாகி விட்டன. எனக்கு ஏராளமான இழப்பு நீங்கள்தான் அந்த இறையன்பர்களிடம் என் இழப்புக்கு ஈட்டுத் தொகை வாங்கித் தரவேண்டும் . ஏனென்றால் அவர்கள் பிரார்த்தனையால்தான் மழை பெய்தது" என்று தன் பக்கதை விளக்கமாகச் சொன்னான். இறையன்பர்களை எல்லாம் நீதிபதி விசாரித்தார். அவர்கள் அனைவரும் "எங்கள் வேண்டுதலால் மழை பொழிந்தது என்பது உண்மை இல்லை. அதை வணிகனால் நிரூபிக்கவும் முடியாது என்று தமது பக்கவாதத்தை விளக்கமாச் சொன்னார்கள். எனவே நாங்கள் எந்த இழப்புத் தொகையையும் தர வேண்டியது இல்லை என்று மேலும் தெரிவித்தார்கள். எல்லாவற்றையும் கேட்ட நீதிபதி "பிரார்த்தனையால் தான் மழை பொழிந்தது என்று வணிகன் நம்புகிறான். ஆனால் அதை ஒப்புக் கொள்ள வேண்டிய பக்தர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். வணிகனின் இழப்பை பக்தர்கள் ஈடுசெய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்.

ஸ்ரீ.தர்ஷிகன், யாழ். இந்துக் கல்லூரி.






நி.ரிஷிகேஷசர்மா,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.



த.விதுர்சினி,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.



வி.அலெக்ஸ்அன்ரனி,
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.



மயூரநாதன் பபிசலா,
தரம்-8, சுண்டுக்குளி.

## விடை தெரியுமா? 161

### உங்களுக்கும் பரிசில்கள்

1. மனித உடலில் மிகக் கடினமான பகுதி எது?
2.போலியோ நோய் எதனால் ஏற்படுகிறது?
3. சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த ஊர் எது?
4. உலகில் மிகப் பெரிய ஏரி எது?
5. இலங்கை குடியரசான ஆண்டு எது?

**விடைகள் 159**

1.கங்காரு எலி
2.மஞ்சள்
3.சார்லஸ் பேபேஜ்.
4. இலுப்பை
5.எவரெஸ்ட்



### வெற்றி பெற்றோர் விவரம் (160)

★ க.கபிலன், தரம்-9, உடுவில் மான்ஸ் ம.வி
★ கு.மாதங்கி, தரம்- 4'ஏ', இணுவில் இந்துக் கல்லூரி.
★ இ.நிருத்திகா, தரம் 2, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
★ ந.ஜெய்மதுசன் தரம் 7, யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி
★ செ.அகனீதா, தரம் 5 சி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 02.06 .2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர்கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் காப்போம்



மனிதன் என்ற பெயரைக் காக்கும்
மாண்பு செய்ய வாரீர்!மிக(ப்)
புனிதமாக உலகை மாற்றும்
புதுமை செய்ய வாரீர்!

குடும்பம் என்றும் கோயில் தானே
குவலயத்தின் மூலம்- போர்
இடும்பை நீக்கி மனித உறவை
இயைபுறுத்தும் பாலம்

வீடு மனைகள் மனிதப் பண்பை
விருத்தி செய்யும் பள்ளி- எந்த
நாடு தோறும் மனிதம் ஓங்க
நல்கும் முதன்மைக் கல்வி

பெற்றவர்கள் பிள்ளை தம்மை
பெரிதும் காத்து வளர்ப்பீர்! அவர்க்கு
உற்ற கல்வி, ஒழுக்கம், மனிதம்
உயிரின் மேலாய் உரைப்பீர்

உள்ளம் என்னும் சொத்து மனித
உயிர்க்கு மட்டும் உண்டு-அமிர்த
வெள்ளம் போலும் மொழியினாலே
விளைந்த செல்வம் அஃது

கல்வி என்னும் செல்வம் பண்பைக்
காக்கவில்லை என்றால்-பெரும்
செல்வம் கோடி சேர்த்த போதும்
சிறுமை வேறு உண்டோ?

நெறி படைத்து முன்னோர் காட்டும்
நியதி வாழ்க்கைப் பாதை-விட்டு
வெறி பிடித்த விலங்கு போல
விலகிப் போதல் நன்றோ?

அறிவியலின் தெய்வம் என்று
அறியும் மேலை நாட்டார்- நல்ல
நெறி துலங்கும் வாழ்க்கை நீதி
நியதி அங்கு இல்லை

மனித நாகரிகம் என்னும்
மானிடத்தின் மேன்மை- தன்னை
மனதினாலும் கீழ்மை செய்யும்
மதியிலாரை எதிர்ப்போம்!

நெறி பிறழ்ந்த யாழவர்கள்
நிலை தளர்தல் கண்டோம்-இந்த
அறிவுலர்ந்த செயல்கள் நீங்க
அனுதினமும் உழைப்போம்!

*ரஞ்சன், வளலாய்.*

# கைம்மாறு இதுதானா?



கரு கொடுத்து
உருக் கொடுத்து
கண்ணின் மணியாய்
உனைக் காத்து
வளர்த்து
பட்டினி கிடந்தேனும்
பல வகை உணவு
உனக்களித்து
அன்புடன் ஒழுக்கங்கள்
பல ஊட்டி
அவனியில் உன்னை
ஆளாக்கி விட்ட-அந்த
தெய்வத்துக்குச்
சமமானவளுக்கு
நீ செய்யும் .
கைம்மாறு என்ன
மூதியோரில்லமா?
கல்லான பிள்ளை
மனங்களே சிந்தியுங்கள்..!
கண்கண்ட தெய்வமான
அன்னையைக்
கடைசிவரை போற்றுங்கள்

-பாரோ

# யாரிடம் சொல்லி அழ..

*சீர் கெட்ட சமுதாயம் ஒன்று உருவாவதை*
*சிந்தையிலே இருத்தியுமே எண்ணுவாரில்லை*
*போர் வந்து ஓய்ந்ததுதான் ஏதோ எங்களுக்கு*
*புதியதொரு மாற்றம் வரும் பொழுது விடியுமென்று*
*ஊரெல்லாம் அமைதியாக உறங்கி இருக்கையில்*
*உதவாத கூட்டங்கள் படுத்தும் பாடுதனை*
*யாரிடம் நாம் சொல்லியழ யார்தான் கவனிப்பார்*
*ஆண்டவனும் தூங்குகிறான் இது தான் எம் வாழ்வா*

*ஆள் கடத்தல் கொலைகளவு பாலியல் வல்லுறவு*
*அடுத்தடுத்து நடக்குது பார் அதிசயம் இல்லைத்தான்*
*வாள்வெட்டு கத்திவெட்டு இன்னும் வகைவகையாய்*
*வரும் கணக்கு ஏராளமிங்கு அத்தோடு*
*நாளெல்லாம் புதுநோய்கள் என்ன செய்ய நாங்கள்*
*நாசமான இந்த வாழ்வு வாழத்தான் வேண்டுமா*
*கேளுங்கள் உலகீரே ஈழத் தமிழர்நிலை*
*கீழ்த்தரமாய் ஆனதுவோ கேட்க ஒருவரில்லை*

- வ.யோ



## தன்மானத் தமிழன்

*நிலை தாழ்ந்த போதும்!*
*விலை போகாத வீரன்!*
*இவன் புகழ் நிலைத்து நிற்கும்!*
*உயிர் இழக்கும்*
*நிலை வந்த போதும்,*
*தலை குனிய மாட்டான்!*
*தன் மானத் தமிழன்!*
*இனமானம் காக்க*
*உயிர் உவந்து தருவான்!*
*தன்மானத் தமிழன்*

- கோன்

# எங்கே என் தூக்கம்?

தெரியாத ஒருத்தி
தெரியாமல்
வந்தாள் தெரியாமல்
போனது என் தூக்கம்.

கி.ஜெ.ஷண் கிளிங்ரன்

# கண்ணெதிரே நடந்த கொடுமை

*யுத்த அரக்கனால் அழிக்கப்பட்ட*
*பச்சிளம் குழந்தைகள்*
*பாவி மக்கள், காதல் ஜோடிகள்*
*கல்லறை கட்டப்படாமலேயே*
*குழி தோண்டிப் புதைக்கப்பட்டன*

*கடற்கரையில் நின்ற தாழை மரம்*
*சாய்ந்த வண்ணம் கிடக்கின்றது*
*அழிக்கப்பட்ட குடிசைகள்*
*வீடுகள் இருப்பிடம் தெரியாமல்*
*மறைந்தன*

*எதற்காக இங்கு வந்தோம்*
*எதற்காக உறவுகளை இழந்தோம்*
*என்ற வண்ணம் முகாமில் இருந்து*
*வந்த அழுகையொலி*
*போன ஜென்மத்துக்கே ஒலித்திருக்கும்*

*மீண்டும் குடிசைகள் எழுகின்றன*
*பாலைவனமான இடம்*
*துளிர் விட ஆரம்பிக்கின்றது*
*பாதகர்களின் கண்ணுக்கு*
*புலப்பட்டால் தொடங்கி விடுவார்கள்*
*மீண்டும் யுத்தத்தை*



*ச.பவித்திரா*
*ஏழாலை மேற்கு .*

# யதார்த்தங்கள் சாவுதென்ன?



*ஏன் இந்த அவலம்*
*தமிழ் மண்ணை*
*எள்ளி நகையாடுதே உலகம்,*

*வானம் தரும் மழை போல*
*வற்றாத ஜீவநதி போல*
*கரை புரண்டு ஓடுதே கண்ணீரும்*

*காற்றாய் அசையுதே*
*வாழ்க்கை எனும் ஓடம்*
*தேற்ற யாரும் இல்லை*
*தேம்பி அழுகுதே தமிழ்*
*மண்ணும் அகதி முகக் கூடாரம்*
*அங்கே ஊனமுற்றுக் கிடக்குதே*
*உயிரோடு போராடும் உள்ளங்கள்*

*வி.கார்த்திகா, புத்தூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கக் கொடியும் சிறுபான்மை மக்களும்

ரம்யன்



**அசை போட ஒரு விடயம் 29**

சிங்கக் கொடியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினக் கூட்டத்தின் போது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து உயர்த்திப் பிடித்தார் என்ற விடயம் கடந்த சில வாரங்களாக சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

உண்மையில் சில பத்திரிகைகளில் சம்பந்தன் மாத்திரமே கொடியைப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும், ரணில் விக்கிரமசிங்க வெறுமனே கைகளை உயர்த்திக் கொண்டிருப்பதாகவும் காட்டப்பட்டிருந்தது.

வேறு சிலவற்றில் இருவருமே கொடியைப் பிடித்துக் கொண்டிருப்பதான படம் வெளிவந்திருந்தது.

சம்பந்தனுடன் சேர்ந்து கொடியைப் பிடித்து விட்டு ரணில் கைவிட்ட பிறகும் சம்பந்தன் கையை இறக்காமல் இருக்கும் போது எடுக்கப்பட்டதாக இருக்கலாம் முன்னைய படம். எதுவாக இருந்தாலும் சம்பந்தன் கொடியை உயர்த்திப் பிடித்தார் என்பது உண்மைதான். அதனை அவரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். கடந்த காலத்தில் தனிநாடு கோரி நின்றவர்கள். ஒருபோதும் சிங்கக் கொடியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இப்போது ஒரே நாட்டுக்குள் தமிழருக்கு தீர்வு என்று கேட்கும் சம்பந்தனும் அவரைச் சார்ந்தவர்களும் தேசியக் கொடியாக ஒன்றை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். தமிழ்ப் பகுதிக்கு ஒரு கொடி சிங்களப் பகுதிக்கென்று வேறு கொடியும் இருக்க முடியாது. தேசியக் கொடியென்றால் அது எல்லோருக்கும் ஒன்றாகத்தான் இருக்கும்.

இந்தியாவில் இதை அவதானிக்கலாம். தமிழ்நாட்டுக்கு ஒரு கொடியும் கேரளா, கர்நாடகா மற்றும் ஏனைய மாநிலங்களுக்கு வேறு தேசியக் கொடியென்று இல்லை.

தேசியக் கொடி எல்லா மாநிலங்களுக்கும் ஒன்றாகவே இருக்கின்றது. ஒருவேளை மாநிலங்களுக்கென்று வேறு கொடிகள் இருக்கலாம். தேசியக் கொடி ஒன்றுதான். எனவே இலங்கையில் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் போது தேசியக் கொடியிலும் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று கோரிப் பெறுவது வேறுவிடயம். இல்லாதவிடத்து இப்போது இருக்கும்கொடிதான் தேசியக் கொடியாக இருக்கப் போகின்றது.

அதைச் சம்பந்தன் உயர்த்திப் பிடித்தால் என்ன? பிடிக்கா விட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.இப்போது உள்ள கொடியில் சிங்கம் வாளேந்தியபடி நிற்கிறது.

இது கண்டியைக் கடைசியாக ஆண்ட அரசர்களால் பயன்படுத்தப்பட்ட மாதிரியானது என்கிறார்கள்.

ஆரம்பத்தில் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த தன் பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தில் தேசியக் கொடி பற்றி விவாதிக்கப்பட்டது.

அந்தச் சமயத்தில் தான் வாளேந்திய சிங்கக் கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டது. கொடியில் இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்கும் அடையாளம் வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றதனால் கொடியிலுள்ள வாளேந்திய சிங்கத்துக்கு முன்னால் இரண்டு கோடுகளை சிறுபான்மையினரை அடையாளப்படுத்துவதற்காக வைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. என்றாலும் இந்த ஏற்பாடு சிறுபான்மையோரை திருப்திப்படுத்தியது என்று சொல்ல முடியாது.

தேசியக் கொடி தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பிரபல பாடசாலையொன்றில் பகிடி பாராளுமன்றம் (Mock Parliament) ஒன்று நடை பெற்றது. மாணவர்கள் அரச தரப்பு எதிர்தரப்பு என்று பிரிந்து வாதிட்டார்கள்.

எதிர்த்தரப்பில் வாதிட்டவர் வாளேந்திய சிங்கத்தின் முன் சிறுபான்மையோருக்கான கோடுகளை வைப்பது சரியில்லை. பெரும்பான்மையோரின் சிங்கம் சிறுபான்மையோரை வாள் கொண்டு அச்சுறுத்துவது போலிருக்கும் என்று வாதிட்டார்.

அப்படியானால் அந்தக் கோடுகளை சிங்கத்தின் மேல் பக்கமாக இருக்கச் செய்யலாம் என்றார் இன்னொருவர். அதற்கு அரச தரப்பினர் கோடுகளை மேல் பக்கமாக இருக்க செய்தால் பெரும்பான்மையோரின் முதுகின்மேல் சிறுபான்மையோர் சவாரி போவது போல் ஆகிவிடும் என்று கூறினார்கள் . அப்படியானால் சிங்கத்துக்கு கீழ்ப் பக்கமாக கோடுகளை வைப்போம் என்று ஆலோசனை பிறந்தது.

இல்லை, இல்லை கீழ்ப்பக்கம் என்றால் சிறுபான்மையோரை சிங்கம் தன்காலில் போட்டு மிதிப்பதாகவல்லவா ஆகிவிடும் என்றார்கள் சிறுபான்மைத் தரப்பினர்.

'அப்படியென்றால் சிங்கத்தை வலது பக்கம் பார்க்கும் படியாக திருப்பி அமைத்து விடலாம்' என்றார் ஒருவர். சிறுபான்மை தரப்பினர், அப்படியென்றால் சிறுபான்மையோர் சிங்கத்துக்கு பின்பக்கமாக இருப்பதாக ஆகிவிடும் என்று மறுத்தனர்.

இன்னொருவர் கூறினார் சிங்கத்தை மாற்ற முடியாது. ஏனென்றால் சிங்கம் இடது பக்கமாகவே வாளேந்தி நிற்பது தான் பழைய மரபு-அதை மாற்ற முடியாது என்று. அத்துடன் அன்றைய பகிடி பாராளுமன்றக் கூட்டம் முடிவுக்கு வந்தது.

சிங்கக் கொடி நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது அதன் நாற்புறமும் மூலைகளில் கோடுகள் தான் இருந்தன. பின்னர் அந்தக் கோடுகளுக்கு பதிலாக பௌத்தர்களின் சின்னமான அரச இலை பொறிக்கப்பட்டது. இது எப்போது செய்யப்பட்டது என்பது தெரியவில்லை. ✸

# ஏன் இந்த வீண் வம்பு?

சுகந்தன்

நேரமோ மாலை 7 மணி ஆகிகொண்டிருந்தது; அவசர அவசரமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்; அந்தவேளை என் காதருகே..

*"ஆசதோச அப்பள வடை..*
*ஆசைப்பட்டதை செய்... செய்... செய்.."* என்னும் பாடல் வரிகள் என் காதை வருடின.

உடனே பாடல் காற்றில் தவழ்ந்து வந்த திசையை நோக்கி எனது வண்டியும் என் கட்டுப்பாட்டை மீறி சென்றது. ஏதாவது இசைக் கச்சேரிகள் நடக்கும். அதுவும் இராணுவத்தினரின் அல்லது தென் பகுதியினரின் ஏற்பாட்டில் நடக்கும் இசைக் கச்சேரிகளாக இருந்தால் அழகான பெண்கள் அதுவும் தென்பகுதியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் பார்வையாளர்களின் விழிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர். நானும் அந்த ஆவலில் சென்று பார்த்தேன். எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி வழமையாக ஒரு நாலு அல்லது ஐந்து பேர்தான் மேடையை அலங்கரிப்பர். ஆனால் இப்போது இருபது பேர் ஒரே மேடையில். எல்லா இளைஞர்களும் மெய் மறந்து மேடையை நோக்கிய வண்ணம் 'அவளுக்கு எண்பது போடலாம், இவளுக்கு நூறு போடலாம், அட கறுமமே இவளை யார்டா மேடைல விட்டது'' என்றெல்லாம் தமக்குள் தம்மைத்தாமே தீர்ப்பாளர்களாக எண்ணி புள்ளிகளை வாரி வழங்கிட்டு இருந்தனர்.

அதே நேரம், எத்தனையோ கைத் தொலைபேசிகள் அவர்களை படம் பிடித்த வண்ணம் இருந்தன. எனக்கு பிறகுதான் புரிந்தது இது தென் இலங்கை மக்களின் கலாசார நிகழ்வுகளில் ஒன்றான புத்தாண்டு குமரன், புத்தாண்டு குமரிகளை தேர்வுசெய்யும் போட்டியாம்.



ஒவ்வொருவராக வந்து தம்மை அறிமுகம் செய்தனர். பெயர், ஊர், வயது என்பவற்றைச் சொல்லி தமது விசேட திறமைகளை மேடையில் காட்டிச் சென்றனர். வேடிக்கை என்ன வென்றால், தமிழர் பிரதேசத்தில் நடக்கும் நிகழ்வு மைதானம் முழுக்க தமிழ் மொழி தெரிந்தவர்களே அதிகம் காணப்பட்டனர். மேடையில் நின்ற இரு அறிவிப்பாளரில் ஒருவர் தமிழ் அறிவிப்பாளர். மற்றையவர் சகோதர மொழி மூலமான அறிவிப்பாளர். இரு மொழிகளிலும் அறிவிக்கப்படுவதற்காக அவர்கள் மேடையேற்றப்பட்டனர். ஆனால் அங்கு நின்ற தமிழ் அறிவிப்பாளருக்கான கால அவகாசம் வழங்கப்படாமல் சகோதர மொழி அறிவிப்பாளர் அரங்கை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். சரி என்ன செய்வது. ஏதோ விளங்காட்டிலும் பார்ப்பம் என்று பார்த்துக் கொண்டு நின்றேன்.

எனக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு மூன்று பெண்கள் தமிழில் பேசினர். ஆஹா! தென்னிலங்கைக் கலாசார உடை அணிந்து அவர்களின் கலாசார நிகழ்வில் ஒரு தென்னிலங்கைப் பெண் தமிழில் உரையாடுகிறாரே. எனது காதை அவரது வார்த்தைகளின் பக்கம் செலுத்தினேன். எனக்கு அதிர்ச்சி, அந்தப் பெண்கள் தமிழ்ப் பெண்கள் தமது கலாசாரத்தை மறந்து தென்னிலங்கை கலாசார உடையிலே தம்மை மறைத்திருந்தனர்.

இந்த நிகழ்வுகள் புத்தாண்டு நிகழ்வாக இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் இலங்கை இளைஞர் கழகங்கள் போன்றவற்றால் தமிழர் பகுதிகளெங்கும் நடத்தப்பட்டன. இதில் தமது பாரம்பரிய விளையாட்டுக் [illegible] குமரன் குமரிகளின் தெரிவு செய்யும் போட்டியும் உள்ளடக்கமாம்!

எமது தமிழர் பாரம்பரியத்தில் தமிழ்ப் பெண்கள் புகைப்படக் கலாசாரத்துக்குள் தள்ளப்படுவதை எந்தப் பெற்றோரும் விரும்பியது இல்லை. அண்மைக் காலமாக குடாநாட்டில் அரங்கேறிவரும் குற்றச் செயல்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களும் மூல காரணமாக விளங்குவதாகவும், அவர்கள் தமது கல்வி நிறுவனத்துக்கு மாணவர்களைக் கவரும் விதத்தில் சுற்றுலாக்களையும், கலை நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்து மாணவர்களை புகைப்படக் கலாசாரத்துள் தள்ளுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் தற்போது அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அவசியம். எனவே எமது கலாசாரத்தைப் பேணிக்காக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற பொது மக்களின் கட்டளையை உணர்ந்த யாழ். மாநகர சபை இனிமேல் தனியார் கல்வி நிறுவனங்கள் 5.30 மணிக்கு முன்னதாக தமது வகுப்புக்களை நிறைவு செய்து மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தீர்மானம் எடுத்திருந்தது. அது பின்னர் 6மணி என தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்தார்.

மாணவர்கள் மத்தியில் தேவையற்ற நிகழ்வுகள், சுற்றுலாக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பலர் தமது நண்பர்களின் படங்களை எடுத்து வேறு நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் முகமாக 'பேஸ்புக்' எனப்படுகின்ற முகப் புத்தகம், 'டுவீட்டர்' தளங்களில் வெளியிடுகிறார்கள். இது சில வேளைகளில் அவர்கள் அறியாமலேயே வேறு சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்களுக்கு உள்ளாக்கும்.

நவீன கலாசாரத்தைப் பின்பற்றி வாழும் அமெரிக்க மக்களின், ஜனாதிபதி பரக் ஒபாமா கூட தமது மகள்மார் இருவரையும் 'பேஸ்புக்' பாவிக்க தடைவிதித்துள்ளமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்று அறிவதற்கு தாமும் ஒரு 'பேஸ்புக் கணக்கை' ஆரம்பிப்பது என்பது பெற்றோர்களால் இயலாத விடயம். எனவே மாணவர்கள் இது விடயமாக அவதானமாக செயற்படுவது அவசியம். இது இவ்வாறு இருக்க எமது பிரதேசத்தில் தமிழர் தம் கலாசாரத்தை வளர்க்கும் நிகழ்வுகளோ, போட்டிகளோ நடைபெறுவதை விரல் விட்டுத்தான் எண்ணமுடிகிறது.


ஆனால், அண்மைக் காலமாக அதுவும் இறுதிப் போர் நிறைவுபெற்ற பின்னர் எமது தாயக பூமிகளில் தென்பகுதிக் கலாசார நிகழ்வுகளை காண்பதற்கு பஞ்சமே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். அது வெசாக் நிகழ்வாக இருக்கட்டும், புத்தாண்டு நிகழ்வுகளாக இருக்கட்டும். இதில் வேடிக்கை என்னவெனில் இந்த நிகழ்வுகளில் விரும்பியோ விரும்பாமலோ எமது மக்கள் பங்குபற்றத் திணிக்கப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் யுத்தம் நிறைவு பெற்ற சூழலில் பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் வடகிழக்குப் பிரதேசங்களில் இன்னும் நிலை கொண்டிருப்பதுதான். யுத்த காலத்தில் மிகவும் 'பிசியாக' இருந்த அவர்கள் தற்போது தாராளமாக ஓய்வு நேரங்களைச் செலவழிக்கின்றனர். இந்த மனித வலுவை பயன்படுத்தி இவ்வாறான நிகழ்வுகளை அரங்கேற்றுவது ஒன்றும் அரசுக்குக் கடினம் இல்லை.

இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக கூறிக்கொண்டு ஒரு இனத்தின் பாரம்பரியங்களையும் அவர்களின் கலை, கலாசாரத்தையும் ஊக்குவிப்பதை மறந்து அவர்களைத் தென்னிலங்கைக் கலாசாரத்துள் திணிக்க முயல்கிறது. இவ்வாறான நிகழ்வுகள் மூலம் இம் மக்கள் தமது கடந்த காலங்களை மறந்து செயற்படுவார்கள் என்று கனவு காண்கின்றதோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண், பெண் இருவருக்குமிடையிலான கற்பொழுக்கம்




நம்பியவர் வீட்டிலேயே அவருக்கு துரோகம் செய்து அவரது மனைவியிடம் இச்சைகொள்ளும் ஆண் பிணத்துக்குச் சமம் . இல்லறம் நிம்மதியாக நடைபெற வேண்டுமென்றால் பெண் கற்புடன் வாழவேண்டும். அதுவே உயர்ந்த வாழ்க்கை.

திருமணம் நமது கலாசாரத்தின் ஆணிவேர். கூட்டமாக மனிதன் வாழத் தொடங்கியபோது உறவுகளின் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது. இவள் எனது மனைவி; இனி வேறு ஆடவன் இவளை அணுகக்கூடாது என்று அறிவிக்கத் திருமணம் தேவைப்பட்டது. பெண்ணுக்கும் ஆடவன் மீதுள்ள உரிமையை நிலைநாட்ட திருமணம் உதவியது. திருமணம் செய்து கொண்டவர்கள் அந்த உறவுக்கு விரோதமாக நடக்க கூடாது என்றும் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு திருமணம் செய்து கொண்டவர்கள் வாழ்வில் வேறு மனிதர்கள் குறுக்கிட மாட்டார்கள். அப்படி வாழ்வது மணம் புரிந்து கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் நிம்மதியைத் தந்தது. இப்படிப்பட்ட அமைதியான வாழ்க்கையைத் தனித்தனிக் குடும்பங்களாக எல்லா மனிதர்களும் வாழ்ந்ததால் ஒரு சமூகமே அமைதியான சமூகமாக நிம்மதியான வாழ்க்கையை வாழ முடிந்தது.

இவ்வித கட்டுப்பாடுகளை மீறி வாழ்வது சமூக விரோதமாகவும், கேவலமான ஒன்றாகவும் கருதப்பட்டதால் அக்காலத்தில் அப்படி மீறுபவர்கள் சமூகத்திலிருந்தே விலக்கிவைக்கப் படுவதும் இடம்பெற்றது. இதனால் சமூகத்தில் அமைதி நிலவியது.

கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டியவன் மனிதன் என்பதால் அவற்றைக் காகிதத்தில் அச்சடித்து வைக்காமல் மனிதனின் ஆழ்மனதில் அச்சடித்தார்கள். அதற்கு முன்னோர்கள் போதனை செய்தல், இதிகாசக் கதைகளை அடிக்கடி மக்களிடம் சொல்லுதல் போன்ற உபாயங்களைக் கடைப் பிடித்து தர்மங்களை மனதில் எழுதினார்கள்.

*''பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அரனொன்றோ ஆன்ற ஒழுக்கு''.* ஆண் பெண் உறவுகள் பற்றி இவ்வாறு திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்

பிறன் மனைவியை இச்சையுடன் பார்க்காத பேராண்மை, நல்லவர்களுக்கு அறன் போன்ற காவலாக இருப்பது மட்டுமல்ல அது மிகச்சிறந்த ஒழுக்கமுமாகும் என்று கூறுகிறார். ஆண்மை என்பது ஆண் தன்மையைக் குறிக்கும் வழக்கு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் வள்ளுவரோ பேராண்மை என்று குறிப்பிடுவதன் மூலம் ஆண்மையின் சிறப்பு ஓர் ஆண்மகனுக்கு கொடுக்கும் பெருமையை விடப் பிறருடைய மனைவியின் மீது ஆசைப்படாமல் வாழ்வதே பெருமை என்று ஆணுக்கு எடுத்துரைக்கிறார்.

*''பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்*
*இகவாவாம் இல்லிறப்பான் கண்''*

பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கு தீமைகளும் பிறர் மனைவிமீது ஆசைப்பட்டு நாடிச் செல்பவரை விட்டு எப்போதும் நீங்காது என்று கூறிகிறார் வள்ளுவப் பெருந்தகை.

*''விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்*
*தீமை புரிந்தொழுகு வார்''*

சந்தேகப்படாமல் நல்லவர் என்று நம்பி வீட்டுக்குள் அனுமதித்தவர் அந்த வீட்டுக்கு தீமையைச் செய்து நடந்தால் அவர் செத்தவரைக் காட்டிலும் வேறுபட்டவர் அல்லர் என்கிறார் வள்ளுவர். அதாவது நம்பியவர் வீட்டிலேயே அவருக்குத் துரோகம் செய்து அவரது மனைவியிடம் இச்சைகொள்ளும் ஆண் பிணத்தக்குச் சமம் என்கிறார்.

எப்படி வெளியில் இருந்து பிணத்தை வீட்டுக்குள் அழைத்து நாம் வைத்துக்கொள்வதில்லையோ அதே போல அத்தகைய துரோக குணம் கொண்ட ஆண்களை வீட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது என்பதை இது உணர்த்துகின்றது.

இவ்வாறு ஆணின் பேராண்மையை எடுத்துச் சொன்ன வள்ளுவர் பெண்ணின் கற்புப் பற்றிய சிறப்பையும் எடுத்துச் சொல்லுகிறார்.

''பெண்ணிற்பெருந்தக்கயாவுளகற்பென்னும் திண்மையுண் டாகப் பெறின்''.

கற்பு என்னும் மனவுறுதி, இல்லாளிடம் உண்டாயிருந்தால், அந்தப் பெண்ணை விடப் பெருமைமிக்கவை உலகில் வேறென்ன இருக்கிறது? ஒன்றுமில்லை என்கிறார் வள்ளுவர். கற்புடன் வாழ்வேன் என்ற உறுதியுள்ள பெண்ணே உலகில் வேறு எல்லா விடயங்களைக் காட்டிலும் உயர்ந்தவள் என்று வள்ளுவர் கற்புடன் வாழ்வதன் உயர்வைப் பெண்ணுக்குச் சொல்கிறார் .

இல்லறம் நிம்மதியாக நடைபெற வேண்டுமென்றால் பெண் கற்புடன் வாழவேண்டும். அதுவே உயர்ந்த வாழ்க்கை என்று பெரியோர்களால் வலியுறுத்தப்பட்டது.

*''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்''*

தன் ஒழுக்கத்திலிருந்து தவறாமலும் கற்பு குறையாமல் வாழ்ந்தும் தன் கணவனையும் அன்புடன் நடத்தி இல்லறத்தைக் காப்பதில் சோர்வு அடையாதவளே பெண் என்று எடுத்துரைக்கிறார் வள்ளுவப்பெருந்தகை.

தற்காலத்தில் வள்ளுவரை நினைவில் கொள்பவர் யார்? பள்ளிப்படிப்பை விட்டு வெளியே வந்தால் மக்களை அப்படியே ஆக்கிரமிப்பது வள்ளுவமா அல்லது மேலை நாட்டு நாகரீகமா என்றால் மேலை நாட்டு நாகரீகமே என்று அடித்துச் சொல்லலாம்.

கலாசாரம் என்பது பழம் பஞ்சாங்கம், மேலை நாட்டு நாகரீகத்தின் படி வாழ்வதே அறிவு என்று பரப்புவர்கள் நுனிக்கிளையில் உட்கார்ந்து அடிக்கிளையை வெட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு.

## பெண் ஓர் அற்புதம்

பெண் என்பவள்
ஓர் அற்புதம்
அவள் அசைந்தாடும்
ஓர் அதிசயம்...
பெண் புகழ் பாடா
கவிஞன் இல்லை
பெண் இன்றி
தலைமுறை இல்லை...
அடுக்களையிலும்
உறைந்திடுவாள்
அவளுக்குஅணு உலையும்
ஒரு சாதனைக் கூடம் தான்....
மணிக் கொன்றாய்
புகழை ஏற்றி விடு
மகுடம் தன்னை
சூடி விடு...
பெண்ணே.... நீ
மலரென்றாலும்
மலையின் வலிமை
உன்னுள் !!!

- அபி



## பெண்களின் இரகசியம்

அழகுப் பெண்களுக்குச் சில அபூர்வ குணங்களும் இருக்கும். அவர்கள் மனதின் ஆழத்தை அவ்வளவு எளிதாக அளந்து சொல்லி விட முடியாது. பெண்களின் குணநலன் பற்றி ஆராய்ந்த பெண் ஆராய்ச்சியாளர் ஒருவர், பெண்கள் பொய் சொல்வதை நிறுத்தவே மாட்டார்கள்' என்று கண்டுபிடித்துள்ளார்.

பிரிட்டிஷ் பெண் ஆய்வாளரான மேரி கோல்ட் தனது ஆராய்ச்சி முடிவாக வெளியிட்ட சில பெண் இரகசியங்கள்...

பெண்கள், தம் கணவர்மாரிடம் தினமும் குறைந்தபட்சம் 3 பொய்கள் சொல்கிறார்களாம். இப்படிப் பொய் சொல்லாத பெண் ஒருவர் கூட இல்லை என்பதுதான் ஆய்வில் கிடைத்த அதிர்ச்சியூட்டும் உண்மை. விதமாகப் பொய் சொல்கிறார்களாம். சிறு விடயங்களில் தவறு நடந்துவிட்டால் கூட உண்மையைச் சொல்லாமல் பொய்க் காரணம் கூறுவது அநேக பெண்களின் வழக்கம். இவர்கள் ஒருவகை. கணவர் மீதான பயம் அல்லது வெறுப்பின் காரணமாக உண்மையை மறைப்பது இரண்டாவது வகைப் பெண்கள். வஞ்சகமாகப் பொய் சொல்வது மூன்றாம் வகையினர்.

பெண்கள், சாதாரணமாக சிராய்ப்புக் காயம் ஏற்பட்டால் கூட அதன் உண்மைக் காரணத்தைச் சொல்லமாட்டார்கள்.

கணவர் கண்டித்தால் கொஞ்சநேரம் அமைதி காத்துவிடும் பெண்கள், அதற்குப் பின் சிடுசிடுப்பாகிப் பொய்களைச் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். அதாவது சிறிது நேரம் கழித்து கணவர் ''என்னுடைய மஞ்சள் சட்டை எங்கே இருக்கிறது?'' என்று கேட்டால்,''அதை நான் பார்த்து ஒரு வாரம் ஆகிறது''என்று மழுப்பலான பதிலைச் சொல்வார்கள். ஆனால் அந்தச் சட்டையை அலுமாரியில் எடுத்து வைத்திருப்பார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கும்.

இப்படிச் சின்னச்சின்ன விடயங்களில் அதிகம் பொய் சொல்லும் பெண்கள் அதை ஒரு தவறாக எடுத்துக் கொள்வதோ, ஏமாற்றுகிறோம் என்று கவலைப்படுவதோ கிடையாதாம். ஆனாலும் பெண்களின் பல பொய்கள் கணவன்- மனைவி உறவை வலுப்படுத்துவதற்காகச் சொல்லப்படுபவையாகவே உள்ளன என்று ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

- சந்தியா

## பெண்ணுக்குரிய சடங்கு, ஆசாரங்கள்

### தோடு[தாடங்கம்]



- நித்தியா

திருமணமான பெண்கள் மாங்கல்ய தாரணத்தின் போது கணவன் கூறிய மந்திரம். ''மாங்கல்யம் தந்துநாநேன மமஜீவனஹேதுநா'' - என்னுடைய ஜீவனுக்கு ஹேதுவாக இந்த மாங்கல்யத்தை அணிவிக்கிறேன் என்று கூறியதைக் கருத்தில் கொண்டு, தோடு முதலான ஆபரணங்களைத் தன் கணவனின் நலத்திற்காகவே பெண் அணிந்து வருகிறாள். தோடு அணிவதால் கணவனை எந்த ஆபத்திலிருந்தும் காத்திட முடியும் என்பதை வேதம் கூறுகிறது. ஆலகால விடத்தை உண்ட சிவன் ஜீவித்திருக்கிறார் என்றால்,தேவி, -சிவ பெருமானுக்கு, மருந்தாக இருக்கிறாள், அதனால் சிவன் ஜீவித்திருக்கிறார், என்று யஜூர் வேதம் கூறுகிறது. சூரியன், சந்திரன் ஆகிய இருவரை இரு காதுகளில் தாடங்கங்களாக (தோடுகளாக) அணிந்திருக்கிறாள். சுமங்கலிகளுக்குத் தாடங்கம் விசேடமான ஆபரணம். அம்பாளுடைய தாடங்கத்தின் மகிமையைப் பற்றி ஆதிசங்கரர் தம் சௌந்தர்ய லஹரியில் '' அம்மா! உன் கணவன் ஆலகால விடத்தைச் சாப்பிட்டாலும் அந்த விடமானது நீ அணிந்திருக்கும் தாடங்கத்தின் கீழ் இறங்காமல் கண்டத்தில் நின்றது. தாடங்கத்தின் (தோட்டின்) மகிமைதான்'' என்கிறார். ஆகையால், பெண்கள் காதில் தோடு அணிவதால் தன் கணவனுக்கு எந்த ஆபத்தும் வராமல் காத்திட உதவுகிறது. அடியார்கள் குறைகளைக் கேட்டு அருள் பாலிப்பது தோடுடைய செவி என்று திருஞான சம்பந்தர் முதல் பாடலிலே தோட்டின் மகிமையைக் கூறுகிறார். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வசாவிளான் தவமைந்தன்

# இராக வாசிப்பு முறையின் தந்தை லலிதஸ்வரநாத பூபதி எம்.பி. பாலகிருஷ்ணன்

46

## சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்



தமிழர்களின் பண்பாட்டுச் சடங்குகளிலே மிக முக்கியமான இடம் வகிப்பது மங்கல இசையாகும். நாதஸ்வரம், தவில் ஆகிய கருவிகளின் இனிய ஓசையானது ஒலிக்காமல் சமய, பண்பாட்டு நிகழ்வுகள் தமிழர்களால் நடத்தப்படுவதில்லை என்றே கூறலாம். கலைகளின் கருவறையாக விளங்கும் சைவாலயங்களின் வழிபாடுகள், மங்கல இசையை அடிப்படையாகக் கொண்டே நடத்தப்பட வேண்டும் என்னும் விதிமுறைகளும் பல்லாண்டுகளாக எம்மிடம் இருந்து வருகின்றன.

ஈழத்தின் மங்கல இசைக்கலை வரலாறானது தனித்துவமான, உலகப் புகழ்பெற்ற நிலையில் பல தசாப்தங்களாக இருந்து வருகின்றது. தென்னிந்தியக் கலைஞர்களை வியக்க வைத்த பல இசையாளர்கள் இங்கே வாழ்ந்துள்ளனர் என்பதும் தற்போதும் அவ்வாறான நிலையில் எமது கலைஞர்கள் இருக்கின்றனர் என்பதும் பெருமைக்குரியதே.

இந்தவகையில் மங்கல இசைப் பரம்பரையின் வழிவந்த கலைஞராகவும் குரலிசை வல்லவராகவும் மரபுவழி பிறழாத இராகம் வாசிக்கும் முறையின் தந்தையாகவும் ஏராளமான நாதஸ்வரக் கலைஞர்களை உருவாக்கிய மேதையாகவும் இன்றுவரை தமிழகத்துக்குச் சென்று நாதமழை பொழிந்து வருகின்ற ஈழத்துக் கலைஞராகவும் அறுபது ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட முதுகலைஞராகவும் இசைத் தொண்டு புரிந்து வருபவர் நாதஸ்வர இசைவேந்தன் எம்.பி.பாலகிருஷ்ணன்.

மறைந்த பெரியசாமி - பார்வதி தம்பதியரின் மகனாக 01.11.1938 இல் புலோலியில் இவர் பிறந்தார். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று, தனது தந்தையிடமே குரலிசையையும் நாதஸ்வரக் கலையையும் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்கத் தொடங்கினார். இசை பாடும் திறன் கொண்டிருந்த இவர் நாதஸ்வரத்தை இனிதுற வாசித்துத் தனது ஒப்பற்ற எதிர்காலத்தைப் பத்தாவது வயதிலேயே வெளிப்படுத்தி நின்றார்.

புதிதாகக் கற்க வேண்டும் என்னும் ஆவல் கொண்டு எஸ்.எம்.பி.திருநாவுக்கரசு பிள்ளை என்னும் நாதஸ்வர மேதையிடம் இந்தக் கலையைக் கற்றுக் கொண்டதுடன் அவருடன் இணைந்து வாசித்தும் வந்தார். அதன் பின்னர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி என்.கே.பத்மநாபனிடம் கற்று வந்ததுடன் அவரது இணை நாதஸ்வரக் கலைஞராகவும் பணியாற்றி வந்தார்.

1954இல் இருந்து பத்து ஆண்டுகள் என்.கே.பியுடன் இரட்டை நாதஸ்வரக் கலைஞர்களாக இலங்கை முழுவதும் இசை மழை பொழிந்துவந்த காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் முதல் வருகின்ற ஆறுமாத காலம் ஈழத்திலும் அதன் பின்னர் தமிழகத்திலும் தங்கியிருந்து தமது இசைக் கலையை வளர்த்தும் பரப்பியும் வந்தார். இக்காலத்தில் திருச்சேரை நாதஸ்வரச் சக்கரவர்த்தி கிருஷ்ணமூர்த்தி பிள்ளையிடம் குருகுல முறையில் இக்கலையைக் கற்று வந்தார்.

1964இல் தனியான குழு அமைத்துத் தனது மங்கல இசைப் பணியைத் தொடங்கிய இவர் ஈழத்திலும் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் தனது இசைப் பணியை விரிவுபடுத்திக் கொண்டார். தமிழகத்தில் மட்டுமல்லாமல் கேரளா, ஆந்திரா போன்ற மாவட்டங்களிலும் ஏராளமான நாதஸ்வரக் கச்சேரிகளைச் சிறப்புடன் வழங்கியதுடன் இக்காலத்தில் அம்பல் இராமச்சந்திரன், பல்லவி நடராஜ சுந்தரம், பந்தணைநல்லூர் தட்சணாமூர்த்தி, கோட்டூர் இராஜரத்தினம் பிள்ளை, நாகர்கோவில் சுடலையாண்டிக் கம்பர் போன்ற நாதஸ்வர மேதைகளுடன் இணைந்து எண்ணற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு தமிழகத்தின் இசை இரசிகர்களதும் இசைக் கலைஞர்களதும் பாராட்டுக்களைப் பெற்று ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர். அத்துடன் கிளாரினெட் கலைஞர் ஏ.கே.சி. நடராஜனுடன் இணைந்தும் பல இசையரங்குகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

எந்த வகையான இராகத்தையும் அழகாகவும் நுட்பமாகவும் மரபு வழி தவறாமலும் இனிமையுடனும் சுருதி சுத்தமாகவும் வாசிப்பதில் ஈடு இணையற்ற ஒருவராகவும் இராக வாசிப்பு முறையின் தலைமகனாகவும் இளம் கலைஞர்களுக்கான கிடைத்தற்கரிய குருவாகவும் இசைப் பணியாற்றி வரும் இவர் மல்லாரி, பல்லவி போன்ற இசை உருப்படிகளைச் சுயமாக உருவாக்கும் வல்லமை கொண்டவர்.

தமிழகத்திலும் ஈழத்திலும் பெரும் புகழ்கொண்டிருந்த அத்தனை தவில் மேதைகளும் இவரது இசை அரங்குகளில் தவில் வாசித்து வந்துள்ளனர். எம்.பி. நாகேந்திரம், சேகர், சுதாகர், காங்கேஸ்வரன் போன்ற நாதஸ்வரக் கலைஞர்களின் குருவாக விளங்கும் இவர் இலங்கை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஏராளமான நிகழ்வுகளை வழங்கியவர்.

''சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் பல இசைக் கச்சேரிகளை நிகழ்த்திய இவர் சிங்கப்பூரில் இருக்கும் ஆலயத்தில் வாசித்துக் கொண்டிருந்தபோது லால்குடி ஜெயராமனின் சகோதரியால் பாராட்டப்பட்டமையும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தென்னிந்திய வீணைக் கலைஞர் பாலச்சந்தர் தனக்கு அணிவிக்கப்பட்ட மாலையை எனக்கு அணிவித்துப் பாராட்டியமையும் என் வாழ்வில் மறக்க முடியாதவை'' என உளம் பூரித்துக் கூறுகின்றார்.

''சுருதி என்பது இசையின் தாய். அதனால் தான் சுருதி மாதா லயம் பிதா என்று எம் முன்னோர் சொல்லி வைத்துள்ளார்கள். எதை வாசித்தாலும் சுருதியுடன் வாசிக்க வேண்டும். கச்சேரி தொடங்கி முடியும் வரை எமது எண்ணம் சுருதியிலும் லயத்திலும் இருக்க வேண்டும். நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை எப்படிப்பட்ட கணக்கையோ உருப்படியையோ வேகமாகவோ அதி வேகமாகவோ வாசித்தாலும் துளியளவும் சுருதி பிசகவில்லை.

இன்று வரை நானும் சுருதியில் முழுக் கவனம் செலுத்தியே வாசித்து வருகின்றேன். சிறிதளவு வாசித்தாலும் இனிமையுடன் வாசிக்க வேண்டும் என்பது எனது கொள்கையாகும். ஆனால் தற்கால்த்து இளைஞர்கள் தம்மைப் பெருங்கலைஞர்களாகக் காண்பிக்க நினைத்து நிதானமற்றுச் சுருதியைக் கவனிக்காமலே நாதஸ்வரத்தை வாசித்து வருகின்றனர். இராகமாக இருந்தாலும் லயக் கட்டுமானத்தின் உயிராக விளங்கும் கணக்கு வழக்காக இருந்தாலும் அது தம்புராவுடன் இரண்டறக் கலந்தால் தான் செவிக்கு இனியதாக இருக்கும்'' எனத் தனது கருத்துக்களை இவர் உறுதியுடன் கூறுகின்றார். ✱

# உடற் சூட்டைத் தணிக்கும் கொடிப்பசளி



நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

### கொடிப்பசளி

**வேறு பெயர்-** கொடிவசலை, கொடிப்பசரை, கொடிவயலை, பசளி, கொழும்புப்பசளி
**தாவரவியற் பெயர்-** Basella alba (பசிலா, அல்பா)
**குடும்பம்-**Chenopodiaceae (சீனப்போடியேசியே)
**சமஸ்கிருதப் பெயர்-**போதகி
**ஆங்கிலப் பெயர்-**Indian Spinach

கொட்டிப் பசளியில் வெள்ளை (B.alba), சிவப்பு, (B.rubra) என்ற பேதங்களுண்டு. தனி இலைகள் சதைப்பிடிப்பானவை. பெரியவை. நீள் வட்டம் அல்லது இதய உருவானவை.

இதன் இலையை பருப்புடன் சேர்த்து பருப்புக்கறியாகச் சமைத்துண்ண தாகம், உடற்சூடு, மலச்சிக்கல் என்பன நீங்கும்.

**வீக்கத்துக்கு**

இலையை வாட்டி வீக்கம், கட்டுக்கு வைத்துக் கட்ட மாறும்.

**கரப்பனுக்கு**

இலையை அரைத்து நெய் அல்லது வெண்ணெயில் குழைத்துப் பூசிவர மாறும்.

**நீர்கட்டுக்கு**

இலைச்சாற்றுடன் சிறிது கற்கண்டு சேர்த்துக் கொடுக்க குழந்தைகளுக்குண்டான நீர்க்கட்டு மாறும்.

**தலைவலிக்கு**

இலையைக் கசக்கி நீர்விட்டுக் கலக்க ஒரு வி[illegible] அதை நெற்றி[illegible]தீராத தலைவலியும் தணியும்.

### அரைக் கீரை

**வேறு பெயர்-** அறக் கீரை
**தாவரவியற் பெயர்-** Amaranthus tricolor (அமராந்தஸ் ரைகோலர்)
**குடும்பம்-**Amaranthaceae (அமராந்தேசியே)
**சிங்களப் பெயர்-** குரதம்பல
**சமஸ்கிருதப் பெயர்-**தண்டுலீய
**ஆங்கிலப் பெயர்-** Chinese spinad

இது சிறுபூண்டு. தோட்டங்களில் பயிரிடப்படுகிறது. தரிசு நிலங்களில் தானாகவும் முளைக்கும். நிலத்தை அண்டிப் படரும். அல்லது நிமிர்ந்து காணப்படும். முட்களற்றது.

சிறிய இலைகள். முட்டை வடிவம். இலை, தண்டு என்பவற்றைக் கறி சமைத்துண்டு வர சிறுநீர் நன்கு வெளியாகி சிறுநீர்ச்சூடு, எரிச்சல் என்பன நீங்கும். பசியைத் தூண்டும். குருதிச் சோகை மலச்சிக்கல் என்பவற்றையும் நீக்கும்.

### பரட்டைக் கீரை

**வேறு பெயர்-** பறட்டைக் கீரை
**தாவரவியற் பெயர்-** Justicea madurensis (ஜஸ்ரீசியா மடுரேன்சிஸ்)
**குடும்பம்-**Acanthaceae (அக்காந்தேசியே)

இதுவும் பூண்டு. தரிசு நிலங்களில் வளரும். இதைச் சமைத்துச் சாப்பிட்டு வர நாள்பட்ட மலக்கட்டு, வளி, ஐயப் பிணிகள், கரப்பன் என்பன மாறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 216

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| 9 | | 10 | | | 11 | | |
| | | | | 12 | | | |
| | 13 | | 14 | | | 15 | |
| 16 | | | | | 17 | | |
| 18 | | | | 19 | | | 20 |
| 21 | | | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.வழமைக்கு மாறாக வித்தியாசமானது
6. கையால் அளவிடும் அளவு
7. வேகம்
8. குளிர்மை
9. வேமாகச் செல்வது
11. ஒரு பிரபந்தம்
12. நோவு
13. ஒரு மரக்கறி வகை
15. வாயினால் அல்லது பற்களினால் பற்றுவதால் ஏற்படுவது
16. தங்கள்/ தங்களது
17. சொன்னதைச் சொல்லும் பறவை
18. அன்பின் வகை
19. ஒரு வாசனைத் திரவியம்
21. நீண்டதூர அளவிடை அலகு
22. இந்தச் சங்குக்கு மதிப்பு அதிகம்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நட்சத்திரம்
2. கோள் சொல்வது
3. தினசரி மாறுவது
4. மன்மதன் மனைவி
5. மறைந்திருந்து உயிர் பறிப்பது
8. பெருக்கல் குறி
10. கணக்குப் பார்த்தல்
11. உயிரை ஒன்றுக்காகக் கொடுத்தல்
12. திறை
13. சத்தமிடல்
14. தமது
15. பூச்சு மருந்தின் வடிவம்
16. பொருந்தாத தன்மை
17. தற்போதைய நிறுத்தல் அளவையில் கிலோவில் ஆயிரம் இது.
19. சேர்
20. செய்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 214 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அகவல் (4) கதலி (6) மலர் (7) அரண்
(8) ரவிக்கை (10) கடுகு (12) கப்பம்
(14) சம்பல் (15) ஒளி (16) சரி (17)புழு (18)மாதவி
(20)சுரங்கு (22) தில்லானா (23) விகுதி

### மேலிருந்து கீழ்

(1) அமரர் (2) கலவி (3) வர்க்கம் (4) கரகம்
(5) தண்டு (9) கைப்பணி (11) குறளி
(13) பல் (14) சரிதல் (15) ஒழுங்கு (16) சமாதி
(17) புரவி (19) விலா (21) குதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 216**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 06.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.216இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 10.06.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 214 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**பாத்திமா அக்ஷானா மஹ்ரூஜ்**
இல.51/B நாகவில்லு, பாலாவி, கருக்கம்பிட்டி, புத்தளம்.

**2 ஆம் பரிசு**
**திருமதி புவனா தில்லை,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
**பானுஜா அசோகன்,**
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**4 ஆம் பரிசு**
**கு.கி.யோ.றெஜுஸ்,**
இல.97, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

**5 ஆம் பரிசு**
**வசந்தி பிரகலாதன்,**
இல.276, மூர் வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

**கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா,**
'ஸ்ரீஅகம்' சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

**க.சுப்பிரமணியம்,**
இல.63/2 திருவையாறு, கிளிநொச்சி.

**ஜே.கொலஸ்ரீன்,**
மே/பா- ஐ.முருகையா, மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# பாரதப் போரும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என அவனைப் புகழ்ந்து வாழ்த்துகிறார் பீஷ்மர்.

மன்னவரும் விண்ணவரும் துதித்து வணங்கி நிற்க, அடுத்து வரும் உத்தராயண காலம் (தேவர்களுக்குப் பகல்) வரை பீஷ்மர் என்ற பிதாமகரது உயிர் பிரியாமலிருந்தது.

அதன்பின், துரோணாச்சாரியார் தலைமையில் போர் நடைபெறுகிறது. அசுவத்தாமா என்னும் பெயருடைய யானையை வீமன் கொன்று போட்டான். இதனைப் பயன்படுத்தி, அசுவத்தாமன் என்ற துரோணரின் மகனை வீமன் கொன்றுவிட்டான் எனத் தருமனைப் பொய் சொல்ல வைக்கிறார் கிருஷ்ணர்.

*"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்"* *[குறள் 292]*

என்பதனால் தருமன் சொன்ன செய்திகேட்டுத் துரோணர் நம்பி, ஆயுதங்களைப் போட்டுவிட்டுத் தேர்த்தட்டில் இருந்து விடுகிறார். அப்பொழுது எதிரியான திட்டத்துய்மன் தேரில் ஏறி நின்று துரோணரை வெட்டிச் சாய்த்தான்.

இந்த வஞ்சகச் செயலைக் கேட்ட அசுவத்தாமன், பாண்டவர் மீது நாராயணாஸ்திரத்தைப் பிரயோகித்தான். உடனே நாராயணன், பாண்டவர்களை, ஆயுதங்களைக் கீழே போடும்படி செய்தார். அதனால் எதிர்ப்பாரின்றி நாராயணாஸ்திரம் திரும்பிப் போய்விட்டது.

"பாண்டவர்கள் நாராயணர்கள்; அவர்களை நாராயணாஸ்திரம் துன்புறுத்தாது" என்கிறார் வியாசபகவான்.

இவ்வாறாக, அவதார புருஷர்களான பீஷ்மரினதும் துரோணரினதும் முடிவும் தீமைக்குத் துணைநின்ற குற்றத்தால் நிகழ்ந்தமையை நாம் உணர்ந்து கொள்வோமாக.

# நட்பும்.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியாமின் வீட்டிலும் அவனுக்கும் பெண் பார்க்கும் படலம் மிகவும் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சியாம் வைஷ்ணவியை மதிய உணவின் போது சந்தித்துக் கொள்வது வழக்கம். அன்றும் அப்படித்தான். இருவரும் உணவைப் பரிமாறிக் கொண்டார்கள். சியாமுக்குப் பிடித்த உணவாயின் முழுவதையும் வைஷ்ணவியிடமிருந்து பிடுங்கிக்கொண்டு தனது உணவை வைஷ்ணவிக்கு கட்டி அடிப்பான். வாய் ஓயாமல் உணவின் ருசியைப் பாராட்டுவான். இருவரும் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். சியாமே பேச்சைத் தொடங்கினான். "வைஷ் வீட்டிலை பெண் பார்க்கும் படலம் தொடங்கி விட்டது" சியாம் சொல்லி வாய் மூடவில்லை. "கங்கிராயுலேசன்ஸ் கையைக் கொடுங்க" எது வித உணர்ச்சி மாறுபாடுமின்றி கையை நீட்டினாள் வைஷ்ணவி. சியாம் கையைக் கொடுக்கப் போனவன் ஏதோ நினைத்தவனாக அதனை இழுத்துக் கொண்டான். "ஏன் சியாம்" பதறியவாறு கேட்டாள். "வைஷ், நீர் உறைப்பு சாப்பிடுகிறீர்; நான் இனிப்பு சாப்பிடுகிறன். இரண்டும் கலந்தால் பிறகு சாப்பிட முடியாதல்லவா" இருவரும் வாய்விட்டு கல கலவென்று சிரித்தார்கள். அதிலும் வைஷ்ணவி விழுந்து விழுந்து சிரித்தாள் புரக்கேறியது. சியாம் தலையில் தட்டியவாறு தண்ணீரை நீட்டினான். "ஆபீசிலை தான் உப்பிடி அப்படி நடக்கு தெண்டால் கன்ரீனிலை உவை அடிக்கிற கொட்டத்துக்கு ஓர் அளவே இல்லை?" இருவர் காதிலும் அந்தக் குசுகுசுப்பு விழுந்தது. ஆனால் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. திடீரென "சியாம் உங்களுக்கு ஒண்டு சொல்ல மறந்திட்டேன். நாளைக்கு எங்கடை கடைக்குட்டிக்கு 10 ஆவது போத்டே. சிம்பிளாய்ச் செய்யிறம். அவனைக் கொஞ்சம் சந்தோஷப்படுத்துவதற்காக பிளீஸ் நீங்களும் வாங்களன்". வைஷ்ணவி கெஞ்சிக் கேட்க மறுப்பானா சியாம்? சம்மதித்தான் பின்பு மீண்டும் பெண் பார்க்கும் படலத்திற்கு கதை திரும்பியது. "ஆ..சியாம் எப்பிடிப்பட்ட பெண்ணை நீங்கள் விரும்புறீங்கள்? எப்படிப்பட்ட பெண்ணை உங்கடை பெற்றார் விரும்புகிறார்கள். பைப்பில் கைகளைக் கழுவிய வண்ணம் கேட்டாள். "உம்மைப் போல ஒரு பெண்ணை" கூறினான் சியாம். நிச்சயமாகக் கிடைக்க மாட்டாள். "ஏன் வைஷ் உன்னை விட்டால் யாருமில்லை என்ற மமதையா?" ஆர்வமுடன் கேட்டான் சியாம் "நோ சியாம். என்னைப் போல இந்தப் பெரிய குடும்பச் சுமையை இழுக்கிற அதிர்ஷ்டசாலி உலகிலேயே நான் ஒருத்தியாகத்தான் இருப்பன்" கண்ணீர்த்துளிகளை விரலால் சுண்டியவாறு கூறினாள் வைஷ்ணவி. "உறைப்புக் கை கண்ணுக்குள்ளை பட்டுதா" தனது கைக்குட்டையை நீட்டினான் சியாம். வைஷ்ணவி தனது சேலைத் தலைப்பால் கண்ணீரைத்துடைத்துக் கொண்டாள்.

வைஷ்ணவியின் தம்பியின் பிறந்த நாளுக்கு சியாம் வந்திருந்தான். தம்பிக்காக அல்ல, வைஷ்ணவியின் அன்புக்காக அங்கேயும் சியாமின் நட்பையே விரும்பினாள் வைஷ்ணவி.

மாதங்கள் பல சென்றன. சியாம் வீட்டில் அவனுக்கென ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். பெண்ணின் போட்டோவும் சியாமிடம் கொடுக்கப் பட்டது. அன்று கந்தோரில் எப்பொழுது லஞ் ரைம் வரும் என துடியாய் துடித்துக்கொண்டிருந்தான் சியாம். அவன் துடிப்பை அறிந்து நேரமும் கெதியாய் ஓடியிருக்க வேண்டும். லஞ்ரைம் விரையில் வந்துவிட்டது. வைஷ்ணவி எழுந்து தனது கைப்பையை தோளில் போட்டு இப்போது கொண்டு சியாமை நெருங்கி "என்ன சியாம். இன்டைக்கு கெதியாய் லஞ்ரைம் வந்தது மாதிரி இருக்கு. உங்களுக்கு எப்படி?" கேட்ட வைஷ்ணவியை ஒரு தரம் உற்று நோக்கி விட்டு அமைதியாக கன்ரீனை நோக்கி நடந்தான். "என்ன சியாம் ஒரு மாதிரி வாறீங்கள் காய்ச்சல் ஏதுமா?" நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் வைஷ்ணவி. சியாமின் கையை விலக்கியவாறு "எனக்கு பெண் பார்த்து நிச்சயம் செய்து விட்டார்கள். இதுதான் மணப்பெண்ணின் படம்" என அவன் தனது பொக்கட்டில் இருந்த படத்தை எடுத்து நீட்டினான். நீட்டியவன் வைஷ்ணவியின் முகத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுமா? என அவதானித்தான். எந்த மாற்றமும் இல்லை. பார்த்தவள். "ரொம்ப லக்கி சியாம் நீங்கள். பெண் தேவதை போல இருக்கிறாள்" படத்தைக் கையில் வைத்தவாறு ரசிக்கத் தொடங்கி விட்டாள்.

சியாம் தன்னுடைய மனதில் இருந்த காதலை வெளிப்படுத்தினான். வைஷ்ணவி ஆச்சரியப்பட்டாள். அவள் குடும்ப நிலை சியாமை மட்டுமல்ல எவரையும் காதலிக்க வைக்காது. அப்பிடிப்பட்டவள் கனவை வளர்த்துக் கொள்வாளா? சியாமுக்கு எவ்வளவோ புத்திகளைக் கூறி ஒருவாறு திருமணத்திற்கு சம்மதிக்க வைத்துவிட்டாள் வைஷ்ணவி.

திருமணத்துக்கு மாதம் அவ்வளவாக நன்றாக இல்லாமையால் திருமணப் பதிவை முதலில் வைத்தார்கள். வைஷ்ணவியும் அந்தத் திருமணப்பதிவுக்குச் சென்றிருந்தாள். "பத்து லட்சம் கைரொக்கம்" நகை வீடு வளவு ஒரே பிள்ளை. "ஏன் இவ்வளவு சீர் சினத்தி" பலர் பல விதமாகப் பேசினார்கள். வைஷ்ணவி எவ்வளவோ மறுத்தும் கைரொக்கமாகப் பெற்ற பணம் அவளின் கைக்கு மாறியது. நிஜ உலகில் உடன் பிறந்த சகோதர பாசம் செய்யாத கடமையை நட்புச் செய்தது. பத்து லட்சம் சியாமின் அன்பிற்கு ஈடாகுமா? இந்த அன்புப் பெட்டகத்தை தன் வாழ்வில் இணைத்திருந்தால் அவளின் எதிர்கால வாழ்வு எவ்வளவு ஒளிமயமாகத் திகழ்ந்திருக்கும். அது நடக்க கூடியதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறையாடப்படும் சொத்துக்கள்

லக்ஸ்மன்

எமக்கு உதவுகிறார்கள் என எண்ணிக் கொண்டு தென்பகுதியில் இருந்து வரும் நிதி நிறுவனங்களின் மீது முழு நம்பிக்கையும் வைத்து செயற்படுவது இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது. குறிப்பாக வர்த்தகர்கள் கைத்தொழிலாளர்கள் இதில் மும்முரமாக உள்ளனர்.

வங்கிகள் லீசிங் கம்பனிகள் நிதி நிறுவனங்கள் என்று யாழ். குடாநாட்டில் நூற்றிப்பதின்னான்குக்கும் அதிகமான கிளைகளைப் பரப்பிக் கொண்டு உள்ளனர். கவர்ச்சிகரமான வியாபார தந்திரங்களில் உள்ள சூட்சுமங்கள் பற்றி, எண்ணுவதில்லை. இது குறித்துக் கவலைப்படாது நமக்கு ஏதோ நல்ல காலம் வருகிறது என்று அவர்களின் பின்னே அலையும் வர்த்தகர்கள், கைத்தொழிலாளர்கள் அது குறித்து சரியான முறையில் சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டால் நீங்கள் விரும்பாத உண்மைகள் பலவற்றைத் தெரிந்து கொள்ள முடியும்.

கடன் உதவி கவர்ச்சிகரமான வட்டி என்ற அறிவிப்புக்களைக் கண்டதும், அந்த நிறுவனங்களை நாடும் ஒவ்வொருவரும் அவை திடீரென அறிவிக்கும் கடன்களுக்கான வட்டி அதிகரிப்பு தற்காலிக கடன்கள் குறைப்புக்கள் மூலம் பெரும்பாதிப்புக்கு ஆளாக வேண்டியது என்பதே உண்மை.

கடன்கள், லீசிங் மூலம் வாகனங்களைப் பெறுதல் என்பவற்றுக்காக நீங்கள் பலதரப்பட்ட ஆவணங்களைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கிறீர்கள். காணி உறுதிகள் கையளிக்கப்படுகின்றன. தமது வியாபார நடவடிக்கைகளுக்காக உங்களுக்கு உதவ வருபவர்களாகக் காட்டிக் கொண்டு மாற்றீடாகக் காணி உறுதிகள், வீடுகளுக்கான உறுதிகள், நகைகள் போன்ற பல்வேறு நிலைகளில் உங்கள் சொத்துக்களை நீங்கள் மாற்றீடாக வழங்குகிறீர்கள். ஏதோ விரைவில் மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆவணங்களைப் பதிலாக வழங்குகிறீர்கள்.

எத்தனையோ நிறுவனங்கள் தங்கள் பொருள்களை வர்த்தகர்களிடம் தள்ளிவிட உகந்த உத்திகளைக் கையாளுகின்றன. நூறு பொருள் எடுத்தால் ஐந்து பொருள்கள் இலவசம் எனக் கூறப்படும் அறிவிப்புக்களைக் கேட்டு பொருள்களை நிறுவனங்களிடமிருந்து தவணை அடிப்படையில் பெற்று அதற்கான காசோலைகளையும் வழங்குகின்றீர்கள். அவர்களும் தமது பொருள்களைத் தள்ளிவிடும் நோக்கில் உங்களுக்குச் சாதகமாக இந்த விடயம் உள்ளது என நீங்கள் நினைக்கக் கூடியதாக சலுகைகளை வழங்குகிறார்கள். சலுகைகளைப் பயன்படுத்தி கூடிய ஆதாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் நீங்கள் கொள்வனவு செய்யும் பொருள்கள் விற்பனை செய்யக் கூடியதா என்பதை ஆராய நீங்கள் ஏன் பின் நிற்கிறீர்கள்.

> **ஆராயாமல் கொண்டுவந்து உங்களது விற்பனை நிலையங்களில் போடப்படும் குறித்த பொருள்கள், அவை விற்பனை செய்யப்படாத நிலையில் கொடுத்த தவணைகளுக்கு பணம் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.**

ஆராயாமல் கொண்டுவந்து உங்களது விற்பனை நிலையங்களில் போடப்படும் குறித்த பொருள்கள், அவை விற்பனை செய்யப்படாத நிலையில் கொடுத்த தவணைகளுக்கு பணம் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. பொருள்களை உங்களிடம் தள்ளிவிட்டவர்கள் அந்தப் பொருள்களை மீள எடுத்துக் கொள்வார்கள். முற்பணமாக நீங்கள் வழங்கிய தொகை அவர்களுக்கு இலாபமாகின்றது. லீசிங் நிறுவனங்கள் ஊடாக வாகனங்களைக் கடனடிப்படையில் பெற்றபலர் மாதா மாதம் உரிய தொகையைக் கட்டத் தவறியதால் வாகனங்கள் மீள எடுத்துச் செல்லப்பட முற்பணத்தையும் பறிகொடுக்க வேண்டிய நிலைமையே ஏற்படுகிறது.

நிதி நிறுவனங்களின் ஆசை வார்த்தை கவர்ச்சிக் காட்சிகளால் கடன்பட்டு வட்டியும் செலுத்த முடியாத நிலையில் இந்த நிறுவனங்களிடம் தமது சொத்துக்களை இழந்தவர்களும் இல்லாமலில்லை.

பெரும் கம்பனிகள் உங்களுக்கு கைகொடுப்பதாக எண்ணிக் கொண்டு அவர்கள் இலவசம் எனத் தரும் மேலதிகங்களை வாங்கிவிட வேண்டும் என்பதற்காக, தேவைக்கு அதிகமாக இது விற்பனையாகுமா என்ற சந்தேகத்திற்குரிய பொருள்களை, தவணைக் கட்டணத்தில் பெற்றுக் கொள்ளும் செயலைத் தவிர்ப்பது உகந்தது. இலவசம் என்று உங்களுக்கு வழங்கியதும் அதற்குரிய பணமும் உங்களிடம் இருந்து அறவிடும் தந்திரமும் இந்த வியாபாரத்தினுள் உண்டு என்பதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது நுகர்வோர் தேவைக்கு ஏற்ப விற்பனைப் பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலமும் சரியான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமும் உங்கள் கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

தென்பகுதியில் இருந்து நிறைய நிறுவனங்கள் இப்போது யாழ்ப்பாணத்தையே நம்பிக்கை நட்சத்திரமாக கைகொடுக்கும் தெய்வமாகப் பார்க்கின்றன. ஏதோ கடன் உதவி அது இதென்று உங்களைத் தம்வசப்படுத்தி அங்கே விற்க முடியாதவற்றைக் கூட இங்கே கொண்டு வந்து கட்டியடித்து விட்டு தாராளமாகப் பணம் பார்க்கிறார்கள். தமது விற்பனைக்கு உகந்த சந்தையாக யாழ்ப்பாணத்தைப் பார்க்கிறார்கள். உங்கள் வர்த்தக கைத்தொழில் விஸ்தரிப்புக்கும், வளர்ச்சிக்கும், வங்கிகளும், நிறுவனங்களும் பெரிய அளவில் உதவுவதாக நம்பிக் கொண்டு, உங்கள் சொத்துக்களை இழந்துவிட முயலாதீர்கள். வட்டியையும் முதலையும் உரிய தவணைகளில் செலுத்தாவிடின் காலம் காலமாக உங்களுக்கு உதவிவரும் உங்கள் சொத்துக்கள் தெற்குக்குச் சொந்தமாகி விடும்.

# வெற்றி 2 பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

வெற்றி என்பது நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகத் தெரிகிறது. வெற்றி என்று நாம் அர்த்தப்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான பொதுவான இலக்குகள் இல்லை. ஆனால் ஒவ்வொருவரும் தாம் தாம் விரும்பும் வெற்றியை அடைவதற்கு அடிப்படையான விஷயங்கள் இருக்கின்றன.

ஆனால், உங்கள் வெற்றி என்பது எதைப் பற்றியது, அது என்ன என்பதை நீங்கள் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். வெற்றி என்பது உங்களுக்கு என்னவாகத் தெரிகிறது என்பதை இப்போது பார்க்கலாம்.

முக்கியமாக, வெற்றியைப் 10 அம்சங்கள் தீர்மானிக்கின்றன. அல்லது தீர்மானிக்க உதவுகின்றன.

**பணம்** நிறையப் பேர் நிறையப் பணம் உழைக்க வேண்டும் என்பதில் தான் ஆரம்பிப்பார்கள். யதார்த்தத்தில் உங்களிடம் போதுமான பணம் இருக்கும்போது, அதன் பின் வரும் பணம் உங்களைச் சந்தோஷப்படுத்தாது

**அன்பு** விவாதத்துக்கு இடமின்றி அன்பு என்பது வாழ்க்கையின் மிக முக்கியமான விஷயம். நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையை, உங்கள் குழந்தைகளை, செல்லப் பிராணிகளை நேசிக்கலாம். அன்பில்லை என்றால் வாழ்க்கையானது வெறுமையாகத் தோன்றும்

**ஆரோக்கியம்** வலியில்லாமல் இருப்பது அல்லது ஆயுளைக் குறைக்கும் நோய்கள் இல்லாமல் இருப்பது மிகமுக்கியமானது. ஒருவேளை நீங்கள் ஆரோக்கியமற்று இருந்தால் அப்பொழுது நீங்கள் வெற்றியை வேறு மாதிரியாகப் பார்ப்பீர்கள். பல பேர் நோய் முற்றிப்போன வாழ்வின் இறுதிக் கட்டத்தில்கூட இலக்குகள் அமைத்துக் கொண்டு அதைச் சாதிப்பார்கள்.

**வசதி** சாப்பிட்ட பிறகு, ஓய்வான, இதமான சூழ்நிலையில் இருக்கும்போது நாம் சிறப்பாகச் செயற்படுவோம். நீங்கள் பாதுகாப்பாக உணரும் வகையில், வசதியான வீட்டை உருவாக்கிக் கொள்வது மிக முக்கியமானது.

**கற்றுக்கொள்ளுதல்** பள்ளி மற்றும் பல்கலைக்கழகம் உங்களுக்கு எப்படி கற்றுக் கொள்வது என்பதைக் கற்றுத்தரும். ஆனால் இவற்றை விட்டு வெளியே வந்த பிறகும் கற்றுக் கொள்வதை நீங்கள் நிறுத்த முடியாது. கற்றுக்கொள்ளுதல் என்பது உங்கள் கற்பனையையும் உற்சாகத்தையும் தூண்டி விடுவதற்கான மிகச் சிறந்த வழி.

**வேடிக்கை** நிறையப் பேர் வாழ்க்கையை அனுபவிக்காமல் கடமையாகப் பார்க்கிறார்கள். வேடிக்கையாக மகிழ்ச்சியாக இருப்பதற்கு நேரத்தைத் திட்டமிடுவது மற்ற அனைத்தையும் விட முக்கியமானது

**கொடுத்தல்** பெறுவதை விடக் கொடுப்பது சிறந்தது என்ற விசித்திரமான பழமொழி உண்மையானது. மற்றவர்களுக்கு உதவி செய்ய நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களது வெற்றியிலும் மகிழ்ச்சியடையுங்கள்

**பதக்கங்கள்** உங்களில் சிலருக்கு போட்டிகளில் வென்று, சாதனை புரிந்து வெற்றிகளை, பதக்கங்களைப் பெற்றிருக்கலாம். இதில் நாம் செய்த செயலை அவர்கள் அங்கீகரித்ததுதான் மிக முக்கியமானது. சில சமயங்களில் நன்றி என்று சொல்லுவதுகூட போதுமானதுதான்.

**மாற்றம்** எதுவும் தொடர்ந்து ஒரே மாதிரி இருக்காது இருக்கவும் கூடாது. உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தத் திட்டமிடுங்கள். பயணத்தின் ஒவ்வொரு அடியையும் கணக்கிடுங்கள்.

**பொருள்கள்** பொருள்கள் வாங்குவது நல்ல விஷயம்தான். ஆனால் உங்களால் எந்தப் பொருளை வாங்க முடியும் என்பதை வைத்து உங்கள் வெற்றியை வரையறுப்பது புத்திசாலித்தனமானது அல்ல.



சில சமயங்களில் உங்களுக்கு முக்கியமாக்கப்படும் பொருள்களை வாங்குவது, உங்கள் வெற்றியைத் தீர்மானிப்பதாய் அமையும். சமயத்தில் உங்களிடம் உதவி பெற்ற ஒருவரிடமிருந்து நன்றி சொல்லும் வாழ்த்து அட்டையைப் பெறுவது கூட மிக முக்கியமானதுதான்.

மேலே குறிப்பிட்ட சில விஷயங்களில் நீங்கள் ஏற்கனவே வெற்றி பெற்றவராகவோ அல்லது மனத்திருப்தி உடையவராக இருக்கலாம். உண்மையில் நீங்கள் மனத்திருப்தி கொண்டவராக இருந்தாலே வெற்றி பெற்றவர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசரை வாழ்த்தி பரிசில் பெறும் நிலைதான் இங்கும்

■ தானா

தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர், பேரறிஞர் அண்ணாத்துரை தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளில் சிறப்பாகச் சொற்பொழிவு ஆற்ற வல்ல திறன் கொண்டிருந்தவர். எடுத்துக் கொள்ளும் தலைப்பிலிருந்து விலகிச் செல்லாது கொடுக்கப்பட்ட நேரத்துள் தமது பேச்சை ஆற்றி முடிப்பது அவரது தனிச் சிறப்பு.

தமிழ் நாட்டின் முதலமைச்சராக அவர் இருந்த வேளை, ஒரு சமயம் சென்னைப் பல்கலைக் கழக மாணவர்மன்ற ஆண்டு விழாவில் குறிப்பிட்ட தலைப்பு ஒன்றில் உரையாற்றுமாறு மாணவர் மன்றத்தினர் அவரது ஒப்புதல் கேட்டுச் சென்றனராம். குறிப்பிட்ட திகதி வசதியாக இருந்ததால் அண்ணாவும் அதற்கு ஒப்புதல் வழங்கினார்.

ஆண்டு விழாவில் விழா மேடையில் வந்தமர்ந்த பின்னரே மாணவர் தலைவர் ஒருவரை அருகில் அழைத்து தமக்கு வழங்கப்பட்டிருந்த தலைப்புக் குறித்துக் கேட்டறிந்து கொண்டாராம். சொற்பொழிவை ஆரம்பித்த அண்ணா தமிழ் மொழி தொடர்பான தமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பிலிருந்து சற்றேனும் விலகாமல் கொடுக்கப்பட்ட நேரத்துள் கேட்போரின் இரசனைக்கும் சிந்தனைக்கும் விருந்தளிக்கும் வகையில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றி முடித்தார்.

தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்ற நிலையிலிருந்தும், தமது அந்தச் சொற்பொழிவில் ஒரு வார்த்தை தானும் அரசியல் கலப்பின்றி, முன் ஆயத்தம் எதுவுமின்றி தமிழ் மொழி தொடர்பான புள்ளி விவரங்கள், வரலாறு என்பவற்றை உள்ளடக்கிய சிறந்த சொற்பொழிவாக அது அமைந்தது.

எந்தத் துறை சார்ந்த ஒன்றாயினும், இடம், பொருள், ஏவல் என்பவற்றைக் கருத்தில் எடுத்துச் சொற்பொழிவாற்றும் ஆற்றல் சொற்பொழிவாளருக்கு அவசியமானது என்பர். அத்தகைய ஆற்றல் ஒரு சிலருக்கே இயற்கையாக அமையும் கொடை.

நம் நாட்டு அரசியல் வாதிகள் இந்தவேளையில் நினைவில் வருகின்றனர். அரசுத் தலைவர், அமைச்சர்கள் வேளைக்கு வேளை வெளியிட்டு வரும் கருத்துக்கள் ஒன்றுக்கு ஒன்று முரணானவை, கேலிக்கு இடமானவை, இலக்கியம் சார், கலாசாரம் சார், சமயம் சார் நிகழ்வானாலும் அவர்களது கருத்து வெளிப்பாடுகள் அரசியலை மையப்படுத்தியே, முதன்மைப் படுத்தியே பெரும்பாலும் அமைவது கண்கூடு.

என்னதான் கல்விப் புலமை வாய்த்திருப்பினும், உயர்பதவி வகித்திருப்பினும் அரசியலுக்குள் காலடி வைத்து விட்டால் அதற்குள்ளேயே மூழ்கிப் போய் விடுகிறார்கள். இதனால் தான் போலும் அரசியல் ஒரு சாக்கடை என்று சொல்லி வைத்திருப்பார்களோ? இதற்கு ஒரு உதாரணம் தேவையா? இருக்கவே இருக்கிறார் எமது வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

குறிப்பிட்டதொரு கலையில் பாண்டித்தியம் மிக்க கலைஞர்களிடம் பொதுவாகவே ஏதோ ஒரு 'வீக்னெஸ்' இருப்பது வழமை எனக் கேள்விப்பட்டதுண்டு.

கைவினைக் கலைஞர்கள் முதல் தனிமனித ஆற்றல் வெளிப்பாட்டுக் கலைஞர்கள்வரை கலை வெளிப்பாடுகள் பல தரப்படும்.

இலக்கிய, சமயத் துறைகளில் தரம் வாய்ந்த பேச்சாள நண்பர் அவர். கல்வித் துறையில் நிறையக் கற்றவர். குறிப்பாக இந்து மதம் குறித்து கேட்போரைக் கவரத்தக்க வகையில் சிந்திக்கத் தூண்டும் வகையில் சொற்பொழிவு ஆற்றும் திறன் கொண்டவர். ஆனாலும் அவரிடமும் அப்படியொரு குறைபாடு. தமது சமயச் சொற்பொழிவில் முதல், இடை, கடை என்று ஏதாவதொரு இடத்தில் ஏதோவொரு விதத்தில் தன்னைப் பற்றியும், தனது சொந்த ஊரின் பெருமை குறித்தும் நாசூக்காக புகுத்தி விடுவது அவரது வழமை. அதில் அவருக்கு ஒரு ஆன்மார்த்த திருப்தி.

சிறந்த பேச்சுக் கலைஞர்களிடம் தன்மான உணர்வும், வித்துவச் செருக்கும் உடன் உறைபவை. அதில் தவறு காண்பது பொருத்தமன்று. ஆயினும் எடுத்துக் கொண்ட தலைப்புக்கேற்ப, நிகழ்வின் சூழல், தரத்துக்கேற்ப தமது சொற்பொழிவைக் கேட்போர் இரசிக்க வைக்கும் வகையில், சிந்திக்க வைக்கும் வகையில் நிகழ்த்தும் போது மட்டுமே அது சிறப்புப் பெறுகிறது; வரவேற்புக்கு உள்ளாகிறது. சபை அடக்கமும், வார்த்தைக் கட்டுப்பாடும் சொற்பொழிவுக்கு மெருகூட்டுபவை. பேச்சாளரின் பேச்சுத் திறன் ரசிப்போரால் கவரப்படும் போது அவர் குறித்த விவரம் தானாகத் தேடிக் கண்டறியப்படும். தாமாகத் தம் நிலை வெளிப்படுத்தல் சுய புராணம், பிரபல்யப் படுத்தல் வகைகளில் சேரும்.

அரசரை வாழ்த்தித் தாமே எழுதிய பாடல்களை அரச சபையில் அரசர் முன்னிலையில் தாமே பாடி மகிழ்வித்துப் பரிசில் பெறும் புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்ததுண்டு. ஒரு சமயம் அரச சபையில் புலவர்கள் பலர் தமது பாடல்களால் அரசரை வாழ்த்தி மகிழ்வித்து அதற்கான பரிசில்களாகப் பொற்கிழிகளையும் பெற்றுக் கொண்டனர். அவ்வேளை சபையிலிருந்த ஔவையார் தமது முறை வந்ததும் எழுந்திருந்து "வரப்புயர" என்று மட்டும் கூறி அரசரை வாழ்த்தி விட்டு அமர்ந்து கொண்டாராம். ஔவையாரின் வாழ்த்தின் அர்த்தம் புரியாத அங்கிருந்தோர் அவரது வாழ்த்தின் கருத்துக் குறித்து ஔவையாரிடமே வினாவியுள்ளனர். அதற்கு ஔவையாரோ 'வரம்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயர்வான்" எனவே இவற்றுக்கெல்லாம் முதற்காரணமான 'வயலின் வரம்பு' முதலில் உயரட்டும் பின்னர் தானாக மற்றெல்லாம் நன்றாகவே அமையும். இதனால் தான் சுருக்கமாக 'வரப்புயர' என வாழ்த்தினேன் என்றாராம்.

நாட்டின் அபிவிருத்தி எனக் கூறிக் கொண்டு, நெடுஞ்சாலைகளை அமைப்பதாலும், துறைமுகங்கள், விமான நிலையங்கள் நிர்மாணிப்பதாலும் நாடு ஒரு போதும் அபிவிருத்தி அடைந்து விடப் போவதில்லை. நாட்டு மக்கள் பசி, பட்டினி இன்றி, தமது வாழ்வை மகிழ்ச்சியுடன் மேற்கொள்ள உணவுத் தன்னிறைவைப் பொருளாதாரமே அவசியம் என்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் என்று தான் புரிந்து கொள்வார்களோ, அது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

இன்றைய நவீன கலாசார, பண்பாட்டு, நடைமுறைகள் கடுகதி வேகத்தில் பயணிக்க நேர்ந்துள்ள இந்த வேளையில் எமது மூதாதையரின் மனித நேய, ஒழுங்கமைந்த வாழ்வு நடைமுறை குறித்த தகவல்கள் எங்களை ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுமா?

---

■ கணேஷாயினி

# பெரும் சிக்கலில் பாடசாலை சேவை

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்று பெரும் பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது பாடசாலை பஸ் போக்குவரத்துச் சேவை.

காலை 6 மணிக்கு வீதிக்கு வரும் பிள்ளைகள் 8 மணியாகியும் பஸ் கிடைக்காமல் பாடசாலைக்குப் போக முடியாது வீடுகளுக்குத் திரும்பும் சம்பவங்கள் நாளாந்தம் நடந்த வண்ணம்தான் இருக்கின்றன.

பெரிய பள்ளிக் கூடம் என்று பெற்றோரின் நச்சரிப்புடன் தூரப் பாடசாலைகளில் இணைக்கப்பட்ட இந்தப் பிள்ளைகளுக்கு உரிய வகையில் போக்குரவத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் அவர்கள் நாளாந்தம் வீதிகளில் சிரமப்பட நேர்கிறது.

விடிந்தும் விடியாததுமாக, சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதி, அவசர அவசரமாக ஆய்த்தமாகி வீதிகளில் இறங்கினால் அங்கு பஸ்ஸைக் காணக் கிடைக்காது. கால் கடுக்க வீதிகளில் தவம் இருந்து ஒரு வழியாக பஸ்ஸைப் பிடித்து ஏறினால் அது வீதியில் நிற்கும் மாணவர்களை எல்லாம் குறை சொல்லாத அளவுக்கு ஏற்றி ஏற்றி பஸ்சுக்குள் கால் வைக்க முடியாதவாறு ஏற்றி தட்டுத்தடுமாற வைக்கும்.

இதற்குள் வெள்ளைச் சீருடையுடன் இவ்வாறு பஸ்சுக்குள் பயணித்தால் நிலைமை சொல்லத் தான் வேண்டுமா? வேர்த்து விறு விறுத்து, ஒருசிலர் மயங்கி விழ, இன்னும் சிலர் வாந்தி எடுக்க ஒருவருடன் ஒருவர் முட்டி மோதி ஒருவாறாகப் பாடசாலை வாசலில் வந்து இறங்கினால் அங்கு படிக்க முடியுமா என்ன?

வந்த களை போக்குவதா ஆசிரியர்கள் கற்பிப்பதைக் கேட்பதா என்ற நிலையில் எத்தனை மாணவர்கள் கற்றலில் நாட்டம் காட்டுகின்றனர் என்பது கேள்விக் குறியான ஒரு விடயம்தான்.

ஒரு பிள்ளை பாடசாலைக்குச் சென்று கற்றலை ஆரம்பிக்கும் போது குறித்த பிள்ளையின் உடல் மட்டுமல்ல, உள்ளமும் புத்துணர்வுடன், ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் கற்றலில் அவர்களால் நாட்டம் காட்ட இயலும்.

இதன் அடுத்த கட்டமாக விட்டுக்குத் திரும்பும் சிந்தனை அவர்களைத் துரத்தத் தொடங்கி விடும். மற்றவர்கள் போவதற்கு முன்பாக நாம் முன்னர் போய் பஸ் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் பிற்பகல் பாட வேளைகளில் இருக்கும். ஆசிரியர் எப்போது [illegible] முடிப்பார் எப்போது பாடசாலை விடும் என்று அவர்களின் எண்ணம் அலை மோதிக் கொண்டு இருக்கும்.

ஏன் இந்த நிலைமை. எமது பிள்ளைகள் நிம்மதியாகப் போக்குவரத்துச் செய்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப் பின்நிற்பது எதற்காக என்று விசனம் தெரிவிக்காதவர்கள் எவருமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் பஸ் போக்குவரத்து சேவை என்பது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது என்று பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் பயணிப்பதற்காக பருவகாலச் சீட்டை எடுத்துள்ளதுடன் பஸ் கிடைக்காத நிலையில் தனியார் பஸ்களில் அதிக பணத்தைக் கொடுத்துப் பயணிக்கவேண்டிய அவலம் உள்ளது என்று வேதனை தெரிவிப்பவர்கள் எத்தனைபேர்.

குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்குப் போதிய [illegible] தற்கு உதிரிப்பாகங்கள் இல்லை இதனால் பஸ்கள் முடங்கிப் போயுள்ளன என்று இதுவரையில் காரணம் கூறிக் கொண்டிருந்தனர் அதிகாரிகள்.

இந்த நிலையில் இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய சாலைக்குப் புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள பிரதம முகாமையாளர் எஸ்.அஸ்ஹர் பதவி ஏற்று ஒரு வாரத்தில் பழுதடைந்து முடங்கிப் போயுள்ள பஸ்கள் அனைத்தும் திருத்தப்பட்டுச் சேவைக்கு விடப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் மாதங்கள் கடக்கின்றன இது குறித்து எந்த விதமான பதிலும் வந்ததாகத் தெரியவரவில்லை. எனினும் சில புதிய பஸ்கள் தருவிக்கப்பட்டு பல்வேறு பாதைகளிலும் சேவைக்கு விடப்பட்டுள்ளமை வரவேற்கத் தக்க விடயம்தான்.

எது எவ்வாறாக இருப்பினும் பாடசாலை மாணவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டுவதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் அக்கறை எடுத்துச் செயற்படாதது ஏன் என்ற நிலைமைதான் இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை பஸ்களும் தனியார் துறை பஸ்களும் புரிந்துணர்வு அடிப்படையில் ஒன்றிணைந்து வடபகுதியில் சேவையில் ஈடுபடவுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மாணவர் போக்குவரத்துக்குப் போதிய பஸ்கள் சேவையில் இல்லாத நிலையில் குறிப்பிட்ட பாதைகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களும் இடைநிறுத்தப்படுவது வேதனையையும் விசனத்தையும் தோற்றுவித்துள்ளன.

காரைநகரிலிருந்து வட்டுக்கோட்டை, மாவடி, நவாலி, குளப்பிட்டியூடாக செல்லும் 786 ஆம் இலக்க பாடசாலை பஸ் சேவை இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளதால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் எதிர் கொள்ளும் துன்பங்கள் சொல்லில் அடங்காதவை.

இந்தப் பாதையில் பாடசாலை பஸ் போக்குவரத்துச் சேவை கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இடம்பெறாமையால் காலையில் இதனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தனியார் பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை சேவை இடம்பெறாத ஒவ்வொரு பாதைகளிலும் உள்ளது என்பது வேதனைக்கு உரியதொரு விடயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை தெளிவாக இருந்தால் வாழ்க்கை சுகமாக இருக்கும்.....

வீணா

சிந்திக்காமல் மனிதன் வாழ முடியாது. சிந்திக்காத மனிதனை, அல்லது சிந்தனையைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டிராத மனிதனை நாம் ஒரு சராசரி மனிதனாக ஏற்றுக்கொள்ள இயலாது.

ஒரு வார்த்தை வெளிவருவதற்கு முன்பு அல்லது ஒரு செயலைச் செயல்படுத்துவதற்கு முன்பு செயற்படும் விடயம் குறித்து தீர்மானித்தல் அவசியம்.

சிந்திக்காமல் செயற்படுவது பைத்தியத்தனம் என்று சொல்லுவார்கள். சிந்தனைக்கு வார்த்தையால் அல்லது செயலால் உயிர் கொடுக்க முடியும்.

மறுபக்கத்தில் பார்த்தால் சொல்லோ, செயலோ சிந்தனையின் வெளிப்பாடாக இருக்கிறது.

எதை சிந்திக்கின்றோமோ, அதுவே வாழ்வின் முக்கிய அம்சமாக வெளிவருகின்றது.

எம்மில் சிந்தனை பல வேளைகளில் அதன் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது.

சிந்தனை அளவு கடந்து போகும் போது, அதனுடைய வெளிப்பாடும் அளவு கடந்து போகின்றது. பல வேளைகளில் அது எல்லையைத் தாண்டுகின்றபோது, அது மனதின் சமநிலையைக் கெடுக்கின்றது. சமநிலை பாதிக்கப்படுகின்றபோது, மனித நிலை ஒரு பக்கத்திற்கு சாய்கின்றது. அதுவே வாழ்வில் வந்த புதிய வரவாய் இருந்து மன அமைதியையும், வாழ்வையும் பாதிக்கின்றது.

நல்லதையே சிந்தி என்று பெரியவர்கள் கூறுவார்கள். நீ எதைச் சிந்திக்கின்றாயோ அதுவே நீயாவாய். நல்லதைச் சிந்திக்கும் போது அதுவே நற்செயலாக வடிவெடுக்கின்றது. கெட்டதைச் சிந்திக்கும் போது அதுவே தீமையாக வெளிவருகின்றது.

சிந்தனை என்பது நிரந்தரம் இல்லாத ஒன்று. அது செயல்வடிவம் பெறுகின்றபோது அது நிரந்தரமாக மாறுகின்றது. நாம் சிந்திக்கும் போது அது நம் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

எம்மை அறியாமல் சிந்தனை விரிகின்றபோது அது கட்டுப்பாட்டை இழக்கின்றது. சிந்தனையைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தவன் தன்னையே வென்றவனாவான்.

தியானம் என்பது உண்மையில் எம் சிந்தனையை நாம் எமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான வழியாகும். பல சிந்தனைகள் உருப்பெற்று, சிறிது சிறிதாக குறைவடைந்து, சில முக்கியமான, தேவையான, உண்மையான சிந்தனைகள் மாத்திரம் மிஞ்சுகின்றன.

> தியானம் என்பது உண்மையில் எம் சிந்தனையை நாம் எமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவது. பல சிந்தனைகள் உருப்பெற்று, சிறிது சிறிதாக குறைவடைந்து, சில முக்கியமான, தேவையான, உண்மையான சிந்தனைகள் மாத்திரம் மிஞ்சுகின்றன.

அந்த மிகுதியான சிந்தனைகளை ஒழுங்கமைத்து ஒருங்கமைக்கும் போது அதில் தெளிவும் கட்டுப்பாடும் ஏற்படுகின்றன. இதைத்தான் நாம் தியானம் என்கின்றோம்.

சிந்தனைகள் தப்பாகச் சிறகடிக்காத வரைக்கும், நாம் சிதறமாட்டோம். நம்முடைய சிந்தனையே நமக்கு அமைதியையும் நிம்மதியையும் தரும். ஏனெனில் நம் சிந்தனைகள் நமக்குள் இருந்தே பிறக்கின்றன.

அது நலமான சிந்தனையாக இருந்தால் நலத்தைக் கொடுக்கும். நீ என்ன சிந்திக்கின்றாயோ அதுவே நீ ஆவாய். சிந்தனை அமைதியையும் கொண்டுவரும் துன்பத்தையும் கொண்டுவரும். ஒழுங்கமைக்கப்பட்ட, நெறிப்படுத்தப்பட்ட சிந்தனைகள் எப்போதும் மனதுக்கும் வாழ்வுக்கும் அமைதியைக் கொடுக்கின்றன.

அடுத்தவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம்; அதுவே நன்மையின் வெளிப்பாடாக அமைகிறது. அடுத்தவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம்; அதுவே உதவியின் வெளிப்பாடாக அமைகிறது. அடுத்தவருக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம்; அதுவே இரக்கத்தின் வெளிப்பாடாக அமைகிறது.

எனவே நல்லவற்றையே சிந்தியுங்கள். நல்ல சிந்தனை உங்கள் நலத்தை வளமாக்கும்

பல சிந்தனைகள், மனதில் தோன்றலாம். அதில் சில தப்பானவையாக இருக்கலாம்.

சிந்தனை மனதில் இருக்கும் வரை அதற்குத் தோற்றமும் இல்லை. உயிரும் இல்லை. அப்படி உயிர் இருப்பின் அது உங்களை மீறி எதுவும் செய்ய முடியாது.

அதற்கு நாம் செயல் வடிவம் கொடுக்கும்போது அது நல்லதாகவோ கெட்டதாகவோ தோற்றம் பெறுகின்றது, உயிர் பெறுகின்றது. நம்மை மீறிச் செல்லுகின்றது.

அமைதியையும், நிம்மதியையும் வாழ்வில் உணர வேண்டும் என்றால், சிந்தனையைச் சீர்ப்படுத்த வேண்டும். ✸

# வன்முறைகளை எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாத நிலை



புத்தூர் உதயதாரகை மகளிர் சம்மேளனத் தலைவி திருமதி நா.மகாலிங்கத்தின் கருத்து

பாண்டியம்மா

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு மட்ட சமூக அமைப்புகள் ஆங்காங்கே இலை மறை காயாக இருந்து மேற்கொள்ளும் பணிகளே தலைமைத்துவப் பெண்களின் சுமையை ஓரளவுக்கு நிவர்த்தி செய்கின்றனர்.

தலைமைத்துவம் தாங்கும் பெண்களின் கடமைகள், பொறுப்புகள் அதிகளவாகக் காணப்படுவதுடன் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் எனும் நிலையை ஏற்படுத்தாமலும் இல்லை. இவற்றையெல்லாம் தாண்டிப் பெண்களின் வாழ்வாதாரத்துக்குக் கைகொடுக்கும் சமூக மட்ட அமைப்புகளை இங்கு பாராட்ட வேண்டும்.

போரின் பின் விளைவுகளால் யாழ்ப்பாணத்தில் அதிக எண்ணிக்கையான பெண்கள் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.

இவர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டு உதவிகளை அரசு பொறுப்பேற்க வேண்டிய நிலையில் சமூக மட்ட அமைப்புகள் பிற நாடுகளின் நிதியுதவியுடன் தமது சேவைகளை நிறைவேற்றி வருகின்றன.

யாழ்.மாவட்டப் பெண்களின் தற்போதைய நிலைமை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மகளிர் குழுக்களைச் சந்திக்கச் சென்ற போது, பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு கைகொடுத்து வரும் புத்தூர் உதயதாரகை மகளிர் சம்மேளனத்தின் தலைவியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

> “
> தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்களுக்கு வலுவூட்டல் வழங்கப்படுவதுடன் அவர்களின் குடும்ப வறுமையைப் போக்க மகளிர் அமைப்புக்கள் சேவை வழங்க வேண்டும். அத்துடன் உளரீதியாக ஆறுதல்படுத்தும் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

புத்தூர் மடத்தடியில் அமைந்துள்ள உதயதாரகை சம்மேளனத் தலைவி திருமதி மகாலிங்கம் நாகேஸ்வரி பெண்களின் நிலைமை குறித்தும் சம்மேளனத்தின் உதவிகள் பற்றியும் கருத்துத் தெரிவித்தார்.

**யாழ்.மாவட்டத்தில் பெண்களின் தற்போதைய நிலைப்பாடு**

யாழ்.மாவட்டத்தில் பெண்கள் தற்போது சுதந்திரமற்றவர்களாக நடமாட வேண்டியுள்ளது. போரின் பின்விளைவு பெண்களை இந்த நிலைக்கு தள்ளியுள்ளது. கடந்த காலங்களைவிட பெண்கள் அதிகமாக குடும்பத் தலைமைத்துவத்தை தாங்க வேண்டிய பொறுப்புடன் இருப்பதால் சமூக மட்டத்தில் தடையாக இருக்கும் வன்முறைகள், இடர்பாடுகள் எல்லாவற்றையும் தாண்டித் தனது முன்னேற்றப் பாதையை மாற்றியமைக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

**பெண்கள் அதிகமாக பாதிப்படைந்துள்ள பிரதேசம்**

உதயதாரகை மகளிர் சம்மேளனம் தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி என பல பகுதிகளுக்கும் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. இதுவரை வழங்கிய சேவையின் நிமிர்த்தம். பெண்கள் அதிகமாகப் பாதிப்படைந்துள்ள பிரதேசம் என வடமராட்சியைக் குறிப்பிடலாம். இங்கு அதிகமான பெண்கள் சிறுவயதில் திருமணம் முடித்து கணவனை இழந்தும், பிரிந்தும் வாழ்கின்றார்கள்.

அத்துடன் பாடசாலை செல்லாமல் அதிகமான சிறுமிகள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளார்கள்.

**பாதிப்படைந்துள்ள பெண்களுக்கான தேவைகள்**

பாதிப்படைந்த பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான தேவைகள் நிறையவே உள்ளன. உறவுகளால் கைவிடப்பட்டு மிகவும் பரிதாபமான நிலையில் கூலி வேலை செய்து குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் பெண்கள் அதிகம். இவர்களுக்கு சுய தொழில் வேலைவாய்ப்பு கட்டாயம் வழங்கப்பட வேண்டும். இதனை விடத் தலைமைத்துவம் பெண்களின் பிள்ளைகளில் கல்விச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

உள ரீதியாக ஆற்றுப்படுத்தல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு நிறையத் தேவைகளை பட்டியலில் போட்டுக் கொண்டே போகலாம்.

**பெண்கள் எதிர் கொள்ளும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாத நிலை**

சமூக மட்ட அமைப்புகள் தற்போது அபிவிருத்திப் பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டியுள்ளது. மகளிருக்கான சேவைகளை பெண்களே மேற்கொண்டு வருவதால் சமுதாயத்தாலும், அரசினாலும் கொடுக்கப்படும் அழுத்தங்கள், மிரட்டல்களுக்குப் பயந்து பெண்கள் வன்முறைச் சம்பவங்களின் போது பாதிப்படைந்தமை இனங்காணப்பட்டும் அவற்றைத் தட்டிக் கேட்க முடியாது உள்ளது. சில சமூகம் இதனை ஏற்றுக்கொண்டாலும் எதிர்ப்பு தெரிவிக்கவே அதிகமானவர்கள் உள்ளனர்.

எனினும் இதனால் பாதிப்படைவது பெண்கள் மட்டுமே இதற்கான தீர்வுகளை மகளிர் அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும்.

**சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகள்**

பெண்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்புக்கான பொருள் உதவிகள், மற்றும் பிள்ளைகளின் கற்றலுக்குத் தேவையான உதவிகள் தலைமைத்துவத்தைத் திறம்பட மேற்கொள்வதற்கான கூடிய ஆலோசனைகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

பெண்களின் தேவைகள் தொடர்பான உதவிகளை விரிவுபடுத்துவதே எமது நோக்கம் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனதி

# உணவுக்கும் தண்ணீருக்கும் தேடி அலையும் நிலைதான்



இவ்வளவு தொகையான தாக மக்கள் வருவார்கள் என்று படையினருக்கு தெரியாதாம். லட்சக் கணக்கான மக்கள் முள்ளிவாய்க்காலில் இருந்ததுபற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லையாம்.

அதனால்தான் ஒழுங்குபடுத்தப்பட்ட உணவும் தண்ணீரும் போதாமல் போய்விட்டதாம். சில ஆயிரம் பேர்தான் வருவார்கள் என்று அரசு தமக்குச் சொன்னதாக படையினர் சொல்கின்றார்களாம் என்று மக்கள் கதைத்துக்கொண்டார்கள்.

யானைப் பசிக்கு சோளப் பொரி கிடைத்ததைப்போல சில ஆயிரம்பேருக்கு உணவு கிடைத்தது. பல்லாயிரம்பேர் பட்டினியோடு கிடந்து அழுந்தினார்கள்.

பரந்த புல்வெளியை பகுதி பகுதியாக முட்கம்பிகள் பிரித்திருந்தன. முட்கம்பியின் வெளிப்பகுதி எங்கும் படையினர் காவல் செய்தபடி நின்றார்கள். அவர்கள் எல்லோரும் என்னவெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்பதை புரிய முடியவில்லை. ஏனெனில் அவர்களது முகங்களில் எந்தவிதமான உணர்வுகளுமே இருக்கவுமில்லை.

அக்கா எங்களால் அடிபட்டு சாப்பாடு தண்ணியெல்லாம் எடுக்க முடியாதக்கா. அதோட ஆளாளுக்கு வந்து எழுப்ப கூட்டிக்கொண்டும் போறாங்கள். ஆமி வந்து வாவெண்டு கூப்பிட்டால் வரமாட்டன் எண்டு என்னெண்டு சொல்ல முடியும். நாங்க தாமதிக்கிற ஒவ்வொரு நிமிசமும் பிரச்சினைதான். இண்டைக்கே உள்ள போவமா? என்றாள் சந்தியா.

அவள் சொல்வதும் சரிதான். மூவரும் சென்று உள்ளே செல்பவர்களது வரிசையில் நின்றோம். வரிசையோ ஆமையை விட குறைந்த வேகத்தில் நகர்ந்தது. பல நேரங்களில் நகரவேயில்லை. அதிகாலை ஐந்து மணிக்கே வரிசையில் இடம்பிடித்துவிட்ட நாங்கள் பகல் பத்துமணிக்கு பிறகுதான் உள்நுழையும் வாயிலருகே வரமுடிந்தது.

ஆனால் அவ்விடத்தில் மூச்செடுக்கவே திண்டாட வேண்டி இருந்தது. குய்யோ முறையோ என்ற சத்தமும் கூக்குரலும் நெருக்கித் தள்ளலுமாக ஒரே களேபரம். சனங்களோடு முண்டியடித்துக்கொண்டு மணிக்கணக்காக நின்றும் அந்த நுழைவாயிலின் கம்பிகளை எட்டிக்கூட தொட முடியவில்லை. குழந்தைகளை தூக்கிக்கொண்டும் சிறுவர்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டும் நிற்கும் பெற்றவர்கள் படும்பாட்டை பார்க்க பரிதாபமாக இருந்தது.

மக்கள் அவ்வளவு நெருக்குவாரப்பட்டுக்கொண்டு நிற்கையில் நானும் முண்டியடித்துக் கொண்டு நிற்பது ஈனத்தனமாகவே பட்டது. அப்படி நிற்பதை மிகுந்த அவமானமாக உணர்ந்தேன். என்னை நானே வெறுத்தேன்.

எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்தவளாய் அத்தனை காலம் உறுதியுடன் நின்றேனோ அந்த உறுதியெல்லாம் தொலைந்தவளாய் தவிக்கும் சனங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லக்கூட தகுதியற்றவளாய் நிற்பது கொடுமையானதாய் இருந்தது. சந்தியா எனக்கு அந்தரமாக் கிடக்கு சந்தியா. சனம் போகட்டும் நாங்க ஆறுதலா போவம் என்றேன் அவளின் காதருகே. எனக்கும் ஒரு மாதிரித்தானக்கா இருக்கு. சனங்கள் என்ன நினைக்குதுகளோ எண்டு குற்ற உணர்வாகத்தான் இருக்கு என்றாள் அவளும்.

சரி. பின்னுக்குப்போவம் என்று நான் திரும்ப முயன்றேன். என்னால் உடலைக்கூட திருப்ப முடியவில்லை. நிற்கும் இடத்திலிருந்து காலை தூக்கினால் தூக்கியபடியே நிற்க வேண்டியதுதான். மீண்டும் இடம்பிடித்து ஊன்ற அரை மணிநேரம் தேவைப்படும் என்பதை இவ்விடத்தில் நின்ற எவராலும் மறுக்கமுடியாது. அத்தனைபேரும் அரைக்காலில் தான் நின்று தடுமாறினார்கள்.

சனங்களில் முட்டுப்பட்ட என் கைகள் எரிந்தன. அவ்வளவு உடல் வெம்மை. என்னால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. ஒவ்வொரு தடவை காலை நகர்த்தவும் நீண்ட நேரம் முயற்சிக்க வேண்டி இருந்தது. சன வெக்கையால் அவிந்து கொண்டிருந்தேன்.

மற்றவர்கள் விடும் மூச்சு என்னில் சுட்டது. ஒவ்வொருவரின் உடலும் அனலெனச் சுட்டது. மற்றவர்கள் என்னில் முட்டும்போது என்னால் கட்டுப்படுத்த முடியாதளவு ஆற்றாமையும் சினமும் வந்தது. அப்படித்தான் மற்றவர்களுக்கும் இருக்கும் என்பதை உணர்ந்துகொண்டு இயலுமானளவு பொறுமை காத்தேன்.

சுமார் ஒரு மணிநேரம் முயன்று ஒவ்வொரு பாதமாய் எடுத்து வைத்து மக்கள் ஐதான பகுதிக்கு வந்தேன். ஓரிரு குடும்பங்களாய் அங்கொன்றும் இங்கொன்றுமாக குந்திக் கொண்டிருந்தவர்களில் எனக்குத் தெரிந்தவர்கள் இருந்தார்களா இல்லையா என்று தெரியவில்லை. ஏனெனில் கொஞ்சம் நிதானமற்ற நிலையை உணர்ந்தேன். விழமுன் நிலத்தில் அமர்ந்துகொண்டேன். அப்படியே எனது கையின் மீது சரிந்து மேற்துணியால் மூடிக்கொண்டு அமைதியாக கிடக்க முயன்றேன். சற்றுநேரத்தில் ஓரளவு நிதானத்தை பெற முடிந்தது. நான் எப்போதுமே அப்படித்தான். வலியை உணர்ந்து அதை தாங்கிக்கொள்வேன். அங்கம் முழுவதும் ஆயிரம் காயங்களை சுமந்துகிடந்த காலங்களிலும் குளறி அழுதவளில்லை.

வலியை மூளையால் கிரகித்து அதை உள்வாங்கி அனுபவித்துத் தாங்கிக்கொண்டேன். இப்போது அதே பழைய காயங்களை வெய்யில் கடுமையாய் வறுத்தெடுத்தது. சற்றுநேரத்தின் பின் எழுந்து அமர்ந்து கொண்டேன். ஆனால் கண்களில் காட்சிகள் எதுவும் தெளிவாய் தெரியவில்லை. என்னக்கா தனிய குந்திக்கொண்டு இருக்கிறிங்க? என்று பழக்கப்பட்ட குரலொன்று மெதுவாய் கேட்டது.

என்னக்காதனிய இருக்கிறிங்க? என்றது பழக்கப்பட்ட குரலொன்று.

ஆ... சசியக்கா என்று வந்த வார்த்தையை அடக்கிக் கொண்டு மெதுவாக புன்னகைத்தேன். ஏனோ அவளை கண்டது கொஞ்சம் ஆறுதலயத்தான் இருந்தது. அப்போது அவளை தங்களுடன் அழைத்துக் கொண்டு வந்தவர்கள் தேநீர் அருந்துவதற்காக வரச்சொல்லி சைகைகாட்டி அவளை அழைத்தனர்.

## இறுதி நாள்களும் எனது பயணமும்



என்னுடன் நிற்கும்போது அழைத்ததால் அவள் என்னை விட்டுவிட்டுச்சென்று எப்படி தேநீர் பருகுவதென்று தடுமாறினாள். ஆயிரக் கணக்கான மக்களுக்கு மூன்று வேளையும் கஞ்சி காய்ச்சி ஊற்றியவள் சசியக்கா.

போரின் இறுதி நாள்களில் தொடர்ச்சியாக கஞ்சிக் கொட்டிலை இயக்குவதற்காக அவள் எறிகணை மழைக்குள்ளும் படாத பாடு பட்டவள். நான்தான் அவளை வட்டுவாகலில் வைத்து போ போ என்று பலவந்தப்படுத்தி அனுப்பியவள். என் சொல்லை கேட்டுத் தான் உறவுகளை தேடிப்பிடித்து [illegible] டம் இருக்கும் கொஞ்சத் தண்ணீரையும் சீனி தேயிலையையும் தெரிந்துகொண்டு எனக்கும் தா என் சிநேகிதிக்கும் தா என்று அவளால் எப்படி கேட்கமுடியும். ஆங்காங்கு நின்று அவதானிக்கும் படையினரும் காட்டிக் கொடுப்போரும் என்னை போராளி என்று இனங்கண்டுகொண்டு வந்துவிட்டால் அவர்களையும் அல்லவா விசாரிப்பார்கள்

அந்த பயம் குடும்பமாக வந்துள்ளவர்களுக்கு எழுவதிலொன்றும் தவறில்லையே. என் கண்முன்னாலேயே பலர் படையினரால் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டதை பார்த்துக் கொண்டு மக்கள் ஆதரிக்கவில்லை என்று குறைசொல்ல முடியாது. அவர்களுக்கு மனமிருந்தாலும் இடமில்லாத சூழல்தான் அது. சசியக்காவின் திண்டாட்டத்தை புரிந்து கொண்டு சொன்னேன்.

பறவாயில்லையக்கா. நீங்க போய் குடியுங்க. சுடுதண்ணி இருக்குமெண்டால் என்னட்ட கோப்பியும் சீனியும் இருக்கு. அவையட்டையெண்டாலும் தாங்கோ. நான் இதிலையே இருக்கிறன் என்றேன். சசியக்கா சென்று அவர்களிடம் கேட்டுவிட்டு வந்து என்னிடமிருந்த சிறியபொதி சீனியையும் கோப்பையையும் வாங்கிச்சென்றாள்.

அக்குடும்பத்தின் தாயார் கோப்பியை ஆற்றி சசியக்காவிடமே கொடுத்தனுப்பினார். அமைதியாக இருந்து கோப்பியை அருந்தினேன். முதல் நாள் மதியம் அருந்திய தேநீருக்குப் பின்பு நான் குடித்த பானம் அதுதான்.

கோப்பி அருந்திய பின் தலைச்சுற்று குறைந்து விட்டது. கொஞ்சமாய் ஒரு உற்சாகமும் தெரிந்தது. அவ்விடத்திலேயே அமர்ந்திருந்தேன். கோப்பியை ஆற்றித் தந்த குடும்பமும் தலையாட்டி விட்டு போய்விட்டது. பின்பு எழுந்தேன்.

யாராவது எங்களுடன் வா என்று அழைக்கக் கூடியவர்கள் இருக்கிறார்களா என்று நோட்டமிட்டேன். நன்றாகத் தெரிந்த ஆயிரம்பேர் இருந்தாலும் அவர்களில் வெறும் போராளிகளாய் இருந்தவர்களை தம்மோடு அழைத்துச் செல்ல துணியவில்லை. அதை தவறு என்றும் சொல்ல முடியாது. அறிந்தவர்கள் யாரும் அவர்களாய் தலையசைத்தால் மட்டுமே நானும் தலையசைத்தேன்.

திருவிழாவில் தொலைந்து போன சிறுமியைப்போல அங்குமிங்கும் பார்த்தபடி அல்லது யாரையோ தேடியபடி அலைந்து கொண்டிருந்தேன். யாரோ-என் போராளிப் பெயரைச்சொல்லி சத்தமாக அழைத்தார்கள். அட இவ்வளவு அச்சமான நிலையிலும் என்னை பெயர் சொல்லி அழைக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள்தான். குரல் வந்த திசையை பார்த்தேன். தெரிந்தவர்தான். தன் மனைவி பிள்ளைகளோடு இருந்தவர் தம்மருகில் வருமாறு கையை காட்டினார். சென்றேன். இருங்களன் அக்கா என்றாள் அவரது துணைவி. அவளருகே அமர்ந்துகொண்டேன். அந்த குடும்பத்தை எனக்கு பல ஆண்டுகளாக தெரியும். என்னை கண்டவுடன் அவளது கண்கள் குப்பென கலங்கின.

அவளை பார்க்க எனக்கும் அழுகை பொத்துக்கொண்டு தான் வந்தது. சற்றுநேரத்தில் எங்களை கட்டுப்படுத்திக் கொண்டோம். பின்புதான் அவள் - தான் காயப்பட்டிருக்கும் விடயத்தை சொன்னாள்.

எனக்கெல்லா அக்கா காயம் என்றாள். அப்போதுதான் அவளின் தோற்றத்தை அவதானித்தேன். கையில்லாத சட்டை அணிந்திருந்த அவளுக்கு காயம் எங்கேயென்று தெரியவில்லை. அவளது விலாவின் மேற்பகுதியில் சிறிய காயமிருந்தது. பஞ்சை வைத்து கையால் அதை அமர்த்திக் கொண்டே இருக்கவேண்டியிருந்தது. ஒட்டுவதற்கு எதுவும் இருக்கவில்லை.

ஒட்டிவிடக் கூடிய மாதிரி ஏதுமிருந்தால் தாங்களனக்கா என்று பரிதாபமாக கேட்டாள். என்னிடம் சிறிதளவு குளிசைகள் தவிர மருத்துவத்திற்கான வேறு எதுவும் இருக்கவில்லை.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கைதிகளின் போராட்டம் கற்றுத் தரும் பாடங்கள்

சந்திரசேகர ஆஷாத்

"கைதிகளின் போராட்டம் சக்திமிக்கதாக மாற்றப்பட்டமைக்கு அது வெகுஜனமயப்படுத்தப்பட்டமை முக்கியமாகும். எனவே எதிர்காலத்தில் இம்முறை வவுனியாவில் இடம்பெற்ற போராட்டம் போன்று யாழ்ப்பாணம், மன்னார், திருமலை, மட்டக்களப்பு எனத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகள் எங்கும் நடத்தப்பட்டு ஒரு பேரெழுச்சி அலை உருவாக வேண்டும்.

இலங்கைச் சிறைகளில் தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியோ அல்லது தம்மீதான விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரியோ தமிழ் அரசியல் கைதிகள் பலமுறை போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

ஒவ்வொரு முறையும் உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதும் சிலர் உயிராபத்தான நிலைக்குள் தள்ளப்படுவதும் அரசியல்வாதிகள் அங்கு சென்று சில வாக்குறுதிகளை வழங்குவதும் பின் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்படுவதும் தொடர் கதையாகவே நிகழ்ந்து வருகிறது. ஆனால் கைதிகளுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகள் எவையுமே நிறைவேற்றப்படுவதில்லை.

முன்னாள் இராணுவத்தளபதியும் முப்படைகளின் தலைமை அதிகாரியுமான சரத் பொன்சேகா ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களின் பேரில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலைமையில் கடந்த 14 ஆம் திகதி தமிழ்க் கைதிகள் தம்மையும் விடுதலை செய்யக் கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். இந்தப் போராட்டம் ஏழு நாள்கள் தொடர்ந்து சிலர் ஆபத்தான நிலையை எட்டியபோது நாடாளுமன்றத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா ஒரு மாதத்துக்குள் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி அளித்தார் என்று கூறிய தன் பேரில் கடந்த 24 ஆம் திகதி கைதிகளின் போராட்டம் ஒரு மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டு உணவு தவிர்ப்பு கைவிடப்பட்டது.

கைதிகளின் போராட்டம் தொடங்கப்படுவதும் அது ஒரு கட்டத்தை எட்டும் போது சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அது கைவிடப்படுவதும் நாம் ஏற்கனவே சந்தித்த ஏமாற்றமளிக்கும் சம்பவங்கள்தான். இம்முறையும் கைதிகள் ஏமாற்றப்பட்டு விட்டனரோ என்ற சந்தேகம் எழுமானால் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஏனெனில் இலங்கையின் ஆட்சியாளர்களுக்குத் தாங்கள் கொடுத்த வாக்கையே கைவிடுவதும் அதற்குக் காரணங்கள் தேடிக் கண்டுபிடிப்பதும் கைவந்த கலை.

அதற்கேற்ற வகையிலேயே அமைச்சர் நிமல் சிறிபாலடி. சில்வா உரையாற்றும்போதும் அமைச்சரவை முடிவை அறிவிக்கும் கூட்டத்தில் லக்ஷ்மன் பிரியதர்சன யாப்பா உரையாற்றும் போதும் இலங்கையில் அரசியல் கைதிகள் என எவருமே இல்லை எனவும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பயங்கரவாதத்துடன் தொடர்பு கொண்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவர்களே எனவும் தெரிவித்துவிட்டனர்.

எனினும் இம்முறை சூழ்நிலை அவ்வளவு இலகுவாக இல்லை என்பதை அவர்கள் ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருப்பது போலவே தோன்றுகிறது. அதற்கு முக்கியமான காரணம் அரச தரப்பினர் எவ்வளவுதான் பயங்கரவாதம் என உரக்கக் குரலெழுப்பினாலும் இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும் சர்வதேசம் உற்று நோக்கத் தொடங்கிவிட்டது என்பது நிதர்சனமாகும். இலங்கையின் திட்டமிட்ட இன ஒடுக்கு முறை நடவடிக்கைகள் இன்று பல்வேறு வழிகளிலும் அம்பலப்படுத்தப்பட்டுவிட்டன.

ஞாயிறு காரம்

உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில நாள்களிலேயே ஐரோப்பிய ஒன்றியம் தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக நியாயபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கையைக் கேட்டுள்ளது. இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் ஐரோப்பிய ஒன்றியம் பிரதான பங்கை வகிப்பதால் இலங்கை நேரடியாக அதன் கோரிக்கையை நிராகரித்து விட முடியாது. அதேவேளையில் ஏதாவது நொண்டிச் சாட்டை முன் வைத்து இலங்கை அந்தக் கோரிக்கையை தீர்ந்துப் போக வைக்காது என்று சொல்லிவிடவும் முடியாது.

முன்னைய கைதிகளின் போராட்டத்தைவிட இம்முறை உரிமை மிக்கதாகவும் அரசு நாடாளுமன்றத்திலேயே சில நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்தல் விடும் வகையிலும் இருந்தமைக்குச் சில முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவது காரணம் பத்துச் சிறைகளிலுள்ள தடுத்து வைக்கப்பட்ட 526 கைதிகளில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒரேநாளில் ஒரே நேரத்தில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியமை. சிறைச்சாலை நிர்வாகங்களையும் அரச தரப்பினரையும் அதிர வைத்ததில் ஆச்சரியமில்லை. இது சர்வதேச அளவில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இன ஒடுக்குமுறை என்பவற்றில் அம்பலப்பட்டுப் போயுள்ள அரசுக்கு இவ்வளவு பெருந்தொகையானோர் போராட்டத்தில் குதிப்பது பல நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாவது, போராட்டம் நடந்து கொண்டிருந்த அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரச்சினையை ஒத்திவைப்புப் பிரேரணை மூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தது. ஊடகங்கள்கூட அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. அதுமட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பதில் தரவேண்டிய தேவையையும் நிராகரிக்க முடியாமல் போய் விட்டது. கைதிகளின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியமையும் மனோகணேசனும் அவரின் கட்சியும் கலந்துகொண்டமையும் பெரும் அதிர்வை ஏற்படுத்தின.

மூன்றாவது தமிழ் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம். அது நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுக்கப்பட்டாலும் தமிழ்க் கைதிகள் விடுதலை தொடர்பாகச் சிங்கள மக்களை அக்கறை காட்ட வைத்தமை அரசுக்கு ஒரு நல்ல அறிகுறியாகத் தோன்றியிருக்க முடியாது.

எப்படியிருப்பினும் இம்முறை கைதிகளின் போராட்டம் என்பது சிறைச்சாலை மதில்களுக்குள் முடங்கி விடவில்லை. அது நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. மக்கள் போராட்டமாகவும் விரிவடைந்தது. இதுவே இம்முறை இப்போராட்டத்துக்கு ஒரு தனித்துவமான வலிமையைக் கொடுத்திருந்தது.

எனவே இம்முறை கைதிகள் நடத்திய தமது விடுதலைப் போராட்டத்திலிருந்தும் அதன் எதிரொலியாக வெளியில் இடம்பெற்ற போராட்டங்களிலிருந்தும் நாம் நிறையவே கற்றுக் கொள்ள வேண்டியுள்ளன. தமிழ்க் கைதிகள் தங்கள் கோரிக்கை தொடர்பாகவும் அதைப் பெறுவதிலும் காட்டிய உறுதிப்பாடு முக்கியமானது. ஏறக்குறைய ஒன்பது பேர் ஆபத்தான நிலையை எட்டியபோதும் ஒருவர் கூட உறுதி குலையவில்லை. அந்தப் [illegible] கொடுக்கப்பட்டிருக்கும். கைதிகள் மத்தியில் பிளவுகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தச் சதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் மீறி அவர்கள் போராட்டத்தை உறுதியாக முன்னெடுத்தனர். அதுமட்டுமன்றி ஏழாவது நாளில் மேலும் 92 பேர் களத்தில் இறங்கினர். அதாவது போராட்டம் சிறைக்குள்ளேயே விரிவடையும் நிலை தோன்றியது.

அங்கு தமிழ்க் கைதிகளின் உறுதிப்பாடு என்பது முக்கியமானது. ஏனெனில் போராட்டத்தின் அடிப்படையே அவர்கள்தான். இனப் பிரச்சினை தொடர்பாக அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்கள், அவை ஒரு வருடமாக இழுபட்டும் எந்த முடிவும் எட்டப்படாமலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலும் இருந்த நிலையில் அரசு அதைப் புறமொதுக்கிவிட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற மாயையை முன்வைத்தமை, நல்லிணக்க ஆணைக்குழுவை தானே நியமித்துவிட்டு அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றாமை என்பன போன்றே தமிழ்க் கைதிகளுக்கும் வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாச வாக்குறுதி கைவிடப்படலாம் அல்லது திசைதிருப்பப்படலாம்.

அப்படியான ஒரு நிலையில் கைதிகள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கும் நிலை தோன்றலாம். எனவே நாம் இம்முறை இடம்பெற்ற போராட்டத்தில் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் போராட்டத்துக்கு தலைமை கொடுத்து அதை வெகுஜன மயப்படுத்தவேண்டும். தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குரலுக்கு வெறும் செவி கொடுக்காமல் இருக்க முடியாது.

அடுத்து நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாகக் கைதிகள் விடுதலை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுக்க வேண்டும். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவும் திரட்டப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, நவசமஜமாஜக் கட்சி என்பன மேதினம் நடத்த எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பாக இணைய முடியுமானால் தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு ஏன் இணைய முடியாது? நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் இவ்விடயத்தில் குரல் கொடுக்கும் வண்ணம் தூண்டப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு மட்டும் பயன்படும் சக்திகளாக மட்டுப்படுத்தக் கூடாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நேர்மையாகக் குரல் கொடுக்கும் நிலைக்கு ஐ.தே.க.வைக் கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவிர்க்க முடியாத கடமை.

இம்முறை கைதிகளின் போராட்டம் சக்திமிக்கதாக மாற்றப்பட்டமைக்கு அது வெகுஜனமயப்படுத்தப்பட்டமை முக்கியமாகும். எனவே எதிர்காலத்தில் இம்முறை வவுனியாவில் இடம்பெற்ற போராட்டம் போன்று யாழ்ப்பாணம், மன்னார், திருமலை, மட்டக்களப்பு எனத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகள் எங்கும் நடத்தப்பட்டு ஒரு பேரெழுச்சி அலை உருவாக வேண்டும்.

அவ்வாறே தென்னிலங்கையிலும் கைதிகளுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக்கட்சி என்பனவற்றால் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இப்படியாகப் போராட்டத்தை விரிவுபடுத்த வேண்டிய கடமையும் தகைமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு. அது எதிர்காலத்தில் எமது உரிமைப் போராட்டத்துக்கு ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்கும் என்பதை நீறும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்குப் பெரும் ஆதரவை வழங்கினர். அவர் தமிழ் மக்களுக்கு எதிரான போரை வழி நடத்தியவர் என்பதை தமிழர்கள் மறந்துவிடாத போதிலும் தொடர்ந்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு ஒரு மாற்று சக்தியாக பொன்சேகாவை அவர்கள் எதிர்பார்த்தனர். அதுமட்டுமன்றி அவரும் சிறைவாசம் அனுபவித்தவர். தனக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாயமற்றது எனக் கூறி மேன்முறையீடு செய்தவர். எனவே தமிழ்க் கைதிகள் விடுதலைக்கான போராட்டத்தில் அவருக்கும் பங்களிக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாகத் தொடர்ந்து தன்னை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஐக்கியப்படுத்தக் கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்திப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். தொடர்ந்து தமிழ் மக்களின் சக்தி ஜனாதிபதிகளையும் பிரதமர்களையும் உருவாக்குமளவுக்கு மட்டுப்படுத்தப்படக் கூடாது. அவர்களையும் தமிழ் மக்களுக்காகக் களத்தில் இறக்க வேண்டும். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையாய உடனடிக் கடமையாகும்.

இதை அவர்கள் செய்யத் தவறினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்ட குற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

தருபவர் - வித்தியா

## 27.05.2012 முதல் 02.06.2012 வரை

### மேஷம்



இதுவரை இருந்துவந்த நோய் தொந்தரவுகள் நீங்கி, பூரண நலமடைவீர்கள். எதிர்ப்புகள் விலகும். கவலைப்பட்டுக் கொண்டிருந்த ஒவ்வொரு விடயங்களுக்கும் தெளிவான, தீர்க்கமான முடிவுகளை ஏற்படுத்துவீர்கள். மனோ தைரியம் கூடும். செய்யும் காரியங்களில் ஆர்வம், அக்கறைம் ஏற்படும். அரச சம்பந்தப்பட்ட விவகாரங்களில், சற்று முன்னெச்சரிக்கையான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். பணநிலையில் வரவுகளுக்கு குறைவில்லை என்றபோதும், செலவுகள் மற்றும் கடன்களால் பற்றாக்குறை நிலையே நிலவும். கொடுக்கல், வாங்கல் நிலையில் சுமுகமான போக்கு நிலவும். குடும்பத்தில் சந்தோஷங்கள் நிலவியபோதும், சிலவகையில் மனக்குறைகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். தொழில் மற்றும் வியாபார வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தீவிர கவனம் அவசியம்.

### இடபம்



உடலில் உஷ்ணம், எதற்கு எடுத்தாலும் கோபப்பட்ட வார்த்தைகள் என்றிருக்கும். வாக்குத் தவறுதல், மனநிலையில் கூடத் தவறான சிந்தனை மற்றும் செயற்பாடு இருக்கும். முடிந்தளவுக்கு அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பணவரவுகள் வந்தபோதும் பற்றாக்குறையே நிலவும். கல்வியில் தேர்ச்சி பெறுவீர்கள். பாடசாலை மற்றும் கல்லூரிகளில் சேர எடுக்கும் முயற்சி வெற்றிபெறும். சிலர், விடுமுறைப் பயணத்தை சிறப்பாக அமைத்துக்கொள்வர். கணவன், மனைவி உறவு மேன்மை அடையும். வீட்டில் விருந்தினர் வருகை மற்றும் அவர்களால் செலவுகள் சிறிதளவு கூடுதலாகவே இருக்கும். பெரிதுபடுத்திக்கொள்ளாதீர்கள். நிலம், வீடு வகையில் ஆதாயம் கிட்டும். சகோதர வகையில் நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள். முகவர் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நீங்கள் நிர்ணயித்த இலக்கை விட சற்று கூடுதலான முயற்சி தேவைப்படும்.

### மிதுனம்



செல்வாக்கு கூடும். ஒவ்வொரு பணியிலும் திறமை பளிச்சிடும். உங்களிடம் யோசனை கேட்கப் பலரும் விருப்பப்படுவர். அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் தொடர்புகள் பயன்படும். பணவரவுகள் கூடத் தாமதப்படும். ஓய்வு என்ற வார்த்தை மிக அரிதாகவே இருக்கும். சுப காரியங்களில் எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் பெறலாம். குடும்பத்தில் ஏதேனும் ஒரு குழப்பம் நிலவிக்கொண்டுதான் இருக்கும். உடன்பிறப்பின் விவகாரங்களில் சற்று ஒதுங்கியே இருத்தல் நல்லது. வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் சற்று அமைதியான நடவடிக்கை அனைத்து வகையிலும் நன்மையாக இருக்கும். காரியச் செலவுகள் ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் ஒரு சில வாரங்களுக்கு ஒத்திப்போடுதல் நல்லது.

### கடகம்



மனக்குழப்பங்கள் நீங்கும். திட்டமிட்ட பணிகளைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். நெருங்கிய நண்பர்களிடம் அளவான பேச்சும், பணிவான செயற்பாடும் புகழை அதிகரிக்கும். குடும்பத்தில், எதனையும் பெருந்தன்மையான போக்கோடு கொண்டு செல்வீர்கள். கொடுக்கல், வாங்கல் நிலைகளில் கவனம் தேவை. வருமானங்கள் அதிகமாகும். எதிர்காலத்திற்குத் தேவையான சில விடயங்களையும் செய்து கொள்ள முடியும். தொழிலில், விரிவாக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மூத்த சகோதர, சகோதரிகளால் ஆறுதலும் ஆதாயமும் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் மற்றும் வீடு சம்பந்தப்பட்ட வகையில் முதலீடுகள் மேற்கொள்வதற்கான முயற்சிகளை ஆரம்பிப்பீர்கள். முதலில் நிர்வாகத்தைச் சீர்செய்து கொள்ளுதல் அவசியம்.

### சிங்கம்



மதிப்பு மரியாதையை அதிகப்படுத்தும். சொல்லும், செயலும் ஆதாயத்தைத் தேடித்தரும். பெரிய, பெரிய திட்டங்களைச் செயற்படுத்த சாதகமான சூழ்நிலை நிலவும். எதிர்ப்புகள் விலகும். பெரிய மனிதர்களின் தொடர்புகள் எளிதாகும். அவர்களால் சில காரியங்களையும் செய்து கொள்வீர்கள். அரச சம்பந்தப்பட்ட காரியங்களிலோ, அல்லது பணிகளிலோ சற்றுக் கவனம் அவசியம். குடும்பத்தில் கோபங்கள் குறைந்து மகிழ்ச்சி ஏற்படும். பணவரவுகள் வரும். செலவுகள் கூடுதலாக இருக்கும். குழந்தைகளுக்காகக் கூடுதல் செலவுகள் ஏற்படும். உடன்பிறப்பு வகையில் அலைச்சல் கூடுதலாகும். சிலர் வீடு மாற்றத்தையும் செய்துகொள்வர். தொழிலில் புதிய ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவதைத் தவிர்த்து ஏற்கனவே ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துங்கள். வியாபாரத்தில் விற்பனையை அதிகப்படுத்த தீவிர சிந்தனை கொள்வீர்கள்.

### கன்னி



எதிலும் சற்று அதிகப்படியான போராட்டத்தைச் சந்தித்துக் கொண்டிருப்பீர்கள். வெறுப்பான மனநிலையும், அமைதியற்ற சூழ்நிலையும் நிலவும். இழுபறியாக இருந்த காரியங்களை விரைவாக முடிக்க ஏதுவானதாக இருக்கும். வார்த்தைகளில் நகைச்சுவை அதிகரிக்கும். அரச வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறும். உடல்நிலையில் சிறு சிறு தொந்தரவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். பணவரவுகள் தாமதப்பட்ட போதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிரமம் இருக்காது. செலவுகளில் கவனம் தேவை. இல்லறத் துணையின் செயற்பாடுகள் சற்று அதிருப்தி தந்தபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உடன்பிறப்பின் உதவிகளை யோசித்து ஏற்றுக்கொள்ளுங்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

### துலாம்



எதிலும் மனஉறுதியோடு செயற்படுவீர்கள். செல்வாக்கு அதிகரிக்கும். வருமானங்களை அதிகரித்துக் கொள்ள நல்ல வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய வேலைவாய்ப்பு முயற்சிகள் நம்பிக்கை தருவதாக அமையும். புதிய தொழில் முயற்சிகள் வெற்றியடையும். சந்தோஷம் கூடும். குடும்பத்தில், இதுவரை தாமதப்பட்ட சுபநிகழ்ச்சிகளை தடையின்றி செய்து முடிப்பீர்கள். பணவரவுகள் திருப்தி தரும். கடன்களை மீளப்பெற நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். குழந்தைகளின் செயற்பாடுகள் சந்தோஷத்தை அதிகரிக்கும். சகோதர, சகோதரிகளின் உறவு பலப்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் கவனம் இருக்கட்டும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்.

### விருச்சிகம்




வாழ்க்கைத் தரம் உயரும். அந்தஸ்து அதிகரிக்கும். சிந்தனைகள் தீவிரமாகும். தோற்றப்பொலிவு கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். அவ்வப்போது அவசரம், பதற்றம் தவிர்க்க முடியாததாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் மற்றும் கடன் வாங்கும் விவகாரங்களில் சற்று விழிப்புடன் செயற்படுங்கள். நிலம், வீடு வாங்கும் அமைப்பும் கூடி வரும். பண நிலையில் நிர்ணயித்த வரவுகள் வரும். கொடுக்கல், வாங்கல் விவகாரங்கள் அதிக நன்மை தராது. அரச விவகாரங்கள் காரியங்கள் இழுபறிக்குப் பின் நடந்தேறும். குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் இருக்கும். இல்லறத் துணையின் வகையில் ஆறுதலான மனநிலை காணப்படும். குழந்தைகளால் சந்தோஷம் கூடுதலாகும். தொழில் மற்றும் வியாபாரத்தில் விற்பனையைக் கூட்ட உங்கள் முயற்சிக்கு நல்ல வெற்றி கிடைக்கும்.

### தனுசு



புதிய வேலைக்கான முயற்சிகள் வெற்றிபெறும். தொழிலில், தொந்தரவுகள் நீங்கி விறுவிறுப்புக் கூடும். வீடு, வாகனங்களை மாற்றியமைத்துக் கொள்ளவோ, புதிதாக வாங்கிக் கொள்ளவோ வாய்ப்புகள் கூடி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் குறைவிருக்காது. இல்லறத் துணையின் உதவியுடன் சில காரியங்களை மேற்கொள்வீர்கள். குழந்தைகளுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். உடன்பிறப்புகளோடு வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பெற்றோரின் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் சில இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தபொழுதும் லாபம் குறையாது. உத்தியோகத்தர்கள், பொறாமையைத் தவிர்த்து போட்டி மனப்பான்மையோடு செயற்படுங்கள். கலைஞர்கள், எதிலும் சற்றுப் பொறுமையோடு செயற்படுதல், வெற்றியைத் தக்கவைத்துக்கொள்ள வழிவகுக்கும்.

### மகரம்



சிறப்புகள் அதிகரிக்கும். நீங்கள் போட்ட திட்டங்கள் உடனடியாக நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். கௌரவத்துக்காகவும், பொறுப்புகளுக்காகவும் சில செலவுகள் மேற்கொள்ளும்படியாக அமையும். புதிய நபர்களின் பழக்க வழக்கங்களில் சற்று கூடுதல் கவனம் தேவை. வீடு மற்றும் வாகன வகையில் திடீர் செலவுகள் ஏற்படும். உங்கள் செயற்பாடுகளில் அவ்வப்போது சிறு சிறு குறுக்கீடுகளும், தடைகளும் ஏற்படும். அவற்றை எல்லாம் முறியடித்து வெற்றியும் பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். இல்லறத் துணையால் ஆதாயங்கள் கிடைக்கப் பெறும். தாய், தந்தையரால் அன்பும், ஆதரவும் கூடும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் ஒரு காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். கல்வி முயற்சிகளுக்குத் தகுந்த ஆதரவு கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் கொள்முதல் விடயங்களில் நேரடியான தலையீடு லாபத்தைக் கூடுதலாக்கும்.

### கும்பம்



எதனையும் சிரமப்பட்டே செய்து முடிக்க வேண்டியிருக்கும். திட்டமிட்ட காரியங்களில் கூட மாற்றங்கள் செய்துகொள்ள வேண்டியிருக்கும். தொடர் முயற்சி வெற்றிபெற வைக்கும். எதிர்பாராத வகையில் முக்கியஸ்தர்களின் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள், அரசியல்வாதிகளால் ஆதாயம் பெற வாய்ப்பு உண்டு. பண வரவுகள் வந்தபோதும் செலவுகள் பல வகையில் இருப்பதால் சேமிப்பில் கைவைக்க நேரிடலாம். குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகள் அமைதியைக் குறைத்தபோதும் பெரிய பாதிப்பு என்று எதுவும் இருக்காது. குழந்தைகளின் மன நிலையைக் கருத்திற் கொண்டு செயற்படுங்கள். பெற்றோரால் சிறு செலவுகள் ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரத்தில் போட்டியாளர்களின் செயற்பாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகத் தக்க வைக்க முயற்சி மேற்கொள்வீர்கள்.

### மீனம்



எதிலும் பாதகமற்ற நிலை நிலவும். எல்லா விடயங்களிலும் சிந்தித்து செயற்பட வைக்கும். பேச்சு மற்றும் பழக்க வழக்கங்களிலும் கூட சில மாறுதல்கள் ஏற்படும். எடுத்துக்கொண்ட அல்லது ஈடுபடும் காரியங்களில் தெளிவான மனநிலையோடு செயற்படுவீர்கள். குடும்பத்தில் குழப்பங்கள், பிரச்சினைகள் நிலவியபோதும் அமைதியான சூழ்நிலைக்கு பாதிப்பு இருக்காது. பணநிலையில், வரவுகளுக்கு தக்க செலவுகள் இருக்கும். குழந்தைகள் வகையில் செலவுகள் தவிர்க்க முடியாதவையாக அமையும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் உதவிகள் தாமதப்பட்ட போதும் கிடைக்கப் பெறுவீர்கள். நல்ல நண்பர்கள் அதிகமாவார்கள். கலைஞர்களின் சிந்தனைகள் மற்றவர்களை சிந்திக்க வைக்கும்.

# மேன்மக்கள் கண்ணீர்

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்போரும் உண்டு. இத்தகைய அரசியல் கைதிகள் தொடர்பில் அரசும் மெத்தனமாகவே இருக்கிறது. அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பதை அறிய எந்தவித விசாரணையையும் அரசு முன்னெடுக்கவில்லை. "எங்களை விடுவியுங்கள் அல்லது விசாரணை செய்யுங்கள்" என்ற கோரிக்கையுடன் கைதிகளும் பலமுறை உண்ணாவிரதங்களை இருந்து களைத்து விட்டார்கள். அவர்களின் குடும்பத்தார் வருடக் கணக்கில் வடித்த கண்ணீர் ஆறாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் மேன் மக்களான அனோமா பொன்சேகாக்களின் கண்ணீரை கண்டு பதறித் துடிக்கின்ற வல்லரசுகள், அப்பாவித் தாய்மாரின் கண்ணீரை கண்டு கொள்ளாமலே இருந்து விடுகின்றன. அவர்களுக்குத் தேவை மேட்டுக் குடிகளின் ஆதரவு மட்டுமே. அப்பாவிகளைப் பற்றிய அக்கறை கூட அது சார்ந்தே அவர்களுக்குள் ஏற்படுகின்றன. இனிமேல் ஜெனிவாத் தீர்மானம் மறக்கப்படக் கூடும். இலங்கைக்கு தீர்வை ஏற்படுத்துவற்கான கால அவகாசம் வரையறையின்றி நீளக் கூடும். ஜி.எஸ்.பி. வரிச் சலுகை கூட கிடைக்கலாம். பொன்சேகாக்கள் மீண்டும் மதுக் கிண்ணங்களோடு எக்காளராகம் பாடத் தொடங்கலாம்.

ஆனாலும் கம்பிகளுக்குப் பின்னால் வாடுகின்ற ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்களின் ஏக்கக் குரலும், அவர்களின் குடும்பத்தாரின் கண்ணீர் ஓலமும் கல்சிவரைக்கும் எவராலும் கண்டு கொள்ளப்பட விரும்பாத ஒன்றாகவே இருக்கும். மேன் மக்கள் மேன்மையோடே இருக்க, சாதாரணர்கள் துயரத்தின் சகதிக்குள் தொடர்ந்தும் மூழ்கிக்கொண்டே இருக்கிறார்கள். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்



# இலங்கையுடன் முட்டி மோதும் அமெரிக்கா

அண்மைக் காலமாக இலங்கை விடயத்தில் அமெரிக்கா காட்டிவரும் அதிக அக்கறை குறித்து இப்போது பல மட்டங்களிலும் பேச்சு எழுந்துள்ளது. திடீரென அமெரிக்கா இலங்கை விடயத்தில் காட்டும் இந்தக் கடும்போக்கு சர்வதேச மட்டத்திலும் இலங்கைக்குப் பெரும் தலையிடியையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. அமெரிக்காவின் சொல் கேட்டு இப்போது ஐரோப்பிய நாடுகளும் இலங்கையுடன் கடும் போக்காக நடந்துகொள்கின்றமை பெரும் சிக்கலை உண்டுபண்ணியிருக்கிறது. அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளினதும் இந்தக் கடும் போக்குக்கு காரணம் இல்லாமல் இல்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் சரி இலங்கையின் மனித உரிமை விடயத்திலும் சரி இந்த நாடுகளால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் இலங்கை மிகச் சாதாரணமாக எடுத்து உதாசீனம் செய்து கிண்டலடித்து வருகின்றமை இந்த நாடுகளின் மீதான அழுத்தம் இலங்கை மீது அதிகரிப்பதற்கு முக்கிய காரணம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதல் அவரது அமைச்சர்கள் மற்றும் அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அமெரிக்காவையும் ஐரோப்பிய நாடுகளையும் பற்றி வெளியிடும் கருத்துக்கள், முன்வைக்கும் விமர்சனங்கள் ஆகியனவும் இந்தக் கடும்போக்குக்கு மற்றொரு காரணம் எனலாம். குறிப்பாக தீர்வு விடயத்தில் மேற்குலக நாடுகள் வழங்கும் ஆலோசனைகளை - முன்மொழிவுகளை இலங்கை அரசு அண்மைக் காலமாகத் தட்டிக் கழித்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷகூட அண்மைக்காலத் தமது உரைகளில், "இனப் பிரச்சினைக்கான தீர்வை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாது. உள்நாட்டிலேயே தீர்வு எட்டப்பட வேண்டும். அதை எப்படி எட்டுவது என்பது எமக்குத் தெரியும். பயங்கரவாதத்தைத் தோற்கடித்த எமக்கு தீர்வை எட்டுவது பற்றிக் கற்பிக்க யாரும் முற்படக் கூடாது. அதற்கு நாங்கள் செவி சாய்க்கமாட்டோம்" என்று இறுமாப்புடன் கூறிவருகிறார். இதே கருத்துக்களையே அமைச்சர்களும் அடிக்கடி வெளியிடுகிறார்கள். அரசின் இந்த விடாப்பிடி மேற்குலக நாடுகளின் தலைமைகளை பெரும் சீற்றத்துக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியிருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவுக்கு இலங்கை அரசின் இந்த தட்டிக் கழிப்பு அடியோடு பிடிக்கவில்லை. அதனால்தான் அது இப்போது தன் வேலையை காட்டத் தொடங்கியிருக்கிறது.

அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் அதன் அரசியல் சித்தாந்தமும் இதுவென்றே சொல்லலாம். அதாவது தனது சொல்லைக் கேட்டு அதன்படி நடந்துகொள்ளாத நாடுகள் மீது பொருளாதாரத் தடை மற்றும் அரசியல் ரீதியான பலமான அழுத்தங்கள் ஆகியவற்றை பிரயோகித்து அந்த நாடுகளைத் தன் வழிக்குக் கொண்டு வரும் பொறிமுறையில் அமெரிக்கா கை தேர்ந்தது. அதற்கும் மேலாக முரண்டு பிடிக்கும் நாடுகளை தனது படைகளைக் கொண்டு அடக்குவதற்கான அதிகாரப் பலமும் அதனிடம் உள்ளது.

தனது இந்த நடவடிக்கைக்கு ஏனைய மேற்குலக நாடுகளையும் இணங்க வைக்கும் தந்திரமும் அமெரிக்காவுக்கு நன்கு தெரியும். இதனால் அமெரிக்க எதை எடுத்தாலும் அதற்கு பெரும்பாலான மேற்குலக நாடுகள் கை உயர்த்திப் பச்சைக் கொடி காட்டிவிடும். அந்த இறுமாப்பினால் உலக நாடுகளின் விடயங்களில் ஒரு சர்வதேசப் பொலிஸ் காரனைப் போல அமெரிக்கா நடந்து கொள்கிறது. ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளில் அமெரிக்கா தனது கைவண்ணத்தைக் காட்டி வெற்றியும் பெற்றிருக்கிறது. இந்த நிலையில் அதன் கவனம் இப்போது இலங்கையின் பக்கம் திரும்பியிருக்கிறது.

போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவில்லை. தீர்வு எட்டப்படுவதற்கான பேச்சுக்கூட இலங்கை அரசு உருப்படியாக முன்னெடுக்கவில்லை. அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்ற மீறல்களுக்கு உரிய வகையில் பொறுப்புக் கூறுவதிலிருந்தும் இலங்கை தொடர்ந்து தவறிவருகிறது. அத்துடன் இலங்கை அரசால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் விடயத்திலும் இலங்கை எந்தவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை. இந்த விடயங்களை உடனடியாக மேற்கொண்டு அவற்றில் முன்னேற்றத்தைக் காட்டுமாறு அமெரிக்கா இலங்கையைத் தொடர்ந்து வற்புறுத்திக் கேட்டு வந்தது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளும் இந்த விடயங்களை உடன் நடைமுறைக்குக் கொண்டுவருமாறு இலங்கையிடம் வலியுறுத்தின. ஆயினும் இவையெல்லாம் இலங்கை அரசுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போல்தான் இருந்தன. இந்தக் கோரிக்கைகளுக்கு எந்தவிதப் பிரதிபலிப்புக்களையும் வெளியிடாமல் வழமையைப் போன்றே அவற்றை எதிர்த்துக் கருத்து வெளியிடுவதில் இலங்கை ஆர்வம் காட்டி வந்தது. இலங்கையின் இந்த நடவடிக்கைகளே அமெரிக்கா [illegible] அடைவதற்கு முக்கிய காரணம்.

இதனால் தனது வழமையான பாணி மூலம் இலங்கைக்குப் பாடம் கற்பிக்கக் கங்கணம் கட்டியது அமெரிக்கா. அதற்கான சரியான தருணம் பார்த்து காத்திருந்தது. அந்தக் காத்திருப்புக்குக் கிடைத்தது நல்ல சந்தர்ப்பம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு கடந்த பெப்ரவரியில் ஜெனிவாவில் நடைபெற்றது. இந்த அமர்வில் இலங்கை மீதான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து அதனை வெற்றிகரமாக நிறைவேற்றி நல்ல பாடம் புகட்டியது. இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்குதலையும் சர்வதேசத்தின் அழுத்தத்தையும் உண்டுபண்ணியது. இது இலங்கை மீதான நன்மதிப்பையும் சர்வதேச அரங்கில் இழக்கச் செய்ததுடன், மேலும் பல பாதிப்புக்களையும் இலங்கைக்கு ஏற்படுத்தியது. அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவு வழங்கியமை இலங்கைக்கு மிகப் பெரும் ஏமாற்றமாகவே அமைந்தது.

ஜெனிவாத் தீர்மானத்துடன் ஆரம்பித்த இலங்கை மீதான அமெரிக்காவின் மோதல் இப்போது பல வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த வாரம் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டனைச் சந்திப்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழு வாஷிங்டன் சென்றிருந்தது. அந்தக் குழு அங்கு செல்வதற்கு முன்னர் குழுவின் பயணம் பற்றி அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்ரோறியா நூலன்ட் கருத்து வெளியிட்டிருந்தார். வாஷிங்டன் வரும் இலங்கைக் குழுவிடம் உருப்படியான செயற்றிட்டம் ஒன்றையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதற்கான ஆயத்தங்களுடன்தான் அவர்கள் இங்கு வரவேண்டும். அந்தச் செயற்றிட்டத்தை நாங்கள் எழுத்து வடிவில் கோருகிறோம். இலங்கை [illegible] என்று விக்ரோறியா நூலன்ட் கூறியிருந்தார். ஆயினும் அங்கு சென்ற இலங்கைக் குழுவின் நடவடிக்கைகள் அமெரிக்காவுக்குத் திருப்தியை அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் பீரிஸை ஹிலாரி கிளின்டன் சந்தித்துப் பேசிய பின்னர் அந்தச் சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்களிடம் பேசிய விக்ரோறியா நூலன்ட், இந்தச் சந்திப்புப் பயனுள்ள வகையில் அமைந்தது. இலங்கையிடம் சில விடயங்களைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கோரியிருக்கிறோம். அத்துடன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றையும் ஹிலாரியிடம் பீரிஸ் [illegible] என்று கூறினார்.

ஆயினும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பீரிஸ், அமெரிக்காவிடம் எந்தவொரு ஆவணத்தையும் நாம் எழுத்துருவில் சமர்ப்பிக்கவில்லை. செயற்றிட்டம் குறித்து அவர்களுக்கு வாய் மூலம் தெளிவாக விளக்கியுள்ளோம் என்றார்.

இருவரும் இப்படி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிட்டமையால் அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்களும் பெரும் குழப்பம் அடைந்தனர். இலங்கைக் குழுவின் இந்தப் பயணம் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை என அமெரிக்க ராஜாங்க வட்டாரத் திணைக்களங்களும் தெரிவித்திருந்தன. இவ்வாறு அமெரிக்காவின் இலங்கை மீதான தொடர் அழுத்தங்கள் அதிகரித்துவரும் நிலையில் கடந்த வியாழக்கிழமை வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்ட சர்வதேச மனித உரிமை நிலைமை குறித்த அமெரிக்க [illegible] கார அமைச்சின் அறிக்கை இலங்கை அரசை மேலும் சிக்கலில் மாட்டிவிட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை நீண்ட பட்டியலிட்டிருக்கிறது அமெரிக்கா.

இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் வசிக்கும் பகுதிகளில் அரச படைகளினாலும் அரச ஆதரவு துணை ஆயுதக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகளே பிரதானமான மனித உரிமைப் பிரச்சினையாக உள்ளன என்று அமெரிக்க அந்த அறிக்கை குற்றம் சுமத்தியிருக்கிறது. அத்துடன் இலங்கை அரசியலில் ஜனாதிபதியின் குடும்பமே ஆதிக்கம் செலுத்துகிறது. நீதித்துறைக்குள் நிறைவேற்று அதிகாரத் தலையீடுகள் உள்ளன. அத்துடன் இன்னொரு முக்கியமான மனித உரிமைப் பிரச்சினை காணாமல் போனோர் விவகாரம். முன்னைய ஆண்டுகளில் ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் போயுள்ள போதும் அதற்குப் பொறுப்புக் கூறப்படவில்லை. படையினர் தடுப்பில் உள்ளவர்களை சித்திரவதை செய்து துன்புறுத்துகின்றனர். சிறைச்சாலைகளில் கைதிகளின் நிலை மோசமாக உள்ளது. பொதுமக்கள் தன்னிச்சையாகக் கைசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். வடக்குக் கிழக்கில் இராணுவம் மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அதிகம் உள்ளன. உயர் பாதுகாப்பு வலயங்களும் உள்ளன. பொதுமக்கள் செல்வதற்கு தடை செய்யப்பட்ட பகுதிகளும் உள்ளன. அரச ஆதரவு துணை ஆயுதக் குழுக்களின் உள்ள அடையாளம் தெரியாத நபர்களே கொலைகள், தாக்குதல்கள், [illegible] மீதான [illegible] துன்புறுத்தல்களுக்கு பொறுப்பாக இருந்துள்ளனர். இவர்களுக்கும் அரசு படையினருக்கும் நெருக்கிய தொடர்பு உள்ளது என்று இலங்கை அரசின் அராஜகங்களை அடுக்கிக் கொண்டு போகிறது அமெரிக்கா. இவ்வாறு இலங்கையுடன் இப்போது நேரடியாக முஷ்டியை முறுக்கிக் கொண்டு மோதத் தயாராகி இருக்கிறது அமெரிக்க அரசு.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டால் திணறிப் போயிருக்கிறது இலங்கை அரச தலைமை. அமெரிக்காவின் அழுத்தத்திலிருந்து தப்புவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிறைவைக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்திருந்தார். அதற்கு அமெரிக்கா தனது வரவேற்பைத் தெரிவிக்கும் என்றும் அவர் அதிகம் எதிர்பார்த்திருந்தார். எனினும் இந்த விடயத்தில் எந்தவித பிரதிபலிப்பை [illegible] அமெரிக்கா [illegible] வில்லை. [illegible] இருந்த [illegible] இது இலங்கைக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. இதனால் அமெரிக்காவின் அழுத்தங்கள் மேலும் தொடரப்போகிறது என்ற அச்சம் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனை ஜனாதிபதி மஹிந்த எப்படிச் சமாளிக்கப் போகிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஹற்றிக்" வெற்றி சாத்தியமா?




கடந்த இரண் ... ரை மாத கால மாக கிரிக் ... கெட் ரசிகர்களை ஆ ... டி ... படைத்துக்கொண் டிருந்த ஐ.பி. ... எல். திருவிழா இன்று டன் முடிவடை ... கின்றது. இன்றைய தினம் இறுதி ... யாட்டத்தில் தமிழர் களின் நாடித் துடிப் ... பான தமிழ் நாட்டின் அணியான சென் ... னையும், இந்தியாவின் மேற்கு வங்க மாநி ... லமான வங்காளி மொழி பேசுபவர்களின் ... அணியான கொல்கத்தா வும் மோதவுள் ... ளன.

சோதிடர்கள், ரசிகர்கள் எதிர்பார்க்கின்றவாறு சென்னை, மும்பை அணிகள் கிண்ணம் வெல்லாது என்று கணித்தி ருந்தனர். கொல்கத்தா அல்லது டெல்லி அணியே கிண் ணம் வெல்லும் என்று ஆரூடம் வெளியிட்டிருந்தனர்.

அதற்கமைவாக சென்னை அணி ஆரம்பத்திலிருந்தே சொதப்பலாக ஆட்டத்தை வெளிப்படுத்தி அடுத்த சுற் றுக்கே தகுதி பெறுமா என்கின்ற நிலையில் இருந்தது. ஆனால் கொல்கத்தா அணி தனது திறமையின் மூலம் ஆரம்பத்திலிருந்தே சிறப்பாக விளையாடியது. அத்துடன் முதன் முறையாக இறுதி ஆட்டத்திற்கும் தகுதி பெற்றது. இதனால் தான் என்னவோ கொல்கத்தா அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி தனது ஆரூடம் அறி வைப் பயன்படுத்தி கொல்கத்தா கிண்ணம் வெல்லும் என்று கணித்திருந்தார்.

சென்னை அணி இறுக்கமான தருணத்திலிருந்து டெக் கான், புனே அணிகளின் தயவில் (மறைமுகமான ஆட்ட நிர்ணயத்தில்) இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது. அதிலும் வெளியேற்றச் சுற்றில் மும்பையையும் இரண் டாவது தகுதிச் சுற்றில் டெல்லியையும் தமது திறமை யைக் காட்டி சென்னை வென்றதாகவே கொள்ள வேண்டி யுள்ளது.

சென்னையின் முரளிவிஜய், டோனி, பிராவோ ஆகி யோர் ஆரம்பத்தில் சிறப்பாக ஆடாவிட்டாலும் இறுதி இரு ஆட்டங்களிலும் தங்களது அதிரடிகளை சரவெடிக ளாக்கி வெளிப்படுத்தியிருந்தனர்.

கொல்கத்தா அணியைப் பொறுத்த வரையில் ஆரம் பத்தில் இருந்து சீராக வென்றுகொண்டு வந்தது. துடுப் பாட்டத்தில் கம்பீர், கலிஸ் என்று கலக்கும் அதேவேளை பந்துவீச்சில் சுனில் நரேன் அசத்துகிறார்.

இவ்வாறான ஆட்டங்களின் மத்தியில் சோதிடர்களின் கணிப்புக்குள் ரசிகர்களின் எதிர்பார்ப்பில் எந்த அணி இன்றைய தினம் சம்பியனாக பட்டம் சூடவுள்ளது.

ரசிகர்கள் எதிர்பார்த்தது போல் சென்னை 'ஹற்றிக்' வெற்றியை பெற்றுக்கொள்ளுமா? அல்லது சோதிடர்களின் கணிப்பான கொல்கத்தா கிண்ணத்தை கைப்பற்றுமா?

இதேவேளை நேற்றுமுன்தினம் சென்னை அணி, டெல்லி அணியை வரலாற்றுச் சாதனையுடன் வீழ்த்தியது. அந்த ஆட்டத்தில் இருந்து சில துளிகள்.

### முதல் இந்தியர்

டெல்லி அணிக்கு எதிராக சதம் அடித்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முரளி விஜய், ஐ.பி.எல்., வர லாற்றில் இரண்டு சதம் அடித்த முதல் இந்தியர் என்ற பெருமை பெற்றார். முன்னதாக இவர், 2010 இல் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிராக சென்னையில் நடந்த ஆட் டத்தில் 56 பந்துகளில் 127 ஓட்டங்கள் எடுத்தார்.

✸ ஐ.பி.எல்., அரங்கில் இரண்டு அல்லது அதற்கு மேல் சதம் அடித்த நான்காவது வீரரானார் முரளி விஜய். ஏற்கனவே கெய்ல் (3), கில்கிறிஸ்ட் (2), வோர்னர் (2) ஆகியோர் இந்தச் சாதனையை படைத்துள்ளனர்.

### அதிவேக சதம்

இந்தத் தொடரில் அதிவேக சதம் அடித்து சாதித்தார் முரளி விஜய் (51 பந்துகள்). முன்னதாக டெல்லி அணியின் வோர்னர் (டெக்கான்), மும்பை அணியின் ரோகித் சர்மா (கொல்கத்தா) தலா 52 பந்துகளில் சதம் அடித்திருந்தனர்.

✸ தவிர, 113 ஓட்டங்கள் எடுத்த இவர், இந்தத் தொட ரில் ஒரே இன்னிங்சில் அதிகபட்ச ஓட்டங்கள் எடுத்தவர் கள் வரிசையில் இரண்டாவது இடம்பெற்றார். முதலிடத் தில் பெங்களூர் வீரர் கெய்ல் (128, டெல்லி) உள்ளார்.

✸ இது, ஐ.பி.எல்., அரங்கில் பதிவு செய்யப்பட்ட 24 ஆவது சதம். இந்தத் தொடரில் பதிவு செய்யப்பட்ட 6 ஆவது சதம்.

### மோர்னி மோர்கலை நீக்கலாமா ?

டெல்லி அணியில் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர் மோர்னி மோர்கல் நீக்கப்பட்டது மிகப் பெரும் அதிர்ச்சி அளித்தது. இந்தத் தொடரில் அதிக இலக்குகள் (25) வீழ்த்தியவர்கள் பட்டியலில் ... முதலிடத்தில் உள்ள இவருக்குப் ... பதிலாக, 'ஓப் ஸ்பின்' னர் சன்னி ... குப்தா அறிமுக வீரராக இடம் பெற்றார். ... டில்லியில் பிறந்த குப்தா, தமிழக அணிக் ... காக ரஞ்சி கிண்ணத் தொடர்களில் ... பங்கேற்றுள்ளாராம். இர்பான் ... பதானுக்கு (வலது கை பயில் ... காயம்) பதிலாக அன்ட்ரு ரசல் ... வாய்ப்பு பெற் றார். சென்னை ... அணியில் சாமர்த் தியமாக மாற்றம் எது ... வும் செய்யப் படவில்லை. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணித்தலைவர் சேவாக், களத்தடுப்பை தேர்வு செய்து, இன்னொரு அதிர்ச்சி அளித்தார். இது போன்ற தவறுகள் டெல்லி அணியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது.

### பாவம் சேவாக்

ஆட்டத்தின் 11 ஆவது பந்து பரிமாற்றத்தை டெல்லி அணித்தலைவர் சேவாக் வீசினார். முதல் பந்தை முரளி விஜய் தூக்கி அடித்தார். எல்லைக் கோட்டுக்கு அருகே பந்தை பிடித்த ரோஸ் டெய்லர் தடுமாறினார். பின்னர் எல் லையை விட்டு வெளியேறிய இவர், பந்தை மைதானத் துக்குள் எறிந்து மீண்டும் பிடித்தார். இந்த ஆட்டமிழப்பு தொடர்பாக சந்தேகம் எழ, மூன்றாவது நடுவரிடம் கேட் கப்பட்டது. 'ரீப்ளேயில்' பந்தை பிடிக்கும் போது டெய்ல ரின் கால் எல்லைக் கோட்டை தொட்டது தெரிய வர, சிக்சர் என்று அறிவிக்கப்பட்டது. இதனை பயன்படுத்திய விஜய் 21 ஓட்டங்கள் எடுக்க, சேவாக்கை பார்க்கவே பாவமாக இருந்தது.

### கொடை வள்ளல் ஆரோன்

சென்னை அணிக்கு எதிராக ஓட்டங்களை வாரி வழங்கினார் டெல்லி அணியின் வேகப் பந்துவீச்சாளர் வருண் ஆரோன். மோசமாக பந்துவீசிய இவர், 4 பந்து பரிமாற்றங்களில் 63 ஓட்டங்கள் கொடுத்து 2 இலக்கு களைக் கைப்பற்றினார். இதன் மூலம் ஐ.பி.எல்., வர லாற்றில் மோசமான பந்துவீச்சை பதிவு செய்தார். முன்ன தாக 2008 இல் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக விளை யாடிய ஆர்.பி. சிங், கொல்கத்தாவுக்கு எதிராக 4 பந்து பரிமாற்றங்களில் 59 ஓட்டங்கள் கொடுத்தார்.

# வூஷ¤ தற்காப்புக்கலை பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில்

சீனத் தற்காப்புக் கலைகளில் மிகப் பழமைவாய்ந்ததாகக் கருதப்படும் "வூஷூ-WUSHU" இலங்கையின் வட புலத்தில் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்படவுள் ளது. சர்வதேச புகழ் மிக்க தற்காப்பு கலை முறைமைகள், போட்டி விதிகள் மற்றும் பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி முதல் ஜூன் 4ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் இயங்கும் அரச நிறுவனமான "இலங்கை வூஷூ சம்மேளனம்" (Wushu Feder- ation of Srilanka) இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக் கின்றது. "இளையோர் அபிவிருத்தியும், சமாதானமும்" என்ற செயல்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் வூஷூ அறிமுக நிகழ்வும்- பயிற்சிப் பட்டறையும் இடம்பெறவுள்ளது. பயிற்சி கள் செய்முறையுடன் கூடியதாகவும், காணொளிகள் மற்றும் விளக்கங்களுடன் அமையும் என்று நிகழ்வின் ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பயிற்சிக்கு இலங்கை வூஷூ சம்மேளன தலை வரும், கலை கலாசார விவகார அமைச்சருமான ரீ.பி.எக்க நாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

பயிற்சிகளை ஆசிய வூஷூ சம்மேளனம் இலங்கை வூஷூ சம்மேளனம் ஆகியவற்றின் பிரதம செயலாளரும், ஏ தர சர்வதேச மத்தியஸ்தரும், பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் வூஷூ அலுவலருமான சீ°ஃபூ. மானல் தர்ம கீர்த்தி தலைமையில் ஆசியாவின் முன்னணி பயற்றுநர்களான ருஜிதா போதினாகொட, உதவிப் பயிற்றுநர் புத்திடட்ஸன், இலங்கை தேசிய சாண்டோ பயிற்றுநர் கபில சபாபதி, உதவி தேசிய சாண்டோ பயிற்றுநர் சமன் பண்டார இலங்ககோன் உட்பட தேசிய வூஷூ வெற்றியாளர்களும் இணைந்து வழங்கவுள்ளனர்.

1987 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வூஷூ தற்காப்புக் கலை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின் 1993 இல் இலங்கை வூஷூ சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச ரீதியாக சர்வதேச வூஷூ சம்மேளனமும் பிராந்தியத் தில் ஆசிய வூஷூ சம்மேளனமும் இதன் வளர்ச்சி மற்றும் முறைமைகளை முகாமை செய்கின்றன. 2006 ஆம் அண்டு இலங்கையில் நடைபெற்ற 10 ஆவது தென்னாசிய விளை யாட்டு விழாவில் இலங்கை இணைச் சம்பியனாக வெற்றி பெற்றது. அதன்பின் சர்வதேச அரங்கில் வூஷூ கலையில் இலங்கை அணி தனித்துவம் பெற்றதொரு அணியாக வளர்ந்து வருகிறது.

எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி முதல் ஜூன் 4ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்ட பத்தில் நடைபெறும் பயிற்சியில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்ற முடியும். 10 வயது முதல் 25வயது வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். 0714220002 அல்லது 0782845002 ஆகிய இலக் கங்களுடன் தொடர்பு கொண்டு குறுஞ்செய்தி மூலமாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றித் திறமைகளை வெளிப்படுத்துபவர்ளுக்கு இலங்கை தேசிய அணியில் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் இலங்கை வூஷூ சம்மேளன செயலாளரும் பிரதம பயிற்று நருமான சி°ஃபூமானல் தர்மகீர்த்தி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org